# நீலஅரண்மனை

அல்லது

## கமலவண தேவகி.

யாழ்பாணம்

எஸ். ராஜா புக் நுங்குமாரவர்களால்

இயற்றப்பட்டது.

முதல் பதிப்பு.

சென்னை ருளை

ப. பி. சே. லால அவர்களால்

தமது

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

ரிஸ்டர் காப்பி ரைட்] [விலை ரூபா 1

PRINTED AT THE
SUN OF INDIA
PRESS
CHOOLAI MADRAS

19322

# முன்னுரை.

"நீல அரவமணி" யென்னும் புதிய ஒரு புத்தகத்தின் முதற்பாகத்தை நான் முற்றும் வாசிக்கப்பெற்றேன். சுவையற்றனவென்றும் வாசிக்கத்தகாதனவென்றும் வெறுக்கத்தக்க நாவல்களைப் போலல்லாமல் இஃது எவ்வகையினும் மேனாட்டு நாவல்களையொப்ப இனிமையும் கருத்தும் வாய்க்கப் பெற்றுள்ளது. இக்கதையின் அமைப்பும், நடையின் அழகும், ஒருபுறமிருக்க இக்கதாசிரியர், மானிட இயற்கையும், மானச தத்துவமும், சம்பாஷணையின் தொடர்ச்சியும், பாத்திரங்களின் பொருத்தமும், கருத்துக்களின் தூய்மையும், நவரசங்களின் தன்மையும், வர்ணனைப் பாகங்களும் அருமையாய் ஆராய்ந்து இந்நூலில் அமைத்திருக்கின்ற அழகு படிப்போர் மனத்தைக் கவரக்கூடிய தென்பதற்கோரையமிலது.

கதையின் போக்கு மிகச்சிறந்து விளங்குவதுடன் சொல்நயமும், பொருள்நயமும் இதில் பெரும்பாலும் மிகுந்து தோன்றுகின்றனவாதலால் எவரும் இதன்பால் விருப்பையே யடைவர் என்று நான் இங்குத் தெரிவிப்பது மிகையாகும். இந்நூல் நீதிநூல் அல்லாவிடினும் ஆங்காங்கு விவரித்திருக்கும் சிற்சில கருத்துக்கள் அழகும், தூய்மையும் கூடியனவாயிருக்கின்றன.

இன்னும் இக்கதைக் கொட்டி வருகின்ற காதற் சிறப்பு, கற்பின் திறம், தெய்வ மகிமை, உலக வியல முதலிய நல்லுரைகள் படிப்பவர் மனத்தில் ஊன்றிப் பதியாது போகா. மற்றும், இப்புத்தகத்தில் தொடர்ந்து நின்ற அதியற்புதமான சம்பவங்கள் முடிவடையப் பெறாமையால் அம்முடிவைக் காணப் பெரிதும் நான் அவாவுற்றிருக்கின்றேன். என்னைப்போலவே இக்கதை வாசிக்கும் அன்பர்களும் ஆசைப்படுவாராதலால் இதன் இரண்டாம் பாகம் கூடிய விரைவில் வெளிவருமென்று எதிர் பார்க்கின்றேன்.

தி. அரங்கசாமி நாயுடு,
தமிழ்ப் பண்டிதர்.

சென்னை
3—10—1927.

19322

ஸ்ரீ

# நீல அரண்மனை

## அல்லது

## கமலவன தேவகி

---

## முதல் பாகம்

---

### முதலாம் அத்தியாயம்

**மா**லைப்பொழுது மணி ஐந்திருக்கும். காலையில் வந்த கதிரவன் தன் வேலை முடிகிறதென்று மேலைக் குடாவிற்குள் காலை நுழைக்க வெகு துரிதப்படுகிறான். வச்சிரபுரியில், மணி ஐந்தானதும் வீதிகளெல்லாம் ஜனங்கள் வெகு அழகான உடைகளை யுடுத்திக் கொண்டு அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். மோட்டார்வண்டிகள் ஒருபுறமும் குதிரைவண்டிகள் மற்றொருபுறமுமாய் ஓடுகின்றன. மணியும் ஆக ஆக கடற்கரை யோரத்தில் ஜனத்திரளும் அதிகரிக்கிறது. காற்றுவாங்கிக்களை தெளியவந்தவர்கள் வெகு சிலராயினும் வேடிக்கை பார்க்கவந்தவர்கள் வெகு பேர். காதலியைக் காணவந்தகாதலனும், காதலனைத் தேடிவந்தகாதலியும், பெண்களைப் பார்த்துக் கண் மயங்குவோரும் பெரியவர்களைப் பார்த்து வந்தன

மளிப்போரும், சிநேகிதரைக்கண்டு சிரித்து நிற்போரும், பகைவரை யடிககக்கல்லெடுப்போரும், சோம்பேரிகளும், சூதுக்காரருமாக எல்லோருங்கூடி ஏக கும்பலாய்த் தங்கள் தங்கள் வேலைகளில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள்.

இருந்திருந்து மணியும் ஏழானது, பூரணச்சந்திரன் தன்பொன்மயமான பிம்பத்தை பூமியில் பரப்புகிறான். தென்றல்காற்று திவ்வியமாய் வீசுகிறது. கும்பலாயிருந்த ஜனங்களெல்லாம் கூட்டங் கூட்டமாய்ப் போகவாரம்பித்தார்கள்

பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் தங்களுடைய கடினபாடங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதுடன் பரீக்ஷகாலத்தில் தமக்குப் பக்கத்திலிருந்த மாணுக்கனைப் பக்குவமாய்ப் பார்த்தெழுதிப் பரீக்ஷையை ஜெயித்துக் கொண்டவல்லமையையும் உற்சாகத்துடன சொல்லிக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் வீட்டைநோக்கி நடக்கிறார்கள்.

காதலர்கள் தமது அழகிய உடையுடன் அன்ன நடைநடந்து ஒருவரையொருவர் பார்த்து ஒய்யாரச் சிரிப்பை ஒயிலாய்ச் சிரித்துக்கொண்டு கைகோர்த்து வண்ணமாக, காதல் வார்த்தைகளைக் கரைக்கில்லாது பேசி ஒருவரையொருவர் உள்ளன்புடன் புகழ்ந்து கொண்டு பைய நடைநடந்து பக்குவமாய்ப் போகிறார்கள்.

வக்கீல்கள் தமது கக்ஷிக்காரர் கண்ணில் மண்ணை போடுவதெப்படியென்று வழக்கின் விபரங்களை

ஒருவருக் கொருவர் எடுத்துரைத்துக்கொண்டு, குற் யுக்திகளையுங் குதர்க்க ஞாயங்களையும் வாயாடுவதின் வல்லமைகளையும் ஏராளமாக எடுத்தியம்பிக்கொண்டு சீராய் நடக்கிறார்கள்.

உத்தியோகஸ்தர்கள் தமது ஆபீஸ் விஷயங்களை ஆதரவாய்ப் பேசிக்கொண்டு யாருக்குங் கெடுதிநினைக் காதவர்களாய் தமக்குக்கிடைக்கும் சம்பளம் குடும் பச் செலவுக்குப் போதாதென்று ஒருவருக் கொருவர் முறையிட்டுக் கொண்டுபோகிறார்கள்.

ஆனால் சோம்பேறிகளோ! தமது விடுகாலிக் குணத்தை விமரிசையாய்க் காட்டி தெருவழியே போகும் ஜனங்களை வம்புசண்டைக்கு வலியவிழுப்ப தும், பெண்களைப்பார்த்துப் பெருக்கச்சிரித்தும் கண் களைக்காட்டி காக்கைபோல் கத்துவதும், கொச்சை வார்த்தை அகராதியை இச்சையுடன் திறந்து கோடி கோடியான சோதாப்பேச்சுகளைத் தேடித்தேடி, அடுக்கிவிடுவதும், கும்பலாய்க் கூட்டிக்கொண்டு பெண்களின் நடுவேசென்று அகப்பட்டவற்றை அப் படியே அழுத்திக்கொண்டு போகவேண்டி, குழந்தை யின் கையில் அப்பத்தைக் கண்ட காக்கையைப்போல் ஏமாருஞ்சமயம் பார்த்துக்கொண்டு கூட்டங் கூட்ட மாய்ப் போகிறார்கள்.

அதிகேவலமான விபசாரஸ்திரீகள் கில்ட் நகை களை ஏராளமாயணிந்து இரவல் சேலையை எதேஷ்ட மாய்க் கட்டிக்கொண்டு, "இந்தச்சமயத்தில் எந்தப்

புண்ணியவான் ஏராளமாய்ப்பணத்தைக் கொண்டு வந்து எம்மிடங் கொடுத்துவிட்டு ஏமாந்துபோவா ரோ'' என்ற எண்ணத்துடன் ஒழுங்காக உடுத்திக் கொண்டு போகும் வாலிபர்களைப்பார்த்து மையல் சிரிப்பை மகிழ்வுடன் காட்டி முந்தானையை யிழுத்துப் பிந்தானையை வலித்து கண்வலையை விரித்துக்கான் வழியாய்ச் செல்கிறார்கள்

இவ்வாறாக ''கனத்தைக் கனந்தேடும் கருவாட் டுத் தலையை பூனை தேடும்'' என்பதற்கிணங்க அவ்வத் தொழில்காரர் ஒவ்வோர் கூட்டமாகக் கூடித் தத்தம் தொழில்களைப்பற்றித் தக்கபடி பேசிக்கொண்டு பக்கு வமாய்ப் போகிறார்கள்

இவ்விதம் போகும் கூட்டங்களிலொன்றும் சேராது ஓர் வாலிபன் தனிமையாகப் போய்க்கொண் டிருக்கிறான் ''இவன்யார்'' என்பதும் ''எவ்விடம் போகிறான்'' என்பதும் தெரியவில்லை ஆனால் இவன் பெரிய தெருவழியாகவே நடக்கலானான்

பெரியதெருவில் ''வனசுதவிலாஸ்'' என்னும் கண்ணியமான பங்களாவின் வாசலில் ஓர் மோட்டார் வண்டி ஓடுவதற்குத் தயாராக நிற்கிறது. வண்டிக் குள்ளிருந்த ஒருவர் வெளியே வந்த வாலிபனைப் பார்த்து ''தம்பி நீதானா'' என்று விரைவுடன் கேட் டார் ''ஆம் அப்பா'' என்று சொல்லிக்கொண்டே அரு கே வந்தான் வாலிபன். ''தம்பீ என்னருமைக் கண் மணி யெங்கே'' என்று வண்டியினுள்ளேயிருந்த ஓர் பெண்மணி வாய்விட்டுக் கதறினாள். ''என்ன ?

என்ன?'' என்று கேட்டுக் கொண்டே வண்டிக்குள் ஏறினான் ஒன்று மறியாத வாலிபன்.

வாலிபன் ஏறினதும் வண்டி வாயுவேக மனோ வேகமாய்க் கூவிக்கொண்டே ஓடிவிட்டது.

* * * * * *

மணியும் பன்னிரண்டாகிறது. நிலவும் பகல் போல் காய்கிறது. ஊரெல்லா முறங்குகிறது ஒரு இடத்திலாவது சந்தடியைக்காணோம். ஆனால் பெரிய தெருவிலிருந்து சுமார் முக்கால்மைல் தூரத்தில் பெருமாள் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள பெரிய மெத்தை வீட்டில்மாத்திரம் சந்தடிகேட்கிறது. விளக்குகளெல்லாம் வெகு பிரகாசத்துடன் எரிகின்றன. வெளிக்கதவும் திறக்கப்பட்டிருக்கிறது.

வீட்டிற்குள் விசாலமான ஒரு வரவேற்புமண்டபமும் அதிலனேக நாற்காலிகளும் ஒழுங்காய்ப் போடப்பட்டு எல்லாம் சுத்தமாகவே காணப்பட்டது. அங்கே ஒரு சாய்வு நாற்காலியின்மேல் சற்று வயது சென்ற பெரியவரொருவர் நாற்காலியை விட்டெழுந்து தெருக்கதவண்டைபோய் திக்கெல்லாம் நோக்கி "இன்னும் வரக்காணோமே'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கதவையடித்துப் பூட்டினார். கதவு பூட்டிய சத்தத்தைக் கேட்டு உள்ளேயிருந்து ஓர் அம்மாள் ஓடிவந்து "தம்பி வந்தானா'' என்று ஆவலுடன் கேட்டாள்.

'அவனெங்கே போனானோ என்னவோ எனக்கொன்றுந் தெரியவில்லை, எல்லாம் வல்ல ஈசனே யறி

வார், நானென்ன செய்வேன் எங்கேபோய்த் தேடு வேன் இந்தநேரத்தில்'' என்றுபெரியவர் மிகவும் விசனத்தோடு கூறினர்.

''நானென்ன செய்வேன் அந்தப்பெண் படும் பாட்டைக்கண்டு சகிக்கமுடியவில்லையே—தெய்வமே என் மகனெங்கே போனுனே என்னகஷ்டத்திலானுனே தெரியவில்லையே'' என்று வந்த பெண்மணி சொல்லிக் கொண்டே தேம்பித்தேம்பி அழலானுள்.

'அவன் சீக்கிரத்தில் வந்திடுவான் யாராவது சிநேகிதர்கூட ஏதாவது வேலையாய்ப் போயிருக்கக் கூடும் நீ இவ்விதம் குழந்தைபோ லழுதால் உன்மருமகளெப்படியிருப்பாள், உள்ளேபோ மருமகளைத் துக்கப்படாமலிருக்கச் சொல்லு எழுந்திரு' என்று பெரியவர் அம்மாளுக்கு ஆறுதல்சொல்லி யனுப்பிவிட்டு ஓர் சாய்வுநாற்காலியி லுட்கார்ந்தார்.

உத்தமகுணம் வாய்ந்த சத்தியவானுய்க் காணப் படும் இந்தப் பெரியமனுஷன் இப்போது பேசிக் கொண்டிருந்தது தன்மனைவியிடம் இவர்பெயர் மனேதயன். மனைவிபெயர் ராசம்மா. இவர்களுடைய மூத்தகுமாரன் காற்று வாங்க வெளியே சென்று இரவு மணி பன்னிரண்டாயும் வீட்டுக்கு வராதிருந்ததால் எல்லாருக்கும் ஏக்கத்தையுண்டு பண்ணிற்று. கணவனைக்காணுமல் மனைவி அலறுவதும் பிள்ளைவராமல் பெற்றோர் தவிப்பதும் எஜமானனைக்காணுது வேலைக்காரர் விழித்திருப்பதுமாக எல்லோர் மனதிலும்

ஏக்கம் எல்லோருக்கும் பெருங்கவலை. என்னசெய்வ தென்று ஒன்றும் தோன்ருது மனேதயன் நாற்காலி யில் சாய்ந்து கொண்டார்

இப்படியிருக்குஞ் சமயத்தில் தெருக்கதவில் யாரோ தட்டுஞ் சத்தங்கேட்டது. திடுக்கிட்டெழுந் தார் மனேதயன். வேலைக்காரனெருவன் விரைவா யோடிவந்தான. பின்னும் உரத்த சத்தமாய்த் தட்டி ஞர் வெளியிலுள்ளவர். தட்டினவர் தட்டிமுடிப்பதற் குள்ளே திறந்துவிட்டார்கள் கதவை.

உள்ளே வந்தான் உத்தமமான ஓர்வாலிபன். வந்தவனுக்கு வயது சுமார் இருபத்திஞன்கிருக்கும், கருணைநிறைந்த அவன்முகம் களங்க மற்றிருந்தபோ திலும் மனதிலேதோ கவலைகுடிகொண்டிருந்தாற் போல் தோன்றியது. மகன் வந்ததைக் கண்ட தகப்ப ஞர் மனம்பூரித்து ஆனந்தப்பட்டார். தாயாருக்குண் டான மனமகிழ்ச்சியில் ஒன்றும்தோன்ருது பிரமித்து நின்ருள் எல்லாரும் ஒருவரையொருவர் பார்த்தவண் ணமாய் நின்ருர்கள். துக்கக்கடலில் மிக்க அமிழ்ந்திக் கிடந்தவர்களுக்கு திடீரென்று ஆனந்தமுண்டானதும் என்னசெய்வதென்று தோன்ருது மவுனமாயிருந் தார்கள். இவ்விதம் பரிதவிக்கும்பெற்ருேரின் நிலைமை யை யறிந்த மகன் அவர்களைச் சமாதானப் படுத்த வெண்ணி ஓர் சுருக்கமான செய்தியைச் சொல்லு கிருன்.

'நானிங்கிருந்து புறப்பட்டு பீச்சுக்குப்போய் சிறி துநேரம் வேடிக்கை பார்த்துவிட்டுத் திரும்பிவரும்

பொழுது சிறியதகப்பனார் கனகசேகரம் அவர்கள் ஒருவேலையாகக் காவிரிப்பூம்பட்டினம் போவதற்குத் தயாராய் நிற்கும் சமயத்தில் நானவ்வழியே வருவதைக்கண்டு என்னையும் தன்னுடன் வரும்படிகேட்டார். என்னவோ கஷ்டசம்பவ மாயிருந்த படியால் தடைசொல்லாது அவர்கள் கூடவேபோய் ஆகவேண்டியவைகளைச் செய்து முடித்துவிட்டு இப்போது தான் திரும்பிவந்தோம்.' என்று சொல்லி முடித்து மாளிகைக்குள் போவதற்கு வேகமாய் நடந்தான்.

"கனகசேகரத்துக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கக்கூடாதா?" என்று தகப்பனார் கேட்டார். 'யாரிடமாவது சொல்லியனுப்பக்கூடாதா' என்றாள் தாயார். இக்கேள்விகளுக்கு பதிலும் சொல்லாது மெத்தைக்குச் சென்றுவிட்டான்.

மெத்தைமேற் சென்றால், முதலில் ஒரு ஹாலும் அதில் அழகான சோபாக்களும் அலங்காரமான மேஜைகளும் விதவிதமான நாற்காலிகளும் மேஜைகளின் மேல் வேடிக்கையானசிலைகளும் விநோதமான சாமான்களும் கண்ணுக்கினிமையைக் கொடுக்கும் காகிதப்படங்களும் அங்கே வெகு அலங்காரமாய் பார்ப்போர் மனத்தை ஆனந்திக்கச் செய்யுமென்பதற்குத் தடையில்லை. ஹாலைத்தாண்டிச் சென்றால் சில அறைகளும் அதற்கப்புறம் ஓர் படுக்கை யறையும் காணப்பட்டன. இவ்விடத்தில் பித்தளையினால் செய்யப்பட்ட ஒரு விசித்திரக் கட்டிலின் மேல் சித்திரப்பதுமை

போலொருமாது நித்திரை போகிறாள். இவள்யார்? இவள் தான் மனோதயனுடைய சீமந்த புத்திரனாகிய சுந்தர ராஜனுடைய மனைவி கமலாக்ஷி.

இவளுக்குக் கலியாணமாகி சிறிது காலந்தானிருக்கும் கட்டியநாள் முதல் விட்டுப்பிரியாத கணவன் இன்று காரணமில்லாமல் தாமதித்ததை நினைத்து மிகவும் வருத்தப்பட்டாள். தன்கணவனுக்கு ஏதாவது இடையூறு நேர்ந்ததா என்று நினைத்து ஏங்கித் தவித்தாள். அருங்குண முடைய அரியதொரு கன்னாள் சந்திரன் வெட்கிடும் சுந்தரமுகத்தினள் கொவ்வைப்பழம் போல் சிவந்த நல்லுதட்டினள் முத்தைப் போல்பல்லினள் தத்தைபோல் மொழியினள். அன்ன நடையினள் அரியதோர் குணத்தினள் சித்திரப் பாவை சிங்காரலங்கார வொய்யார வதனி செல்வப் பெருகிலே சீராய் வளர்ந்த கமலாக்ஷிக்கு துக்கந் துயர மென்பதை எள்ளளவு மறியாது பிறந்தநாள் முதல் சந்தோஷகரமாயும் ஆனந்தமயமாயும் காலங் கழித்த அரிவைக்கு இன்று கணவனைக் காணாததால் துக்கமென்பது மிக்கவுண்டாய் ஏழாட்டங்காட்டி அவளை ஏங்கி நிற்கச் செய்தது. கட்டிலில் படுத்துக் கணவனை நினைத்துக்கொண்டு கண்ணுறங்கி விட்டாள்.

இந்தச் சமயத்தில் வந்தான் சுந்தரராஜன். வந்து பார்த்தான் மனைவியின்கோலத்தை. துக்கம் அவனுக்கு மிகவும் வந்தபோதிலும் பக்குவமாயதை யடக்கிக் கொண்டு மனைவிபக்கத்திலுட்கார்ந்து அருட்டிப் பார்த்தான் "கண்ணே, கமலம்" என்று கூப்பிட்டான்

இப்போது காமலாக்ஷி சிறிதுகளே தெளிந்து கண்ணைத்திறந்தாள். கணவனைக் கண்டாள். கண்டதும் கடிதிலெழுந்து பத்தாவைத்தாவிக்கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள். இதைக் கண்டகணவன் மனந்தாளாது மனைவியைத் தன்மடிமேலுட்காரவைத்துச் சொல்லுகிறான் "அன்புக்கிசைந்த என்னுருயிரே நீ இவ்விதம் என்மனதைப் புண்படுத்தலாமா? நீ இவ்விதம் அழுவதில் யாதுபிரயோசனம் உன்புத்தியெங்கே போயிற்று" என்றார்.

"என்னருமைக் கண்ணாள! என்னை மன்னிக்க வேண்டும், நானென்ன செய்வேன் எத்தனையோ விதமாய் என் மனதைச் சமாதானம் செய்தும் ஒன்றும் பிரயோசனப்படவில்லை ஆகையால் என்னை மன்னிக்குமாறு பிரார்த்திக்கிறேன்" என்று கெஞ்சிக் கேட்டாள் வஞ்சியர் திலகம்.

சிறிது நேரத்தில் போஜனம் முதலியவைகள் தயாராய் விட்டது. யாவரும் போஜன மருந்திவிட்டு தங்கள் தங்கள் படுக்கை யறையுட் சென்று சயனித்துக் கொண்டார்கள். மணியும் ஒன்றடித்தது.

சுந்தர ராஜனும் கமலாக்ஷியும் தம் படுக்கை யறைக்குட் சென்று, சுந்தர ராஜன் சயனித்துக் கொள்ளுஞ் சமயத்தில் கமலாக்ஷி வெற்றிலை யெடுத்து மடித்துக் கணவனுக்குக் கொடுத்துப் பின் தானும் தாம்பூலந் தரித்துக்கொண்டு முகமலர்ந்து நகைத்துக் கொண்டே கணவன் கையை எடுத்துத் தன் மடிமீது

வைத்து மனதிலேதோ நினைத்தவள் போல் "இவ்வ ளவு நேரமுமெங்கே போயிருந்தீர்கள்" என்று கண வனை நோக்கிக் கவனமாய்க் கேட்டாள்.

"அதெல்லா முனக்கென்னதிற்கு" என்று சுந் தர ராஜன் சிரித்துக்கொண்டே கூறினன்.

"இல்லை! இல்லை! சொல்லுங்கோ! நானறியக் கூடாதா? நீங்கள் போனவிடத்தை சொல்லுங்கோ! சொல்லுங்கோ" என்று கொஞ்சிக் குலாவினுள் கோதை நல்லாள்.

"சொல்லுகிறேன் கொஞ்சம் பொறு" என்று சொல்லிவிட்டு ஏதோ யோசனை செய்தான் சுந்தர ராஜன். கணவனிவ்விதம் சொல்லியதைக் கேட்ட மனைவி சற்று வியாகூலமடைந்து கணவனை நோக்கி 'என் பிராண நாதா! இப்பூவுலகின்கண் நாமிரு வரும் ஏகமான கால முதல் என்னுடல் பொரு ளாவி மூன்றும் உங்களுக்கு அடைக்கலம் செய்து கடவுளும் பெற்றோரும் கணவனென்று நம்பி சகல சிஸ்ருஷைகளும் செய்து சுகத்திலும், துக் கத்திலும், வாழ்விலும், தாழ்விலும், செல்வத்தி லும், தரித்திரத்திலும், நன்மையிலும், தீமையிலும், பாபத்திலும் புண்ணியத்திலும் எல்லாவற்றிலும் நாளுெரு பங்கேற்று இரண்டுடலுக்கு ஒரு உயிரெ னப் பாவித்துவரும் யான் உங்களுடைய இரகசியங் களை அறியக்கூடாதா?' என்று சிறிது துக்கத்தோடு கேட்டாள்.

இதைக் கேட்ட கணவன் மனங்கசிந் துருகி மனைவியைத் தன் மார்போடணைத்து இதழ்சுவைத் துக்கொண்டு, "கண்ணே, என்னுடைய ஆந்திரங்களை உன்னிடத்தில் கூறுதிருப்பேனா? நீயேன் இவ்வே தாந்தமெல்லாம் மேலுக்குமேலடுக்குகிறாய்?" என்று சமாதானங் கூறினார்.

"சொல்லுங்கோ" என்றாள் சுந்தரவதி.

சொல்லத் தொடங்கினான் சுகுணபுருஷன்—"கனகசேகர மவர்களுடைய மூத்த குமாரத்தியாகிய வனசுதாவை நேற்றிரவு யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அதனை நிமித்தமாக அவர் தமது மைத்துனருக்குச் சேதி தெரிவிக்கவேண்டி மனைவி மக்களுடன் புறப்பட்டுக் காவிரிப்பூம் பட்டினம் போவதற்குத் தயாராய் நிற்குஞ் சமையத்தில், நான் அவ்வழியே வருவதைக் கண்டு, என்னையுந் தங்களு டன் வரும்படி கேட்டார். அவருடைய வேண்டுகோ ளுக்கு மாறுத்தரம் சொல்லாமல் உடனே அவர்களு டன் சென்றேன். செல்லும் வழியில், சுந்தர முதலி யாரைச் சந்தித்துச் சங்கதியைச் சொன்னோம். முத லியார், வாயில் விரலைவைத்துப் பதை பதைத்தவர் போல் சிறிது நேரம் நின்று பின்பு எங்களை நோக்கி, "சுகந்த சீலன் காசியாத்திரை போய்விட்டார், நீங்கள் அங்கு செல்வதில் பிரயோசனமில்லை" என்றார். இதைக் கேட்டவுடன், நாங்கள் திரும்பி வந்து அனேக விடங்களுக்குத் தந்திமூலமாய் சேதியைத் தெரிவித்து வீடுவந்து சேர்ந்தோம். கனகசேகர

மவர்களும், தெய்வானை அம்மாளும் படுந் துயரத்தை யார்தான் கண்டு சகிப்பார்? அண்ட சராசரங்களையும் படைத்து எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபித்திருக்கும் பரமாத்மாவே, அவர்களுடைய துக்கத்தைத் தீர்க்கவேண்டும். ஊணுறக்கந் துறந்து ஆறாத கண்ணீரை ஆறாய்ப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான்.

கணவன் சொல்லிய வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டிருந்த கமலாக்ஷி, இடிவிழுந்தாற்போலேங்கி ''ஐயையோ இதென்ன அனியாயம்! அதியாச்சர்யமாயிருக்கிறதே! யார்திருடியது! எப்படிக்கொண்டு போனார்கள்! ஒருவேளை வனசுதாவை யாராவது காதலித்து ஏமாற்றி கூட்டிக்கொண்டு போயிருப்பார்களா?'' என்று ஆச்சரியத்துடன் அவசரமாய்க் கேட்டாள்.

''அப்படி யிருக்காது. வனசுதா பள்ளிக் கூடம் விட்டு வந்து கொஞ்சக் காலந்தானிருக்கும். அதற்கு முன்பும் அவள் ஒன்றுமறியாத பெண், அவளுக்குக் காதலருங் கிடையாது. அவள் தூங்குஞ் சமையத்தில், அவளுடன்கூட அனேகம் பொருள்களையுந் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்'' என்றான் சுந்தரராஜன்.

''இதைச் சும்மாவிட்டு விடுவார்களா? பெண்ணின் பெற்றோர்'' என்று கேட்டுச் சிறிது நிதானித்தாள் கமலாக்ஷி.

"சும்மா விடுவதா? ஊரெல்லாந் தந்திகள் ஊக்கத்துடன் போய்க்கொண்டிருக்கின்றன. நாடெல்லாந் தேடிவர ஆட்களை அனுப்பியிருக்கிறார்கள். நாளையத் தினம் நாங்களெல்லாரும் மணிக்கம்பி தோட்டத்துக்குச் சென்று அங்குள்ள கள்ளர்களின் வீடுகளை யெல்லாம் சோதனை செய்வதாகத் தீர்மானித்திருக்கிறோம்." என்றான் சுந்தர ராஜன்.

"திருடருடைய நாட்டுக்குப் போனால், போகிறவர்களை, சூதுசெய்து கொன்றுவிடமாட்டார்களா?" என்று கமலாக்ஷி திகைத்தாற்போல் கேட்டாள்.

"வெட்டுவதாவது! கொல்லுவதாவது! துப்பாக்கிகளில் மருந்து நிறைத்து, சேவகர்கள் தோள்மேல் சிராய் வைத்திருப்பார்கள். ஒரு வெடிக்கு ஒன்பது பேரைக் கொல்லும் உயர்தரத் துப்பாக்கிகள் எங்களிடமிருக்கும், திருடர்களால் என்ன செய்யக்கூடும்? நம்மைக்கண்டவுடன், நாயைக்கண்ட முயலைப்போல் ஓட்டம் பிடிக்கவேண்டியதுதான்." என்று சுந்தர ராஜன் மனைவிக்குத் தைரியமுண்டாகுமாறு கூறினான்.

"எப்படியும் ஜாக்கிரதையாகத் தானிருக்கவேண்டும்." என்று கமலாக்ஷி ஆலோசனையுடன் கூறினாள்.

"சரி! தூக்கம் வருகிறது! மணியும் இரண்டாய் விட்டது. தூக்கமும் வந்துவிட்டது. காலையில் வெளியே போகவேண்டிய வேலைகள் அனேகமிருக்கின்றன—தூங்கலாம்' என்றான் சுந்தர ராஜன்.

"என்ன அழகு! என்ன சௌந்தர்யம்! என்ன அறிவு! என்ன பொறுமை! என்ன தயாளகுணம்!

என்ன பரோபகாரம்!—வயதும் பதினாறுதானிருக்கும். பதினாறு வயதுப் பாலிகைப் பெண்ணைப் பறி கொடுத்த பெற்றாரின் மனம் என்னபாடு படுமோ! அறியாத பெண்மணி யார் கையில் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படுகிறாளோ?—சர்வ வியாபியாகிய பரமேஸ்வரனே அறிவார் சதிகாரப் பாவிகள் செய்த இச்சூதான செயலை.'' என்றிவ்வாறாகக் கமலாக்ஷி கூறிக்கொண்டு சயனித்தாள். சகலதும் அவளுடன் உறங்கின.

# இரண்டாம் அத்தியாயம்

வச்சிரபுரிக்குத் தென் மேற்கே சுமார் நாற்பத்தைந்து மைல் தூரத்தில் காவிரிப்பூம் பட்டினம் களங்கமற விளங்கிற்று. இப்பட்டினத்தில் அனேக கோட்டை கோபுரங்களும், மாட மாளிகைகளும், விசித்திரமான வீடுகளும் விநோதமான கட்டிடங்களும், அதி விநோதமாய் அங்கே அளவு கணக்கற்றுக் காணப்படும். நகரத்துட் பிரவேசித்தால் வீதிகள் யாவும் மிகவும் சுத்தமாயும் அலங்காரமாயும் காணப்படுவதுமல்லாமல், நகரபரிபாலன சபையாரினூக்கத்தையும் நன்ருக விளக்கிற்று.

அதோ பாருங்கள்! அதி விநோதமான ஓர் கட்டிடம்! செட்டித் தெருவின் மூலையில் திட்டமாய்த் தெரிகிறது. என்ன அழகான கட்டிடம்! எவ்வளவு அலங்காரமான வீடு, இவ்விசித்திரக் கட்டிடத்தின் முன் பக்கத்தில் மாத்திரம் பூச்செடிகளெல்லாம் புனிதமாய் வைக்கப்பட்டு யாவும் மிக அலங்காரமாய்க் காணப்படுகின்றன. வீட்டினுள் யாராவது உண்டோ? இல்லையோ? என்பது தெரியவில்லை.

சற்று இருந்திருந்து—வீணையின் நாதமும் கிராமபோனின் கீதங்களும் மெல்ல மெல்லக் கேட்கின்றன. ஆட்களின் சந்தடி கேட்கவில்லையாயினும், உள்ளே யாரோ இருக்கிருர்கள் என்பது உறுதியாய்த் தெரி

கிறது. சிறிது நேரத்தில் வாத்தியச் சந்தடி யடங்கி விட்டதும், உப்பரிகை மீது யாரோ உலாவுவதாய் தெரிகிறது.

மின்னற் கொடியோ! பொன்னின் செடியோ! தங்கத்தாற் செய்யப்பட்ட இங்கிதத் திருவுருவோ! இந்திரன் போற்றும் சுந்தரவதனியோ! மேனகை பெற்ற மோகன மகளோ! கல்விக் கரசியின் கண்ணிய சொரூபமோ! செல்வத் தலைவியின் சிங்காரத் தோற்ற மோ! அழகே உருவெடுத்த ஆனந்த சொரூபமோ! என்று கண்டோரெல்லாங் கண்விழித்து நோக்கும் வண்ணமாய் அதிமோகன சுந்தரியாகிய ஓர் மாது உப்பரிகை மீது தோற்றினாள்.

தோன்றிய அப்பெண்ணின் அழகைத் தேர்ந் தறிந்து கூற எவர்க்கும் சாத்தியமாகாது. அன்ன நடையும் அழகிய இடையும் மயில்போ லொயிலும் மான்போல் சாயலுமுள்ள சுந்தரரூப சுகிர்தமோகினி யாகிய அப்பாவைக்கு வயது பதினெட்டுக்கு மேற் படாதென்பதை அவளுடைய தேகம் திருத்தமாய் எடுத்துக் காட்டிற்று. நடுத்தர அளவும் சிகப்பு நிற மும் பொருந்திய இந்நாரி மணியானவள் உடுத்திக் கொண்டதோர் உயர்தர நீலப்பட்டாடை, சரிகைக் கரையால் வெகு விசித்திர வேலைகள் செய்யப்பட்டுள் ளது. காதில் வைரக் கம்மல், கழுத்தில் வைர அட் டிகை, கையில் வைரக்காப்பு, காலில் ஓர் சங்கிலியும் மாத்திரம் அவளிடங் காணப்பட்டதே யல்லாமல்

வேறு விசித்திர நகைகளொன்றும் அவள் அணிந்து கொள்ளவில்லை.

தோன்றிய அச்சுந்தரவதி சிறிதுநேரம் அங்கு மிங்குமாக உலாவிக்கொண்டு, மனதிலேதோ நினைத்துப் பெருமூச்சு விட்டாள். கவலையென்பது அவளைக் கடுகளவும் விடாது வருத்திக் கொண்டிருந்தாற் போல் காணப்பட்டாள்.

உப்பரிகை மீதுலாவிக் கொண்டு தன்னுள்ளத்தில் குடிகொண்டிருக்குங் கவலையை உற்று நோக்கிக் கொண்டிருக்குங் கன்னிகையைத் தேடி ஓர் அம்மாள் வந்து, "ராசாத்தி! நீயேன் தனியாய் நின்று உலாவுகிறாய்? தோழிகளிலொருத்தியைக் கூட்டிக்கொண்டு வரக்கூடாதா? என்று கேட்டாள்.

இதைக் கேட்ட மாதரசி சற்று நின்று தன் தாயை நோக்கி "அம்மா, எனக்கொருவருந் துணை வேண்டாம். திக்கற்றவருக்குத் தெய்வந் துணையென் பார்கள். அது போல எல்லாம் வல்ல கடவுளே எனக்குத் துணையாகும்" என்று சிறிது விசனங் காட்டியுரைத்தாள்.

மகளின் வார்த்தையைக் கேட்ட மாதாவானவள் சற்று மனம்வருந்தி "கண்மணி! என்னருமைக் குழந்தாய்! நீயேன் இவ்விதம் சொல்லுகிறாய்? எங்கள் கண்ணுக்குக் கண்ணாயுள்ளது நீயல்லவா? எனக்கு உன்னைவிட வேறு குழந்தைகளில்லை யென்பதும் நீ நன்றாயறிந்தவிஷயம். உன் பிதாவுக்கு மெனக்கும்

அன்பின் பயனாயுதித்த அபரஞ்சி நீயல்லவா? எங்கள ளுக் குன்மேலுள்ள அன்பை நீ நன்றாயறிந்ததில்லை யா? எங்களிடமிருக்கும் ஆஸ்திகளெல்லாம் உன்னு டையதல்லவா? நீ விரும்பிய பிரகாரம் என்னவேண் டுமானாலும் உன்பிதா உள்ளக்களிப்புடன் வாங்கித் தரவில்லையா? சகலசுகங்களும் பொருந்திய உன க்கு இவ்விதம் துக்கமும் வெறுப்பு முண்டாக வேண் டிய காரணமென்ன? சகல சுகங்களுமிருந்தும் கண வன் சுகமில்லையென்று நினைத்து நீ மனம் வருந்தவுங் கூடும். அதுவும், உன் அம்மான்மகனும் அதிவீரனு மாகிய வாசுதேவனுக்கு உன்னை விவாகஞ்செய்து வைப்பதாக உன்பிதா என்னிடம் சொல்லியிருக்கி ருர். ஆதலால் மகளே! என்னருமைக் கண்மணி! நீ ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம். ஜெகதீசன் அருளால் யாவும் சுகமாய் முடியும்.'' என்று ஆதர வாய்க் கூறினுள்.

மாதாவின் அன்பான வார்த்தைகளைக்கேட்ட மக ளுக்கு கவலை அதிகரித்தது. தன்னுடைய கோரிக் கை நிறைவேருமல் போகுமோ என்று மனம் வருந் தினுள்.

இச்சுந்தரவதியின் பெயர் தேவகி. இவளுடைய பிதாவானவர் மிகவும் தனவானுகவும் கல்விமானுகவும் விளங்கினுர். தாயாரோ—தர்மமே அவதாரமெடுத்த தென்றே சொல்லவேண்டும். ''இவ்வளவு நன்னடக்கை யும் தயாளகுணமும் தர்மசீலமுள்ள ஒருபெண் இவ்வுல கிலுண்டா'' என்று கண்டோரெல்லாங் கொண்டாடு

வார்கள். இந்தம்மாளின் பெயர் அன்னலக்ஷிமி—கண வன்பெயர் சுகந்தசீலன். சுகந்தசீலனை எவர் கண்டா லும் "இருந்துங் கொடை கொடுத்தா ரிறந்துங் கொ டை கொடுத்தார் சீதக்காதிமரக்காயர். அவருக்குப் பின் நம் சுகந்தசீலனே அவதாரமெடுத்திருக்கிறார்." என்று புகழ்ந்து பேசுவார்கள்.

இவ்வித நற்குணம் பொருந்திய பெற்றோரின் அபிப்பிராயத்துக்கு மாறாகத் தன்னுடைய எண்ணத் தை யெவ்விதம் வெளியிடுவதென்று தோன்றாது தேவகிக்குண்டான மனக்கவலைக்கு எல்லையில்லை. பெற்றோர் கோரியிருக்குங் கணவனை மணம்புரியவிருப்ப மில்லாதவளாய் தான் கோரிய கணவனையே மணம் புரிந்து சுகமாய் வாழவேண்டுமென்னும் நோக்க முடையவளாயிருந்தாள்.

இவையெல்லா மாலோசித்தளவில் தேவகிக் குண்டான கவலைக்கு அளவில்லை, தன் துக்கத்தின் நோக்கத்தை வெளியிடுவதற் கஞ்சினாள். தான்கோரிய வரனை மணம்புரிய முடியாவிட்டால் மரிப்பதாக வுறுதிகொண்டாள். இப்போது தன் தாயார் சொல் லிய அன்பான வார்த்தைகளைக் கேட்டுச் சிறிதுமனந் தேறிப் பின்னும் விவாக விஷயத்தில் மனங்கலங்கின வளாய், தாயை நோக்கி "அம்மா! எனக்கொரு கவலையுமில்லை யாதொரு துக்கமுங் கிடையாது! எனக்குக் கல்யாணமும் வேண்டாம் காக்ஷியும்வேண் டாம். நீங்கள் அவ்விஷயத்தில் வீண் சிரமமெடுத்

துக் கொள்ளாதேயுங்கள். நான் கன்னியாகவே காலங்கழிக்க உத்தேசித்திருக்கிறேன்!' என்றாள்.

இதைக் கேட்ட தாய் மகளை நோக்கி "மகளே! உலகத்திலுள்ள கன்னிகாஸ்திரிகளை விவாகஞ்செய்து கொள்ளும்படி கேட்டால், அவர்கள் உள்ளுக்குள்ளே எவ்வளவு விருப்பமிருந்தபோதிலும், வெளிப்பேச்சில் வேண்டாமென்று சொல்வது வழக்கம். அப்பழக்கம் உன்னையும் பிடித்திருக்கிறாப்போல் தெரிகிறது. மேலும் வாசுதேவனை நீ சிறுபிராயந் தொடக்கம் நன்றாக அறிவாய். அழகிலோ, படிப்பிலோ, தனத்திலோ, குணத்திலோ எல்லாம் சரியொத்திருக்கிறான். உன் பிதாவுக்கு இவ்விஷயத்தில் மிகவும் விருப்பமாயிருக்கிறது" என்றாள்.

இவ்வாறாக இவர்கள் பேசிக்கொண் டிருக்கும் போது வேலைக்காரன் ஒருவன் "அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டு உப்பரிகைக்கு வந்தான்.

"ஏன் சாமிநாதா! என்ன விசேஷம்?" என்று அன்னலக்ஷ்மி ஆவலுடன் கேட்டாள்.

"தபால் வந்திருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு கையில் கொண்டுவந்த கடிதத்தை தேவகியிடங் கொடுத்தான்.

தேவகி கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்துத் தாயை நோக்கி "அம்மா! இக்கடிதம் அப்பாவிடமிருந்து வந்திருக்கிறது. அவர் இங்கே வரப் புறப்பட்டபோது, கனகசேகரமவர்களிடமிருந்து, உடனே

புறப்பட்டு வரும்படியாக ஓர் தந்தி கிடைத்ததாம். ஆனபடியால் வச்சிரபுரிக்குச் சென்று கனகசேகர மவர்களுக்கு நேர்ந்த கஷ்டம் என்னவென்றறிந்து வருவதாக எழுதியிருக்கிறார்" என்று கூறி இளநகை பூத்தாள்.

இவ்வாறு கடிதத்திலுள்ள விஷயங்களைக் கேட்டிருந்த அன்னலக்ஷிமியும் சாமிநாதனும் சற்று ஆச்சரியப்பட்டார்கள். "ஐயா இன்றைக்கே வச்சிரபுரிக்குப் போயிருப்பாரா?" என்று சாமிநாதன் சற்று நிதானித்துக் கேட்டான்.

"ஆம்! ஆம்! இப்போ வச்சிரபுரியில்த் தான் இருப்பார்' என்றாள் தேவகி.

"கனகசேகரத்துக் குண்டான கஷ்டமென்ன? எப்படியுண்டானது? எவ்விதமான கஷ்டம்? அதைப் பற்றி ஏதாவது எழுதியிருக்கிறாரா?" என்று அன்ன லக்ஷிமி அவாவுடன் கேட்டாள்.

"அதொன்றும் எழுதவில்லை. ஆனால் காரியம் என்னவோ கஷ்டமாகத்தா னிருக்கவேண்டும்" என்றாள் தேவகி.

"இல்லாவிட்டால் இவ்வளவு அவசரமாகக் காசிக்குத் தந்தி கொடுத்துக் கூப்பிடவேண்டிய காரணமென்ன? போனமாத மல்லவா கனகசேகர மவர்கள் இவ்விடம் வந்து போனவர். ஏதாவது விசேஷ முண்டாகுமானால் அன்றைக்கே சொல்லி யிருக்கமாட்டாரா?" என்று சாமிநாதன் சிறிது யோசித்துக் கூறினான்.

"ஆமாம்! இதென்னவோ துக்க சங்கதியாகத் தானிருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஐயா இங்கே வராமல் போகமாட்டார்." என்று அன்னலக்ஷிமி கூறி இருவரையும் நோக்கினாள்.

"அப்படியிருக்காது! இதுவேறே யேதோ காரியமாயிருக்கலாம். யாருக்காவது சுகயீனமா யிருந்தால் முதலில் இங்கே யல்லவா தெரியப்படுத்து வார்கள்." என்று தேவகி யுரைத்து மறுபடியுங் கடி தத்தைப் பார்த்தாள்.

இப்பொழுது சாமிநாதன் இருவரையும் நோக்கி "சாப்பாட்டுக்கு நேரமாய் விட்டதம்மா! ஐயா வந்த பின்பு சங்கதிகள் யாவையும் சரிவர அறியலாம். அதிகஷ்டமான சங்கதியாயிருக்காது. ஏதோ நேரில் கண்டு பேசவேண்டிக் கூப்பிட்டிருக்கலாம். நாம் இப்போது அதைப்பற்றி யோசிப்பதாலென்ன பலன்" என்று சமாதானங் கூறி சாப்பாட்டுக் கழைத்தான்.

"என்னமோ கடவுளே யறிவார்" என்று சொல் லிக் கொண்டே மாதாவும் மங்கையும் போஜனத்துக் குச் சென்றார்கள்.

சுகந்த சீலன் காசியாத்திரைக்குப் போகும் போது தன் சிநேகிதனாகிய சுந்தர முதலியாரைச் சந்தித்து தான் காசிக்குப்போகும் விஷயத்தைப் பற்றி தனது மைத்துனர் கனகசேகரத்துக்குத் தெரி விக்கும்படி கேட்டுக்கொண்டார். சுந்தர முதலியார் தனக்குண்டாயிருந்த சில இடைஞ்சலின் நிமித்தம்,

கனகசேகரம் வீட்டுக்கு வந்து சங்கதி சொல்லச் சாத்தியப்படாமலிருந்து விட்டார். பின்பு கனகசேகரம் சுந்தர ராஜன் முதலானவர்கள். வனசுதா காணுமல் போன விஷயத்தைப்பற்றி சுகந்த சீலனுக்குத் தெரிவிக்கப்போகும் வழியில். சுந்தர முதலியாரைச் சந்தித்துச் சங்கதி யாவையும் நன்கறிந்து கொண்டு, உடனே புறப்பட்டு வரும்படியாக சுகந்த சீலனுக்குத் தந்தி கொடுத்தார்கள்.

தந்தி கிடைத்ததும் சுகந்த சீலன் உடனே காசியைவிட்டுப் புறப்பட்டு வச்சிரபுரிக்குச் சென்றார். செல்லும்போது தான் போகும் விஷயத்தைத் தன் மனைவிக்கும் மகளுக்குந் தெரிவிக்கவேண்டியே கடிதமெழுதினார். ஆனால், யாது காரண நிமித்தம் போகிறேனென்று எழுதவில்லை. விஷயம் யாதென்பது ஒருவருமறிந்திலர்.

இது காரணம் பற்றியே அன்னலக்ஷிமியும் தேவகியும் என்னென்னவோ நினைத்து ஏங்கினார்கள். "என்ன நினைத்துமென்ன பயன்" என்று தம்மைத் தாமே தைரியப்படுத்திக் கொண்டார்களாயினும். சிறிது அச்சத்துடனிருந்தார்கள். "அப்பா எப்போது வருவார்" என்று மகளுக்கு யோசனை. "கணவன் எப்போது வருவார்" என்று மனைவிக்கு மனக் கலக்கம்.

சாமிநாதன், சுகந்த சீலன் வீட்டு வேலையாட்களிலொருவன். எஜமானிடத்தில் மிகவும் பிரீதியுள்ளவன். வீட்டிலுள்ள மற்ற வேலைக்காரர்கள் செய்யும்

வேலைகள் யாவையும் மேல் பார்வை பார்த்து, எல்லாரிடத்தும் தமாஷாகப் பேசி வேடிக்கையாய்க் காலங் கழிப்பான். வீட்டிலுள்ள யாவரும் அவன் மீது மிகவும் அன்பு பாராட்டுவார்கள்.

போஜனம் முடித்து யாவரும் தாம்பூலந் தரித்துக் கொண்டு அங்குள்ள ஹாலில் வந்துட்கார்ந்தார்கள்.

இந்தச் சமையல் சாமிநாதன் ஹாலுள் வந்து யாவரையும் நோக்கி "ஐயா இங்கில்லாதது, ஒரு மாதிரியாயிருக்கிறதம்மா" என்று சொல்லிக்கொண்டு ஓரிடத்தி லுட்கார்ந்தான்.

"ஆமாம் சாமிநாதா! அவ்விசனத்தைப் போக்கத் தக்கதாக நீ யோர் கதை சொல்லு" என்று தேவகி யுரைத்துத் தாயாரை நோக்கினாள்.

"சொல்லு! சாமிநாதா; சொல்லு! கேட்கலாம்!" என்று அன்னலக்ஷிமியும் சம்மதங்காட்டிக் கேட்டாள்.

இதைக் கேட்ட சாமிநாதன் இருவரையும் நோக்கி "ஒரு கதை சொல்லுகிறேன். ஆனால் அது அவ்வளவு நன்றாயிருக்குமென்று என் மனதுக்குத் தோன்றவில்லை." என்றான்.

"பரவாயில்லை சொல்லு! நீ சொன்னால் எந்தக் கதையும் நன்றாகவே யிருக்கும் சொல்லு! சொல்லு!" என்று அன்னலக்ஷிமியம்மாள் அவனுடன் கேட்டாள்.

இப்போது சாமிநாதன் சற்று ஆலோசித்துச் சொல்லுகிறான். "நான் சொல்லப் போவது வேறொன்றுமல்ல! ஓர் ஓட்டத்தைப் பற்றிய சிறிய கதையொன்றுதான். ஓட்டமென்றால் சாதாரணமாக பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பந்தையங் கூறி ஓடுகிறார்களே! அம்மாதிரி யோட்டமல்ல. நடுக் காட்டுப் புலியைக் கண்டு இடைக்காட்டு மான் ஓடுகிறதே! அம்மாதிரி யோட்டமுமல்ல. வேட்டை நாய்களைக் கண்ட முயல்களோடுகிறதே அம்மாதிரி யோட்டமுமல்ல. 'பனங்காட்டு நரி சல சலப்புக் கஞ்சாதென்று சொல்லினும்! சில சமையங்களில் அஞ்சி நடுங்கி மருண்டு திரண்டு வெருண்டோடுகிறதே அம்மாதிரி யோட்டமுமல்ல. இது ஓர் விநோதமான வோட்டம் வெகு விசித்திரமாயிருக்கும்:—

"பின்னை என்ன ஓட்டந்தான். அதைச் சொல்லிமுடியேன்" என்று தேவகி கேட்டு கிடலென்று சிரித்தாள்.

"இந்த ஓட்டம் ஓர் விந்தையான ஓட்டம். வெகு வேடிக்கையாயிருக்கும். இதன் பெயர்—வட்டோட்டம் வடுவட்டோட்டம், நெட்டோட்டம் நெடுநெட்டோட்டம் என்பார்கள்" என்றான் சாமிநாதன்.

இதைக் கேட்டதும் அன்னலக்ஷிமியும் தேவகியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சாமிநாதன் சொல்லுகிறான்:—முன்னொரு காலத்தில் முனியாண்டி தேசத்தில் கூளிவீட்டுக்காளி என்று பெயருள்ள ஓர் வண்ணானிருந்தான். இவன் தந்திர

மாக ஜனங்களை ஏமாற்றி அவர்களிடமிருக்கும் பொருள்களைக் கொள்ளையிடுவதும். ஆள்மாறி வேஷம் பூண்டு அன்னிய ஜனங்களின் வீடுகளுக்குச் சென்று அவரவர் சொந்தக்காரர்களைப் போல் நடித்து உள்ள சொத்துக்களை யெல்லாங் கொள்ளையிடுவதும், ஊரார் நிலங்களி லேதாவது விளை பொருள்களிருந்தால், அதைத் தன்னுடையதென்று சொல்லி யாராவதறியாதவர்களுக்கு விற்றுப் பணத்தை வாங்கிக்கொண்டோடுவதும். (பின்பு வாங்கினவனும் சொந்தக்காரனும் சண்டையிட்டுக் கொள்வதும்) இம்மாதிரியாக அவ் வூரிலுள்ள ஜனங்கள் இவனால் மிகவு முபத்திரவ மடைந்து வந்தார்கள். இவன் பேரில் தினந்தோறும் கோர்ட்டு, கச்சேரிகளில் முறைப்பாடுகள் போய்க் கொண்டே யிருக்கும். ஆனால், இவனைப் பிடிக்க ஒருவராலும் முடியாது. போலீஸ்காரர் ஊரெல்லாந் தேடித் திரிவார்கள். இன்ஸ்பெக்டர்கள் இராவெல்லாம் ஒழித் தொழிந்துத் திரிவார்கள். இவர்களொரு பக்கத்தில் தேடித் திரியும்போது, கூளிவீட்டுக் காளி மற்றப் பக்கத்தில் கொள்ளை யடித்துக் கொண்டு கூவாம லோடிவிடுவான். கடவுளைக் கண்டு பிடிக்கினும் பிடிக்கலாம். கூளிவீட்டுக் காளியைக் கண்டு பிடிப்பது கஷ்டமாயிருந்தது. இராக் காலங்களில் இவனைத் தேடித் திரியும் இன்ஸ்பெக்டர், போலீஸ் முதலியவர்கள் பிசாசுகளிடத்திலகப்பட்டுப் பெருமவஸ்தைப் படுவதுமுண்டு. அரசாங்கத்தாரா லியன்றமட்டும் இவனைப் பிடிக்கவேண்டுமென்று எவ்

வளவோ ஏற்பாடுகள் செய்தார்கள். கூளி வீட்டுக் காளியைப் பிடித்துத் தருகிறவருக்கு ஆயிரம ரூபாய் பரிசளிப்பதாகப் பிரசுரஞ் செய்தார்கள். ஒன்றும் பிரயோசனப் படவில்லை.

தினந்தோறும் ஊரிலுள்ள ஜனங்கள் கூக்குரலதிகரித்துக் கொண்டே வந்தது. ‘‘கூளி வீட்டுக் காளி பட்டப பகலில் என் வீட்டுக்குள் புகுந்து உள்ள பொருள்களை யெல்லாங் கொள்ளையடித்து விட்டான்’’ என்று கத்துவோரும், ‘‘என் மகளின் கழுத்திலுள்ள கருபபாசி மணியைக் கொண்டுபோட்டான் கூளி வீட்டுக் காளி’’ என்று தலை தலை யென்றடிக்குங் கிழவிகளும், ‘‘என் பெண்டாட்டியின் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டோடினன். கூளி வீட்டுக் காளி’’ என்று முறையிடும் புருஷர்களும், ‘‘என் பிள்ளையின கழுத்திலுள்ள தாயத்தும் சங்கிலியும் கூளி வீட்டு காளி கொண்டுபோட்டான்’’ என்று அலறி அழும் தாய்மார்களும், ‘‘என் தோட்டத்திலுள்ள வாழைக் குலையாவையும் கூளி வீட்டுக் காளி குறுக்கு வெட்டாய் வெட்டிக் கொண்டோடினன்’’ என்று சொல்லி அழும் தோட்டக்காரரும் அனந்தம்.

இம்மாதிரியாக ஜனங்கள் படுந் துன்பத்துக்கு ஒரு நிவாரணமுஞ் செய்ய முடியாமல், கடைசியாக ‘‘கூளி வீட்டுக் காளியை யாராவது கண்டால் சுட்டுக் கொல்லலாம்’’ என்று அரசாங்கத்தார் விளம்பரஞ் செய்தார்கள். இதுவும் பயன்படவில்லை.

அக்காலத்தில் புகை வண்டிகள் கிடையாது. பட்டாளம் முதலியவைகள் ஒரூரிலிருந்து இன்னொரூருக்குப் போகவேண்டுமானால், கால் நடையாகவே போவார்கள். இவ்விதம்போகும் பட்டாளங்கள்குறித்த இடத்துக்குப் போய்ச் சேர சில காலங்களில் ஆறு மாதங்களுக்கு மேல் செல்லும். ஆகையால், பட்டாளத்திலுள்ள உத்தியோகஸ்த்தர், சேனைத் தலைவர் முதலியவர்கள், தத்தம் மனைவி மக்களையும் தம்முடன் அழைத்துச் செல்வார்கள். இவர்களுடைய சாமான்களும் கூடாரங்களும் தலைச் சுமையாகவே கூலி ஜனங்கள் சுமந்து கொண்டு போவார்கள். இவ்விதம் போகும் கூலியாட்களில் யாருக்காவது நோயினமுண்டானால், நோயாளியை அகற்றிவிட்டு தெரு வழியே போகும் அன்னியனைப் பிடித்து மூட்டை சுமக்க வைப்பார்கள். இவர்கள் சில நாட்களுக்கு நடப்பதும் சில நாட்களுக்குக் கூடார மடித்துத் தங்கியிருந்து களையாறிப் போவது முண்டு.

இத்தன்மை வாய்ந்த ஓர்பட்டாளம் முனியாண்டி தேசத்துக்குப் பக்கத்திலுள்ள ஓர் காட்டில் தங்கியிருந்தது. இதை யறிந்த போலீஸ் அதிகாரிகள்; இப்பட்டாளத்தி னுதவியால், கூளி வீட்டுக் காளியைப் பிடித்துக் கொள்ளலாமென்று நினைத்து, அப்பட்டாளத்தை யுதவிபுரியும்படி கேட்டார்கள். சேனாதிபதி மிகவும் நற்குணவானாகையால், ஒரு தடையுங் கூறாமல் உடனே தன் சேனை முழுவதையும் அழைப்பித்தார் [illegible]

குள் புகுந்து வெகு பிரயாசப்பட்டும் ஒன்றும் பயன் படாது திரும்பிவிட்டார்கள்.

ஒருவனைப் பிடிக்க ஆயிரம் பேரால் முடியாவிட்டால் நீங்கள் பட்டாளத்திலிருந்து என்ன பிரயோசனம்! என்று சேனாதிபதி பட்டாளத்தைப் பார்த்து வேடிக்கையாகக் கூறினார். இச்சேனாதிபதி மிகவும் நற்குண சீலன். யார்மீதுங் கருணையுள்ளவர். தன் கீழ் வேலை செய்யும் ஒவ்வொரு வேலையாட்களிடத்திலும் மிகவும் பிரீதியாய் நடந்து அவரவர்களுக் குண்டான குற்றங் குறைகளை விசாரித்து அதற்குவேண்டிய சகாயஞ் செய்துவருவார். பட்டாளத்திலுள்ள யாவரும் இவரிடத்தில் மிகவும் பயபக்தியுடனிருந்தார்கள்.

சிறிது நேரத்தில பட்டாளம் புறப்படுவதற்குத் தயாராய்விட்டது. எல்லோருந் தங்கள் தங்கள் மூட்டைகளைக் கட்டி கூலியாட்களிடங் கொடுத்தார்கள். எல்லாம சரியாகவே யிருந்தது. ஒரு சிப்பாயின் மூட்டை சுமப்பதற்கு ஒரு கூலியாள் தேவையாயிருந்தது. அதறகு ஓர் ஆள் ஊருக்குள் சென்று பிடிததுவருவதாகச் சொல்லி சில சிப்பாய்கள் சென்றார்கள். செல்லும் வழியிலொருவனைக் கண்டுபிடித்து வந்து, மூட்டையைத் தலையில் வைத்து கூலியாட்கள் பத்தியில் விட்டார்கள்.—இவன்தான் கூளி வீட்டுக்காளி—அகப்பட்டுக் கொண்டதும் "எல்லாம் நன்மைக்குத்தான்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு, மூட்டையைத் தலையில் வைத்ததும் "இதுவும தலை விதியா" என்று பின்னும் நினைத்துக்

கொண்டு கூட்டத்தின் மத்தியில் தாட்டியாய் நடக்கலானான்.

"இவன்தான் கூளிவீட்டுக் காளி என்பது சிப்பாய்கள் அறிவார்களா?" என்று அடக்க முடியாச் சிரிப்பை யடக்கிக்கொண்டு கேட்டாள் தேவகி.

"இல்லை! இல்லை! இவன்தானவன்! அவன்தானிவன்! என்பது ஒருவருக்குந் தெரியாது 'யாரோ சோம்பேறி மூட்டை சுமக்கவுதவுவான்' என்று நினைத்துக் கூட்டிக் கொண்டுபோனார்கள்" என்றான் சாமிநாதன்.

"சொல்லு! சொல்லு!" என்றாள் அன்னலக்ஷ்மியம்மாள்.

ஆரம்பித்தான் சாமிநாதன்—முனியாண்டி தேசத்தைவிட்டுப் புறப்பட்ட பட்டாளம் மூன்று தினங்களுக்கு முறையாய் நடந்து, பின்பு அழகான ஓர் காட்டை யடைந்தார்கள். அலங்காரமான நந்தவனம் போன்ற காட்டைக் கண்ட சேனாதிபதி சிந்தை மகிழ்ந்து அங்கே சில தினங்களுக்குத் தாமதிக்கலாமென்றெண்ணி, கூடாரத்தை யடிக்கும்படி உத்தரவளித்தார். உடனே யாவருங் கூடாரத்தை யடித்துக் கொண்டு; நடந்துவந்த அலுப்பால் அன்றையத் தினம் நன்றாகப் படுத்துறங்கினார்கள். மறு நாட் காலையில் சூரியோதயமானதும் யாவருமெழுந்து காலைக் கடனகளை முடித்துக் கொண்டு, காபி பலகாரம் புசித்துவிட்டுத் தங்கள் தங்களிடங்களி லுட்

கார்ந்து வேடிக்கையாகப் பேசிப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்குஞ் சமையத்தில் சேனாதிபதி யெழுந்து பரிசோதனைக்குப் புறப்பட்டுக் கூடாரம் முழுவதும் பார்த்துவருஞ் சமையத்தில், கூளி வீட்டுக் காளி ஓர் மூலையில் குந்தியிருந்தழுவதைக் கண்டார். அழுது கொண்டிருக்குந் தன் புதிய வேலைக்காரனுடைய குறைகளை விசாரிக்க வேண்டி அவனருகே சென்று "அடே என்ன காரணத்துக்காக நீ யிவ்விதம் அழுகிறாய்? உன் குறைகளை என்னிடம் சொல்லு ஒன்றுக்கும் பயப்படாதே" என்றார். சேனாதிபதி யிவ்விதங் கேட்டதும், கூளி வீட்டுக் காளி சித்தத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர் முன் சென்று காலில் விழுந்து கணக்கில்லா நமஸ்காரஞ் செய்து, "என் ஆண்டவரே! என் கர்த்தாவே! என் புதிய எஜமானே! தங்களைக் கண்டவுடன் என் குறைகள் யாவும் நீங்கிவிட்டன! துக்கமெல்லாம் பறந்துவிட்டது! விசனம் என்னை விட்டகன்றது! இனி நான் அழமாட்டேன்! கவலைப்படமாட்டேன்! என் குல தெய்வமே தங்களை என்னிடமனுப்பிவைத்தது! நான் கடவுளுக்குப் பயந்தவன். தீங்கு செய்யாதவன். அயல் வாழ அகமகிழ்ந்தவன். நல்லாயிருப்பவர்களைக் கண்டு சந்தோஷப்படுபவன். கஷ்டப்படுவோரைக் கண்டு துக்கப்படுபவன். மோசஞ் செய்வோரை நாசஞ் செய்பவன். பரோபகாரிகளுக்குத் துரோபகாரஞ் செய்யாதவன்.—நான் மூன்று நாட்களாய் அன்னாகாரந் துறந்து துக்கக் கடலிலமிழ்

ந்திக் கிடந்ததைக் கண்ட காளிகா தேவியே தங்களை என்னிடமனுப்பினள். ஆகையால், எஜமானே! நமஸ்காரம்! நமஸ்காரம்!'' என்று கூளி வீட்டுக் காளி கணக்கில்லாக் கும்பிடுபோட்டுக் கூறியதைக் கேட்ட சேனாதிபதி சிந்தைமகிழ்ந்து அவனைநோக்கி "அடே! உன் குறைகள் யாவையு மென்னிடங் கூறு நானதற்க்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன்'' என்றார். இதைக் கேட்ட கூளி வீட்டுக் காளி தன் காரியம் கொஞ்சம் பலிக்குமென்று நினைத்து உள்ளுக்குள்ளே மகிழ்ந்து கொண்டு "சுவாமீ! பெருமானே! தேவரீர்! என்குறை வேறொன்றுமல்ல! என் குல தெய்வமாகிய காளிகா தேவிக்கு வருஷந்தோறும் இதே காலத்தில் பூசை போடுவது வழக்கம். அதே பிரகாரம் இவ் வருஷத்தில் பூசைபோட முடியவில்லையே என்று நினைத்து, மூன்று நாட்களாய் அன்னாகாரந் துறந்து காளிகா தேவியை நினைத்தழுது கொண்டிருந்தேன். இராத்திரி என் குல தெய்வம் என்னருகே வந்து 'நீ ஒன்றுக்கும் பயப்படாதே உன் குறைகள் யாவையுந் தீர்க்கிறேன்' என்று சொல்லி மறைந்தாள் என்றான். 'பூசை போடுவதெப்படி அதற்கென்ன பொருள் தேவை சொல்லு' என்றார் சேனாதிபதி. 'காளிகா தேவி பெண்ணாகையால் பொன் நகைகளின் மேல் அவளுக்கு மிகவு மிஷ்டம். ஊரிலிருந்து நான் காளி பூசை செய்யுங் காலத்தில், அவ்வூரிலுள்ள பெண்களுடைய நகைகள் யாவையுங் கொண்டுவந்து என் மேல் பூட்டிவிடுவார்கள். நகைகள் எவ்வளவுக் கதிகமா

யிருக்கிறதோ அவ்வளவுக்குக் காளிகா தேவி மனமகிழ்ந்து என்ன வரங் கேட்டாலும் எடுத்தெடுத்தளிப்பாள். பூசை முடிந்தவுடன் ஆவேசத்தோடு நாலு ஓட்டமோடுவாள். அதாவது—வட்டோட்டம் வடு வட்டோட்டம், நெட்டோட்டம் நெடு நெட்டோட்டம் என்பார்கள். ஓட்டம் நாலும் ஒழுங்காய் ஓடிமுடிந்தவுடன் அவரவர் தங்கள் தங்கள் நகைகளைக் களற்றிக் கொண்டு போய்விடுவார்கள். அத்துடன் ஆவேசமு மடங்கிவிடும்' என்றான்.

சேனாதிபதிக்குப் புத்திரப் பேறில்லாமல் மிகவும் சிந்தை நொந்திருந்தவராகையால், காளிகா தேவியிடத்திலாவது பிள்ளைவரங் கேட்டு ஓர் புத்திரனைப் பெற்று மகிழ்வுடன் வாழலாமென்று நினைத்து கூளி வீட்டுக் காளியை நோக்கி "சரி; ஆகட்டும்! அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் நான் செய்கிறேன்; வரங் கேட்பதெப்போ?' என்று வினவினார். 'ஓட்டங்களோடி முடியும்போது தான் வரங் கேட்க வேண்டும். அதிலும் நெடு நெட்டோட்ட மோடிவரும்போது கேட்கும் வரம் மிகவும் விசேஷமானது. அதற்கத் தாக்ஷியாக, போனவருஷம் நெடு நெட்டோட்டமோடி வரும்போது கூளி வீட்டுக் காளி என்னும் வண்ணான் வரம்பெற்றான். அவனுடைய சாமார்த்தியத்தைப் பற்றித் தாங்களுங் கொஞ்சம் மறிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன்' என்றான். 'சரி! சரி! அப்படியா சமாச்சாரம்! வேண்டிய ஏற்பாடுகள் யாவும் விரைவுடன் செய்கிறேன். பூசைக்கெப்போ தொடங்க

போகிறாய்' என்று சேனாதிபதி மனமகிழ்ச்சியுடன் கேட்டார். 'நாளைக்குத் தொடங்குகிறேன், ஆண்டவரே! நாளைத் தொடக்கம், நாலுநாட்களுக்கு உபவாசமிருக்கவேண்டும். கடைசிநாளுக்குத்தா னோட்டம்' என்றான். சேனாதிபதியும் தன் இருப்பிடத்தையடைந்து, நடந்த சங்கதியைத் தன் மனைவிக்குச் சொல்லி இருவருமாகப் பிள்ளைவரங் கேட்கலாமென்று மிகவு மானந்தத்துட னிருந்தார்கள்.

மறு நாட் காலையில் அனேக ஏற்பாடுகள் அளவு கணக்கில்லாமல் செய்தார்கள். பூசைபோடுகிறவனுக்கென்று தனியாக ஓர் கூடார மடித்து கூளிவீட்டுக் காளியையு மதனுள் விட்டார்கள். நாலு நாட்களும் பூசைக்கென்று கொண்டுவந்து கொடுக்கப்பட்ட பழவர்க்கங்களால் ஜீவித்தான். நாலாந்தினம் ஓட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் ஒழுங்காய் முடிந்தது. உத்தியோகஸ்த்தர்களுடைய மனைவி மக்களின் நகைகளெல்லாம் அப்படியப்படியே பெட்டி பெட்டியாக கொண்டுவந்தார்கள். காசுமாலைகளுக்குக் கணக்கில்லை: அட்டிகைகளங்கே அளவு சொல்லமுடியாது. சங்கிலிகளெல்லாம் சரமாரியாயிருந்தது. கம்மல்களையெல்லாம் மாலையாகக் கோர்த்தார்கள். காப்புக் கொலுசுகளைச் சரங்களாகக் கட்டினார்கள். பூசை போடுவதற்குச் சமையமானதும் நகைகள் யாவையுங் கொண்டுபோய் பூசைபோடும் புண்ணியவான் முன்பாக வைத்தார்கள். நகைகளைக் கண்டதும் அதிக ஆனந்தங்கொண்டு எழுந்து நின்றான். எல்லா நகை

களையும் ஏற்றவாறு பூட்டிவிட்டார்கள். உடனே ஒரு பெருங் கூச்சலிட்டுத் துள்ளிக் குதித்து வெளியே வந்தான். உருப்பட்டது. ஆவேசமும் வந்தது—ஆகா என்ன பிரகாசம்-என்ன ஆட்டம்! என்ன கூக்குரல்! எவ்வளவு நகை! உச்சியிருந் துள்ளங்கால் வரையும் சொர்ண மயமாகவே விளங்கினான். அவன் அணிந்திருந்த நகை சுமார் ஆறு லக்ஷம்ரூபாய் பெறும். ஆவேசமதிகரிக்கக் கூக்குரலும் அதிகரித்தது. கூக்குரலு மதிகரிக்க ஓட்டமுந் தொடங்கினான்.—இப்போது வட்டோட்டம் என்று சொல்லிக் கொண்டு பட்டாளத்தைச் சுற்றி ஒரு வட்டமாய் ஓடிவந்து நின்றான். வரங்கேட்கவென்று எதிரே வந்தாரொருவர், 'நீ என்றும் ஜூராஞ் (சிரஞ்) சீவியாய் வாழக்கடவது' என்று வரமளித்து வடிவட்டோட்டம் ஓடினான். இம்முறை கூடாரத்தைச் சுற்றி பெரிய வட்டமாயோடி வந்து நின்றான். வரங் கேட்டார் அங்கேயுள்ள உத்தியோகஸ்தரொருவர். 'நீயும உன் பொண்டாட்டி புள்ளையளும் சுகமாய் மாளா (வாழ)க் கடவது. என்று சொல்லிக் கொண்டு நெட்டோட்டமோட வாரம்பித்தது வெகு தூரமோடினான். நோக்கியிருந்தவர்கள் கண்ணுக்குத் தெனபடவில்லை. அரைமணி நேரமானதும் யாவருக்கும யோசனை தொடங்கியது மிகவும ஊக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; முக்கால் மணியுமாயிற்று. சிந்தை நிறைந்த சந்தேகத்தால் முந்தி யெழுந்து பார்க்கிறார்கள் சிலர். நகை கொடுத்த பெண்களைக்

லாம் நாயகன்மாரை நோக்குகிறார்கள். ஒரு மணி நேரமுமானது. நகைகள் போய்விட்டனவோ என்று சிலர் ஏங்கினார்கள். இருந்தாப்போலிருந்து காட்டின் பின் பக்கத்தில் ஒரு பெருங் கூக்குரல் கேட்டது திரும்பிப் பார்த்தார்கள். வருகிறது காளி வாயுவேகம் மனோவேகமாய். வந்துவிட்டது கூடாரத்தண்டை. கூக்குரலுங் கோஷ்டமும் மிகவும் அதிகரித்தது. எல்லாருடைய யோசனையும் எங்கேயோ பறந்துவிட்டது. அணிலேறவிட்ட நாய்களைப்போல், காளியாடினவனை அண்ணாந்து பார்த்த வண்ணமாய்ப் பிரமித்திருந்தார்கள். இப்போது காளியாடினவன் எதிரே வந்து துள்ளிக் குதித்து யாவரையும் நோக்கி "நீங்களிப்போ என்னைப் பற்றி என்னென்னவோ எல்லாம் நினைத்தீர்கள். ஆனால் நீங்கள் என்னைப்பற்றி ஒன்றுமறியாதவர்களானபடியால் உங்களை மன்னிக்கிறேன். என்னுடைய படிமாத்தான்கள் என்னுடைய சீஷர்கள் என்னைப் பற்றி இவ்விதம் நினைப்பார்களானால் ஹா, ஹா, என்ன செய்வேன் தெரியுமா? கழுத்தை முறித்து இரத்தங் குடிப்பேன். வயிற்றைக் கிழித்துக் குடலை யெடுத்து மாலையாய்ப்போட்டு மகா கோரமாயாடுவேன். ஹா! ஹா!! அப்படியாச்சா! இப்படிப் பேச்சா! ஹா! ஹா-ஹு ஹு!" என்று கூளியிட்டுக் காளி செய்த ஆட்ட கோஷ்டங்கள் எல்லாரையும் பிரமிக்கச் செய்தது. என்ன செய்வதென்றறியாது திகைத்து விழித்தார்கள். மறுபடியுங் காளியாடினவன் அனைவரையும் நோக்கி "நான் ஒரு பிழை

பொறுத்து உங்களை மன்னித்துவிடுகிறேன். உங்க ளெல்லாருக்கும் நான் ஒருவரம் தருகிறேன். நீங்கள் யாபேரும் பதினாறும் பெத்துப் பதினெட்டுஞ் செத்து சுகமாயிருக்க வேண்டுமென்பதே என் கோரிக்கை'' என்றான். காளியாடு மாட்டத்திலும் செய்யுங்கோஷ் டத்திலும் யாவருடைய மனமும் சென்றதேயல்லா மல், அவன் சொன்னதை எள்ளளவு மொருவருங் கவனிக்கவில்லை. சிறிது நேரஞ் சென்றதும் நெடு நெட்டோட்டமோட வாரம்பித்து யாவருக்கும் செய் நன்றி கூறிவிட்டு நெடுந்தூரங் கூக்குரலிட்டுக் கொண்டோடினான். இம்முறை சேனாதிபதியும் மனை வியும் பிள்ளைவரங் கேட்பதற்கென்று வள்ளிசாய்க் காத்துக்கொண் டிருக்கிறார்கள். இருந்திருந்து மணி யும் ஒன்று கழிந்தது. இன்னுங் காணவில்லை. எல்லா ரும் ஆவலுடனும் ஏக்கத்துடனும் நோக்கிக் கொண் டிருக்கிறார்கள். இரண்டுமணியு மாய்விட்டது. இன் னும வரவில்லை. யாவருக்கும் சந்தேக மதிகரித்த போதிலும் பயத்தின் மிகுதியால ஒன்றும் நினைக்கா மல் சிந்தையை யடக்கிக் கொண்டிருநதார்கள். மணி யும் மூன்றாயிற்று. இவன்தான் கூளிவீட்டுக் காளி எனறார் சிலர், ''ஆமாம்'' என்றார் பலர். ''துப்பாக்கி யெடு, பீரங்கியை நீட்டு, காடு மலைகளில் தேடிவரு வோம், வன வனாந்திரத்தில் ஓடிப் பிடிப்போம்.'' என்று சொல்லிக் கொண்டு பட்டாளம் முழுவதும் பல திக்குகளிலு மோடினது. நகை கொடுத்த பெண் கள் உயிரற்று வீழ்ந்தார்கள். சேனாதிபதி சித்தங்

கலங்கித் தரையில் வீழ்ந்தார். பட்டாளத்திலுள்ள சோல்யர்களும் சிப்பாய்களும் அன்று தொடங்கி இன்றுவரைக்கும் தேடித் திரிகிறார்கள். ஆனால் கூளி வீட்டுக் காளி அகப்படவில்லை.'' என்று சாமி நாதன் கதையை முடித்தான்.

''ஐயையோ'' என்றாள் அன்னலக்ஷிமியம்மாள்.

''இப்பேர்ப்பட்ட மோசக்காரன் உலகத்திலிருப் பானா'' என்று தேவகி கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

''இருந்து தான் வந்து மோசஞ் செய்தான்'' என்றான் சாமிநாதன்.

''நகை கொடுத்த பெண்கள் கெதியென்ன?'' என்று அன்னலக்ஷிமியம்மாள் பரிதாபப்பட்டுக் கேட்டாள்.

''நகை கொடுத்த பெண்கள் அழுகையுடன் சென்றார்கள்'' என்று சாமிநாதன் நகைப்புடன் சொன்னான்.

இவ்வாறு சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்து பின்பு அவரவரிடங்களுக்குச் சென்று படுத்துக் கொண்டார்கள்.

தேவகி படுக்கைக்குச் சென்றதும் தன் காதலனுடைய, எண்ணத்தால் சிறிது மனம் வருந்திக் கொண்டு நித்திரை செய்தாள்.

# மூன்றும் அத்தியாயம்

---

ஒரு நாள் இரவு பத்துமணி யிருக்கும், நீல வானத்தில் நிர்மலமான நக்ஷத்திரங்கள் வைரம் பதித்தாற் போல் வாகாய்ப் பிரகாசிக்கின்றன. அமாவாசையின் அடுத்த நாளானபடியால் இருளென்னவோ அதிகரித்துக் கொண்டே யிருந்தது. காட்டிலுள்ள மிருகங்கள் கடூரமான சப்தடி செய்தன.

அகோரமான இருளில் அந்தரமான காட்டின் நடுவில் ஓர் ஆலமரத்தின் கீழ் யாரோ சிலர் பேசுகிற சத்தங் கேட்கிறது. இந்நேரத்தில் இங்கே வந்து அச்சமென்பதில்லாது பயமென்பது தெரியாது ஆருமில்லாத அடவியில் நின்று பேசுகிறவர்கள் யார்? என்ன பேசுகிறார்கள்? சற்றுக் கவனிப்போம்.

இவர்களிலொருவன் தொண்டையைச் செருமிக் கனைத்துக்கொண்டு "அடே! மச்சான், அவங்கபண்ணும் அனியாயத்தை எப்படியடா சகிக்கலாம்?" என்று துணைவனை நோக்கித் துரிதமாய்க் கேட்டான்.

இதைக்கேட்ட மற்றவன் "அடே நீலகண்டா! அவங்கசெய்யிறதெல்லாம் செய்யட்டும். நமக்கென்ன? நமக்குக்கிடைக்க வேண்டியவை யாவும் ஒழுங்காய்க் கிடைத்தால் போதாதா? நீ யென்னமோ வீண்பேச்சுப்பேசி வெருண்டோடிவந்தாயே, அப்படி நீ செய்

தது நியாயமாகுமா ?'' என்று இரண்டாம் பேர்வழி ஞாயம்புகட்டினன்.

''அடே, என் அருந்துணைவா! கோலகண்டா! நீ யென்னைப்பற்றி என்ன நினைத்தாய்! ஞாயம்மரியாதை யொன்றும் நீ யெனக்குக் கற்றுக்கொடுக்கவேண்டாம். அவங்களோடே சேர உனக்கு விருப்பமாயிருந்தால் நீ போகலாம். நான் வரமாட்டேன். உனக்குத் தேள்வையான யாவையும் அவங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு சுகமாயுன் காலத்தைக் கழி. நானெங்கே யாவது போய் என் வாழ்நாளைப் போக்குகிறேன். இருந்தும், ஒரு சங்கதி சொல்லுகிறேன் கேள். அந்த அறியாத பெண்ணை அனியாயப் பாவிகளிடமிருந்து மீட்க வழிதேடு. அந்தப் பெண்ணை, சுந்தரவதியை, காரார்குயிலை, கற்கண்டுக்கட்டியை—பிசாசுக்குப் பலி யிடுவதாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் சண்டாளப் பாவிகள். நான் அதையறிந்தே அவ்விதம் பேசினேன் ஆகையால் நாம் எவ்விதமாவது முயற்சி செய்து இப் பெரும் பாவிகளிடமிருந்து பெண்ணை மீட்டுவிட வேண்டும். நீ என்ன சொல்லுகிறாய்?'', என்றான் நீலகண்டன்.

இதைக்கேட்ட கோலகண்டன் ''ஐயையோ! பிசாசுக்குப் பலியிடவா நினைத்தார்கள். அனியாயம்! மகா பாவிகளாகிய இவர்கள்கூட நாமிருப்பது தக்க தல்ல! பெண்ணை யெவ்விதம் அவங்களிடமிருந்து மீட்பது!'' என்று சொன்னதை சொல்லிமுடிப்பதற் குள் காட்டினுள்ளி லதிகதூரத்தில் குதிரைகளோடி

வருங் காலடிச்சத்தங் கேட்டது. சந்தடி கேட்டதும் நீலகண்டன் கோலகண்டனை நோக்கி "அடே நண்பா! அவங்க நம்மைத் தேடிவருகிறாப்போ லிருக்கிறது" என்றான்.

"ஆமாம். நாம் எப்படித் தப்பிக்கொள்வது" என்று கோலகண்டன் துணைவனைக் கேட்டான்.

"மரத்திலேறிக்கொள்வோம் மகாபாவிகள் வந்து பார்த்துவிட்டு மடங்கிப்போகட்டும்" என்று சொல்லிக்கொண்டு இருவரும் ஓர் மரத்தின்மேலேறி ஒளித்துக்கொண்டார்கள்.

குதிரைகளின் காலடிச்சத்தம் வரவர அதிகரிக்கிறது. மரத்திலிருக்குமிருவரும் மிகவுங் கவனமாய்ப் பார்க்கிறார்கள். ஓடிவந்த குதிரைகள் அப்படியே மரத்தின்கீழ் நின்றுவிட்டன. குதிரைகள் மேல், எமதூதர்போல் சிலருட்கார்ந் திருந்தார்கள்.

குதிரைகளை நிறுத்தியதும் கோரனைப்போன்ற அதிரூரனுகிய ஒருவன் மற்றொருவனை நோக்கி "அடே நாகதாளி, அவங்கள் எந்த வழியில் போயிருப்பாங்கோடா ?" என்று இரைந்து கொண்டு கேட்டான்.

"நான் ஒண்ணுமறியேன் எசமானே" என்று சொல்லி நாலுகும்புடு போட்டான் நாகதாளி.

"ஒரு வேளை நாட்டில் போய் அவங்க நாரதர் வேலை செய்வாங்களோ" என்று மூன்றுமாள் சந்தேகத்துடன் கூறினான்.

"அப்படி யொண்ணும் செய்யமாட்டாங்கோ. ஏதோகொஞ்சம் கோவம் வந்தபடியாத்தான், ஓடிப் போட்டாங்கோ! கோவமெல்லாந் தணிஞ்சுட்டாக்கா வந்துடமாட்டாங்களா? நம்பளென்னத்துக்கு அலைஞ்சு திரியணும்! வாருங்கடா! நம்பளுபோய் பூசைசெய்து புனஸ்காரம் போடுவோம்" என்றான் நாலாம் பேர்வழி.

"அவங்க என்னத்துக்கெடா கோபம் செய்தாங்கோ? எனக்கு யாதொண்ணும் தெரியாது. நான் பூப்பறிக்கபோயிருந்தன். அந்தச் சமையத்திலே எல்லாரும் குதிரைமேலேறி வந்தாங்கோ? அதைக்கண்டு நானும் அவங்கபின்னாலே ஓட்டமாயோடி வந்தேன்" என்றான் கால் நடையால் களைத்துவந்த ஒரு திருடன்.

இதையெல்லாங்கேட்டுக் கொண்டிருந்த எஜமான் என்ன செய்வதென்று தெரியாமலேங்கித் தவித்தான். தன்னுடைய விஷயங்களை "நீலகண்டனும் கோலகண்டனும் ஊரிலுள்ளவர்களுக்குச் சொல்லி, ஊறு விளைத்து உபத்திரவம் செய்வார்களோ" என்ற ஆலோசனையால் அளவற்ற பயமுண்டாகி யவன் மனதைக் கலக்கிற்று.

அச்சமென்ப தகிகரித்தபோதிலும் தைரியத்தை மாத்திரம் கைவிடாமல், சற்று நிதானித்து "அடே தீரா! அதிவீரா! அன்றொருநாள் நம்பள் களவு செய்துவந்த அயகானபொண்ணை கோலகண்டன் தனக்

குக் கண்ணாலம் பண்ணச் சொன்னான். வேறே கார ணத்திற்காக அப்பெண்ணை நிச்சயித்திருப்பதால், நான் அதற்குச் சம்மதிக்காது சாக்குச் சொல்லி விட் டேன். பெண்ணும் பெரிதாகட்டும், அப்புறம்பாத்துக் கலாம் என்றேன். அதுக்காக அவன் கோவம் பண் ணிக் கொண்டு வேகமாய் புறப்பட்டிட்டான். நீலகண் டனும் கூடவேயோடினான். எங்கே போனாங்களோ! என்ன தீமைகளை எப்படிச் செய்யிறாங்களோ? எனக் கொண்ணும் புலப்படவில்லை'' என்றான்.

"அவங்கபோனாபோறாங்கோ! நமக்கென்ன வந் தது. நம்பவேலையை நம்பசெய்யலாம்'' என்று பக்கத் தில் நின்றவொருவன் பட்டென்றுரைத்தான்.

இதைக்கேட்ட எஜமான் மற்றவனை நோக்கி, "அடே மிடுக்கா! அவங்களை விட்டுட்டு நான் ஒண்ணும் செய்ய முடியாது. அவங்களிருவரும் எனதுண்மை யான தோழர் என்றறி. ஊருள் நடக்கும் உபாயமான சங்கதிகளை யுற்சாகத்துடனறிந்து, என்னிடத்தில் வந்து ஏற்றமுள்ள யோசனைகளை எடுத்தெடுத்துச் சொல்லி, பணமுள்ள வீட்டையும், பொருளுள்ள வீட் டையும் பக்குவமாய் நம்பளுக்குக் காட்டி, கொள்ளை கொள்ளையாய்ப் பொருளை அள்ளும்படி வைப்பது அவங்கதான் என்றறி. ஆனபடியால் அவங்களை கண்டுபிடித்து தந்திரமாய்ச் சமாதானம் பண்ணி நம் பகூடவைத்துக் கொள்ளவேண்டியதுதான்.'' என்று கூறி சுற்றும் முற்றும் பார்த்தான்.

"அவங்க விரும்பியதைக் கொடுத்தால் தான் சமாதானமாவாங்க இல்லாட்டில் எப்பவும் மொறைப் பிலேதான் இருக்கவேண்டி நேரிடும்." என்றான் மிடுக்கன்.

இவ்விதம் கள்வர்களுக்குள் நடக்கும் சம்பாஷணையைச் செவியுற்ற நீலகண்டன், கோலகண்டனை நோக்கி—"அடே சினேகா! கேட்டாயா? அவர்கள் பேசியதை? கள்வர்த்தலைவன் நம்மைப்பற்றி நல்லபிப்பிராயம் கொண்டிருக்கிறானென்பது உண்மையாயிற்றல்லவா? உன்கோபத்தை விட்டுவிடு. நாமிருவரும் அவர்களிடம் போய்ச் சமாதானம் செய்துகொள்ளலாம் வா!" என்றான்.

"சற்றுப்பொறு! திடீரென்று பிரவேசித்தால் தீங்கு விளைந்தாலும் விளையும். ஆய்ந்தோய்ந்து பாராதவன் காரியம் தான் சாகக் கடவதென்று முன்னோர் முதுமொழி முறையா யுரைக்கின்றது." பொறுமைக் கழிவில்லை. கொஞ்சம்பொறு." என்றான் கோலகண்டன்.

"நீ விரும்பியபொருள் உனக்குக் கிடைத்தால் போதாதா? வீணுக அவர்களுக்கு கஷ்டத்தை விளைப்பானேன்? நமக்கென்ன வந்தது. கேட்டதை யெல்லாங் கொடுக்கும்போது வாட்டமில்லாம லிருக்க வேண்டியது தான் நம்மகடமை." என்றிவ்வாறு நீலகண்டன் நீதிபுகட்டிய சத்தம் கீழே நின்ற வொருவன் காதில்கேட்டது. சந்தடிகேட்டதும் சந்தேக

மிகுதியால் சரியாய் நிதானித்தார்கள். பின்பு சத்த மொன்றுங் கேட்கவில்லை.

"யாரோபேசுகிற சந்தடி யென்காதில் பட்டுது. நீங்கயாராகிலும் பேசியிருந்திங்களா" என்று பிடிச்சது விடாதவன் பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டான்.

"நானல்ல" என்ருன் கிடைச்சது கொடாதவன்.

"நான், கம்மெண்ணிருந்தேன்" என்ருன் கிட்டித்தடியன்

"நான் மூச்சு விட்டிட்டில்லை" என்ருன் நாகதாளிப் பொடியன்.

இதற்குள்ளாகக் கள்வர் தலைவன் மனங்கலங்கித் தன் துணைவரைநோக்கி, "சந்தடி செய்யாமல் என் பின்னே வாருங்கள்" என்று கூறி எல்லாரையும் அழைத்துக்கொண்டு சற்றுத் தூரஞ் சென்றங்கு தங்கி, தன் துணைவரைநோக்கிக் கூறுகிருன். "நாம் இங்கே சிறிது நேரமும் தாமதிக்கக்கூடாது. அவங்க சங்கதியில் எனக்கு அளவில்லாத சந்தேகமாயிருக்கிறது. காட்டிலும் நாட்டிலும் வாசஞ்செய்யும் நாரதர்கள். அவர்களுதவியால் எவ்வளவோ பொருள்கள் திருடினேம். எத்தனையோ பணக்குவியல்கள் வாரிக்கொண்டு வந்தோம். அவர்களுடன் சினேகமாகத்தா னிருக்கிறேம். ஆனல் அவர்களுடைய மனத்தை நாம் அறியவில்லை. இவர்கள் எதற்காக

நமக்குதவி புரிகிறார்கள் ? ஏன் நம்மிடத்தில் சிநேகம் பண்ணினார்கள் ? பலமுறைகளிலும் பலவிடங்களிலும், பலவிதக் கேள்விகளைக் கேட்டேன். எங்கிலும், உண்மையானபதில் கிடைக்கவில்லை, உள்நோக்கமொன்றும் பிடிபடவில்லை. என்னாலியன்ற விதமெல்லாம் பார்த்தும், ஒரு விதத்திலும் அவர்கள் நோக்கத்தைக்கண்டு கொள்ளமுடியவில்லை. இனிமேல் அவர்களுடைய சிநேகமும் வேண்டாம் சேர்க்கையும் வேண்டாம்! பாம்புக்குப்பால் வார்ப்பதுபோலவர்களுக்கு நாம் செய்யும் நன்மைகளெல்லாம் முடிவில் தீதாக முடிந்தாலும் முடியுமென்று அளவில்லாத யோசனைகளுண்டாகின்றன. அவர்கள் ஜீவித்திருக்கும்வரையில் என்மனம் சமாதானப்படாது. அதுவுமன்றி நாமெல்லா மெந்தநேரமும் ஏங்கி விழித்திருக்கவேண்டியதாகவே முடியும். அதுநிற்க! இப்போது அந்த மரத்தின் நிழலில் நிற்குஞ்சமயம் யாரோ பேசுகிற சத்தம் என்காதிலுங் கேட்டது. நம்மைப் பிடிப்பதற்கு யாராவது வந்தார்களோ ? அவர்களிருவரும், யாரிடமாவது சொல்லிவைத்து இன்றையத்தினம் நம்மைக்கொன்று நம்மிடமுள்ள பொருள் பண்டங்களை யபகரிக்க நிட்சயித்து, அக்காரணத்துக்காக வஞ்சகக்கோபம் செய்து போனார்களோ? என்னவோ! எனக்கொன்றுந் தெரியவில்லை !!

ஆனாலொன்று சொல்லுகிறேன் கேளுங்கள். இனிமேலிவ்விதமான மனக்கலக்கத்துக்கும் சந்தேகத்துக்கும் இடம் வைக்கமாட்டேன். இவர்களின்று

நம்ம கையிலகப்பட்டால் தந்திரமாய் கூட்டிக்கொண்டு போய் நமது குலதெய்வமாகிய காட்டேரிக்குப் பலியிடவேண்டும். இன்றைக்கவர்க ளகப்படாவிட்டால், நாளை நம்மிடத்துக்கு வருவார்கள். வந்தவுடன் பிடித்து நமது காட்டேரிக்குப் பலியிட்டு, பொங்கலிட்டு பூசைபோட்டு, சந்தோஷமாக கள்ளு சாராயம் கணக்கில்லாது குடித்து, ஆடிக்குதித்து ஆர்பாட்டம் செய்யவேண்டும். நான் சொன்ன சங்கதி உங்களுக்கும் விருப்பந்தானு?'' என்று துணைவரை நோக்கி துரிதமாய்க் கேட்டான்.

''அப்படியே செய்வோம் எஜமானே'' என்றான் மிடுக்கன்.

''அரை நிமிஷமும் சீவனேடை விடக்கூடாது'' என்றான் கிடைச்சது கொடாதவன்.

''தலையை வெட்டி தகனஞ் செய்யணும்'' என்றான் பிடிச்சதுவிடாதவன்.

''காதையறுத்துக் காக்காய்குப்போடணும்''

''மூக்கைவெட்டிபேய்க்கு கொடுக்கலாம்''

''கண்ணைப் புடுங்கி மண்ணில் புதைப்போம்''

''கையை வெட்டி நரிக்குப் போடுவோம்''

''தொடையை யறுத்துப் படையல் போடணும்''

''சாலேப்போட்டால் நாய் தண்ணுமா''

''சுட்டுப்போட்டால் பட்டெனை விழுங்கும்.''

மரத்தின் கீழ் நின்று சம்பாஷித்துக் கொண்டிருந்த கள்வர்கள், அவ்விடம் விட்டகல்வதைக்கண்ட நீலகண்டனும் கோலகண்டனும் மரத்தை விட்டிறங்கி கள்வரைப் பின்றொடர்ந்தார்கள். பின் தொடர்ந்து, கள்வர்தலைவன் சொல்லிவைகள் யாவையும் மறைந்திருந்து கேட்டு மனக்கலக்க முற்று காட்டு மார்க்கமாக வோடவாரம் பிரிதார்கள். சிறிதூரம் ஓடிப்பின்னோரிடத்திலுட்கார்ந்து, ஒருவரை யொருவர்தேற்றிக் கொண்டபின்பு நீலகண்டன் கோலகண்டனை நோக்கி "துணைவா! நாமிருவரும் பாம்புடன் பழகி, புலியுடன் விளையாடி, சிங்கத்துடன் சினேகம் செய்து இதுவரையும் ஒரு இடையூறுமில்லாமல் தப்பிக்கொண்டோம். கடைசியில் அவர்களுடைய கோரவெண்ணத்தை அவர்கள் வாயாலே சொல்லக்கேட்டோம். இனிமேல் நாமவர்களுடன் கூடிச் சவகாசஞ் செய்தல் கூடாது. இவ்விதமான பாதகர்களை நம்பி நாமிது காலம் வரையு முதவி புரிந்தோமே! இன்று நீயப்பாதகனுடன் கோபித்து நின்றது நமது நல்ல காலத்துக்குத்தான். இல்லாவிட்டால் என்றாவதொரு நாளைக்கு நாமிருவரு மிவர்கள் கையாலிறக்கவேண்டியவர்கள் தான்" என்று ஒருவாறு கூறிமுடித்துத் துணைவனை நோக்கினான்.

துணைவன் சொன்னவை யாவையுஞ் செவியுற்ற கோல கண்டன் மிக்க மனங்கலங்கி "நீலகண்டா நீயேன் பயப்படுகிறாய்! அவர்கள் கையால் நாமிறக்கிறோமோ? நமது கையாலவர்களிறக்கிறார்களோ? பார்க்

கலாம்; பொழுதுவிடியட்டும்; பார்க்கிறேனொரு கை!
ஆகா! இம்மாதிரி யனியாயஞ் செய்ய எப்படி மனந்
துணிந்தார்கள். ஆனாலும் பார்க்கலாம், இவர்களுக்கு
நாச காலம் நெருங்கிவிட்டது. அதற்குச் சந்தேக
மில்லை.'' என்று சொல்லி யிப்படியு மப்படியும் பார்த்
தான்.

''அவர்கள் செய்துவரு மணியாயங்களைப் பாக்
கிலு மிதென்ன பெரிதா? நமது முன்பாக வைத்து
பதைக்கப் பதைக்கக் கழுத்தறுத்தார்களே! காட்டே
ரிக்கும், வீரனுக்கும், சாமுண்டிக்கும், காத்தவராய
னுக்கும், கறுப்பண்ணன் சாமிக்கும், பலியிட்டு பாட்
டாட்டஞ் செய்பவர்களுக்கு நம்மைக் கொலைசெய்வ
தெம்மாத்திரம். பாவமும் புண்ணியமும் அவர்களுக்
கில்லை நீதியும் ஞாயமுமவர்களிடங் கிடையாது''
என்று நீலகண்டன் கூறி நிதானமாய் முடித்தான்.

''நாளைக்கு நல்லபடி யோசனை செய்து நாசமாக்க
வேண்டும் மோசக்காரப் பயல்களை யெல்லாம் மணிக்
கம்பிதோட்டம் முழுவதையும் வெடி வைத்துப்
பொசுக்கவேணும்'' என்று கோபமாய்க் கூறினன்
கோபாலகண்டன்.

''இங்கே அதிக நேரம் நாமினித் தங்கியிருக்கக்
கூடாது. காலையில் எல்லாம் பேசிக்கொள்வோம்.
இப்போ தூக்கம் வருகிறது பசிதாக மதிகரிக்கிறது!
எங்கே போவது! என்ன செய்வதென்று தெரிய
வில்லை'' என்று நீலகண்டன் துணைவனை நோக்கி துய
ரமாய்க் கேட்டான்.

"இந்த வழியில் நேரேபோனால் ஒரு மைலுக்கப் புறம் ஒரு நெருங்கிய காட்டினுள்ளில், கால் பாதை யொன்று மிகவுஞ் சிறியதாய் கிழக்குத் திக்கை நோக்கிச் செல்லும். அவ்வழியே போனாலொரு பாழடைந்த வீடுண்டு. அவ்வீட்டிலின்றிரவைக் களித்து காலையிலெழுந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்." என்று சொல்லிக் கொண்டிருவரு மெழுந்து காட்டிலுள்ள வீட்டை நோக்கி நடக்கலானார்கள்.

திருடர்கள் சிறிதுநேர மவ்விடத்தில் நின்றுபின் சில விடங்களில் தேடிப்பார்த்து, அகப்படாததால் மனக் கலக்கமுற்று ஆலோசனையனைவரையும் வருத்த வந்த வழியே திரும்பி தம்மிடத்துக்குச் சென்றார்கள்.

குடிசைகளிலிருந்த திருடர்கள் சங்கதி தெரிந்து சிங்கம்போல் கர்ஜித்து ஆயுதங்களைக் கையில் பிடித்துக் கொண்டு ஆலோசனையுடன் விழித்திருந்தார்கள்.

# நான்காம் அத்தியாயம்

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு ஆகாய மூல மாய் பறந்த ஓர் ஆகாய விமானம் குறித்த விடத்திற்கு வந்து சேர முன்பு ஏதோ பழுதுண்டாய் சத்தியிழந்து மத்திய இந்தியாவிலுள்ள ஓர் காட்டில் விழுந்து தவுடு பொடியா யுடைந்துபோய்விட்டது. விமானத்தில் வந்தவர்கள் மூன்றுபேர். இருவருமிறந்தனர். ஒருவன் மாத்திரம் தப்பினன். இவனோர் இளமைப் பருவம் வாய்ந்த வாலிபன் மிகவும் அழகுள்ளவனாகக் காணப்பட்டான். விமானம் விழும்போது ஓர் மரக்கொம்பைப் பிடித்துத் தொங்கிக் கீழேவிழாமலும் காயம்படாமலும் தப்பித்தான்; மற்றவிருவருங் கீழே விழுந்து மடிந்தனர். இறந்துகிடக்குந் துணைவரைக் கண்ட வாலிபன் மனங்கலங்கி யேக்கமுற்றுத் தத்தளித்து நின்றான்.

விழுந்த பயமொரு பக்கம், துணைவரிறந்த பயமொரு பக்கம்! காட்டைப் பார்த்துப் பெரும்பயங் கொண்டான். வீட்டை நினைத்து விம்மி விம்மி யழுதான். காட்டு மிருகங்கள் செய்யுங் கடூரமான சத்தம் மனதிற் றிகிலை மட்டில்லாது விளைத்தது. விமானம் வீழ்வதைக் கண்ட மிருகங்கள் யாவும், பிராணபயத்தாலஞ்சி மருண்டு, வெருண்டோடின. ஓடிப்போன மிருகங்கள் செய்யும் ஓங்கார சத்தம்

மேலும் மேலும் விமரிசையாய் வந்துகொண்டிருந்தது. யானைகள் பிளிறிட்டுக் கத்துவதும், சிங்கங்கள் செய்யும் பங்கமில்லாக் கர்ச்சனையும், கிலியிடச் செய்யும் புலியின் உறுமலும், நரிகள் ஊளையும், நாய்கள் கொளையும் பாம்புசீறலும் பூனைகத்தலுமாக எல்லாஞ் சேர்ந்து ஏகோபித்து, திகிலை வார்த்துத் திடுக்கிடச் செய்தது. எத்திசைபோனால் ரக்ஷைகிட்டுமென்றறியாமல், வானத்தையும் பூமியையும் மாறி மாறி நோக்குவதும், தன் பக்கத்திலுள்ள மரங்களை சுற்று முற்றும் பார்ப்பதும், மடிந்து கிடக்குந் துணைவரைப் பார்த்து மனங் கலங்கி நிற்பதுமாக அவ்விளைஞன் படுந் துன்பத்தைக் கண்ட எவருங் கண்ணீர் சொரிவார்!

இவ்விதமா யேங்கி நின்ற வாலிபன், மனதிலேதோ நினைத்துக் கொண்டு நின்ற திக்கை நோக்கி நேராய் நடக்கலானான். காலில் சப்பாத்திருந்தமையால், கல்லும் முள்ளுமவனைக் கஷ்டப்படுத்தவில்லை, மனம்போனபடி நடக்கலானான். சிறிது தூரஞ் சென்றதுமொரு வழியைக் கண்டான். அவ்வழியி லெப்பக்கம் போனால் ரக்ஷைகிடைக்குமென்று தெரியாமல் சிறுது நேரம் நின்றாலோசித்து, காலதாமசஞ் செய்ய இஷ்டமில்லாதவனாய், மனதில் சற்றுத் தைரியங் கொண்டு, ஒரு திக்கை நோக்கித் துரிதமாய் நடக்கலானான்.

வெகுநேரமா யவ்வழியே நடந்துமவன் கண்ணுக் கொன்றுந் தென்படவில்லை. பொழுதும் போ

கிறது, இருளுந்தொடங்குகிறது, பயமுமதிகரிக்கிறது. திகிலும் பெருகி வளர்கிறது. "ஹா! கருணாநிதியாகிய கடவுளே! அத்வா கானகத்திலந்தரிக்கு மென்மீது சித்தமிரங்காத தென்ன திருவுளச் சம்மதமா! ஈசனே! அன்பர் மனவாசனே! பக்தர்கள் நேசனே! இத்தருண மென்மீது சித்தமிரங்காதிருப்பது சர்வ வியாபியாகிய வுமக்குத் தக்கதா? சிங்கத்தின் கையிலோ? புலியின் வாயிலோ? பாம்பின் விஷத்திலோ இப்பாழானகாட்டில் மடியக்காலமாயிற்றே! உன்சித்த மெவ்விதமோ, என்விதியுமவ்விதமே! எங்கேபோவதென்று தெரியவில்லை. எத்திக்கு பார்த்தாலுங் காடுஞ் செடியுமாக விருக்கிறது. இங்கே படுத்துக் கொள்வேன். இருளும் வந்துவிட்டது; குருவிகளும் மைனாக்களும், கிளிகளும், பக்ஷிகளும் கூடுகளைத் தேடி மிகவேகமாய் பறக்கின்றன. கொடிய மிருகங்களுந் தத்தம் குகைகளை விட்டு வெளிப்படுஞ் சமயமாய்விட்டது.' என்றிவ்வாறு தனக்குத்தானே சொல்லிக் கொண்டு அளவில்லாத எண்ணங்கள் அலைபோலெழுந்து அகத்தை வருத்த, என்ன செய்வதென்று தெரியா தங்குமிங்கும் பார்த்துக்கொண்டு நின்றான்.

நின்ற திக்கை நேராகப் பார்த்ததும் கண்டானொரு கடூரமான காக்ஷியை, பார்த்தானொரு பயங்கரமான தோற்றத்தை, ஐயையோ! என்ன செய்வான், தத்தளித்துத் தடுமாறி, என்ன செய்வது, எப்படியுய்வது! எங்கேயோடுவது! எங்கே யொளிப்பது!

நான் கண்ட காக்ஷி யுண்மையான காக்ஷியாவென்று தன் கண்களை நம்பாது பின்னுமொரு முறை செவ்வை யாய் பார்த்தான். தன்னெதிரே யுள்ளவொரு சிறு குன்றின்மேல் இரண்டு புலிகள் கூடிச் சண்டையிடு வது நன்றாயவன் கண்ணுக்குப் புலப்பட்டது. பிராண பயத்தால் பீடிக்கப்பட்ட நம் வாலிபன், அடிமேலடி வைத்து சந்தடியில்லாமல் சிறிது தூரம் போய்ப்பின்பு ஓட வாரம்பித்து தன்னாலியன்றவரையு மோடிமுடிவி லோர் வீட்டைக் கண்டான். வீட்டைக் கண்டதுஞ் சற்றுத் தைரியங்கொண்ட போதிலும், அளவில்லாத சந்தேக மகத்திலெழும்பிற்று. 'மனித சஞ்சாரமில் லாத விக்காட்டின் நடுவில் பாழடைந்த வீடிருப்ப தன் காரணமென்ன? பேய் பிசாசுகள் வாசஞ் செய்யு மிடமோ? அல்லது வழிப்போக்கர்களுக்காகக் கட்டி வைத்த மடமோ? தவமுனிவர்கள் வாசஞ்செய்யு மாச் சிரமமோ? அல்லது திருடர்கள் தங்கிவரும் அஞ் சலோ? பூதங்கள் வசிக்கு மில்லோ? அல்லது பிடாரி களிருக்குங்காவோ? என்னவானாலுஞ் சரி, இன்றிரவு இத்திண்ணையில் தங்கியிருக்கலாம். இராத்திரிக் கோரிடையூறு மின்றித் தப்பிப் பிழைப்பேனானால், காலையிலெழுந்து ஊரைத்தேடி நடக்கலாம்'' என்றிவ் வாறு தனக்குள் யோசித்துத் தீர்மானித்துக் கொண்டு வீட்டின் வாசலை நோக்கி வந்தான். வந்து பார்த்த தும் சந்தேகமதிகரித்த போதிலும் வேறு வழியில் லாததால், திண்ணையின்மேல் படுத்துக் கொண்டான். ஓடின இளைப்பும் பசியின் களைப்பும் படுத்தவுடனவ

னுக்கு மயக்கத்தைக் கொடுத்து உறக்கத்தை யூட்டிற்று.

இச்சமயத்தில் வந்தார்களிருவர். இவர்கள்தான் நீலகண்டனும் கோலகண்டனும். வந்தவர்கள் மற்றொன்றையுங் கவனிக்கவில்லை. வந்து சேர்ந்ததும் மற்றோர் திண்ணையிலிருவரும் படுத்துறங்கினார்கள்.

பொழுது விடிந்ததுங் குருவிகளும் பக்ஷிகளுங் கூவிக்கொண்டு தம் கூட்டைவிட்டுப் பறந்து பழமுள்ள மரங்களைத் தாவித் தாவித் தம் காலைப்போஜனமருந்தின. காட்டு மிருகங்கள் தங்குகைகளில் சென்று குதூகலத்துடன் படுத்துறங்கின. ஹா! காட்டின் அழகை என்னவென்றுசொல்வோம். கதிரவனுடைய இளவெய்யிலும், இயற்கையாலமைக்கப்பட்ட மரங்களின் சொகுசும், கனிகள் பழுத்திருப்பதும், புஷ்பங்கள் மலர்ந்திருப்பதும், பக்ஷிகள் கா-கீ-யென்று கத்தி பழங்களைக் கொத்துவதும், வண்டுகள் ரீங்காரம் பாடி பூக்களிலுள்ள மதுவை யெடுத்துக் கொண்டு செல்வதும், பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சிக் குலாவுவதும். பச்சைக் கிளிகள் உசிதமாய்ப் பேசுவதும், ஆ! கா! இயற்கை அழகை எடுத்துக் கூறவும் வசமோ?

மணியும் எட்டானது! பத்துமாயிற்று: இன்னுமொருவரு மெழும்பவில்லை. பன்னிரண்டுமானது! இப்பொழுது கோலகண்டன் கைகால்களை நீட்டி நிமிர்ந்து பெருமூச்சுவிட்டான். நீலகண்டன் அருண்டு

விழித்து கண்களை துடைத்துக் கொண்டெழுந்தான். எழுந்ததும் எதிரே தூங்கும் வாலிபனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு சோலகண்டனை யெழுப்ப சோலகண்டனுமெழுந்து இருவரும் அதியாச்சரியத்துடன் வாலிபனருகில் சென்று உற்றுப்பார்த்தார்கள். யாரென்பது தெரியாது, நீலகண்டன் சோலகண்டனை நோக்கி, இம்மனிதனிந்தக் காட்டிலெப்படி வந்திருப்பான்? இவன் தோற்றத்தால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாயும், தன தான்ய சம்பத்துடன் வாழ்ந்தவனாயும் மேல் நாட்டுக் கல்வி நாகரிகங்களை யனுசரிப்பவனாயுங் காணப்படுகிறான். இவ்விடத்திலிவன் வரவேண்டிய காரணமென்ன?'' என்றான்.

''இவனை எழுப்பி எல்லாம் விசாரிப்போம்'' என்று சொல்லிக் கொண்டு சோலகண்டன் வாலிபனைத் தட்டியெழுப்பினான். எழுப்பியதும் வாலிபனெழுந்து தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, தன்னெதிரே நிற்கு மிருவரையும் பார்த்து ஆச்சரியப்பட்டு நின்றான்.

''தம்பி! நீ யார்? இக்காட்டு வழியாய் ஏன் வந்தாய்! கொடிய ஜெந்துகள் வசிக்கு மிக்காட்டில் தனிமையாக நீ யிருப்பதன் காரணமென்ன?'' என்று நீலகண்டன் வாலிபனை நோக்கி நிதானமாய்க் கேட்டான்.

''நான் வழிதெரியாது தயங்கி நிற்கும்போதொரு புலியைக் கண்டு பிராண பயத்துடனோடிவரும்போது இந்த வீட்டைக் கண்டு இரவு தங்கிப்

மென்று நினைத்து இத்திண்ணைமேல் படுத்தேன்—இப்போதுங்களைக் கண்டேன்.'' என்று வாலிபன் மிக வணக்கமாகக் கூறினன்.

''நீ எந்த வூர்தம்பீ'' என்றான் கோலகண்டன்.

''இரத்தினபுரி, அண்ணா''

''உன் பெயரென்னப்பா''

''என் பெயர் ஜெயவீரசிங்கனென்றழைப்பார்கள்'

''நீயிப்போ எந்தவூரிலிருந்து வருகிறாய்''

''அண்ணா என் விருத்தாந்தத்தை யெவ்விதங் கூறுவேன்! சொல்லத் தொடங்கினல் துயரம் பெருகி வரும். அதைக்கேட்கு முங்களுக்கும் வியாகூலத்தை விளைக்கும்!'' என்று ஜெயவீர சிங்கன் சிறிது துக்கமாகவுரைத்தான். ''தம்பீ நீ யொன்றுக்கும் பயப்பட வேண்டாம்: உனக்கு நேர்ந்த விபத்துக்கள் யாவையும் ஒன்று மொழிக்காது உள்ளதை யுள்ளபடி யெங்களிடஞ் சொல்லு. எங்களாலியன்ற உதவி புரிகிறோம்.'' என்று நீலகண்டன் மிகவும் அன்புடன் வினவினன்.

இன்பான வார்த்தையைக் கேட்ட ஜெயவீர சிங்கன் மனந்தேறியவனாய் தன்வரலாற்றை வுரைக்கலானன், ''நான் இரத்தினபுரியிலோர் தனவானுடைய வேக புத்திரன்; என் தந்தை யென்மீது மிகவு மன்பு பாராட்டி யென்னையோர் வித்துவானக்கக் கருதிக் கல்வி கற்பித்து வந்தார். நான் மிகவு மூக்கத்துடன் படித்து ஒவ்வொரு பரீக்ஷையிலும் முதலாகத் தேறி,

ளன் தந்தை தாயாருக்கு அதிக மகிழ்ச்சியை யுண் டாக்கிவந்தேன். பின்பு சில காலஞ் சென்றதும் தந் தையார் என்னை அமெரிக்காவுக்குப் போய் அங்கு சிலகாலந் தங்கியிருந்து மேலான கல்வி கற்றுவருவது டன், ரசாயனம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய சாஸ்த்திரங்களைக் கற்றுவரும்படி கட்டளையிட்டார். நான் பிதாவி னுத்தரவைக் கையேற்று; அதே பிரகா ரம் அமெரிக்காவுக்குச் சென்ற வார்ஸிங்ரன் யூனி வெர்சிற்டியிலுள்ள விஞ்ஞான சாஸ்த்திரிகளை சார்ந்து அவர்களிடத்தி லனேக வரிய பெரிய விஷயங்களைக் கற்று; எல்லாவிதப் பரீக்ஷைகளிலுந் தேறசியடைந்து சிறிது காலம் நானும் மச்சாஸ்திரிகள் கூட்டத்தி லோர் அங்கத்தவனா யமைந்திருந்தேன். இச்சம்ப வத்தை யறிந்த என் தந்தை; என்னையுடனே புறப் பட்டு வரும்படி தந்திகொடுத்தார். அதே பிரகாரம் நான் காலதாமதமின்றிப் புறப்பட்டு ஓர் ஆகாய விமா னத்தை வாடைக்கு வாங்கி யிரண்டு சாரதிகளுடன் பிரயாணமாகி சமுத்திரத்தைக் கடந்து நம்பாரத நாட்டினெல்லையை யடைந்து இக்காட்டு மார்க்கமாய் வரும்போது விமான யந்திரத்திலேதோ பழுதுண் டாகி கீழே விழுந்துடைந்து போய்விட்டது. சாரதி களிருவரு மிறந்துபோயினர். தெய்வச் செயலால் நான் தப்பிப் பிழைத்தேன்.

தப்பித்துக்கொண்ட யான் போக வழியறியாது காட்டில் நின்று தத்தளித்து மனம்போனபடி நடக்கை யில் ஓர் சிறுகால் பாதையைக் கண்டவ்வழியே வரும்

போதிரண்டு புலிகளைக் கண்டு பயந்தோடிவரும் போதிவ் வீட்டைப் பார்த்தேன். களைப்பு மிகுதி யாலித்திண்ணையிற் படுத்தேன் இப்போது நீங்க ளென்னை யெழுப்பி விட்டீர்கள்" என்றிவ்வாறு தன் விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்தான்.

"தம்பீ நீ மிகவும் மேன்மையுள்ளவனாக காணப் படுகிறாய். உன்னுடன் கூடிச் சிநேகஞ் செய்ய எனக்கு மிகவும் விருப்பமாயிருக்கிறது. உனக்கிவ்வித ஆபத்துகள் நேரிட்டும் உன்னுயிர்க்கொரு தீங்கு நேரிடாமல் காப்பாற்றிய கடவுளுக் கெப்போதும் நன்றியுடையவனா யிருக்கவேண்டும்" என்று கோல கண்டன் குறிப்பாய்ச் சொன்னான்.

"ஆமண்ணா! மானிட ஜென்மத்தின் முக்கிய மான ஒழுக்கம் கடவுளுக்குப் பயந்து அவரை நம்பி நடக்கவேண்டியது தான். அவரிட்ட கட்டளையை அணுவளவுந் தள்ளி நடக்கமுடியாது. அண்ட பகி ரண்டமும் அவருடைய கட்டளையிலாடிக் கொண்டி ருக்கிறது, உலகமாகிய யிந்நந்தவனத்தில் குரங் கின் சந்ததியானகிய மனிதன் தோன்றி என்னென்ன நடவடிக்கை எப்படி யெப்படிச் செய்கிறான் பாருங்கள். நடனசாலையில் ஆட்டக்காரர்கள் வேஷந்தரித்து வரு வதுபோல் இம்மனிதன், பிறப்பிறப்பென்னு மவஸ்தை யிற் சிக்கி, தோன்றி மறைகிறான். ஒவ்வொரு வேஷத் திலு மொவ்வொரு ஆட்டமாடிக் கடைசியில் தன் வேஷமாகிய சரீரத்தை பஞ்சபூதங்களுக்கும் பகிர்ந்து

கொடுத்துவிட்டுத் தான் மறைந்துவிடுகிறான். இவ விதம் நடிக்கும்போது அவன் செய்யுங் காரியங்கள் மகா ஆச்சரியமானவை. மூளையின் சக்தியென்ன! புத்தியின் கூர்மையென்ன! தேகத்தின் பயிற்சி யென்ன! மனசின் முயற்சியென்ன! ஹாஹா! இவை களுக்கு எல்லை யில்லை. இதையெல்லாம் யோசித்தே தத்துவ சாஸ்திரிகள், இப்பூவுலகில் மனிதனைவிட மேலான பொருள் வேறொன்று மில்லையென்று தீர்மா னஞ் செய்திருக்கிறார்கள்.'' என்று ஜெயவீரசிங்கன் சிறிது பேசிமுடித்தான்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட இருவரும் அதிக ஆனந்தங்கொண்டு ஜெயவீரசிங்கனை நோக்கி-''தம்பி! நீ வயதில் சிறியவனாயிருந்த போதிலும் அறிவிற் பெரியவனாகக் காணப்படுகிறாய். நீ சொல்லிய வார்த்தைகளெங்கள் மனதைக் கவர்ந்து விட்டது. ஆனபடியால் நீ யெங்களுக்குச் சன்மார்க்கம் போதித்து நல்லறிவு புகட்டுமாறு பிரார்த்திக்கிறோம். நமது வாழ்நாள் முழுவதையும் துன்மார்க்கத்தில் களித்துச் சன்மார்க்கத்தை யறியாது துஷ்டர்களாய்க் காலங்கழித்தோம். இனியாகிலும் நல்வழியில் நடந்து நற்கருமங்களை யனுசரிக்க, நன் மார்க்கம் போதித்து நல்வழிகாட்டவேண்டும்'' என்று இருவருமாக நயந்து கேட்டார்கள்.

'' நானறிந்தவற்றை யுங்களுக்கு குரைப்பதிலா க்ஷேபனையில்லை. ஆயினும் உங்களுடைய வா

லாற்றைக் கூறுவீர்களாயின் என் சந்தேகந்தீரும். அதுவே நானுங்களைப் பிரார்த்திப்பது'' என்று ஜெய வீர சிங்கன் சற்று புன்சிரிப்புடன் கேட்டான்.

''நீ கோரியபிரகாரம் எங்கள் விருத்தாந்தத்தைக் கூறுவதற் காக்ஷேபணையில்லை. நீயொன்றுக்கும் அதைரியப்படவேண்டாம். நாம்சில துஷ்டர்கள் சேர்க்கை யால் கெட்ட கருமங்களைச்செய்து பாவத்தைக்கட்டிக் கொண்டோம். அதினின்றும் விமோசன மடைவ தற்கு நீயே நமக்குக் குருவாயிருந்து நற்போதனை செய்து நன்னெறி புகட்டவேண்டும்'' என்றிருவரும் மாறிமாறி நயந்து கேட்டார்கள்.

இவ்வாறிருவரும் நயந்து வேண்டியதைக்கேட்ட ஜெயவீர சிங்கன் மகிழ்ந்தவர்களை நோக்கி ''எல்லாங் கடவுளின் திருவுளம்போல் நடக்கும். அது நிற்க, இப்போது நாமிக்காட்டில் தங்கினால் பசிதாகந் தீர்ப்ப தற்கு மார்க்கமென்ன? என்னிடம் பணமிருக்கிறது. ஏதாவது ஆகாரம் வாங்கிவருவீர்களாயின் பசி தீர வுண்டு, பின்னுட்கார்ந்து பேசலாம். வயிற்றில் பசி வந்தால் மனதில் யோசனைதோன்றாதென்பது நீங்க ளறியீர்களா?'' என்று அவசரமாய்க் கேட்டான்.

''அஃதுண்மையே! ஆயினு மிக்காட்டில் பணத் தைக்கொண் டுபயோகமில்லை. இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலோர் கிராமமுண்டு அங்கே சென்று உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்கி வருகிறோம். அதுவரையும் நீ யிங்கேதானிரு, ஒன்

றுக்கும் பயப்படாதே. இவ்விடத்தில் துஷ்டமிரு கங்களில்லை. உனக்கு ஒருவித இடையூறும் நேரி டாது தைரியமாயிரு தம்பீ." என்று சொல்லி இரு வரும் பக்கத்திலுள்ள மரங்களில் கனிந்திருக்குங் கனிவர்க்கங்களில் வேண்டியமட்டும் பறித்து ஜெய வீரசிங்கனிடங் கொடுத்துவிட்டுக் கிராமத்தைநோக்கி நடக்கலானார்கள்.

பழங் கிடைத்ததும் ஜெயவீரசிங்கன் வேண்டிய மட்டும் புசித்துக் களைதெளிந்து, பின்னொரிடத்தி லுட்கார்ந்து காட்டினழகையும், இயற்கையி னநு பவத்தினையும், தான் கற்ற கல்வி காட்டைப்பற்றிக் கூறு முண்மையையும் யோசித்த வண்ணமா யிருந் தான்.

# ஐந்தாம் அத்தியாயம்

காலை யெப்போது மணி ஐந்தடித்தது. மணி யடித்ததைக் கேட்டதும் சுந்தரராஜன் எழுந்து தன் மனைவியை நோக்கி, "கமலம், நான் சீக்கிரம் போக வேண்டும் அவர்களெல்லா மெனக்காகக் காத்திருப்பார்கள். காபி தயாராயிருக்கின்றதா? சீக்கிரம்! ஆகட்டும்." என்று அவசரமாய் விரைவினான்.

"எல்லாந் தயாராயிருக்கிறது நீங்கள் முகங்கழுவிச் சாப்பிடவேண்டியது தான் தாமதம்." என்று கமலாக்ஷி கணவனை நோக்கி கடிதில் விடையளித்தாள்.

சிறிது நேரத்தில் சுந்தரராஜன் காலைப்போஜனம் புசித்து பின் உடைகளைத் தரித்துக்கொண்டு மனைவியை நோக்கிச் சொல்லுகிறான். "கண்ணே! கமலம்! நான் போய்வருகிறேன். துன்பப்படும் வேளையி லுதவிபுரியாதிருப்பது நன்றல்ல. கட்டாயமாக நானங்கு சென்று அவர்கள் துக்கத்திற்கு நிவாரணஞ் செய்யவேண்டிய வழிகளை யாலோசிக்கவேண்டும். ஆனபடியால் நான் திரும்பி வருவதற்கு நேரமானால் நீங்களெனக்காக விழித்திருக்க வேண்டாம்." என்று சொல்லி மனைவியை அணைத்து உச்சி முகர்ந்து ஓர் முத்தமிட்டான்.

"உங்களுக் கிஷ்டமானது எனக்குஞ் சம்மதமே" என்று கமலாக்ஷி கணவனைநோக்கிக் கூறினாள்.

"நேற்றிரவு நீ ஊணுறக்கந் துறந்து அழுது கொண்டிருந்தாயல்லவா? இனிமேலவ்விதஞ் செய்வாயாயின் நான் அதிகதுக்கத்தி லாகவேண்டிய காரணமுண்டாகும்." என்று சுந்தரராஜன் சூக்ஷ்மமாச் சொன்னான்.

"போகிறவிடமுஞ் செய்யிற விஷயமுந் தாமதிக்குங் காரணமுந் தப்பில்லாது தெரிந்திருந்தால், துக்கப்படவேண்டிய காரண முண்டாகுமா? நீங்களவிதம் சந்தேகங் கொள்ளவேண்டாம். நீங்கள் என்னைவிட்டுப்பிரிந்து மறுபடியும் வந்து சேரும் வரையும், உங்களுடைய கீர்த்திக்கும், பராக்கிரமத்துக்கும், தேகாரோக்கியத்துக்குமாக கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேனே யல்லாமல், வேறொரு எண்ணமுமென்மனதிலுதிக்காது." என்று சொல்லிக்கொண்டே கணவனைத்தழுவி ஆலிங்கனஞ் செய்தாள். இவ்விதமாகத் தம்பதிகளிருவரும் தத்தம் மனதில் தோன்றிய இனிய வார்த்தைகளால் ஒருவரை யொருவர் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்குஞ் சமயத்தில் தெருக் கதவில் யாரோ தட்டுகிற சத்தத்தைக் கேட்டு, ஹாலிலுட்கார்ந்திருந்த இராசம்மாள் "யாரது" என்று கேட்டாள்.

"ஏனம்மா நாந்தானுங்கோ" என்றான் வெளியிலுள்ளவன்.

“நானென்றால் யார்? உன் பெயரென்ன” என்று அம்மாள் அவசரமாய் கேட்டாள்.

“என்பேர் ஹயாத்கானம்மா” என்றான் வெளியில் நிற்பவன்.

பெயரைக் கேட்டவுடன் அம்மாள் சடுதியிலெழுந்து கதவைத் திறந்து, “ஹா! ஹா!! ஹயாத்கானா? வா! சாய்பு உள்ளேவா! என்ன! அதிகாலையில்! என்ன அவசரமான வேலை?” என்று அம்மாள் அவசரமாய்க் கேட்டாள்.

“ஐயாவுக்கு காயிதங் கொடுத்தாங்கோ! சல்தியாய் கொண்டு போய் கொடுக்கும்படி” என்றான் ஹயாத்கான்.

“யார் கொடுத்தாங்க”

“ஐயாவுங்க கொடுத்தாங்கோ”

“யாரிடம் கொடுக்கும்படி”

“ஐயாவண்டை கொடுக்கச் சொன்னாங்கோ”

“எந்தையயாவிடம்?”

“சின்னையாவண்டை”

“அம்மா, குழந்தைகளெல்லாருஞ் க்ஷேமமா?”

“ஆமாங்கோ எல்லாஞ் சொகமாயிருக்கிறாங்கோ, இருந்தும் மனக்கஸ்தி ரொம்பங்கோ, அதிலே அவங்க அளவு கடந்த துக்கங்கோ”

“என்ன துக்கம்! எதுக்குத் துக்கம்! என்ன சங்கதி! ஏது காரணம்? சொல்லு சாய்பு! ஒன்றுமொளி

க்காமல் சொல்லு! குழந்தைகளில் யாருக்காவது சுக யீனமா? சொல்லு சாய்பு சொல்லு! இவ்வளவு காலையில் நீ யிங்கு வந்தது எனக்குப் பெருமாச்சரியமாயிருக்கிறது! என்ன சங்கதி; சொல்லு சொல்லு'' என்று இராசம்மாள் ஏக்கத்தினால் வீக்கம்பிடித்தவள் போல் தட தடத்துக் கேட்ட சத்தம், பக்கத்தறையிலிருந்த, மனோதையன் காதிற் கேட்டது. உடனே அவரெழுந்து வந்து துலுக்கனை நோக்கி ''சாய்பு என்ன விசேஷ வர்த்தமானம்?'' என்று கேட்டுக் கொண்டே பக்கத்திலுள்ள வேராசனத்திலுட்கார்ந்தார்.

''ஏதோ விபத்து நேர்ந்துவிட்டதாமே!'' அவர்களுக்கு'' என்று அம்மாள் அவசரமாய்க் கூறினாள்.

''என்ன விபத்து! எப்படி யுண்டாயது! நேற்றிரவு சுந்தரராஜன வீட்டுக்கு வரும்போது மணி பன்னிரண்டு; சங்கதிகள் விசாரிப்பதற்கு நேரமில்லாததால் நான் ஒன்றும் கேட்கவில்லை! இப்போ என்ன சமாச்சாரம்! கையிலிருக்கும் கடிதம் யாருக்கு?'' என்று மனோதையன் மிகவும் நிதானமாய்க் கேட்டு துலுக்கனை நோக்கினார்.

''சமாச்சார மொண்ணு முங்களுக்குத் தெரியாதா? அவங்க ரொம்பந் துக்கத்திலே மாட்டிக்கிண்ணு அவஸ்தைப்படுகிறுங்கோ''—என்று ஹயாத்கான் சொல்லி முடிப்பதற்குள்,

"சங்கதியை விபரமாய் சொல்லு சாய்பு' என்று மனேதயன் அவசரங் காட்டி ஆவலாய்க் கேட்டார்.

"சங்கதி யென்னுங்கோ! புள்ளேயின் வெசனந் தான்! என்று ஹயாத்கான் சொல்லிக்கொண்டிருக்கும் போது; இடையே அம்மாள் எழுந்து, "ஐயையோ! பிள்ளேகளுக்கென்ன! எந்தப் பிள்ளேக்கு சுகயீனம்! என்ன சீக்கு! கஷ்டமா? விஸ்லங்கமா? ஆபத்தா? பிழைப்பதரிதா? என்று அவசரமாய்க் கேட்டு அசையாது நின்ருள்.

அப்படி யொண்ணுமில்லேயுங்கோ! அது காணுமல் போச்சுது! எங்கை போச்சோ தெரியவில்லே! எப்படி போனதோ! ஒருவரும் பார்க்கவில்லே!" என்று ஹயாத்கான் ஒருவாறு கூறிமுடித்தான்.

இவ்வாறு துலுக்கன் கூறியதைக் கேட்ட இருவரும் பிரமித்துவிட்டார்கள். மனேதயன் நாற்காலி மேல் சாய்ந்து மூக்குமேல் விரலேவைத்துக் கொண்டார். இராசம்மா நட்டை கட்டைபோல் அசையாது நின்ருள். இப்போது துலுக்கன் எழுந்து "அம்மா சின்னேயாவைக் கூப்பிடுங்கோ! சல்தியாய் வரச்சொன்னுங்கோ" என்று அவசரங் காட்டி அம்மாளேக் கேட்டான்.

"இதோ! தம்பிவந்து விடுவான்! பிள்ளே எப்படிப் போயிற்று, எங்கே போயிற்று என்று ஒருவரும் அறியார்களா?" என்று அம்மாள் மிகத் துரிதமாய்க் கேட்டுத் துக்கத்தோடு நிதானித்தாள்.

"புள்ளை காணாதுபோய் இரண்டு நாளாச்சு! சின்னையா அறிவாங்கோ சமாசாரமெல்லாம்" என்றான் ஹயாத்கான்.

இவ்வித மிவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட வேலைக்காரனொருவன், வேகத்தில் மாடிக்குச் சென்று சுந்தரராஜனிடம் சங்கதியைத் தெரிவித்தான். சங்கதி தெரிந்ததும் சுந்தரராஜனும் கமலாக்ஷியும் துரிதமாய்க் கீழே யிறங்கி ஹாலில் வந்து சேர்ந்தார்கள். சுந்தரராஜனைக் கண்டவுடன் துலுக்கனெழுந்து வந்தன மளித்துக் கடிதத்தை கையிற் கொடுத்தான். இப்போது இராசம்மா மகனைநோக்கி "தம்பி! சங்கதி யென்ன? இப்போதாவது சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள்.

"இராத்திரி நாளியாய்விட்டது அதுவுமின்றி நான் வர நேரமாய்விட்டதால், ஏங்கியிருந்தீர்கள்! அதோடுகூட யிதையுஞ் சொல்லி உங்கள் மனதிற்கு இன்னல் விளைப்பானேன்! காலமே சொல்லலாமென்று நினைத்துத்தான் விட்டிட்டேன்" என்று சுந்தரராஜன் அன்னையை நோக்கி தாழ்மையா யுரைத்தான்.

"அது போகட்டும் தம்பீ! இப்போ காயிதத்திலிருக்குஞ் சேதியைச் சொல்லு" என்று மனோதயன் மகனை நோக்கி மகா வேகமாய்க் கேட்டார்.

பிதாக் கேட்டவுடன் பின்னுமொரு தரம் கடிதத்தைப் பிரட்டிப் பார்த்து, "சுகந்த சீலன் சங்கதி

தெரிந்து இரவு இரண்டு மணிக்கு வந்திருக்கிறதாக வும் அவரோடு இச் சங்கதிகளைத் தீர ஆலோசித்து, பெண்ணைத் தேடிப் பிடிக்கும் வழியை உடனே தீர் மானம் பண்ணவேண்டுமென்றும், அதனால் என்னை அவசரமாக வரும்படியும் எழுதியிருக்கிறார்கள்'' என்று சுந்தரராஜன் உள்ளதை யுள்ளபடி கூறினன்.

''இச்சம்பவம் எப்படி நடந்ததென்ப துனக்குத் தெரியுமா?'' என்று மனோதயன் மகனை நோக்கிக் கேட்டார்.

''நானொன்று மறியேன்; நேற்று மாலையில் நான் அவர்கள் வீட்டுப் பக்கமாக வரும்போது மோட்டார் வண்டியிலிருந்து கொண்டு சிறிய தகப்பனார் கனக சேகரமவர்கள் என்னைக் கூப்பிட்டார். நான் அருகே சென்று பார்க்கும் போதெல்லாரும், அழுத முகத்து டனிருந்தார்கள். பின்பு சங்கதியை விசாரித்துத் தெரிந்து கொண்டு நானுமவர்களுடன் சென்று, அத ற்கு வேண்டிய சில ஏற்பாடுகள் செய்துவந்தோம்.'' என்று சுந்தரராஜன் பிதாவை நோக்கிப் பணிவாய் விடை யளித்தான்.

''இச்செய லெவ்விதஞ் சம்பவித்திருக்கலாம்? திருடர்களுடைய தீயச் செயலாயிருக்குமா? பெண்ணி னுடைய பேதைத் தனமா யிருக்குமா?'' என்று மனோ தயன் மனக்கிலேசத்துடன் கேட்டார்.

''திருடர்களின் தீய்ஞ் செயலென்றே எல்லாரு மபிப்பிராயப் படுகிறார்கள்'' என்றான், சுந்தரராஜன்

"ஜெயவீர சிங்கனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்களல்லவா? அவ்விஷயத்தில் பெண்ணுக் கிஷ்டமில்லாமல், வேறு யாருடனாவது போயிருக்கக் கூடாதா?" என்று இராசம்மா சந்தேகமாய்க் கூறி சற்று நிதானித்தாள்.

"அப்படியிருக்காது: அத்தை, அவ்விஷயத்தில் நீங்கள் சந்தேகங் கொள்ள வேண்டாம்" என்று கமலாக்ஷி தைரியமா யுரைத்தாள்.

"போ, அம்மா போ! இந்தக் காலத்துச் சிறுக்கிகளை எவ்வளவு நம்பலாமா? பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே பிள்ளைப் பெறவுங் கற்றுக் கொள்ளுகிறார்கள். எல்லாரும் உன்னைப் போல வுத்தமியா யிருப்பார்களென்று நினைக்கிறாயா? உன்னைப் போல் கணவனிடத்தில், பக்தி விசுவாசத்துடனும், நேசபாசத்துடனுமிருப்பார்களென்று நம்புகிறாயா? அப்படியெண்ணாதே என் கண்மணி! பெண்களுக்குள் சிறந்த ரத்தினமம்மா நீ."

என்று சொல்லிக் கொண்டே இராசாம்மாள் மருமகள் கன்னத்தில் முத்தமிட்டு; பின் தன் மகனை நோக்கி, "அப்பாமகனே! நீ எங்காவதுவெளியே போனால் உன் பெண்சாதியையுங் கூட்டிக் கொண்டு போ! அப்பப்பா! நேற்றிரவு நான் பட்டபாடு போதும்! நீ ஒரு மணி நேரம் வெளியில் தாமதித்தால், என்னருமை மருமகளுக்கு உயிர் போய்விடும் போலிருக்கிறது." என்று மருமகளைப் புகழ்ந்து பேசினாள்.

மாமியார்கூறியவார்த்தைகளைக் கேட்ட கமலாக்ஷி மனமகிழ்ந்து புன் நகைப்புடன் தன் அன்பான அத்தையை நோக்கி "அத்தை! நீங்கள் அப்பெண் மீது சந்தேகங் கொள்ளவேண்டாம். நான் பல முறைகளிலும் அவளையிக் கலியாண விஷயமாகக் கேட்டிருக்கிறேன். அவளுக்கு அவ்விவாகத்தில் பூரண இஷ்டமுண்டென்பது உண்மையாக நானறிவேன்" என்றாள்.

"அப்பெண்ணின் பெயரென்ன?" என்றார் மனோதயன்.

"வனசுதா" என்று கமலாக்ஷி கடிதிலுரைத்தாள்.

"வனசுதாவா? நல்ல பெயர்தான். வனசுதாவையெப்படியாவது கண்டு பிடிக்கவேண்டிய தவசியமல்லவா? அவரவரபிப்பிராயங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதி லென்ன பயன்?" என்று மனோதயன் கூறி மனதிலேதோ நினைத்த வண்ணமாயிருந்தார்.

"ஆமாம்! அதற்காகத் தான் நானும் சீக்கிரம் புறப்பட்டேன் 'வா ஹயாத்கான், நாம் போகலாம்' என்று சுந்தரராஜன் துலுக்கனை யழைக்க, துலுக்கனும், "இதோ மகாராஜ்" என்று சொல்லிக் கொண்டெழுந்தான்.

இந்தச் சமயம் மனோதயன் மகனை நோக்கி "தம்பீ! எத்திக்குப்போவதாகத் தீர்மானித்திருக்கிறீர்கள்." என்று கேட்டார்.

"மணிக்கம்பி தோட்டப் பக்கந்தான் போவதாகத் தீர்மானம்" என்றான் சுந்தரராஜன்.

"ஆம்! தம்பி, மணிக்கம்பி தோட்டத்திலிருக்குந் திருடர்கள் மகாசமர்த்தர்கள். அவர்கள்வெகுகாலமாக அவ்விடத்தில் வாசஞ் செய்து வருகிறார்கள். இவர்கள் திருடவருஞ் சமயங்களில் பெண்களையுங் குழந்தைகளையுந் திருடிச் சென்று தம்மினத்தில் சேர்த்து விடுவார்களாம். இவ்வித மகப்படும் பெண்களில் சிலரை பிசாசுக்குப் பெலியிட்டு வருவதாகவுஞ் சொல்லுகிறார்கள். இந்த ஆகாவளிப் பயல்கள் ஆயிரக் கணக்காயிருக்கிறார்கள். மணிக்கம்பிதோட்டத்துக்குப் போனவர்கள் திரும்பிவந்ததில்லை. அவர்களைப் பிடிக்க வேண்டுமென்று முயற்சி செய்து போனால், போறவர்கள் மீண்டு வருவது கஷ்டம். இவர்கள் குகைகளிலும் மலைச்சாரல்களிலுங் குடிசைகளிலுமாக வசித்துவருகிறார்கள். அவர்களைப் பிடிப்பது சுலபமான காரியமல்ல. ஆனபடியால், தம்பீ! ஒரு பெண் போனால் போகட்டும். அதுக்காக நீங்களெல்லாருமப்பாவிகளின் கையில் சிக்கி அவஸ்தைப்படவேண்டாம். வனசுதாவின் தலை விதிப்பிரகாரம் நடக்கட்டும். விதியை விலக்க நம்மால் முடியாது!" என்று மனோதயன் திருடரைப் பற்றி தான் அறிந்தவைகளையெல்லாம் மகனிடத்தில் விபரமாய் கூறி மனச் சஞ்சலத்துடன் நாற்காலியை விட்டெழுந்தார்.

இவ்வாறு மனோதயன் கூறக் கேட்ட பெண்களிருவரும் மிகவும் பயங்கொண்டார்கள். இராசம்மா

மகனை நோக்கி, 'தம்பி, நீ போகவேண்டாம்.' என்ருள்.

'நீங்கள் போகவேண்டாம்! நான்விடமாட்டேன்!' என்று சொல்லிக் கமலாக்ஷி கணவன் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

"நாம் தனியாய்ப் போகமாட்டோம். குதிரைப் படைகளும் காலாட் படைகளும் துப்பாக்கிச் சேவகர்களும் ஆயிரக் கணக்காய் வருவார்கள். நாமெல்லோரும் நாலு மைல் தூரத்தில் நிற்போம். பட்டாளஞ் சென்று திருடர்களைக் கைதி செய்து கொண்டுவரும்!" என்று சுந்தரராஜன் சுளுகாச் சொன்ஞன்.

"என்ன இருந்தாலும் பறுவாயில்லை! நான்விடமாட்டேன்! நீங்கள் போகவேண்டாம்! அவ்விதம் போவதாஞல் நானு முங்களுடன் வருகிறேன்?" என்று கமலாக்ஷி சொல்லிக்கொண்டு கணவனுடைய இருகரங்களையும் பிடித்துக் கொண்டாள்.

"கண்ணே கமலம்! நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம். அவ்விதம் மணிக்கம்பிதோட்டத்துக்குப் போவதாயிருந்தால், நான்வந்து சங்கதி தெரிவிக்கிறேன். அங்கு செல்வதாஞல் அனேக ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது. நான் சிறிய தகப்பஞர் கனகசேகரமவர்கள் வீட்டுக்குச் சென்று, மாமா சுகந்தசீலருடனிதைப் பற்றித் தீர யோசனை செய்து அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து வருகி

றேன்' என்று சொல்லி தன் கமலக் கண்களால், களங்கமற்ற தன் பிராணநாயகியின் முகத்தை கருணை யோடு நோக்கினான்.

"சீக்கிரமாய் வாருங்கோ? காத்திருக்கிறேன்" என்று புன்னகையுடன் புகன்று கணவன் முகத்தை காதலுடன் நோக்கி யிருகரங்களையும்* மெல்லெனவிட்டாள்.

"தாமதிக்காமல் வந்துவிடு தம்பி—" என்றாள் தாயார்.

"சங்கதி தெரிந்து கொண்டு சீக்கிரம் வந்துவிடு தம்பி" என்று தகப்பனார் ஆவலோடுரைத்தார்.

"இதோ வந்துவிடுவேன்" என்று சொல்லி துனுக்கலையு மறைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

# ஆறும் அத்தியாயம்

ஹா! என்ன அழகுள்ள பூந்தோட்டம்! என்ன அலங்காரமான நந்தவனம்! சிங்காரமானயிப் பூந்தோட்டத்தில் சிறப்பான புஷ்பங்கள் வெகு அழகாய் மலர்ந்திருக்கின்றன. மல்லிகைப் பூக்களும் முல்லைப் பூக்களும் மதுரமான வாசனையை யெடுத்தெடுத்துக் கொட்டுகின்றன. ரோஜா புஷ்பங்கள் ராஜாக்களை நோக்குகின்றன. செங்கழிநீர்புஷ்பம்மிக அலங்காரங் காட்டுகிறது. செண்பகப்பூ மிகவுஞ் சிங்காரமாயாடுகிறது. மலர்ந்திருக்கும் புஷ்பங்களிலுள்ள மதுவை வண்டுகளுந் தேனீக்களும் பறந்து பறந் தெடுத்துக் கொண்டு பக்குவமாய்ச் செல்கின்றன.

விநோதமா யமைக்கப்பட்ட இவ்விசித்திரப் பூந்தோட்டத்தில் இடையிடையே அழகான பாதைகளும், அவைகளின் பக்கத்தில் உட்காருவதற்குத் தகுந்த ஆசனங்களும் ஒழுங்காயமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வித மனோகரம் வாய்த்த இப்பூந்தோட்டத்தின் நடுவில், ஓர் ஆடவனும் ஓர் கன்னிகையும் நின்று வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள்யார்? என்ன பேசுகிறார்கள்? சற்றுக்கவனிப்போம்! சிறிது நேரம் பேசுவதும்! பின்யாராவது வருகிறார்களா வென்று சுற்றும் முற்றும் பார்ப்பதும், சற்றே யுட்காருவதும் பின்னெழுந்துலாவுவதுமாகச் சிறிது

சேரங்களித்து பின்கன்னிகையை நோக்கி வாலிபன் சொல்லுகிறான்.

"ஆ! என் கண்ணுக்கிசைந்த கண்மணியே! நீயொன்றுக்கும் அதைரியங் கொள்ளாதே! எல்லாம் வல்ல கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்! அவருடைய திருவுள்ளமெப்படியோ நம்முடைய பாக்கியமுமப் படியே! நானென்ன செய்யக்கூடுமோ செய்கிறேன். நீ சற்றுப்பொறுத்திருக்க வேண்டும்! நேரமாய்விட் டது நான் போகிறேன்! உன்னையுந் தேடுவார்கள்! எங்களிருவருடைய நேசம் என்றென்றும் நிலைத் திருக்கட்டும்." என்றான்.

இவ்வாறு வாலிபனகூறிய வார்த்தைகளைக்கேட்ட கன்னிகை மனந்தளர்ந்து வாலிபனை நோக்கி "ஹா! என் கண் நிறைந்த கண்ணாளா! இபபூவுலகில்யான் ஒரு வரை நேசித்திருந்தால் அவர், நீங்களென்றறிக. என்னுடலாவி யிரண்டையும் உங்களிடங்கொடுத்து விட்டேன். அதைமீட்க என்னாலாகாது. நான் உங் களை மணம் புரிந்து சுகித்துமகிழ்வுடன் வாழவேண் டியவளா யிருக்கிறேன் நீங்களென்னை ஞாயப்பிரகாரம் மணம்புரிய வேண்டிய முயற்சி செய்து என்னையித் தொல்லையினின்று மீட்காவிட்டால் நானுயிர் துறக்கச் சித்தமாயிருக்கிறேன். என் காதல்மேலாணைப்படி யிதுவுண்மை யென்றறிக!" என்று சத்தியமாகவுத் தமி யுரைத்தாள்.

இவ்வாறு சத்தியஞ் செய்ததை கேட்ட வாலி பன் மனம்பொறுதவனாய், "என்கட்டிக்கரும்பே! கற்

கண்டே! அமிர்தமொழியாய்! உன்னை மடியவிட்டு இவ்வுலகில் நான் ஜீவிப்பேனு" என்று சொல்லிக் கொண்டே அன்புக்குரியாளை பலமுறை தழுவி "என் னுயிராவாய்! நம்முடைய விவாக மஹோத்ஸவம் தெய்வசித்தம்போல் நடக்கும். உன் பெற்றாருக்கு விருப்ப மில்லாத விஷயத்தில் நாம் விரும்பியது தப்பா யிருக்கிறது" என்றான்.

"ஆம் நீங்கள் கூறுவது உண்மையே! என் பிதாமா தாக்களின் விருப்பமின்றி நாம் விவாகஞ் செய்ய முடி யாது, என்னை செல்வசசிறபபுடன் சீராட்டிவளர்த்து வருகிறார்களென்பது நீங்களறிநதவிஷயம, நானின்றி வேறுபிள்ளைகளுமில்லை, கண்ணிமைபோல் என்னைக் காப்பாற்றிவருஈ தாய் தந்தையரின் மனம் நோகாது நடநதுகொள்ள வேண்டியது என் கடமையா யிருக் கிறது, அதற்குத்தாங்களே உதவிபுரிய வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் சநதஇயிழநது எக்காலமுந் துனபத்துக்காளாவார்கள். ஆதலால், என் னுயிருக்கி ருபபிடமே! என் இருதயத்துக்கினியவரே! நீங்கள் இதற்கு தக்கவுபாயங்கள் செய்து ஊராறிய என்னை விவாகஞ் செய்யாவிட்டால், ஒரு குடும்பம் வீணேய ழிநது போகுமென்றறிக." என்று சொல்லிக் கொண் டே தன் காதலன் மார்மேல் சாய்ந்து கண்ணீர பெரு கினாள்.

தன்காதலி கண்ணீர் சொரிவதைக் கண்ட வாலி பன் அடியற்ற மரம்போல் நிறகச் சக்தியற்றவனாய்

அருகேயிருந்த ஓர் ஆசனத்தின் மேலுட்கார்ந்து, அவளைத் தன்மடிமீதிருத்தி, தன் கைக்குட்டையால் அவள் கண்ணீரைத் துடைத்து, கட்டியணைத் திதழு ருந்திப்பின் சொல்லுகிறான். "என் ஆருயிரே! எனது கண்மணியே! என்தேகத்தை கத்தியால் கீறி அதிலி ருந்து அளவில்லாத ரத்தம்வடியினும் அதைத்தைரி யமாய்ச் சகிப்பேன். மற்றுமெவ்விதமான நோய் என் தேகத்தை வாட்டிய போதிலும் அவைகளை அலக்ஷி யம் செய்வேன். ஆனால் உன் கண்ணீரானது என் னுடலையுமுயிரையும் வாட்டிவிட்டது" என்றான்.

இதைக்கெட்ட கன்னிகையானவள் தன்காதலன் முகத்தைக் கருணையோடு பார்த்து தன் மல்லிகை போன்ற மெல்லிய கரங்களால் அவன் மிருதுவான கன் னங்களைத்தடவி, முகமேல் முகம் வைத்து முத்தாடி காதலமிர்தத்தைக் களைதீரவுண்டு தன்னிலைமையைத் தானறியாதவளாய், சற்றுநேரம் பொறுத்து காத லனை நோக்கிச் சொல்லுகிறாள். "என்னுயிர்த்தலைவ ரே! என் சக்கரவர்த்தியே! என் பிராண நாதரே! உங்களுக்குச் சுகத்தையும் இன்பத்தையுங்கொடுக்கப் பிறந்தேனேயல்லாமல், துக்கத்தைக் கொடுக்கவல்ல! ஆனால் நமது நிலைமையை நினைக்கும்போது துக்கமா யிருக்கிறது. இருந்தும் உங்களுடைய பேச்சை நம்பி கவலையற்றுத் தைரியமாயிருக்கிறேன். ஆயி னும் என் சந்தேகம் என்னைவிட்டகலவில்லை. அடிக் கடி யென் மனதை அவஸ்தைப்படுத்துகிறது" என் றாள்.

"உன் சந்தேகம் எதற்காக" என்றான்வாலிபன்.

"என் பெற்றாருக்கு விருப்பமில்லாத காரியத்தை நாமிருவருஞ் செய்ய முயன்றோமே: கடைசியிலது எவ்விதம் முடியுமோ என்பதுதான்" என்றாள்.

"உன்னை யாருக்கு விவாகஞ்செய்து கொடுப்பதாக ஏற்பாடு?"

"வாசுதேவனுக்கு"

"அவ்விஷயம் எல்லாருக்கும் விருப்பந்தானா?"

"தகப்பனாருக்கு அந்தவிஷயத்தில் முழுமனமாயிருக்கிறது. ஆனால் தாயாருக் கிஷ்டமில்லைபோல் தெரிகிறது." என்று காதலனை நோக்கி புன்சிரிப்புடனுரைத்தாள்.

இவ்விதமாகக் காதலர்களிருவருஞ் சம்பாஷித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில், யாரோ கூப்பிடு, கிற சத்தம் கனனிகையின் காதில் கேட்டது. சத்தங் கேட்டதும் சடுதியிலெழுந்து "அம்மா கூப்பிடுகிறாங்கோ, நான் போகிறேன்" என்று சொல்லி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"என் தேவா அமிர்தமே! தித்திக்குஞ் செங்கரும்பே! ஒரு முத்தமிட்டுப் போவாயானால் நான் சித்தம் மகிழ்ந்து செல்வேன்" என்று காதலியை நோக்கி கனிந்து கேட்டான்.

"எப்போது நாம் இருவரும் ஒன்றாகிறோமோ அப்போது இப்பூவுலகம் சுவர்க்கலோகமாய் மாறும்"

என்று சொல்லிக்கொண்டு தன் காதலன் கழுத்தைக் கட்டி முத்தமிட, அவனும் தன் இருகரங்களாலுமவள் மெல்லியவுடலை இறுகக்கட்டி ஒருவரையொருவர் மாறி மாறி முத்தமிட்டும் இதழுண்டும் கன்னத்திற் கடித்தும் தத்தம் காதலைப்புகட்டி, பின்னொருவரை யொருவர் விட்டுப் பிரிந்தார்கள்.

காதலென்றால் இதுதான்காதல், இக்காதலர்களி டத்தில்தான் உண்மையான காதலைக் கண்டோம். உண்மையான காதல், ஒரு போதுங்கண்ணால் பார்க் காது. மனதால் பார்த்து மகிழ்ந்துகொள்ளும். காத லென்பது குருவில்லாவித்தை. கற்றுக்கொடாமல் கற் றுக்கொள்வது காதல், உலகத்திலுள்ள அனந்தகோடி ஜீவராசிகளுக்கும் காதலென்பது ஓதாமலுணர்வது. உலகமே காதலிலுளல்கிறது. கடவுளுங் காதலில் சிக் கிக்கொள்கிறார். காதலில்லாவிட்டால் உலகமுமில்லை. காதலில்லா விட்டால் மனிதனுமில்லை. கடவுள் மேல் காதல்கொண்டவர்கள், காடு மலைகளில் சென்று வருஷக்கணக்காய்த் தபஞ்செய்கிறார்கள். காதலுக் குக் கண்ணில்லை யென்று கூறுகிறார் சிலர். கடவுள் மேல் காதல்கொண்ட தபசிகள், இருகண்களையும் மூடிமனக்கண்ணால் கடவுளைக் கண்டானந்திக்கிறார் கள். அதுபோலவே மெய்க்காதல் கொண்ட ஆடவர் களும், வெளித்தோற்றத்தால் மயங்காது, தத்தம் மனதினால் ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ளுகி றார்கள். இக்காதலில்—மெய்க்காதல், மோகக் காதல் என்றிரு வகை யுண்டு. மெய்க்காதலென்றால்; ஒரு

கன்னிகையானவள் ஓர் வாலிபனை ஒருகாரணமு மின்றிக் காதலித்து அவனையே மணம் புரிந்து அவ னுக்குவேண்டிய பணிவிடைகள் யாவு மன்புடன் செய்து, அவனையே தெய்வமெனப் பாவித்து, கனப் படுத்தி, கணவனை விட்டுக் கணநேரமும் பிரியாது, என்று மவனுக்குத் துணையாயிருந்து, துன்பப்படுஞ் சமயத்தில் இனிய வர்த்தைகளாலவனைச் சமாதானப் படுத்தி, எவ்விதமான சுகதுக்கம் வந்தபோதிலுங் கணவன் மீதுள்ள காதலுக்கு ஏற்றத் தாழ்வின்றி, எப்பவுங் கணவன் மீதில் கண்ணுங் கருத்துமாயிரு ந்து அன்னியபுருஷனுடன் அனுவசியமாய் வார்த்தை யாடிச் சிரிக்காமலும், தன்னைத்தான் காத்துக்கொள் பவ ளெவளோ, அவளே மெய்க்காதலி யென்றும் உத்தமியென்றுங் கூறலாம். இதையொக்க—"தற் காத்துதற் கொண்டார் பேணிச்சொற் காத்துச் சோர்விலாள் பெண்." என்றும்,"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவள் பெய்யெனப் பெய்யும் மழை." என்றும் திருவள்ளுவ நாயனார் தெளிவாய்க் கூறியிருக்கிறார். மெய்க்காதலனைப் பற்றிசற்றுக் கவ னிப்போம். இவன் ஓர் கன்னிகையை காதலித்து மணந்து, அவளுக்கு வேண்டிய எல்லாவிதச் சுகங் களுங் கொடுத்து தன்னுயிரைப் போலவளைப்பா வித்து அவளைவிட உயர்ந்த பொருள்வேறொன் றில்லை யென்று 'நினைந்து அவளிடத்தில் பூரணநம் பிக்கை யுடையவனாய், தான் முதலில் அவளைக் கண்ட போது எப்படிக் காதலித்தானோ அப்படியே அவன்

ஆயுள்வரையும் அக்காதலுக் கேற்றத் தாழ்வின்றி என்று மொரேவிதமாய் யிருப்பான். தன் காதலியை விடப் பதின்மடங்கு அழகுள்ள பெண்களைப் பார்த்தாலும், அவன் கண்ணுக்கு அவர்கள் அழகாயிருக்க மாட்டார்கள். தன் காதலியைக் காட்டிலும் அழகுள்ள பெண்களிப்பூவுலகி லிருக்கமாட்டார்களென்றே நினைந்திருப்பான். எவ்வளவு சௌந்தரியஸ்திரிக ளவன்மீது மோகங்கொண் டலைந்தாலும் அவர்களைக் கண்ணெடுத்துப்பாரான். எக்காலத்தும் தன் நாயகியுடன் அன்பாயும் நேச பாசத்துடனு மிருப்பான். தன் மனையாளுக்கு ஒருவிதக் கஷ்டமும் வருத்தாது தன்னுடல் பொருளாவி மூன்று மவளெனக்கருதி என்றுமவளை அன்பாய்ப் பாவித்து வருவான். இவ்வித குணங்களுடையவனே மெய்க்காதலனென்று கொள்ளப்படும். நமது காதலர்களிருவரும் இவ்விதமான மெய்க்காதலுடையவர்களென்பதற் கெள்ளளவுஞ் சந்தேகமில்லை. அவர்களுடைய வார்த்தையினாலுஞ் செய்கையினாலும் வாகாயறிந்து கொள்ளலாம்.

மோகக் காதலைப்பற்றிச் சற்றுக்கவனிப்போம். அழகுள்ள பாலிகைப் பெண்கள் வசிக்கும் வீட்டுப் பக்கங்களிலும், பள்ளிக்கூட வீதிகளிலும், வாலிபர்கள் சென்று சைகைகாட்டி மோகத்தை யூட்டி பேதைப்பெண்களை எமாற்றித் தம் காம இச்சையை தீர்த்துச் செல்லுகிறார்கள். இச்செய லெவ்விதம் முடிகிற தென்றால், 'எங்கேயோ கிடந்த தேளை எடுத்து

விட்டுக்கொண்டு குத்துது கொடையிது வென்பது போலும். பூனைக்கு மீனின் ருசியைக் காட்டுறற் போலும். குழந்தைக்குக் கற்கண்டை யூட்டுறற் போலும். பேதைப்பெண்கள் ஏமார்ந்து போவது மன்றி, "கெட்டதுங் கெட்டாய் கிட்டவா பெண்ணே" என்பதுபோல், முறைதலை தெரியாமலும், ஜாதி குலம் பாராமலும், ஏற்றத்தாழ்வை நோக்காமலும், கோடீஸ்வரன் குமாரத்தி குதிரைக்காரனுக்கு மனைவி யாவதும், லக்ஷாதிபதியின் மகள் பிச்சைக்காரனுக்கு வைப்பாட்டியுமாகிறாள். இவ்விதமாக வுலகில் ஆயி ரக் கணக்கான ஆஸ்தியுடைய கனதனவான்களுடைய குமாரத்திகள் குதிரைகாரனுடனும் மோட்டார்வண்டி யோட்டுபவனுடனும், சமையல்காரனுடனும், சீலை வெளுக்கும் வண்ணனுடனும் கூடிக் கொண்டோடி விடுகிறார்கள். இவர்களைக் கூட்டிக்கொண்டு போகும் வீராசாமிகளில் சிலர், இப்பெண்களிடமுள்ள நகை நட்டுகளைப் பிடுங்கிக் கொண்டு பேதைப் பெண்களை நடுத் தெருவில் விட்டோடுவதும், சிலர், தங்கள் காம யிச்சை தீருமட்டு மவர்களிடமிருந்து பின்பு வேறு யாரிடமாவது ஒப்பித்துவிடுகிறார்கள். இவ்விதமாக யிப்பெண்கள் பலகைமாறி முடிவில் ஒருவருமில்லா மல் அந்தரித்து, சிலர் தாசிகளாவதும், சிலர் கூலி வேலை செய்து வயிறு வளர்ப்பதும், சிலர் பிச்சை யெடுத் துண்பதுமாகத் தம்வாழ்நாளைப் பாழ்நாளாக்கி விடுகிறார்கள். அந்தோ! இதென்ன பரிதாபம்! "ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவு ஒன்றே ஆனு

லென்பேதை குணம் பெண்ணுக்குண்டு" என்ற வாக்கியம்போல், தம் பேதைத் தனத்தால் தங்கற்பைக் கெடுத்து கண்டவனுடன் சென்று தம் குடும்பமுள்ள நாள்வரைக்கும் அபகீர்த்தியை விளைத்துவிடுவது மன்றித் தம்ஆயுள் வரையு மவஸ்தைப் படுகிறார்கள். இதுநிற்க, காதலைப் பற்றி வேறிடத்தில் விபரமாய்க் கூறுவோம். இப்போது நமது காதலர்களைப் பற்றிச் சற்றுக் கவனிப்போமாக. அவ்வாலிபனுங் கன்னிகையும் யார்? அவர்கள் மெய்க்காதலென்னும் மேலான காதலையுடையவர்களென்று தெரிந்தது. அவர் யாரென்றால், மனோதயனுடைய இரண்டாவது குமாரனாகிய சோமநாதனும், சுகந்தசீலனுடைய சுகுண குமாரத்தி தேவகியுந்தான்.

இவர்களிருவருஞ் சிறு வயதிலிருந்து ஒருவர்மீதொருவர் அன்பாய் நடந்துவந்து பருவ காலத்திலது கதலாய் மாற, ஒருவரை யொருவர் விவாகஞ் செய்துகொள்வதாக தீர்மானஞ் செய்தார்கள். இவ்விஷயம் அன்னலக்ஷிமி அறிந்திருந்தும் அதைப் பற்றிக் கவனிக்கவில்லை. தேவகியின் பருவகாலமானதும், சுகந்தசீலன் தன்னுடைய சகோதரியின் புத்திரனாகிய வாசுதேவனுக்குத் தன் குமாரத்தியை மணம்புரிவிக்க இஷ்டங் கொண்டு, தன் மனைவியின் விருப்பத்தைக் கேட்க அவள், அதற்கு சரியான பதிலுரைக்சாமல் இருக்கட்டும் பார்ப்போமென்றாள் பின்பு சில சமயங்களில் சுகந்தசீலன் இவ்விஷயத்தை மனைவி மூலமாகத் தன் மகளுக்குத் தெரியப்படுத்த,

அவள் தனக்கு விவாகம் வேண்டாமென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டாள்.

சோமநாதனை விட்டுப் பிரிந்த தேவகி தன் உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு, சிறிது தூரத்தில் தனக்காகக் காத்திருந்த தோழியுடன் பேசிக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள். அன்னநடை நடந்துவரும் தன் அழகிய மகளைக் கண்ட அன்னலக்ஷ்மி மனமகிழ்ந்து ஆவலுடனெதிரே சென்று,

"அம்மா, புஷ்பங்களெங்கே" என்று மகளை அன்புடன் கேட்டாள்.

"புஷ்பங்கள் பறிக்கவில்லையம்மா! அழகாக ஆடிக்கொண்டிருக்கும் புஷ்பங்களைப் பறித்து அனியாயப்படுத்துவதேன்?" என்று மாதாவை நோக்கி மனவெறுப்புடனுரைத்தாள்.

"என் கண்மணீ! அடிக்கடி யுன் மனதை வருத்திக் கொள்கிறாயே! உன் எண்ணத்தை என்னிடம் சொல்லம்மா? கவலையை வெளியிடு" என்று மகளை நோக்கிப் பரிந்து கேட்டாள்.

"எனக்கொரு கவலையுமில்லை! இன்று புஷ்பம் பறிக்க மறந்துவிட்டேன்" என்றாள் மாதரசி.

"உன் முகம் வாடியிருக்கிறது! கண்கள் சிவந்திருக்கிறது! தேகம் சோர்வடைந்திருக்கிறது! அடக்க முடியாத துக்கத்தால் அழுதாப்போல் தெரிகிறதே!!

என்னுடைய தோழி, என் கண்மணி ஏன் அழுதாள்'' என்று தோழியைப் பார்த்துத் துரிதமாய்க் கேட்டாள்.

''அழவில்லையம்மா! நாமிருவரும் பூந்தோட்டத்தில் ஆடிப் பாடி, ஓடி விளையாடி வந்தோம், அதனால் தான் களைப்பாயிருக்கிறது'' என்று தாதியானவள் தந்திரமா யுரைத்துத் தன் எஜமாட்டியை நோக்கிச் சிரித்தாள்.

''அம்மா எப்பொழுது மப்படித்தான். ஏதாவது பேசிக் கொண்டே யிருப்பாங்க!'' என்று தேவகி தோழியை நோக்கிச் சிரித்துக் கொண்டுரைத்தாள்.

இந்தச் சமயம் எங்கேயோ இருந்த சாமிநாதன் எதிரேயோடி வந்து ''அம்மா போஜனந் தயாராயிருக்கிறது' என்று அன்னலக்ஷ்மியை நோக்கி கூறினன்.

சிறிது நேரத்தில் சாப்பாடு தயாரானதும் சகலரும் போஜன மருந்தி தத்தம் படுக்கைக்குச் சென்றார்கள். தேவகி தன் படுக்கையறைக்குட் சென்று ஒரு சோபாவின் மேலுட்கார்ந்து தன் காதலனைப் பற்றிச் சிந்திக்கலானாள். ''ஹா! என் ஆருயிர்க்காதலர் இப்போது என் பக்கத்தில் வீற்றிருப்பாராயின் நான் எவ்வளவு ஆனந்தமாயிருப்பேன். என்னை விட்டுப் பிரியும்போது என் மனதையுங் கவர்ந்து சென்றாரே. என் கண்கள் பார்வை யிழந்தன. மனம் நினைவை யிழந்தது. என்னிருதயத்தில் என் காதலர் நிறைந்திருக்கிறார். மனதில் அவருடைய சொரூபம் மாக்ஷி

மையுடனிருக்கின்றது. ஆ! என் ஆரமுதே! என்னை விட்டுப் பிரியும்போது ஒரு முத்தங் கொடுக்கச்சொன்னீரல்லவா? இப்போது என் பக்கத்திலிருப்பீராயின் நான் என்ன செய்வேனென்பது எனக்கே தெரியவில்லை. ஒரு முத்தங் கேட்ட வாயில் ஆயிரம் முத்தமிட்டு ஆதரவுடனணைத்து, ஆசித்து, நேசித்துப் பாசித்திருப்பேனே! என் அரசே! இந்த அழகான சோபாவும் அலங்காரக் கட்டிலும் மிருதுவான மெத்தையும் முள் பொதார்போலிருக்கின்றனவே! நீர் என் கூடவிருந்தால், சப்பிர மஞ்சத்திலிருக்கும், பஞ்சணை மெத்தை கூட என் மெத்தைக்கிணையாகாதே! உமது அகண்ட மார்பேர்டணைந்து திரண்ட தோளைத் தழுவி நான் ஆனந்த நித்திரை செய்வதெப்போ? ஆகா! நீர் என் பக்கத்திலிருந்தால் எனக்கு நித்திரை வராது. பசிதாகமெடுக்காது. உமது வாயில் சுரக்கும் தேவா அமிர்தத்தை யுண்டு நான் சோர்வற்றிருப்பேனே! 'தாயானவள் தன் குழந்தையைச் சீராட்டுவதுபோல்' நான் உம்மை யெடுத்து மார்போடணைத்து உச்சிமுகந்து முத்தமிட்டு தாலாட்டிச் சீராட்டி, என்னுடைய தீரக் கன்னத்தில் விழுந்து கடிப்பேனே. ஒருகண நேரமும் உம்மைவிட்டுப் பிரிந்திருக்கேனே! என் தெய்வமே! என்னைத் துக்கப்பாடாதே யென்றுரைத்தீர், உமது வார்த்தைக்கு மாறாக நான் நடந்தால் மன்னிக்கவும். 'எல்லாம் கடவுள் சித்தம்போல் நடக்கும்' என்றீரே. அதை நான் முழுமனதுடன் நம்புகிறேன். ஆனால், எனக்கு நீரே கடவுள் உம்மைவிட

மேலான கடவுள் எனக்கு வேறில்லை. உமது சித்த மெப்படியோ, எனது பாக்கியமு மப்படியே. எல்லாம் உமது திருவுளம் போல் நடக்கும்'' என்றிவ்வாறு சிறிதுநேரஞ் சிந்தித்துக் கொண்டிருந்த தேவகி சோர்வு மிகுதியால் படுத்துறங்கினாள்.

# ஏழாம் அத்தியாயம்

இரத்தின புரியில் சிறந்த கனதனவானுகிய அருட் பிரகாசத்தின் அழகான பங்களாவில், மிக ஆடம்பரமான வேலைகள் வெகு ஆரவாரத்துடன் நடந்தேறுகிறது. வீட்டுக்கு வெள்ளை யடிப்போரும், மேசை நாற்காலிக்கு வார்னீஸ் பூசுவோரும், பூந்தோட்டத்தைச் சுத்தப்படுத்துவோருமாக அனேக ஜனங்கள் ஆர்ப்பாட்டங் காட்டுகிறார்கள்.

வர்ணமயமான வேலைகளெல்லாம் வகை வகையாய்ச் செய்யப்படுகிறது. வகை வகையான பூஞ் செடிகள் நிரை நிரையாய் வைக்கப்படுகிறது. வித விதமான குரோட்டன்கள் வரி வரியாய் வைக்கிறார்கள். வெளிபக்கத்தில் ஓர் பந்தல் போடப் பட்டு விநோதமான கடுதாசிவேலைகள் வெகுவாய்ச் செய்து வேடிக்கை காட்டுகிறார்கள். கடுதாசி விளக்குகளுக்குக் கணக்கில்லை, வெற்றிக் கொடிகளின் விசேஷத்தை வாயாலுரைக்க முடியாது. வேலை செய்யும் ஜனங்கள் மிகவுமானந்த மாயிருக்கிறார்கள். வேடிக்கை காட்டி வீரங் கூறுவோரும், விளையாட்டுக் காட்டிக் களியாடவைப்போரும், கூட்டங் கூட்டமாய்க் குந்தியிருப்போரும், ஆட்டமாடி ஆவேசங் காட்டுவோரு மாக வேலை செய்பவர் யாவரும் ஆனந்தக் கடலிலமிழ்ந்திருந்தார்கள்.

இவ்வீட்டி லென்னவோ விசேஷ முண்டென்பது தெருவில்போகும் ஜனங்கள் மனதில் திருத்தமாய் பட்டது. உள்ளே வருவோர்க்கெல்லாம் நல்வரவு கூறி காபி, டீ, பண்டம் பலகாரங்கள் வெகு விமரிசையாய்ப் பரிமாறுகிறார்கள். வீணில் திரிந்து காலங்களிப்போரும், வேகத்தில் வந்து சிற்றுண்டிய ருந்திக் களைதெளிந்து செல்லுகிறார்கள். யார் வந்தாலும் எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, எவர் வந்தாலு மெடுத்தெடுத்துக் கொடுக்கிறார்கள்.

தன்னுடைய குமாரன் மேலான பரீக்ஷைகளை ஜெயித்து ஆகாய விமான மூலமாய் வருகிறானென் றறிந்த, அருட்பிரகாசம், அதியானந்தங் கொண்டு, தன் சிநேகிதருக்கும், ஏழை எளியவர்களுக்கும் விருந்து வைத்து, தன் குமாரனுடைய வரவைக்கனப் படுத்தக் கருதியே, இவ்விதமான ஏற்பாடுகள் செய்து எல்லாரையும் ஆனந்திக்கச் செய்து விமானம் வருகிற தாவென்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ண மாக அங்கு மிங்கு முலாவிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் பார்ப்பதும் பின் தூர திருஷ்டிக் கண்ணாடி யால் தூரம் நோக்குவதுமாய் அதி ஆவலுடன் மகன் வரவை எதிர்பார்த்திருந்தார். எவ்விதம் பார்த்த போதிலும் அவர் கண்ணுக் கொன்றும் தென்பட வில்லை. மனக்கிலேசம் மகா வேகமா யெழுந்தபோதி லுந் தன்னைத் தான் சமாதானப் படுத்திக்கொண்டு, ஒரு வேளை நாளைக்கு வருவானென்றிருந்தார். மறு நாளுங் காணோம், வீட்டிலுள்ளவர்களுக்கு விசாரம்

அதிகரித்துவிட்டது. அருட்பிரகாசம் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார். "குறித்த தவணைக்கு என் குமாரன் வரவில்லையே நான் கஷ்டப்பட்டுச் செய்த ஏற்பாடுகளெல்லாம் வீணாய்ப்போயிற்றே" என்ற எண்ணம் அவர் மனதை வாட்டிக் கொண்டிருந்தது.

இவ்வாறாக ஒருவாரங் கழிந்ததும், அருட்பிரகாசத்தின் மனைவி சந்திரவதனியம்மாள் "என்பிள்ளை யின்னும் வரவில்லையே! சேதி யொன்றுந் தெரியாமல் நாம் சும்மா விருக்கலாமா?" என்று கணவனைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தாள்.

"ஆம், ஆம், இன்றைக்கே தந்தி கொடுக்கப்போகிறேன். இனிமேல் எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்று துக்க மிகுதியால் அருட்பிரகாசம் விக்கி விக்கி யுரைத்தார்.

"என் பிள்ளை என்னிடத்தில் வந்தால்த் தான் என் மனம் ஆறுதலடையும்" என்று சந்திரவதனி கணவனிடங் கூறிக் கொண்டிருக்குஞ் சமயத்தில், வேலைக்காரனொருவன் விரைவாயோடி வந்து, சுவாமி! தங்களுக்கோர் தந்தி வந்திருக்கிறது, சேவகன் காத்திருக்கிறான்" என்றான்.

எங்கே! எங்கே! சீக்கிரம்! வாங்கிவா! அவசியங் கொண்டுவா! என்று அருட்பிரகாசம் பரபரப்புடனுரைத்து ஆவேசத்துட னெழுந்தார். சந்திரவதனி சிறிது ஏக்கங் கொண்டவளாய் ஒன்றும் பேசாது

கணவன் முகத்தைப் பார்த்தவண்ண மிருந்தாள். வேலைக்காரன் விரைவில் சென்று தந்தி வாங்கி வந்து அருட்பிரகாசங் கையில் கொடுக்க அவரதை வேகத்தில் பிரித்துப் படித்துப் பார்த்தார். கண்ணுக் கொன்றுந் தென்படவில்லை; ஆத்திரத்தால் நேத்திர மிழந்தவராய்ச் சிறிதுநேர மவஸ்த்தைப்பட்டு பின்னு மொருவாறு கண்ணைத் துடைத்து ஊக்கத்துடன் உற்று நோக்கி உரத்துப்படிக்கலானார். தந்தியிலிருந்த சமாச்சாரமாவது:

"ஸ்ரீமான் அருட்பிரகாச மவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள வார்ஸிங்ரன் யூர்னிவேர்சிற்றியில்காரிய தரிசியாகிய அன்ருஸ் அனுப்பின சேதி என்னவென்றால், உமது குமாரன் ஜெயவீர சிங்கன் இவ்விடம் விட்டுப்புறப்பட்டு இருபது நாளாயிற்று, அவனேறி வந்த விமானமுமதை செலுத்திவந்த இரண்டு சாரதிகளும் இவ்வளவு நாளாயுந் திரும்பிவரக்காணோம். ஆதலால் அவர்கள், இந்தியாவில் என்ன செய்கிறார்களென்பதைத் தெரியப்படுத்துவதுடன், அவர்களைச் சீக்கிரம்வந்து சேரும்படி ஆக்ஞாபிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்."

தந்திபடிப்பதை ஊக்கத்துடன் கேட்டிருந்த சந்திரவதனி "ஐயோ! என்மகனுக்கு என்ன இடையூறுநேர்ந்ததோ?" என்று சொல்லிக்கொண்டே தரையில் விழுந்தாள்.

"விமானம் பழுதுபட்டு விழுந்திருக்கும். என் புத்திரனும் மற்றவர்களுமிறந்து விட்டார்கள்! ஜெக

தீஸ்வரா! என்னைப்போல் பாவியிப்பூவுலகிலுண்டா! என்னுயிரைப்போல் பாவித்து வந்த அருமைப் புதல்வனை யிழந்து, நான் ஜீவித்திருப்பதில் பலனுண்டா? இருந்தும் பலனில்லை, இறந்துஞ் சுகமில்லை'' என்று சொல்லிக்கொண்டே அருட்பிரகாசங் கதறி யழுதார். எஜமான் அழுவதைக் கேட்டு வேலைக்காரர்களோடி வந்து, மூர்ச்சையாய்க் கிடக்கும் சந்திரவதனியைத் தூக்கிக் கட்டிலில் படுக்கவைத்து மூர்ச்சைதெளிவிக்க வேண்டிப் பலவித வுபசாரங்கள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. சிறிது நேரஞ் சென்றதும் அருட்பிரகாசம் களை தெளிந்து விசனத்தை யடக்கிக் கொண்டு மனைவி யருகில் வந்து பார்க்கையில், அவள் சிறிது மூர்ச்சை தெளிந்தாளாயினும், பைத்தியம் பிடித்தவள் போல் பிதற்றலானாள். ஒருபக்கம் மகனை நினைத் தழுவதும், மற்றப் பக்கம் மனைவியைப் பார்த்துத் துக்கிப்பதுமா யிருந்தார்.

இவ்விதஞ் சிலநாள் கழிந்ததும் சந்திரவதனிக்குச் சற்றே புத்திஸ்திரமாயிற்று. அப்போது அருட்பிரகாசம் மனைவியைநோக்கி, பெண்ணே, நமது அன்பின்பயனு யுதித்த அருமைப்புதல்வனைப் பறிகொடுத்து நாம் ஜீவித்திருப்பதிலுபயோகமில்லை, தற்கொலை செய்திறப்பதும் மகாபாவம், ஆதலால் நான் காசி யாத்திரை சென்று விசேஷ ஸ்தலங்களைத்தரிசித்து, புண்ணியதீர்த்தங்களாடி என்கரும ஊழ்வினையைத் தொலைத்து வருகிறேன். அதுவரையில் நீ இங்கேயிரு என்றார்.

இதைக் கேட்ட சந்திரவதனி கணவனை நோக்கி "பிராணநாத! கண்ணுக்குக்கண்ணாயிருந்த என் செல்வப்புதல்வனையுமிழந்து, உங்களையும் விட்டுப்பிரிந்திருக்க என்னாலாகாது. நானும் தங்களுடன் வருகிறேன். நாமிருவரும் யாத்திரை செய்து புண்ணிய ஸ்தலங்களை தெரிசித்து, ஆத்மாவுக்கு விமோசனந் தேடிக்கொள்ளலாம். காவிதரித்துப் புறப்படலாம் வாருங்கள், காலதாமதம் வேண்டாம்" என்றாள்.

மனைவியினிஷ்டத்தை யனுசரித்து இருவருங் காவிதரித்துப் புறப்பட்டார்கள். முதலில் வெகு தூரம் நடக்கமுடியாம லிருவருமவஸ்தைப்பட்டு பின் பழகப்பழகத் தீரதையாய் நடந்து பலஸ்தலங்களை யுஞ்சுற்றி ஒவ்வோரிடத்திலுமுள்ள அதிசயங்களைக் கண்ணுற்று வந்தார். பிருதிவிஸ்தலமாகிய காஞ்சி, அப்புஸ்தலமாகிய திருவானைக்கா, தேயுஸ்தலமாகிய அருணாசலம் வாயுஸ்தலமாகிய ஸ்ரீகாளத்தி, ஆகாய ஸ்தலமாகிய சிதம்பரம் ஆகிய பஞ்ச பூதஸ்தலங்களை முதலில் கண்டு தரிசித்து, பின்பாண்டியனால் கட்டப்பட்ட மதுரை மீனாக்ஷி கோவிலையுங் கண்டு தரிசித்து, இராமேஸ்வரத்தில் வளர்ந்துவரும் மணலிங்கத்தையும், விசேஷமான நந்தியையும் பார்த்து, தஞ்சாவூரில் துரிதங்காட்டுந் துடுக்குள்ள நந்தியையுங்கண்டு ஆச்சரியப்பட்டு, முன்காலத்துச் சிற்ப சாஸ்திரிகள் செய்துவைத்துள்ள மகாஆச்சரியமான வேலைகளுள்ள வெகு ஆச்சரியத்தை விளக்கும் தஞ்சாவூர் கோபுரத்தைக் கண்டுகளித்து அக்கோபுரத்தின் நிழலானது

எந்த நேரமும், கோபுரத்தின் மேலேயே விழுவ தன்றி நிலத்தில் விழுவதில்லை யென்றறிந்து, கண வனும் மனைவியுந் தங்களாலியன்றவரையிலும் சுற்றிச் சுற்றிப்பார்த்து, காலையிலிருந்து மாலைவரைக்கும் கோபுர நிழல் நிலத்தில் விளாதிருக்கக்கண்டு வெகு ஆச்சரியப்பட்டார்கள். பின்பு சிலதபசிகள் கூட்டத் தில் சேர்ந்து ஸ்ரீரங்கத்துக்குச் சென்று அங்குள்ள சிங்காரக்கெருடனின் அலங்காரத்தைக் கண்டு அகம கிழ்ந்து, காசியை நோக்கி நடக்கலானார்கள்.

பரத கண்டத்திலுள்ள திவ்வியஸ்தலங்களுள் சிறந்தது காசிவிஸ்வேஸ்வரர் க்ஷேத்திரமென்று பலநூல்கள் கூறுவதுடன் வேதம், ப்ராமணம், உபனிஷத்து முதலிய திவ்வியவாக்கியங்கள் மூலமாக வுமறிகிறோம். முன்னொருகாலத்தில் சிவபெருமா னால் செங்கோல் செலுத்தி அரசியற்றப்பட்டு வந்த புண்ணிய பூமியென்றுங் கூறுகிறார்கள். காசிக்குச் சென்றால் மோக்ஷங்கிடைக்கும் கங்கையில் ஸ்நானஞ் செய்தால் பாபம் நீங்குமென்றும் சிலநூல்களினபிப்பி ராயமாயிருக்கிறது. காசிவிஸ்வேஸ்வரர் க்ஷேத்திரம் முன்காலத்தில் பொன்னயிருந்ததென்றும், இப்பொ ழுது மண்ணய் மாறிவிட்டதென்றும் சிலர் அபிப் பிராயப் படுகிறார்கள். ஆனல் அவ்விதமபிப்பிராயப் படுவது தப்பென்று நினைக்கவேண்டியதே. ஏனெனில் காசிக்ஷேத்திரமானது கல்லினல் கட்டப்பட்டு சுவர் களியாவும் பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தன. பின் காலத்தில் துலுக்கர்கள் இந்தியாவுக்குள் நுளைந்து பல

ஊர்களைக் கைப்பறிக் கொள்ளையடித்துவருஞ் சமயம் காசிக்ஷேத்திரம் அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டதும், அதிலுள்ள பொன் முகடுகளைப் பேர்த்தெடுக்கச் சென்றார்கள். சிலகோபுரத்தின் மேல்புறத்திலுள்ள பொன்னையும், சில முகடுகளையும் அவர்களால் பெயர்க்க முடியாததால் விட்டுவிட்டார்கள் அவை இப்போது மப்படியே யிருக்கின்றன. இதுவே உண்மையான தாற்பரியமென்று பலரு மபிப்பிராயப் படுகிறார்கள். அதுவுமன்றி, பொன்னாயிருந்த கோயில் கலியுகத்தில் மண் கல்லாய் மாறிவிட்டதென்றால், இப்போது பொன்னால் மூடப்பட்டிருக்கும் விஸ்வேஸ்வரர்கோயிலின் கலசம், தூபி, முடி முதலியவைகளும் மண்ணாகவல்லவோ மாறியிருக்கவேண்டும்? இவைகளை பொன்னா யிருக்கவிட்டு மீதிப்பாகம் மாத்திரம் மண்ணாய் மாறிவிட்டதென்றால், அவ்வார்த்தை யுக்திக்கு விரோதமாய்க் காணப்படுகிறது. நிற்க,

காசியை நோக்கிவந்த அருட்பிரகாசமும் சந்திரவதனியும் கங்காநதி தீரத்திலுள்ள ஓர் மடத்திற் றங்கி ஹரபார்வதியைத் தெரிசித்தப்பின் அங்குள்ள அழிவற்ற அதிசயங்களையுங் கணக்கற்ற லிங்கங்களையுங் கண்டுகளித்து அநேகநாள் கழித்தார்கள். இவ்விதமிருக்கும் சமயத்தில் ஒருநாள் விசேஷ திருவிழாவொன்று நடந்தது. திருவிழாவுக்காக வந்தஜனங்கள் மடங்களி லுட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். அருட்பிரகாசமும் மனைவியுந் தங்கியிருக்கும் மடத்தி லுட்கார்ந்திருந் தவர்களுள், ஓர் வாலிபன் தன் பக்கத்திலிருக்கும் சிநேகிதனை நோக்கி,

"அடே! அதோ! அந்த மடத்தில் ஓர் சன்னியாசி வந்திருக்கிறார். அவரைப் பார்க்கலாம், வா!" என்று தம சினேகனை அழைத்தான்.

"சன்னியாசியைக் கண்டால் மோக்ஷங்கிடைக்குமா?" என்று துணைவனை நோக்கி துடுக்குடன் கேட்டான் இரண்டாமாள்.

"ஆமாம்! அதற்கென்னசந்தேகம்! எத்தனையோ ஜனங்கள் ஏராளமாய் வந்து சன்னியாசியைக் கண்டு நமஸ்கரித்து அவருக்குப் பால் பழம் காணிக்கையுமுதவி பணமும் கொடுத்துப் போகிறார்கள்" என்றான் முதலாமாள்.

"சன்னியாசிக்குப் பணமெதற்காக" என்றான் இரண்டாமாள்.

"மருக நோயெல்லாம் மந்திரத்தால் மாற்றுகிறார்; தீராதவியாதியெல்லாம் ஔஷதத்தால் தீர்க்கிறார். பால்பழந்தான் அவர் பக்ஷணஞ்செய்வது! ஏராளமாகப் பணம் எவ்வளவோ சேர்ந்துவிட்டது தன்னுடைய ஊரில்சென்று ஓர்மடங் கட்டுவதற்காகத்தான், இப்பணஞ் சேர்க்கிறாராம்." என்றான் முதலாமாள்.

இதைக்கேட்ட இரண்டாமான் சிறிது யோசித்துச் சொல்லுகிறான் "சினேகிதா! நீ இதை நம்புகிறாயா? கடவுள் பக்தியுந் தெய்வத்தன்மையுமுள்ள சன்னியாசியாயிருந்தால் வைத்தியஞ்செய்வதிலும், மந்த்ரமோதுவதிலும் பணஞ்சேர்ப்பதிலுங் காலத்தைக் கழிப்பாரா? பரிசுத்தமுள்ள ஆதமா

எப்பொழுதுங் கடவுளிடத்தில் பதிந்திருக்கும். உண்மைச் சன்னியாசி ஊருக்குள் வரமாட்டார். காடுமலையே அவருக்கு வீடாயிருக்கும். வனவிலங்குகள்தான் அவருடைய இஷ்டமித்திரர்கள். காற்றே அவருடைய ஆகாரம். இம்மாதிரியாக வேஷம்போட்டுப் பணம்பறிக்கும் சன்னியாசிகளை நம்பலாகாது. ஏதாவது காரணநிமித்தம் வேஷந்தரித்துக் கொஷ்டஞ்செய்யும் வீணர்கள் இவர்களைநம்பி யிவர்களிடத்தில் மனதைசெலுத்துவது மகா மடைத்தனமென்றே கூறவேண்டும். இவ்விதம் அனேக சன்னியாசிகள் தாங்கள் மகா பக்தர்களென்றுஞ் சிறந்தயோகிகளென்றும்நடித்துக் கடைசியில் கள்ளத்தனஞ்செய்து போவதை நாம் கேட்டில்லையா? ஆதலால் நண்பா! இவர்களை கண்ணில் காண்பதே பாவமாகும்'' என்றான். இரண்டாமாள்.

இதையெல்லாங் கேட்டிருந்த அருட்பிரகாசம் இப்பொழுது பேசவாரம்பித்தது. "ஆம். தம்பி. அவ்விதத் திருட்டுச் சன்னியாசிக ளிருந்தபோதிலும் எங்கேயாவதொருவன் உண்மைச் சன்னியாசியாயுமிருக்கக்கூடும்.'' என்றார்.

இவ்விதம் அருட்பிரகாசம் கூறிய வார்த்தைகளைக்கேட்ட வாலிபன் சற்றே யாலோசித்து இவர் யாரென் றறியாதவனைப் சிறிது பின்வாங்கி, ஆயினும் பறுவாயில்லை இவரிடத்தில் கொஞ்சம்பேசிப்பார்க்கலாமென்று நினைத்து அருட்பிரகாசத்தை யுற்று நோக்கி "பெரியவர் தாங்கள் யாரென்பதெனக்குத் தெரியவில்லை ஆயினும் தாங்கள் சொல்வதுண்மையே!

ஆயிரத்திலோ, லக்ஷத்திலோ, ஒருவ னிருக்கக்கூடும். வேஷமிருக்குமட்டும் சன்னியாசி, வேஷத்தைமாற்றி விட்டால் சாதாரணமனிதன்" என்று இரண்டாமான் உரைத்தான்.

"உண்மையான சன்னியாசியைக் கண்டறியுஞ் சக்தி நமக்கிருந்தால் சுலபமாயறிந்து கொள்ளலாம்" என்றார் அருட்பிரகாசம்.

இப்போது வாலிபன் சிறிது நிமிர்ந்துட்கார்ந்து பெரியவரை நோக்கி, "தற்காலத்தில் சன்னியாசி வேஷங் கொள்பவர்களைச் சற்றே சொல்லுகிறேன் கேளுங்கள், கொலைக்கேசுக் கொளித்தோடின குற்ற வாளியும், ஜெயிலிலிருந்து தப்பியோடின மறியற்கார னும், மனைவியைக் கொன்ற மகா பாவியும், நம்பினவ னுக்குத் துரோகஞ்செய்த நாசகாலனும், அடுத்தவ ரைக் கெடுத்த அநியாயக்காரனுமாகிய மகாபாவி கள் கடுங்குற்றத்தினின்றும் தப்பமுடியாதென்று அறிந்தவுடன் காவியைத் தரித்து விபூதியால் வெள்ளை யடித்து தாடி மீசையை தாட்டியாய் வளர்த்து, ருத்திராக்ஷ மூட்டையை கழுத்திலுந் தலையிலுமாகக் கணக்கல்லாது சுற்றுக்கொண்டு, வெளியூர்களுக்குச் சென்று மகா ஞானிகள்போல் நடித்து வயிறு வளர்க் கிறார்கள். இவர்களை நம்புவதெவ்விதம்" என்றான்.

"இச்சன்னியாசி உண்மையுள்ளவரா யிருப் பார் போய் பார்த்து வருவோம் வா" என்றான் முதலாமான்.

"தோழா! இன்னும் கொஞ்சம் சொல்லுகின் றேன் கேள். ஸ்ரீ கிருஷ்ணனின் திவ்விய உபதேச

மாகிய பகவத்கீதையில், அர்ச்சுனனிடத்தில் என்ன சொன்னார் கேள், சொல்லுகிறேன், "என்மீது அன்பு வைக்கவேண்டி ஆயிரம்பேர் புறப்பட்டால், அதில் ஒருவனே என்னை மெய்யன்புடன் நினைப்பான். அவ்விதம் மெய்யன்புட னிருப்பவர்கள் ஆயிரம்பேர் சேர்ந்தால் அதில் ஒருவனே என்னை மெய்யன்புடன் நினைத்துத் தவஞ்செய்வான். அவ்விதந் தவஞ்செய்பவர்கள் ஆயிரம்பேரிருந்தால் அதில் ஒருவனே என்னை அறிவான். அவ்விதம் அறிபவர்களில் ஆயிரம்பேரிருந்தால் அதில் ஒருவனே எனது அந்தரங்க பக்தனாகிறான். அந்தரங்க பக்தர்களில் ஆயிரம்பேர் இருந்தால் அதில் ஒருவனே என்னிடத்தில் ஐக்கியமாகிறான்" என்றல்லவோ ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனிடத்தில் கூறியிருக்கிறார்" என்று இரண்டாமாள் துடுக்காய்க்கூறி முடுக்காய்ப் பார்த்தான்.

இதைக்கேட்ட அருட்பிரகாசம் மிகவும் ஆனந்தங்கொண்டு, வாலிபனை நோக்கி "தம்பீ! அந்த அர்ச்சுனன் சன்னியாசி வேஷம்பூண்டு பெண்ணைத் திருடிய கதை நீயறிவாயா" என்று கேட்டு உரத்துச் சிரித்தார்.

"இல்லை, பெரியவர்! நானறியேன், உங்களுக்குத் தெரிந்திருந்தால் சொல்லுங்கள்! அவப்பொழுதிலுந் தவப்பொழுது நல்லது, அதிலும் இவ்விதக் கதைகள் கேட்பது மிகவும் நன்று" என்று வாலிபன் கூறியதும் பக்கத்திலுள்ளவர்க ளெல்லோரும் ஆவலுடன் கதை கேட்பதற்காக எழுந்துட்கார்ந்

தார்கள். அருட்பிரசாசம் வெகு ஆனந்தத்துடன் கதையை ஆரம்பித்தார்.

"அர்ச்சுனன் பஞ்சபாண்டவர்களி லொருவ னென்பது சகலரும் அறிந்த விஷயமே! ஸ்ரீ கிருஷ்ண னும் அர்ச்சுனனும் மிகவும் அன்னியோன்னியமான பிராண சினேகிதர்களென்பதும் நீங்கள் நன்றாக அறி வீர்கள்! இவ்விதமிருக்குங் காலத்தில் ஒருநாள் அர்ச் சுனன், ஸ்ரீ கிருஷ்ணனுடைய சகோதரியாகிய சுபத் திரையின் அழகைக் கண்டு மோகங்கொண்டு அவ ளைத் தான் மனைவியாக்கிக்கொள்ள இச்சித்து தன் இஷ்டத்தை கிருஷ்ணனுக்குத்தெரிவித்தான். இதைக் கேட்ட கிருஷ்ணன் "நான் இதுவிஷயத்தில் தலையிட முடியாது அவ்விஷயம் என் தமையனுருடைய விருப்பமெப்படியோ அப்படியே நடக்கும். ஆனால், உன்னுடைய சினேகிதத்துக்காக நான் செய்யக்கூடிய சகாயமிதுவே. நான் இவ்விஷயத்தைப்பற்றி தமை யனரிடத்தில் பேசி அவருடைய இஷ்டத்தை யறிந்து வந்து உன்னிடம் சொல்லுகிறேன்" என்றார். இதைக் கேட்ட அர்ச்சுனன், ஆத்திரத்துடன் அவசரப்பட்டு உடனே பலராமரிடஞ்சென்று சங்கதியைத் தெரிந்து சடுதியில் வரும்படி கிருஷ்ணனை வேண்ட கிருஷ்ண னும் அக்கருத்துக்கிசைந்து உடனே புறப்பட்டுத் தமையனிடஞ்சென்று, அர்ச்சுனனுடைய இஷ்டத் தைத் தெரிவித்து அமைதியாக நின்றார். இதைக் கேட்ட பலராமர் சிரித்து, கிருஷ்ணனை நோக்கி, "தம்பீ, நமது தங்கை ரூபலாவண்யத்தில் சிறந்தவள் அழகில் அவளுக்கிணையுள்ள பெண்கள் அவனியில்

கிடையாது. தேவர்களாலும், முனிவர்களாலும், மெச்சத்தகுந்தவள், பொறுமையில் பூமிதேவி, அழகில் அசவிகாதேவி, கற்பில் சீதாதேவி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் பெண்களுக்குடைய சதுர்சீலங்களும் அவளிடத்தில் துளிர்ந்துக் கொண்டிருக்கிறது. இவ்விதமான விலையில்லா இரத்தினத்தை முரடனாகிய அர்ச்சுனனுக்குக் கொடுக்க எனக்கு விருப்பமில்லை'' என்றார். இதைக் கேட்டதும் கிருஷ்ணன் எழுந்து தமையனிடம் விடைபெற்றுக்கொண்டு அர்ச்சுனனிடஞ் சென்று சங்கதியைத் தெரிவித்தார். சங்கதி தெரிந்ததும் அர்ச்சுனன் அடங்கா விசனங்கொண்டு கிருஷ்ணனை நோக்கி, "நான் இனி நாட்டிலும் வீட்டிலும் வசிக்கமாட்டேன் காட்டில் சென்று தவஞ்செய்து என் வாழ் நாளைக் கழிக்கப் போகிறேன்'' என்றான். இதைக் கேட்ட கிருஷ்ணன் சிரித்து, "சரி! அர்ச்சுனா! நீ ஒன்றுக்கும் பயப்படாதே! நன்றாய்த் தவஞ்செய்யலாம்! அதைவிட மேலான தொழில் வேறொன்றுண்டோ? சுபத்திரையின் மூலமாயாவது உனக்கு முக்தி சித்திக்கட்டும். நான் உன்னை அடிக்கடி காட்டில் வந்து பார்க்கிறேன். உன் குறைகளெல்லாந் தீரும்'' என்று சொல்லி அர்ச்சுனனை நோக்கி நன்றாய்ச் சிரித்து வழிவிட்டார்.

சிலகாலங் கழித்து, கிருஷ்ணன் காட்டில் சென்று நோக்கும்போது, அர்ச்சுனன் மகா தபசி போல் காணப்பட்டான். அர்ச்சுனனென்று அடையாளம் தெரியவில்லை. தாடியும் மீசையுந் தரையில்

விழுந்தது, நகங்கள் நிலத்துள் வேரூன்றின! இவ்வித ஸ்திதியிலிருக்கும் அர்ச்சுனனைக்கண்டு மகிழ்ந்து அருகிற் சென்று கூப்பிட, உடனே அர்ச்சுனன் கண் விழித்து, கிருஷ்ணனைக் கண்டதும் மகா ஆனந்தங் கொண்டு சுபத்திரையினுடைய க்ஷேமலாபங்களை மிகவும் ஆவலுடன் விசாரித்து அகம் வருந்தினன். இதைக்கேட்டுக் கிருஷ்ணன் "அர்ச்சுனா! நீ கடவுளை நோக்கித் தவஞ்செய்கிறாயா? சுபத்திரையை நினைத்துத் தவஞ்செய்கிறாயா?" என்று கேட்டுச் சிரித்து "கடவுளை நினைத்துத் தவஞ்செய்தால் கடவுள் வருவார், சுபத்திரையை நினைத்துத் தவஞ்செய்தால் சுபத்திரை கிடைப்பாள். நீ ஒன்றுக்கும் விசனப்படாதே. உனக்கு வேண்டிய உதவிபுரிய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்" என்று அர்ச்சுனனுக்குத் தைரியங்கூறி, பின்பு, பலராமரிடஞ் சென்று, "அண்ணா! இதோ இந்தக் காட்டில் ஒரு யோகீஸ்வரரிருக்கிறார். அவரை நாமிதுவரையிலும் பார்க்காதிருந்தது நம்மேல் பிசகாயிருக்கிறது" என்று கிருஷ்ணனுரைத்ததைக் கேட்ட பலராமர் அடங்காமகிழ்ச்சி கொண்டு யோகீஸ்வரரிடஞ் சென்று வணங்கி அவருக்கு வேண்டிய மரியாதை செய்துவந்தார். இவ்விதஞ் சிலதினங்கள் சென்றதும் சன்னியாசியாக வேஷம் பூண்டிருப்பது அர்ச்சுனனென்றறியாத பலராமர் கிருஷ்ணனை நோக்கி, "தம்பீ! யோகீஸ்வரர் மிகவுஞ் சிறந்தவராகக் காணப்படுகிறார். தவத்தில் மிகுந்த தபோதனராகயிருக்கிறார். நாம் அவரை அழைத்துவந்து நம்

மில்லத்தில்வைப்போம். இந்த மகாஞானியார் நம்மிடத்தி லிருந்தால், நமக்குப் பேரும் புகழும் பெருவாழ்வு முண்டாகும் மோக்ஷமும் சித்திக்கும். உன்னுடைய விருப்பமென்ன" என்று கிருஷ்ணனைக் கேட்க, கிருஷ்ணன் தனக்குள் தானே சிரித்து அர்ச்சுனனுக்கு நல்லகாலம் வருகிறதென்று நினைத்து மகிழ்ந்து, "அண்ணா! தங்களுடைய விருப்பத்துக்கு நான் தடைசொல்ல வில்லை, ஆனால் அந்த தபோதினர் ஆந்திரங்க பக்தனா? அல்லது வீண்விரதச் சித்தனா வென்பதுதான் என்சந்தேகம்' என்று சொன்னதும் பாலராமன் கோபங்கொண்டு 'அடே! அந்த மகாத்மாவைப்பற்றி இவ்விதம் நினைக்கலாமா? அவர் மகா யோகி! அவரைத் தூஷிக்கும்நாவு அற்றுப்போகும். அதைக்கேட்கும் காது செவிடாய்ப் போகும். இனிமேல் என்முன்பில் இவ்வித வார்த்தை யுரைக்காதே" என்றுரைக்கக் கிருஷ்ணன் கேட்டுச்சிரித்து! சரி! அண்ணா தங்களிஷ்டம்போல் செய்யுங்க ளென்று சொல்ல, இருவரும் புறப்பட்டுச்சென்று யோகீஸ்வரரைப் பல்லக்கிலேத்திக் கொணடுவந்து தம்மில்லத்தில் சேர்த்தார்கள் இப்போது கிருஷ்ணன் பாலராமனை நோக்கி, 'அண்ணா! யோகீஸ்வரருக்குத் தொண்டு செய்வதற்கும் பூசைக்குப் புஷ்பம் பறிப்பதற்கும், ஒரு ஆள்தேவை யல்லவா என்றுகேட்க, "நமது சுபத்திரையே போதும், சுவாமிககு வேண்டிய பணிவிடைகள்யாவும் அவளே செய்துவரட்டும். அதனால் அவளுடைய பாவய்சீக்கி யோக்ஷத்துக்குக் கேதுவாவதுடன் அவளுக்குத் தகுந்த வரனும் கிடைப்பான். என்று பாலராமன் கூறியதைக்கேட்ட கிருஷ்ணன்

உள்ளுக்குள்ளே சிரித்து ஊழ்வினையின் பலன் ஒரு நாழியும் சும்மா இருக்காதென்று நினைத்திருந்தார்.

யோகீஸ்வரருக்கு வேண்டிய காரியங்கள் யாவும் மிகவும் பயபக்தியுடன் முறை தவறாது சுபத்திரை செய்து கொண்டிருந்தாள். காலமும் வளர வளரச் சன்னியாசியின் காரியங்களும் வேறுபட்டுக் கொண்டிருந்தன. சில சமயங்களில் சுபத்திரை பூந்தோட்டத்தில் பூப்பறிக்கும்போது சன்னியாசியு மவ்விடஞ் சென்று அவளைப் பார்த்துத் திகைத்து நிற்பதும், அவளுடைய காலடி மண்ணை எடுத்துத் தன்னுடம்பெல்லாம் பூசிக்கொள்வதும், அவளெதிரில் சென்று ஏங்கிப் பிரமித்து நிற்பதுமா யிருந்தார். இவ்வாறு யோகீஸ்வரர் செய்துவருஞ் செயல்களை தினந்தோறுங் கண்ணுற்று வந்த சுபத்திரைக்கு ஒருவிதநாணம் அவளுக்குள்ளே வளர்ந்து கொண்டிருந்தது. அர்ச்சுனனுடைய வில் வித்தைத் திறமையையும், பராக்கிரமத்தையும் சுபத்திரையறிந்து அவனை விவாகஞ்செய்ய விருப்பினளாயினும் தன் தமயனுக்கு அவ்விஷயம் விருப்பமில்லாததால் அதைப்பற்றிச் சிந்திக்காதிருந்தாள். யோகீஸ்வரர் அர்ச்சுனனென்பது கிருஷ்ணனை விட வேறொருவருமறியார்கள். சுவாமியின் செய்கைகள் வேறுபட்டு வந்ததைக்கண்ட சுபத்திரை, அவருடைய ஒவ்வொரு அவயவங்களையுஞ் செய்கைகளையுங் கண்ணுற்றுவந்தாள். ஒருநாள் புஷ்பம்பறித்து வரும்போது அர்ச்சுனன் தனதிருகரங்களாலும் அப்புஷ்பங்களை யேந்தித் தன்முகத்தில் ஒத்திக்கொண்டான். அத்தருணத்தில் அவனுடைய இருகரங்களிலு முள்

தழும்புகள் அவள் கண்ணுக்குத் தென்பட்டது. உடனே அவள் வெட்கத்தால் நாணி ஒன்றுந்தோன்ருது திகைத்து தன் இருப்பிடஞ் சென்றுவிட்டாள். இருகரங்களாலும் அம்பெய்யுந் திறமை அர்ச்சுனனுக்கு மாத்திரமே யுண்டாயிருந்த தென்பது அகிலமறிந்தவிஷயம். அது சுபத்திரையு மறிந்திருந்தாள். யோகீஸ்வரர் அர்ச்சுனன்தானென்றும் தன்னை மணம் புரியவேண்டியே இவ்வித வேஷம்பூண்டு வந்திருக்கிறனென்றும் அவள்மனதில் திடவரமாகப்பட்டது. அதனல் அவள் நாளுக்குநாள் தேகம்மெலிந்து சீணதிசை யடைந்து வந்தாள்.

இதையறிந்த கிருஷ்ணன் இனிக் காலதாமதஞ் செய்யக்கூடா தென்று நினைத்து ! பாலராமனிடஞ் சென்று அண்ணு! நாம் வேடிக்கைகள்பார்த்து வெகு காலமாய்விட்டது ஆனபடியால் ஒரு கூத்தாட்டம் வைக்கலாமாவென்று கேட்க, பாலராமனும் அதற்குச் சம்மதித்து, ஒருநாளிரவு திவ்விய சுபமுகூர்த்தத்தில் ஆட்டம் வைத்தார்கள். அன்றிரவு சுபத்திரைக்குக் காவலாக யோகீஸ்வரரை வைத்துவிட்டு மற்றவர்களெல்லாம் ஆட்டத்துக்கு சென்ருர்கள். இதற்கு முன்பாகவே கிருஷ்ணன் அர்ச்சுனனிடஞ் சென்று, எல்லாவிதமான யுக்திகளுஞ் சொல்லிக் கொடுத்து, ஒன்றுமறியாதவர்போல் தானும் ஆட்டத்துக்குச் சென்றிருந்தார்.

ஆட்டம் ஒருபக்கம் வெகு அழகுடன் நடந்து கொண்டிருக்கும்போது, அர்ச்சுனன் சுபத்திரையை ஏந்திக்கொண்டு அலக்காய் ஓட்டம் பிடித்தான்.''

என்று அருட்பிரகாசம் கதையைச் சொல்லி முடித்தார்.

இப்பொழுது இரண்டாம்மாள் எழுந்து, "பார்த்தீர்களா! இம்மாதிரியாகத்தான் ஒவ்வொருவரும் ஒவ்வோர் காரணநிமித்தம் வேஷம்பூண்டு காலங்கழிப்பவர்களேயல்லாமல், உண்மை ஞானிகள் ஒருபோதும் வரமாட்டார்கள்" என்றான்.

இதைக்கேட்ட அருட்பிரகாசம். "தம்பி! எவன் எப்படியானாலும் நமக்கென்ன? அவனவன் தன் வயிற்றை வளர்ப்பதற்காக, ஒவ்வோர் வேஷத்தைப் பூண்டு. ஆடியலைந்து அவஸ்தைப்படுகிறான். இவ்வுலகிலுள்ள ஜனங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் தொழிலையும், ஒவ்வோர் நடவடிக்கையையும், ஒவ்வோர் குணத்தையும், ஒவ்வோர் விருத்தியையுங் கைக்கொண்டு நடந்து சிலர் நல்லவரென்றும் பலர் கெட்டவரென்றும் சிலர் தனவான்களென்றும், பலர் ஏழைகளென்றும், சிலர் துஷ்டர்களென்றும், பலர் சாதுக்களென்றும், சிலர் பாக்கியவான்களாயும் பலர் நிர்ப்பாக்கியர்களாயும் சிலர் கல்விமான்களாயும் பலர் மூடர்களாயும், தம்வாழ்நாளைக்கழித்து முடிவில், மகா அதிசயமான ஆட்டங்களாடிய பராக்கிரமசாலியாகிய இம்மனிதன் மாயமாய்ப் போகிறான். எங்கேபோகிறான். மறுபடியும் என்னவாகிறான். என்பதை அறிந்தவர்கள் அகிலத்திலில்லை, ஒவ்வொருவரும் ஒவ்வோர் அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள். அவனவன் பாவபுண்ணியத்துக்கேற்க மறுபடியும் அகிலத்தில் பிறக்கிறானென்று சிலரும், மறுஜென்மமில்லையென்று சிலரும், வேறு உலகங்களில் சென்று ஜென்மமெடுக்கிறானென்று சில

ரும், பஞ்சபூதக்கா லெடுத்ததேகம். கடைசியில் பஞ்சபூதத்தில் ஐக்கியமாகிறது என்றுசிலரும் கூறுகின்றார்கள். அதுபோலவே ஒவ்வோர் சமய கர்த்தாக்களும் தம்தம் அபிப்பிராயத்தைக் கூறிச்சென்றார்கள். கிறீஸ்து, மறுஜென்ம மில்லையென்றுரைத்தார். கவுதமபுத்தர், கடவுளென்ற வார்த்தையை கடுகளவுங் கூறாதிருந்தார். மகம்மது, புண்ணியஞ்செய்தவன் சொர்க்கத்தில்சென்று தேவகன்னிகைகளுடன் ஆடிக்களித் திருப்பானென்றும், பாவஞ்செய்தவன் நரகத்திலிருந்து நாசமடைவானென்று கூறினார். இந்து சமயத்தில் மனிதன் எத்தனையோ ஆயிரம ஜென்மமெடுப்பான் என்றுசொல்லி எல்லாருக்கும் ஏக்கத்தை விளைக்கிறது. இவ்விதம் ஒவ்வொரு சமயமும், வேறுவேறு கடவுளும், வேறுவேறு நடவடிக்கைகளும், வேறுவேறு பூஜாவிதிகளும், வேறு வேறு மோக்ஷநரகமும் உபதேசித்தால் இதில் உண்மைச் சமய மெதுவென்பது சந்தேகத்தைக் கொடுத்து,எல்லாச்சமயத்தையும் பொய்சமய மாக்குகிறது. இவ்விதமாக ஒவ்வொருமத கர்த்தாக்களுடைய அபிப்பிராயமும் பேதித் திருப்பதால், உண்மையைக் கண்டறிந்தவர் ஒருவருமில்லை யென்னுஞ் சந்தேகத்தைக் கொடுக்கிறது. இந்துசமயத்திலிருக்கு மொருவனுக்கு ஞானஸ்தானங்கொடுத்துக் கிறீஸ்தவனாக்கினவுடன் அவனுடைய பாவமெல்லாம்நீங்கிப் பரிசுத்தனாவதுடன் கடவுளுடைய புத்திரனாகிறான். என்று கூறிப் பிரசண்டப் புழுகையாக்க, இச்சமயங்களெல்லாம ஓர் வியாபாரமாகவே காணப்படுகிறது. இது மாத்திரமா! யூதர்மதமென்ன, சொராஸ்த்தர்மதம, அல்

லது பஞ்சபூதமதமென்று கூறப்படும். பார்சியர்கள் மதமென்ன? இன்னும் அகிலத்தில் காணப்படும். அளவு கணக்கற்ற மதங்களென்ன? எல்லாந் தன்னைத் தான் புகழும் மதங்களாகவே காணப்படுகின்றனவே யன்றி உண்மையைப் புகட்டும் மதமொன்றையுங் காணோம்.

மனிதனுடைய யுக்தி யனுபவங்களால் கண்டறியப்பட்ட விஞ்ஞான சாஸ்திரமாகிய 'ஸயன்ஸ்'சின் எதிரில், ஒருசமயமும் ஒலமிடமுடியாது. பிரபஞ்ச வுற்பத்தியைப்பற்றி கிறீஸ்த சமயத்தில் கூறியுள்ளது சுத்தப் பொய்யென்று விஞ்ஞான சாஸ்திரிகளாகிய கிறீஸ்த்தவர்கள் தெளிவாயெடுத்துக் காட்டுகிறார்கள். கவுதமபுத்தர், பிரபஞ்ச வுற்பத்தியைப் பற்றியாவது, கடவுளைப்பற்றியாவது தம்சீஷர்களுக்குப்போதிக்காதிருந்தார். அவ்விதமவர் போதிக்காத தன் காரணமென்னவென்றால், சாதாரண மனிதனால் கண்டறிய முடியாத விஷயமாகி இப்பெரிய விஷயங்க ளிரண்டும் உபதேசிப்பதில் உபயோகமில்லை யென்று கருதி, திரிசரணம், பஞ்சசீலம் முதலிய நன் நடக்கைகளைப் கற்பித்து அவைகளை ஊக்கத்துடன் முறைதவறாது அனுசரித்து வரும்படி கட்டளையிட்டார். அதனை தான் சிலர், புத்தரை நாஸ்திகரென்று கூறுகிறார்கள். தற்காலத்தில் வழங்கிவரும் எல்லாச் சமயங்களிலும் புத்தமதமே மேலானதென்று கூறலாம். ஆனால், அதை யனுசரித்து வருபவர்கள் 'படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோயில்'' என்பதுபோல் புத்தர் கற்றுக்கொடுத்த நன்நடக்கைகளுக்கு நேர் விரோதமாகநடப்பதாலும் முரடர்களாகவும் மௌடீ

கர்களாகவு மிருப்பதாலும், புத்தசமயம் முரட்டுச் சமயம் என்ற பெயரைப் பெற்றது. இந்நடவடிக்கை சீனர், சிங்களர், பெர்ஷியர், யப்பானியர், திபெத்தியர், சியத்தர்முதலிய புத்தஜாதியர்களில் கண்டறியலாம். புத்தர் கற்பித்த பஞ்சசீலங்களாவன:—ஜீவஹிம்ஸை செய்யாதிருத்தல், தனக்கென்று கொடாததை விரும்பாதிருத்தல், பொய்சொல்லாதிருத்தல், மதுபானமருந்தாதிருத்தல், தன்மனைவியைத் தவிர வேறொரு பெண்ணுடனுஞ் சம்போகஞ் செய்யாதிருத்தலாகி இவ்வைந்து கற்பனைகளையும் எவனொருவன் உண்மையாக அனுஷ்டிக்கிறானோ அவனே உண்மையான புத்தனென்று கூறலாம். இப்பஞ்ச சீலங்கள் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரத்திலுங் காணலாம்.

இம்மதங்க ளெல்லாவற்றிலுஞ் சிறந்ததும் மற்றெல்லா மதங்களுக்கும் ஆதிமூலவித்துவுமான மதம் வேறொன்றுண்டு. இது ஆதிகாலத்தில் ஆரியரிஷிகளால் எழுதப்பட்டுள்ளது. இதற்கு ஆரியவேதமென்றும், சத்தியவேதமென்றும், சதுர்மறையென்றும் பெயர் வழங்கிவரும். ருக், எஜுர், சாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களே. இவை சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் இமையமலைப் பக்கத்தில் குடியேறியிருந்த ஆரியர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வந்தவையாகும். இவ்வேதங்களில் விக்கிரகாராதனை கிடையாது. ஜாதிமுறை கிடையாது. ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்னும் நான்கு தொழிலாளர்கள் மாத்திரம் இருந்தார்கள். தற்காலத்தில் விஞ்ஞான சாஸ்திரத்தில் கண்டறியும் ஒவ்

வொரு விஷயங்களும் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் ஆரிய ரிஷிகள் இவ்வேதங்களில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

இதனால்தான், "வேதத்தைவிடச் சிறந்த மதம் வேறொன்றுங் கிடையாது! மற்றெல்லா மதங்களும் வேதத்தினின்றே உற்பத்தியானவை! வேதமே எல்லாவற்றிற்கும் மூலவேர்." என்று தத்துவசாஸ்த்திர நிபுணரும் விஞ்ஞான வித்துவானுமாகிய, பிரவெசர் மக்ஸ் மில்லர், திடவரமா யுரைக்கிறார். இம்மகானால் எழுதப்பட்டுள்ள நூல்களில் வேதத்தைப் பற்றி விபரமாகக் கூறியிருக்கிறார். புராண இதிகாசங்கள் இந் நான்கு வேதங்களை அனுசரித்தே எழுதப்பட்டன. ஆனால் இவைகளில் காணப்படும் ஆகாசவிறிசுப் புழுகுகளொன்றும் வேதத்திலில்லை. வேதத்தில் ஒன்று இருந்தால் அதை புராண இதிகாசத்தில் ஆயிரம் லக்ஷமாகப்பெருக்கி வர்ணித்து எழுதியிருக்கிறார்கள், உதாரணமாக, முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று புராணங்களில் படிக்கிறோம். இந்தத் தொகை வேதத்திலில்லை. வேதத்தில் சொல்லியுள்ளது முப்பத்திமூன்று தேவர்களேயாம. இம் முப்பத்துமூன்றையும் ஒருகோடியால் பெருக்கி முப்பத்து முக்கோடியாக புராண இதிகாசங்களில் எழுதிவைத்தார்கள் இவ்விதமாகவே முன் காலத்துக் கவிவாணர்கள், சாதாரண மனிதரை தேவர்களென்றும், வல்லமைசாலிகளுக்கு 4, 5, 6, 10, தலைகளுடையவர்களென்றும், அறுபதுவருஷம் அரசாண்டவனை அறுபதினாயிரம்வருஷம் அரசாண்டானென்றும், தங்களு

டைய கவிகளை மற்றவர்கள் மெச்சவேண்டி. இவ்விதம் ஆச்சரியத்தைக் கொடுக்கும் பொய்களைச் சேர்த்துக் கவிகளைப் புகட்டினார்கள்.

சிவமதம், சக்திமதம், விநாயகமதம், சுப்பிர மண்யமதம், வீரபத்திரமதம், வைரவமதம், ஆகிய ஆறு சமயங்களுஞ் சேர்ந்துள்ள, சைவ சமயத்தை உவ மிக்க வேண்டி ஓர் ஆறுமுகசுவாமியை யுண்டாக்கி, "சுப்பிரமண்யர் ஆறுவேளைகளில் தன் முகத்தை ஆறுவிதமாக மாற்றி மாற்றிக் காண்பித்தாரென்று, அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய "ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே, ஈசனுடன் ஞான மொழி பேசுமுகமொன்றே, கூறுமடியார்கள்வினை தீர்த்தமுகமொன்றே, குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே, மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே, வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே" என்ற பாடலை அடிஸ்தானமாகக் கொண்டு, சுப்பிரமண்யரும், ஆறுசமயத்தை விளக்கும் ஆறு முகசுவாமியும், ஒருவரே என்றும் சிவனுடைய புத் திரர் என்றும் புகட்டவேண்டி. ஓர் விநோதமான கதையை விமரிசையாயுண்டாக்கிக் கந்தபுராணத்துள் சேர்த்த வித்துவானின் யுக்தியை என்னவென்று கூறலாம். செந்தாமரை மலரின்மேலிருந்த ஆறு குழந்தைகளையும் பார்வதியாள் ஒன்று யணைத்துத் தூக்கியவுடன், ஆறுகுழந்தைகளும் ஒன்றாய் ஒட்டிக் கொண்டதாம். ஆனல், ஆறுதலையும் பன்னிரண்டுகை யும் ஒரு உடலும், இரண்டு கால்களும் மாத்திரமிருந் தன. மீதியாயுள்ள ஐந்து உடல்களும், பத்துக் கால்க ளும் மாயமாய்ப் போய்விட்டன. இதைப்போலவே

இராவணனுக்கும் பத்துத் தலையை கவிவாணர்கள் தங்கள் கவிகளாலுண்டாக்கி வைத்தார்கள்.

இவ்விதமாக, சுருதி, யுக்தி, அனுபவம், மூன்றுக்கும் விரோதமான அனேக விஷயங்கள் புராண இதிகாசங்களில் காணலாம். இதனால் நமது மதம் சகலருக்கும் பழிப்புக்கிடமாகவும், கேலிக்குக்காரணமாகவும் இருக்கிறது. இவைகளை ஆழ்ந்து நோக்கினால், எல்லாம் பாப்பார் பிழைப்புக்காக ஏற்படுத்திய ஏற்பாடுகளென்றே நன்றாய் விளங்குகிறது. பரிசுத்தமான நான்கு வேதங்களையும் அடியோடே மறைத்துவிட்டு, கட்டுக் கதைகளையும் யுத்த வீரர்களின் சரித்திரங்களையும் வைத்து வணங்கிவரும் நாம் எவ்வித மூடர்களாயிருப்போமென்று சற்றேயோசித்துப் பாருங்கள்" என்றிவ்வாறாக அருட்பிரகாசம் சொல்லிக்கொண்டிருக்கும்போது பளிச்சென்றோர் மின்னலும் படக்கென்றோர் இடியுமிடித்தது.

"மின்னல்! இடி! ஊளைக்காற்றுங்கூட" என்றான் ஒருவன்

"மழை வரும்போலிருக்கிறது" என்றான் மற்றவன்.

"இதோ தூற்றல், அதோ இரைச்சல், வாருங்கள் போகலாம்! வந்துவிட்டது மழை! மின்னலுமிடியும். காற்றும் மழையும்! வாருங்கள் வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே மடத்திலிருந்த ஜனங்களெல்லாம் வீட்டைநோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

அருட்பிரகாசமும் மனைவியும், மடத்திலே ஆகாரம் புசித்து அவ்விடத்திலே படுத்துறங்கினார்கள்.

# எட்டாம் அத்தியாயம்.

மாலைப்பொழுது மணி ஆறாகிறது. பகல் முழுவதுங் காய்ந்த பகலவன் மேலைக்கடலுக்குள் மிகத் துரிதத்துடன் நுழைகிறான். குருவிகளெல்லாங் கூண்டிலடைகின்றன. மிருகங்கள் தம் இருப்பிடங்களை நோக்குகின்றன. ஆருமில்லாத அடவியில், ஆதித்தியன் அடங்கும் நேரத்தில் யாரோ இருவர் வேகமாய் நடந்து வருகிறார்கள். ஒருவனுடைய கையில் ஓர் மூட்டையும், மற்றவனுடைய கையில் வேறு சில சாமான்களும் எடுத்துக்கொண்டு காட்டுமார்க்கமாக ஓட்டமும் நடையுமாய்ச் செல்லுகிறார்கள். இவர்களுடைய குறிப்பினால் ஒருவனுக்கு இருபத்தெட்டு வயதும் மற்றவனுக்கு இருபத்துநாலு வயது மிருக்குமென்று யூகிக்கலாம். நடந்துவந்த களையால் ஓர் மரத்தடியில் சிறிதுதங்கி களையாறினார்கள். இப்பொழுது இருபத்தெட்டு இருபத்துநாலை நோக்கி "சிநேகிதா! நாமிருவரும் நம வாழ்நாள் முழுவதையுங் கெட்ட வழியிலுங் கேடுகெட்ட நடக்கையிலுங் கழித்தோம். இனிமேலாவது நல்வழியில் நடந்து சன்மார்க்கத்தை யனுசரித்துச் சீர்திருந்த வேண்டும். இல்லாவிட்டால் நமது ஆத்மாவிற்கு விமோச்சனமுண்டாகாது" என்றான்.

இதைக்கேட்ட இருபத்துநாலு, இருபத்தெட்டை நோக்கி, "ஆம். ஆம. அதற்கென்ன சந்தேகம்! நமது கையில் சிக்கிக்கொண்டிருக்கும் ஆசாமி, மகா சமர்த்தன்! அவனிடத்தில் உபதேசங்கேட்டு அதன்

படி நடந்து நம்முடைய பாவத்தைத் தீர்த்துக்கொள்ளலாம்'' என்றான்.

இருபத்துநாலு தைரியங் கூறியதைக் கேட்ட இருபத்தெட்டு சந்தோஷங்கொண்டு முதுகிலேலார் தட்டித்தட்டி, பின்னும் இருபத்துநாலை நோக்கி, "அதெல்லாஞ் சரிதான்! ஆனால் இப்போது நாம் செய்துள்ளது பெரும்பாதகமான காரியமாயிருக்கின்றதே? அதற்கு ஓர் விமோசனம் அவசியஞ் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாமிருந்தென்ன பலன்! அதுவுமன்றி, என்னருஞ் சிநேகா! நீலகண்டா! நான் சொல்வதை சற்றுக் கவனிப்பாயாக! அந்தப் பாதகர்களான திருடர்கள் அதைச் செய்தார்களாயினும் நாமல்லவா அதற்குக் காரணமாயிருந்தோம். ஆதலால் அந்தப்பழி நம்மையே சூழும். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றான்.

இப்போது, இருபத்துநாலு எழுந்துநின்று இருபத்தெட்டை நோக்கி, "நானும் அவ்விஷயத்தில் மிகவுங் கவலைகொண்டிருக்கிறேன். ஆதலால், கோலகண்டா! நாமிருவரும் எதாவதொரு யுக்திசெய்து, அந்த மகாபாதகர்களிடமிருந்து மங்கையை பங்கமில்லாது மீட்டு, மாதா பிதாக்களிடத்தில் சேர்க்கவேண்டும்'' என்றான்.

"ஒருவருமில்லாத சமயத்தில் நாம் சென்று பெண்ணை அழைத்துக்கொண்டு வரலாமா'' என்று நீலகண்டன் கேட்டான்.

"ஒருவேளை நம்மைக் கண்டுவிட்டால், கண்டதுண்டஞ் செய்து விடுவார்களே?'' என்று கூறி கோலகண்டன் நிதானித்தான்.

"ஒருவருமில்லாத சமயம் பார்த்து கள்ளவழி யில் சென்று, பெண்ணை அழைத்துவந்து விடலாம்" என்றான் நீலகண்டன்.

"அவ்விதம் அழைத்து வந்தால் நமக்குத்தான் கெடுதி நேரிடும், பெண்ணைக் காணாததால் ஊரெல் லாங் குழப்பமாயிருக்கிறது. நமயிடத்தில் பெண் ணிருப்பதை கண்டார்களானால் நம்மைக் கொன்று விடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை" என்றான் கோலகண்டனென்னுங் குறுகிய மனிதன்

"இதற்கெல்லாம் பயப்படுகிறாயா? நீலகண்டா! அழகான அந்தக்கன்னிகையை அழைத்துக்கொண்டு போய்,நம்மிடத்தில் அகப்பட்டிருக்கும் வாலிபனுக்கு மணம்புரிந்து வைக்கலாம். அவர்களிருவரும் இக் காட்டிலே வாழட்டும். நாமிருவரும் அவர்களுக்குத் தொண்டுசெய்து வரலாம் நீ என்ன சொல்லுகிறாய்" என்று நீலகண்டன் தன் துணைவனை நோக்கி நிதான மாய்க் கேட்டான்.

"ஆமாம்! இது நல்ல யோசனைதான்? ஜாடி க்கு மூடிவாய்த்தாப்போல்த்தா னிருக்கிறார்க ளிரு வரும், ஆனால் உத்தமனான அவ்வாலிபன் இவ்விதச் செயலுக்கு ஒப்புவானா? நமமை மகா துஷ்டர்க ளென்று நினைத்து நமமேல் வெறுப்புக்கொள்ள மாட் டானா? இதற்கெல்லாம் என்ன உத்தரவு சொல்வது" என்று கோலகண்டன் குறிப்பாய்க் கேட்டான்

"வேஷத்தை மாற்றி வேடிக்கை செய்யலாம்! ஆண் உடுப்பை யுடுத்தி ஆளை மாற்றிவிடலாம்" என்று நீலகண்டன் வேகமாக யுரைத்தான்.

"சரி! சரி! அப்படியே செய்வோம்" என்று சொல்லிக்கொண்டு கையிலிருந்த சாமான்களையும் மூட்டையையும் ஓர் மரத்தடியில் வைத்துவிட்டு, வடக்குத்திக்கை நோக்கிச் சென்றார்கள். சிறிது தூரஞ் சென்றதும் செடிகளடர்ந்த பயங்கரமான ஓர் இடத்தை யடைந்தார்கள். இங்கே ஒருபுறம் மனிதரின் எலும்புகளும் மற்றொருபுறம் மிருக இறைச்சிகள் காய்வதுமாக விருந்தது. அதைத் தாண்டிச் சிறிது தூரஞ் சென்றால் சில குடிசைகளும், கருங்கற் குகைகளுஞ் காணப்பட்டன. நீலகண்டனும் கோலகண்டனும் பின்புறமாக மறைந்து செடிகளுள் பதுங்கி, ஒருவருமறியாமல் ஓர் குடிசையை யடைந்து, ஓலைக்கதவினூடாக உள்ளே பார்த்தார்கள். உள்ளே பூரணச் சந்திரப் பிரகாசமுள்ள ஓர் பாலிகைப்பெண் அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கைகால்கள் கட்டப்பட்டிருந்தன. இதைக்கண்ட இருவரும் பரிதாபங்கொண்டு கட்டுகளைக் கழற்றிவிட்டுப் பின் தம்மிடத்திலிருந்த ஆடைகளைக் கொடுத்து, "பெண்ணே நீ ஒன்றுக்கும் பயப்படாதே, நாமிருவரும் உன்னை உன் தாய் தந்தையரிடஞ் சேர்ப்பிக்கிறோம். இந்த உடைகளை யுடுத்திக்கொண்டு க்ஷணநேரத்தில் வெளியே வந்துவிடு, உன்னை மீட்கவே நாங்களிருவரும் வந்தோம். திருடர்கள் கண்ணில் தென்படுவோமானால் நம்மைக் கொன்றுவிடுவார்கள். தாமதஞ் செய்யாதே" என்று இருவரும் மாறி மாறி யுரைத்ததைக் கேட்ட பெண்ணுக்கு அளவிறந்த ஆனந்தம் அகத்தில் தோன்றியபோதிலும், அச்சமென்பது மனத்தை வருத்திற்று. தன்னைக் கூப்பிடுகிறவர்கள்

யாரென்று தெரியாததாலும், இவர்களுடன் சென்றால் ஏதாவது கெடுதிவிளையுமோ வென்பதாலும் அவள் அஞ்சினாள். "இந்த நேரத்தில் என்னை அன்புடன் வந்தழைக்கும் இம்மனிதர்கள் யார்? இவர்கள் என்னை மீட்கவந்ததாகச் சொல்லுகின்றார்களே? ஒருவேளை என்னுடைய தாய் தந்தையர் என்னைக் காணாது மனம் வருந்தித் தேடிவர ஆள் அனுப்பினார்களா? அவ்விதமாயின், யான் இவ்விடத்தில் இருக்கிறேன் என்பதை எப்படி யறிவார்கள்? இவர்களைப் பார்த்தால் எல்லா உளவுந் தெரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள் ஒருவேளை திருடர்களோ என்னை இங்கிருந்தழைத்துக் கொண்டுபோக வந்தார்களா? பகவானே! பேதையாகிய என்னை இவ்விதம் பரிசோதிக்கலாமா" என்றிவ்வாறாகக் கன்னிகையானவள், எண்ணாதவெண்ணமெல்லாமெண்ணி, ஏங்கித் தவித்து என்னசெய்வதென் றறியாது, திகைத்து நிற்குஞ் சமயத்தில், "தயாராய்விட்டாயா? சீக்கிரம் வா" என்று வெளியிலுள்ளவர்கள் அவசரங் காட்டினார்கள்.

இதைக்கேட்ட பெண்மணி ஏங்கித் தவித்துத் தன் உடைகளை மாற்றிக்கொண்டு "என்னவந்தாலும் வரட்டும், ஜெகதீஸ்வரா நீயே துணை! பேதைப்பெண்ணாகிய என்னை இவ்விதம் ஏழாட்டங்காட்டி ஏங்க வைப்பதுன் திருவுளம்போலும்! உன்னிஷ்டம்போலெல்லாம் நடக்கும். வீட்டில் படுத்துறங்கின என்னை காட்டில் கண்விழிக்கச் செய்தாய்! ஆசையும் பாசமும், அன்பும், நேசமும் நிறைந்த பெற்றாரிடத்தில்

களித்திருந்த என்னை கோபமுந் தாபமும், கோரமுங் கொடுமையுமுள்ள காட்டுமிராண்டிப் பயல்களிடத்தி லிருந்து கண்ணீர்விடச் செய்தாய்? இப்பவும் என்னை மீட்பதற்காக இவர்களை யனுப்பினாய். அதுவும் உன் செயல்தான். இவர்களால் எனக்கு நேரிடும் நன்மை தீமைகளும் உன் செயல்தான். என் அருமைத் தாய் தந்தையர் எனக்காக எவ்விதம் பரிதவிக்கிறார்களோ? அரைநாழியும் என்னைவிட்டுப் பிரியாத என் அருமைத்தம்பி என்னைக் காணாததால் எவ்விதம் தேம்பித் தேம்பியழுகிறானோ? எல்லாம் உனக்கே தெரியும் எல்லாத்துக்கும் நீயே காரணம்'' என்றிவ்வாறு நினைத்துக்கொண்டு, அழகியவோர் வாலிபனைப்போல் வெளியே வந்தாள்.

வெளியே வந்ததும் மூவருமாக மெல்ல மெல்லப் பதுங்கிச் சிறிதுதூரஞ் சென்று தாம் வைத்த மூட்டைகளை யெடுத்துக்கொண்டு வேகமாய் நடந்தார்கள் இப்போது நீலகண்டன் ஆண்வேஷந் தரித்த அரிவையை நோக்கி, ''தங்காய், நீ அழகிய ஆண்பிள்ளை போல் காணப்படுகிறாய், உன்னை ஒருவரும் சந்தேகிக்கமாட்டார்கள் நீ மிகவும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும், ஒரு காரணநிமித்தமாவது உன்னுடைய ஆக்கிரங்கத்தை ஒருவரிடமுஞ் சொல்லக்கூடாது'' என்றான்.

''ஆம் அண்ணா! என் பிரிய சகோதரர்களே! உங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். என் தந்தை தாயரிடத்தில் என்னைக் கொண்டுபோய் விடுவீர்களானால்

உங்களுக்கு என்னவேண்டுமானாலும் இஷ்டமுடன் தருவேன். என் அன்னையும் பிதாவும் உங்களை ஆசீர்வதிப்பார்கள். இதுவே என் பிரார்த்தனை" என்றாள்

"அம்மா நீ ஒன்றுக்கும் பயப்படாதே! உன்னை உன் வீட்டில் சேர்ப்பிக்க வேண்டித்தான் நாங்கள் உன்னைக் கள்ளரிடமிருந்து மீட்டோம். நீ ஒன்றுக்கும் அவசரப்படாதே! உன் வீட்டில்போய் நீ சந்தோஷித்திருப்பாய். இப்பொழுது உனக்கு சித்திராங்கன் என்ற பெயரிடுகிறோம். அது எப்பொழுதும் ஞாபகமாயிருக்கட்டும். நாங்கள் யாரென்று உன்னை எவராவது கேட்பார்களானால், உன் மித்திரர்களென்று சொல்லு! ஊர்பேர் கேட்டால் உள்ளதைச் சொல்லாதே! ஜாக்கிரதையாயிரு. பயம்வேண்டாம்! பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலியவற்றை அடியோடே யொழித்துவிட்டு, ஆண்களுக்குரிய ஆண்மை, வீரம், தைரியம் முதலியவற்றைக் கைக்கொண்டு நடக்கவேண்டும்" என்று கோலகண்டன் குறிப்பாயுரைத்தான்.

இவ்விதம் மூவரும் சம்பாஷித்துக் கொண்டு ஜெயவீரசிங்கன் இருக்கும் பாழடைந்த வீட்டை நோக்கி நடக்கலானார்கள்.

நீலகண்டனையும் கோலகண்டனையும் விட்டுப் பிரிந்த ஜெயவீரசிங்கன், அவர்கள் பறித்துக்கொடுத்த பழங்களை யருந்திக் களைதெளிந்து, அவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இருந்திருந்து மணியும் நாலாயிற்று. இன்னும் அவர்கள் வரகா

ணும். ஐந்துமணியானதும் ஜெயவீரசிங்கன் எழுந்து வீட்டுப் பக்கமாக உலாவிக்கொண்டு அங்குள்ள மரங்களில் தொங்கும் பழங்களையும் அவைகளைப் புசிக்கும் பக்ஷிகளையும் மருண்டுவிழித்தோடும் மான்கூட்டங்களையும், திரண்டு திகைத்து நிற்குந் தேவாங்குகளையும், மனிதனின் முப்பாட்டனுகிய வானரங்களையும், அவைகள் ஆடியோடித் திரியும் அலங்காரத்தையும், குரங்குகள் தம் குட்டிகளுக்குப் பால்கொடுத்துப் பாதுகாக்கும் பக்குவத்தையும், பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சிக் குலாவுவதையும், பச்சைக்கிளிகள் இச்சையுடன் பேசுவதையும், குயில்கள் குரலெடுத்துக் கூவுவதையும், மயில்கள் சிறகுவிரித்தாடுவதையும், கண்டுகளித்து அகமகிழ்ந்து தன்னைத்தான் மறந்தவனுய் ஆனந்தித்துக் கொண்டிருந்து, பொழுதுபோனதும் வெளியே நிற்கப் பயந்து வீட்டின் திண்ணையில் வந்துட்கார்ந்தான்.

ஆயிற்று! எட்டுமணியுமாய்விட்டது. "இன்னும் வரக்காணுமே! ஒரு வேளை வராமல் நின்றுவிடுவார்களா?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், காட்டின் நடுவில் மரங்களினூடாக வெளிச்சமொன்று விரைவாய் வருவதைக் கண்டான்.

வெளிச்சத்தைக் கண்டதும் ஜெயவீரசிங்கனுக்கு அச்சமென்பது அகத்திலெழும்பி ஆச்சர்யத்தை விளைத்துக் கொண்டிருந்தது. "இது என்ன வெளிச்சம்? எனக்கு நேராக விரைவாய் வருகிறதே, ஒரு வேளை என் துணைவராகவிருக்குமா? அல்லது பிசாசு

கள் செய்யும் வேடிக்கையா? பேய்கள் செய்யும் தமாஷாயிருக்குமா? நெருங்கி விட்டது வெளிச்சம். நெருங்கி வந்துவிட்டது விளக்கு! மூவர் வேகமாய் வருகிறார்கள், காலையில் போகும்போது இருவர், மாலையில் வரும்போது மூவர்?'' என்றிவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கும்போதே மூவரும் வந்து எதிரே நின்றார்கள்.

''வந்தனம், அண்ணா'' என்றான் ஜெயவீரசிங்கன்.

''அப்படியே வந்தனம் தம்பி! நேரமாய்விட்டதென்று கோபித்துக் கொள்ளாதே, தம்பி! நாங்கள் ஒரு பிரதானமான வேலையின் நிமித்தம் தாமதித்துவிட்டோம். இல்லாவிட்டால் நாலுமணிக்கே இவ்விடம் வந்திருப்போம்! உனக்கும் பசிதாகமாயிருக்கும்! வேண்டிய சாமான்களெல்லாந் தயாராகக் கொண்டுவந்திருக்கிறோம்! இதோ! க்ஷணநேரத்தில் எல்லாம் தயாராய்விடும்'' என்று குள்ளனை கோலகண்டன், மெள்ள மெள்ளச் சொல்லிக்கொண்டு கொண்டுவந்த சாமான்களைத் திண்ணைமேல் வைத்தான்.

''அண்ணா உங்கள்கூட வந்திருக்கும் இப்பிள்ளையாண்டான் யார்'' என்று ஜெயவீரசிங்கன் கோலகண்டனை நோக்கிக் குறிப்பாய்க் கேட்டான்.

''இவர் நமது நண்பர்களில் ஒருவர், உங்களுக்குத் தொண்டு செய்வதற்குந் துணையாயிருப்பதற்குமாக இவரை அழைத்து வந்தோம். இவர் மிகவும் உத்தமர். பெயர் சித்திராங்கன்'' என்று கோலகண்டன் குதூகலத்துடன் உரைத்தான்.

"ஆம் அண்ணா! 'அகத்தின் அழகு முகத்திலினில் தெரியும்' என்பதுபோல் அவருடைய களங்கமற்ற முகமானது நற்குண நன்னடக்கைகளை யெடுத்துக் காட்டுகிறது" என்று ஜெயவீரசிங்கன் கூறி சித்திராங்கதனுடையமுகத்தை உற்றுநோக்கிய வண்ணமாயிருந்தான்.

இந்தச் சமையம் நீலகண்டன் எழுந்து, "நேரமாய்விட்டது, தண்ணீர் கொண்டுவரவேண்டும் சமையல் செய்யவேண்டும்" என்று அவசரங் காட்டிக் கோலகண்டனை யழைத்துச் சென்றான்.

"ஹா என்ன அதிசயம்! என்ன அற்புதம்! என்ன ஆச்சரியம்! என்னவேடிக்கை! கடவுளின் திருவுள்ளத்தைக் கண்டறிந்தவரெவர்? பகவானின் திருக்கூத்தைப் பார்த்தறிந்தவரெவர்! ஈசனின் இயல்பை எடுத்துரைப்பவரெவர். எல்லையற்ற ஆகாயவெளியுள் கணக்கற்ற அண்டபகிரண்டங்களைப் படைத்து, அந்தரத்தி லாடிக்கொண்டு நிற்கும்படி செய்த ஆதிமூலப்பொருளின் மகிமையை யாவராலுரைக்க முடியும். நான் கண்டகாக்ஷி உண்மையானகாக்ஷியா? அல்லது கனவோ நினைவோ என்றுமே விளங்கவில்லையே. என் பாலிகைப் பருவம் முதல் வாலிவப் பருவம் வரையும் எனக்குத் தாலிகட்டிக் கொள்வதாகக் கேலிவார்த்தை யாடிவந்து முடிவில் நமது பெற்றோர் குடும்பஸ்தர் முதலிய யாவரும் பூரண சந்தோஷத்துடன் நம்மிருவரையும் ஏகமாக்கி வைப்பதாக உறுதிப்படுத்திய பின், 'அமெரிக்காவுக்குச் சென்று அரிய பெரிய பரீக்ஷைகள் பாஸ்பண்ணி

வந்தவுடன் உன்னை விவாகஞ் செய்கிறேன்' என்று வாக்களித்துச் சென்ற என் கண்ணாளர் இப்பாழ் அடைந்த வீட்டில் பசிதாகம் அடக்கிக்கொண்டு பய மில்லா திருப்பதைக் காண என்மனம் பதைபதைக் கிறது. ஐயையோ! என் முகத்தை நன்றாய் உற்று நோக்குகிறாரே! என்னைத் தெரிந்துகொண்டாற்போ லிருக்கிறது. ஈஸ்வரா! இந்த இடத்தில் இந்த வேஷத்துடன் என்னைத் தெரிந்து கொள்வாராகில், என்மீது என்ன நினைப்பாரோ? பகவானே! இவர் இந்தக் காட்டுக்குள் எப்படிவந்தார்? இவ்விரண்டு மனிதரையும் எப்படி அறிவார்? இவர்க ளிருவரும் யார்? எல்லாம் மாயமாயிருக்கிறதே! முடிவில் எவ் விதமாகுமோ? ஈசா, சர்வேசா, ஜெகதீசா, எல்லாம் நீயே அறிவாய்'' என்றிவ்வாறுகச் சிந்தித்தாத துக் கித்துத் தன்னைத்தான் மறந்து நிற்கும் சித்திரப் பாவையைப் பார்த்து, ஜெயவீரசிங்கன் மனமிரங்கி, 'தம்பீ சித்திராங்கா! இவர்கள் இருவரும் யார்? உனக்கும் இவர்களுக்கு முள்ள சம்மந்தமென்ன? என்னிடம் சொல்லுவாயா?'' என்று கேட்டான்.

“என்னுடைய விருத்தாந்தத்தைத் தங்களிடஞ் சொல்லுவதற்கு ஆக்ஷேபனையில்லை. இவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது!'' என்று சித்திரப் பாவை சிறிது தலைகுனிந்து வணக்கத்துடன் உரைத் துக்கொண் டிருக்குஞ் சமயத்தில் நீலகண்டனும் கோலகண்டனும் விறகுந் தண்ணீருங்கொண்டு வேக மாய் வந்தார்கள். வந்தவர்களைக் கண்ட பதினி ஒன் றும் பேசாதிருந்தாள். இப்போது ஜெயவீரசிங்கன்

மெல்ல வாயைத் திறந்து, "அண்ணமாருக்கு மிகவுஞ் சிரமம்" என்று சிரித்துக்கொண்டுரைத்தான்.

"இல்லை தம்பி! அவ்விதம் ஒன்றுங் கிடையாது நாட்டில் வாழ்வதைவிடக் காட்டில் வாழ்வது மிகவும் உத்தமமானது! நமக்கும் இதுதான் விருப்பம்" என்று கோலகண்டன் சொல்லி ஓர் கொட்டாவி விட்டான்.

இதைக்கண்ட ஜெயவீரசிங்கன் "அண்ணுவுக்குப் பசிவந்துவிட்டாப்போ லிருக்கிறது. பசிப் பிசாசு மற்றெல்லாவிதப் பிசாசுகளைவிடக் கொடிய பிசாசு, பசிவந்தால், யோசனை யொழிந்துவிடும்! பசிவந்தால் பலம் பதுங்கிக்கொள்ளும்! பசிவந்தால் தைரியம் தரித்துப்போகும்! பசிவந்தால் மோகம் முன்னிற்காது! பசிவந்தால் காமங் கண்திறக்காது! பசிவந்தால் பர்த்தா பாரியை நோக்கான்! பசிவந்தால் மாதா பிள்ளையைப் பாராள். யந்திரங்கள் கரியையுந் தண்ணீரையும் ஆகாரமாகக்கொண்டு நடப்பதுபோல், நம்முடைய தேக யந்திரமும் உணவையுண்ணுவதால்த் தான் ஒழுங்காய் நடக்கின்றது. உணவு உண்ணுவிட்டால் ஒன்றுஞ் செய்யமாட்டேனென்கிறது. ஆதலால் சீக்கிரம் சமையல் செய்ய வேண்டியதுபோலிருக்கிறது" என்று சொல்லிப் பின்னும் "அண்ணமாரே! உங்களுக்கு பாகசாஸ்திரம் அநுபோகமுண்டா?" என்று இருவரையும்நோக்கி அவசரமாய்க் கேட்டான்.

"ஆகா! எவ்விதமான பதார்த்தம் வேண்டுமானாலும் அவ்விதமே செய்து தருகிறோம். எதோ

சொல்லு தம்பீ ! என்னவேனும், வரட்டல் வேண்ணுமா ? துவட்டல் வேணுமா ? தொட்டுக்க வேணுமா ? கடிச்சுக்க வேணுமா ? கூட்டிக்க வேணுமா ? குழைச்சுக்க வேணுமா ? குழம்பு வேணுமா ? சொதி வேணுமா ? அவிச்சேசரி வேணுமா ? மோர்க்குழம்பு வேணுமா ? சாம்பார் வேணுமா ? சட்னிவேணுமா? பொரியல் வேணுமா ? அப்பளம் வேணுமா ? என்ன வேணும் சொல்லுங்கள் இதோ செய்து தருகிறோம் " என்று நீலகண்டனும் கோலகண்டனும் பாகசாஸ்திரம் பாஸ்பண்ணிவந்தவர்கள்போல மாறி மாறிப் பேர்களை மகா வேகமாய் அடுக்கிவிட்டார்கள்.

இவ்வாறு அடுக்கிய பெயர்களைக் கேட்ட ஜெய வீரசிங்கன் சிரித்து " அண்ணே ! உங்கள் கைவசமிருக்கும் காய்வகைகளெதுவோ அதுகளைச் சமையல் செய்யுங்கள். ஏகமாய் பெயர்களை யெடுத்தெடுத்துச் சொல்லுவதால் திருப்தியாய்விடுமா " என்றான்.

இதைக்கேட்ட இருவரும் சிரித்துக்கொண்டு வேகத்தில் யாவும் விரைவாய்ச் செய்தார்கள். சித்திராங்கன் என்னும் சித்திரப்பாவை, சமையலுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து, எல்லாந் தயாரானதும் நால்வரும் பக்ஷணமருந்தி கைதெளிந்தார்கள். போஜனம் முடிந்ததும் நீலகண்டனும் கோலகண்டனும் நீளமுள்ள சுருட்டுகளைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தார்கள்.

அதோ ! தெரிகிறது ! அழகான விளக்குகள் ! சிகப்பு, பச்சை, நீலம், வெள்ளை, வர்ண வர்ணமான

விளக்குகள் வகைவகையாய்த் தெரிகிறது! விதம் விதமான விளக்குகள் வெகுவாய் பிரகாசிக்கின்றன! மத்தாப்புகளைப்போல் மகா வேடிக்கை காட்டுகிறது. கீழும் மேலுமாகக் கிளர்ச்சியுடன் சென்று மாயமாய் அது மறைந்துபோகிறது. காட்டின் நடுவிலோடும் ஆற்றங்கரையில் இந்த வெளிச்சங்கள் விமரிசையாய்க் காணப்படுகின்றன. இந்த வேடிக்கைகளைக் கண்ணுற்றிருந்த ஜெயவீரசிங்கன் மற்றவர்களை நோக்கி, "அதோ பாருங்கள் வெகு தூரத்தில் அழகான பாணவேடிக்கைகள் நடக்கிறது. ஏதோ கோயிலில உத்ஸவம் நடக்கிறாப்போலிருக்கிறது" என்று சந்தேகமாய்க் கேட்டான்.

இந்தச் சமயம் நீலகண்டனெழுந்து "இல்லை தம்பீ! அது பாணவேடிக்கையுமல்ல! மத்தாப்பு வெளிச்சமுமல்ல! கொள்ளிவால் பிசாசுகள் செய்யுங் கோஷ்டந்தானது! ஆட்களைச்சுட்டு அவதி விளைவிக்கும் ஆகாயவழிப் பிசாசுகள் ஆவேசத்துடன் புறப்பட்டுவிட்டது. இவ்விடத்துக்கு வருமானால் எங்களையெல்லாம் எமலோகத்துக்கு அனுப்பிவிடும்." என்று அச்சம் மிகுதியால் அவசரமாய்க்கூறி, ஆர்ப்பாட்டங் காட்டினான்.

"இங்கே வராது! நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று ஜெயவீரசிங்கன் தைரியங் கூறினான்.

"அதை எப்படி நம்பலாம்? லங்கையைச் சுட்ட ஹனுமானைப்போல், வாலிலே நெருப்பை வர்ண வர்ணமாய்க் கொளுத்திக்கொண்டு, வேகத்தில் சென்று ஆட்களைச் சுட்டு, ஆலாகோலஞ்செய்து

அவதி விளைக்கும் அகோரமான பிசாசுகள். இந்தப் பிசாசுகளின் கூட்டம் புறப்பட்டு விட்டால் அவ்வழி யில் ஒருவரும் போகமாட்டார்கள். அசுந்தர்ப்ப நிமித்தம் தப்பித் தவறி அவ்வழியில் வருவார்களா னால் வருபவரைச் சுட்டு வாதனையை விளைவித்துவிடும். நடப்பவர்கள்கூட நடக்கவெசலாலும், பயந்தோடு வார்களானால் கூடவே ஓடிச் சென்று கொடுமை விளை வித்துவிடும். இந்தப் பிசாசுகள் காட்டேரியைப் பார்க்கிலும் கோரமானது வீட்டேரியைவிட வேகம் வாய்ந்தது. சாமுண்டியைவிடச் சம்பிரதாயமுள் ளது, மாமுண்டியைவிட மகாஜாலம் பொருந்தியது மோகினியைவிட மாய்கையுடையது மாரியாத்தாளை விட மகா சாமர்த்தியமுடையது. காளியையொத்த கூளியைப்போன்ற இப்பிசாசுகளெதிரில் வழிப் பிர யாணிகள் அகப்பட்டுக்கொண்டு படும்பாட்டை அப் பப்பா! என்னவென்றுரைப்பேன்.

வழிப்போக்கர்கள் துணியில் தீயை வைத்துத் துடிதுடிக்கச் செய்துவிடும். சிலமயிரைப் பொசுக்கி தகனம் பண்ணிவிடும். மந்திரமுந் தந்திரமும் இப் பிசாசுகளிடஞ் செல்லாது. பேய்கள் கூட்டத்தில் மகா தீரம்பொருந்திய பிசாசுகள் இவைகள்தான் என்றறி யுங்கள். இங்கே வருமானால், நம்மையெல்லாம் எம லோகத்துக்கு அனுப்பிவிடுமென்பதற்குச் சந்தேக மில்லை" என்று நீலகண்டன் அச்சமிகுதியால் வாய் உளறிப் பதைபதைத்துக்கொண்டுரைத்தான்.

இவ்வாறாக நீலகண்டன் கூறியவற்றைச் செவி கொடுத்துக் கேட்டிருந்த ஜெயவீரசிங்கன் சிரித்து,

நீலகண்டனை நோக்கி ''அண்ணா ! நீங்கள் இவ்வெளிச் சத்தைப்பற்றிச் சொல்லிய அபிப்பிராயம் சரியல்ல ! இவை பேயுமல்லப் பிசாசுமல்ல, முனியுமல்ல, மோகினியுமல்ல ! சிலசமயங்களில் நிலத்திலிருந்துண் டாகும் ஒருவிதமான காஸ் வெளிச்சம்'' என்றான்.

''என்ன தம்பீ ! நீயவ்விதங் கூறுகிறாய் ! இந்தப் பிசாசுகளிடத்தி லகப்பட்டு, அவஸ்தைப்பட்டுள்ள அநேக மனிதரை நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம் அதுவுமன்றி, நாமிருவருமொருதினம் இப்பிசாசுகளி டத்தில் பட்ட அவஸ்தை யிருக்கிறதே; ஐயையோ, பகவான்தானறிவார் ! இவ்விதம் நமக்கு அனுபவ மிருக்கும்போது அவை பிசாசல்லவென்று நீ சொன் னால், நானெப்படி நம்புவேன்.'' என்று நீலகண்டன் உறுதியாகக் கூறினான்.

''அண்ணா ! இதைப்பற்றிச் சிறிது விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள் ! இந்தக் காஸ் வெளிச் சம், கடற்கரைகளிலும், ஆற்றங் கரைகளிலும் சேறுள்ள விடங்களிலுமுண்டாகும். மனிதன் நடக் கும்போது அவனைச் சுற்றியோர்வாயு சஞ்சரிக்கிறது. அந்த வாயுவுக்கு இந்தக் காஸை யிழுக்கும் சக்தி யுண்டு. இவை பூமியிலிருந்து வெளியே வந்தவுடன் அக்கினிமயமாய் மாறி, மேலே யெழும்புகின்றன. இச்சமயங்களில் மனித னவ்வழியேசென்றால் அனைப் பின்றொடர்ந்து சுட்டுவிடும். இதுவே யிதனுடைய வுண்மை.'' என்று ஜெயவீரசிங்கன் விபரமா யுரைத் தான்.

"ஹா! ஹா, அப்படியா தம்பீ!" என்ருன் நீலகண்டன்.

"இதுவுண்மைதானு" என்று ஆச்சரியமாய்க் கேட்டான் கோலகண்டன்.

"இது பரம உண்மை! அதற்குச் சந்தேகமில்லை" என்று சித்திராங்களுகிய சித்திரவதனி யுரைத்தாள். இவ்வாருகப் பேசிக்கொண்டு எல்லாரும் படுத்துக் கொண்டார்கள்.

## ஒன்பதாம் அத்தியாயம்.

---

ஹா ! என்னவென்று சொல்வோம் ! எதனை வரைப்போம் ! திருடர்கள் படும்பாடு கடவுள்தானறிவார். நீலகண்டனும் கோலகண்டனும் ஏதாவது இடையூறு விளைப்பார்களாவென்று எக்கத்தாலவர்கள் விக்கம்பிடித்து என்ன செய்வதென்றறியாது, ஏங்கித் தவித்தார்கள்.

ஒருநாளிரவு ஒன்பதுமணி யிருக்கும். திருடர்களுடைய வாசஸ்தானமாகிய காட்டின் நடுவில் அடர்ந்து படர்ந்துள்ள ஓர் ஆலமரத்தின்கீழ் அநேக திருடர்களுட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அகோர ரூபமுடைய வொருவன் அவர்களெதிரே வந்தான். இவனுடைய உருவம் பயங்கரமாயிருந்தது. நீலக்கரிபோலக் கறுத்த தேகமும் இரத்தக் கண்களும், சுருண்டமயிரும், உருண்டு திரண்ட அவயவங்களும், ஒருகையிலே சூலமும், மற்றக் கையில் உருவியவாளும், ஏந்திக்கொண்டு, எல்லாரெதிரிலும் அல்லாச்சாமிபோல் நின்றான். பக்ஷிகளின் இறகால்செய்யப்பட்ட தலைப்பாகையவன் தலையிலிருந்தது. புலித்தோலை ஆடையாக வணிந்திருந்தான்.

இவ்வாறு கோர ரூபத்துடன்வந்த கள்ளர்த்தலைவனைக்கண்ட திருடர்கள் யாவருமெழுந்து மரியாதை செய்துட்கார்ந்தார்கள். இப்போது கள்வர் தலைவன் தன்னுடைய முதலாங் காரியஸ்தனை நோக்கி "அடே முட்டாள் ! நம்பளுக்கு இப்போ கொஞ்சக் காலமாய், அந்த நீலகண்டன் கோலகண்டன் விஷ

யத்தில் ரொம்பவுங் காபறுவா யிருக்கிறதே. அதிலிருந்து தப்பிக்கொள்ள ஏதாவது வழியிருக்கிறதா?" என்று முட்டாளைப்பார்த்து மூர்க்கமாய்க் கேட்டான்.

"எம்மையெல்லாங்காக்கும் எந்தல் பெருமானே! அவங்க காரியத்தில் நம்ப தலையிட்டுக்கொண்டது தான் மோசமாய் விட்டது! இந்தச் சங்கதியை நம்ப ஆளுகளெல்லாருடனும் ஆலோசனைபண்ணி அதுக்கு வேண்டிய ஏற்பாடுகளை வேகத்தில் செய்து விரைவில் முடிக்கணும்." என்று முட்டாள் சொல்லி மட்டியை நோக்கினான்.

இதைக்கேட்ட கள்வர் தலைவன் எல்லாரையும் நோக்கி "அடே! நம்ப மனுசாளுங்களே! உங்களுடைய யோசனையைச் சொல்லுங்கடா" என்று எல்லாரையும் நோக்கி இரைந்து கேட்டான்.

"அவுங்களை தேடிப் புடிக்கெணும்" என்று மட்டி கூறி மிடுக்கனை நோக்கினான்.

"எங்கே தேடுவது! எப்படிப் புடிப்பது" என்றான் மிடுக்கன்.

"ஊரிலே நுளைஞ்சு, உளவறிஞ்சு புடிக்கணும்" என்று பிடிச்சது விடாதவன் பெருமூச்சு விட்டுரைத்தான்.

"அவுங்க ஆப்புட்டுவிட்டால், நம்ப சுவாமிக்குப் பலி கொடுக்கணும். தலையைவெட்டித் தகனஞ்செய்யணும், பூசைபோடணும், ஆவேசம் வாணும், கள்ளைக் குடிக்கணும், துள்ளிக் குதிக்கெணும்." என்று கிடைச்சது கொடாதவன் கெட்டியாய்ப்

பேசி மட்டியை நோக்கி, முட்டாள் பக்கத்திலுட்கார்ந்தான்.

இதைக்கேட்ட மட்டி சட்டென வெழுந்து "அடேடே! நம்பனை சாமியுங்க! காத்தவராயன் சாமி! கறுப்பண்ணன் சாமி! சாமுண்டி, மாமுண்டி, எல்லாச்சாமியுங் கூடி, அண்ணொரு நாள் நம்பனை, 'நரபெலிதாணுமெடா' எண்ணு கேக்கவில்லையா? அடேடடா! இப்பத்தான் எனக்குநெனப்புவந்தது, அதுதான் நம்பளுக்குள்ளே எல்லாம், கொளப்பங்களும் தகராறுமாயிருக்கிறப்போலிருக்கிறது" என்று கெட்டியாயுரைத்து! முட்டாளாகிய முதல்காரியஸ்தனை நோக்கினான்.

"எனக்கு யிப்பத்தான் நெனப்புவந்தது! வாஸ்துவந்தான்! நரபெலி குடுக்காததால்த்தான், நம்ப சாமியுங்க கோவம்பண்ணிக்கொண்டு, நீலகண்டன் கோலகண்டனை வெருட்டிவிட்டாப்போ லிருக்குது!" என்றான் முட்டாள்.

இப்போது பிடிச்சது விடாதவன் எல்லாருக்கு மெதிரில்வந்து, "அடே! நம்பகையிலே சிக்கிக்கொண்டிருக்கும். அந்த அயகானபெண்ணு! அன்னெ நடப்பொண்ணு! சொர்ணம்போல் பொண்ணு! சொகுசுள்ளபொண்ணு! அந்தப் பொண்ணை சுந்தரப்பொண்ணை நம்ப சாமி யுங்களுக்கு பெலியிட்டு, கோவத்தை ஆத்தி, தாபத்தை தீத்துவிடலாமெடா? நீங்க என்ன சொல்றீங்க!" என்று கேட்டு எல்லாரையும் நோக்கினான்.

"ஆமாடா! இது நல்ல ஓசனைதான். ஆனாநம்ப சாமியுங்க, பொண்ணுபெலி எத்தக்கொள்ளுமாடா? அதைப்பத்தி, நல்லா ஓசனை பண்ணித்தான் செய்ய ணும்." என்று கள்வர்தலைவன், மெல்லவுரைத்தான்.

"நம்பளை குருவிடத்தில் போய் எல்லாத்தையும் தீர விசாரிச்சு, அவுங்க சொல்லுறபடி, நம்ப செய்ய லாம்." என்றான் முடுக்கன்.

இவ்வாறு முடுக்கன் சொன்னதைக் கேட்ட எல் லாருமெழுந்து தம் குருவைக் காணவேண்டி விரை வாய் நடந்தார்கள்.

சிறிது தூரத்தில் ஒரு குடிசையிருந்தது. அத னுள்ளில் சூலங்களும், கத்திகளும், வாள்களும் தொங் கிக்கொண்டிருந்தன! அவைகளின் நடுவில் ஓர் ஆகா வழிப்பயல் உட்கார்ந்திருந்தான். தலைமயிரைக்கோபு ரம்போல் கட்டி, தாடியும் மீசையும் தாட்டியாய் நீட் டிக்கொண்டு மகாயோகிபோ லுட்கார்ந்திருந்தான். திருடர்கள் கூட்டத்துக்கு தெய்வம இவனே! எல்லாச் சாமிகளும் இவன்மேலே பிரத்தியக்ஷமாய்த் தங்கள் தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தும். திருடர் களுமதற்கிணங்கி, என்ன கேட்டாலுங் கொண்டு வந்து கொடுப்பார்கள். திருட்டுச் சாமியானவன் தனக்கு விருப்பமானவைகளை யெல்லாங் கேட்பான் திருடர்கள், அவன் என்ன கேட்டாலுஞ் சாமிதான் நேராய்வந்து கேட்கிறது என்றுநம்பி, எல்லாவற்றை யும் ஏற்றவாறு கொடுப்பதுடன், அவனுக்குப்பயந்து நடுநடுங்கி நிற்பார்கள். இவ்வாறு திருடர்கள் யாவ ருந் தனக்குப் பயந்து நடப்பதைக்கண்ட திருட்டுச்

சாமியானவன் மிகவும் கர்வங்கொண்டு, தன்னிஷ்டம் போல் எல்லாரையும் ஏமாற்றி, ஆட்டாத ஆட்டமெல்லாமாட்டி வைப்பான். இப்போது திருடர்கள் தன்னிடத்தில் திரள்திரளாய் வந்திருப்பதைக் கண்ட திருட்டுச்சாமி, சங்கதி தெரியாது சஞ்சலப்பட்டானாயினும், தைரியத்தைக் கைவிடாமல் தக்கவாறு சமாளித்துக்கொண்டு திருடர்களை நோக்கி "அடே என் அருமை குழந்தைகளே! உங்கள்மேலே நம்ப சுவாமி யுங்களெல்லாம் கோபம் பண்ணிக்கொண்டாங்கோ!" என்று எல்லாரையும் நோக்கி உல்லாசமாய்க் கூறினான்.

இவ்வாறு திருட்டுச்சாமி கூறியதைக் கேட்ட கள்வர் தலைவன் ஏக்கங்கொண்டு எதிரேவந்து தெண்டனிட்டு "தேவதேவே! அதுக்காகத்தான் நாங்களிங்கேவந்தோம்! நம்பளை சாமியுங்களுக்கு நம்பளென்ன தப்புச் செய்தோமோ, அதைச் சொல்லக் கூடாதா" என்று இரந்துகேட்டான்.

"அடே! என்னை நஞ்சான் குஞ்சான்களே! நாசகாலப்பசங்களே! பொடிபொட்டப் புள்ளைகளே! நாலுமாதத்துக்கு முன்னே, நம்பசாமியுங்க நரபெலி தரோணுமென்னு கேக்கெலெயா? அதுக்கு நீங்க இப்பதாறோம், பின்னைதாறோம்! பங்கை தெரியுது! பிங்கை தெரியுது! வால்தெரியுது! ஆல்தெரியுது! என்னு சொல்லிச் சொல்லி ஏமாத்தி, சாமியுங்களை வெக்கிறேன் விடுஞ்சானுக்கினு, சுவாமிகோவிக்காதா? தேவன் தேசிக்காதா? சல்தியா, சீக்கிரமாய்! நரபெலிகொடுத்து, சாமியுங்களைத் திருத்திச் செய்யாது

போனுக்கா, உங்க வம்சமும் அப்படியப்படியே நாச மாய்ப்போகும். குலத்தைக் கெடுக்கவந்த கோடாலி காம்புபோலெ, குடியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்ட கப்பசாமி யுங்களெல்லாம்" என்று திருட்டுச் சாமி வெகுட்டுப் பேச்சால் மருட்டி விட்டான். மற் றன்ன வகையும்

இவ்வாறு திருட்டுச்சாமி சொல்லியவற்றைக் கேட்டு கள்வர் தலைவன் சற்றே முன்வந்து திருட்டுச் சாமியாகிய முரட்டுப்பயலை நோக்கி "சுவாமி! நம் பளெ தெய்வங்க, பெட்டைப் பெலி கொடுத்தாக்கா இஷ்டத்தோடெ ஏத்துக் கொள்ளுமா?" என்று வணக்கத்துடன் கேட்டான்.

"அடே! மூடாத்துமா? பெட்டைப் பெலியைப் போலே பெலி வேறெ ஏதாகிலும் புண்டா? கற் பழியாத கன்னியான பொண்ணைப் பெலி குடுப்ப தாலெ, நூறு ஆனெ என்னத்துக்கு, ஆயிரம் ஆடு என் னத்துக்கு ஐயாயிரம் கோயி, என்னத்துக்கு. ஒரு குமரியைப் பெலிகொடுத்தா, ஒம்பது வருசத்துக்கு ஒண்ணும் வேண்டாமெடா! அதிருக்கட்டும், பொண்ணு எங்கெயாவது அப்புட்டுதா?" என்று திருட்டுச்சாமி மிகவும் நயந்துகேட்டான்.

"நம்ப கையிலே ஒருபொண்ணு அப்புட்டிருக் குது அதை வேணுமின்னு இப்போது பெலியிட்டு சாமிங்களெ சந்தோசப் படுத்தலாம்." என்று முட் டாள் மிகவு மானந்தத்துடன் திருட்டுச் சாமியை நோக்க சாவதானமா புரைத்தான்.

"அப்படியாடா" என்றுசொல்லிக்கொண்டு எகி றிக் குதித்து எதிரேவந்தான் திருட்டுச்சாமி! "அப்

படியாடா! முட்டாள் கழுதைகளே! கையிலே வைச்சுக்கொண்டாடாசெய்யாதிருக்கிறீங்கோ! இப்போதே எல்லாவற்பாடும் தப்பிலாமே செய்யெணும். சாமியுங்களைக்கூப்பிட்டு சந்தோஷிப் பிக்கெணும் கள்ளை குடிச்சு துள்ளிக் குதிக்கெணும், சாறுபங் குடிச்சு பேரறு எகிறெணும், கஞ்சாவை தண்ணு மிஞ்சிமிஞ்சியாடலாம் எழும்புங்க போய்வாருங்க ; பூப்பறிக்கிறவன் பூக்கொண்டுவா ! பழம் பறிக்கிறவன் பழங்கொண்டுவா ! இலைவெட்டிவாறவன் தலைவெட்டிகொண்டுவா ! கள்ளுக்கொண்டுவாறவன் துள்ளித்துள்ளி போடிவா ! சாறுயங்கொண்டாறவன், சல்தியில் கொண்டுவா ! எல்லாரும் எழுந்திருங்க, சாமிக்குவேண்டிய பண்டம் பலகாரமெல்லாம் கொண்டுவந்து சேருங்கோ ! சீக்குரம் ஆவட்டும், வேகத்தில் தீரட்டும் ! சல்திபா முடியட்டும்!'' என்றிவ்வாறு பூசாரி சொன்னதைக்கேட்ட யாவருமெழுந்து தத்தம்வேலைகளுக்குச் சென்றார்கள்.

இப்போது கள்வர் தலைவனை நோக்கிப் பூசாரி சொல்லுகிறான். ''அடே! கப்பித்தான்! பொண்ணைக் குளிப்பிச்சு நகையுங்களெல்லாம் நல்லாய போட்டு அன்னை நடை நடத்தி வெகு அயகாய்க் கொண்டாறணும். நீயே அழைச்சுக்கிணு வரணும், உன்கையாலேதான் பெலி கொடுக்கெணும், வேறே ஆளுங்க கையிலே கொடுக்கப்படாது ! பத்திரம், சாக்ரதை ! நீயே கையைப் புடிச்சிக்கிணு வரணும்.'' என்று கள்வர் தலைவனை நோக்கிக் கவனமாயுரைத்தான்.

''ஆம் சாமி ஆம் ! அப்படியே செய்யுறேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்துபோய்விட்டான்.

"நம்முடைய பயம் இனிமேல் நீங்கிவிடும். பெண்ணைப் பெலி கொடுத்துச் சாமிகளை சந்தோஷப் படுத்தினால் எல்லாம் சுகமாய் முடியும். எல்லா ஏற்பாடுகளும் விரைவாய் முடிந்தால் நம்முடைய ஜனங்கள் யாவரும் சந்தோஷமாயிருப்பார்கள்" என்றிவ்வாறாகக் கள்வர் தலைவன் நினைத்துகொண்டு தன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான்

ஆயிற்று, எல்லா ஏற்பாடுகளு மொழுங்காய் நடக்கிறது. அவரவர்கள் தங்கள் தங்களுக்கேற்பித்த சாமான்களைத் தயாராய்க்கொண்டு வந்தார்கள் இலைக்கட்டுகளுக்குக் கணக்கில்லை. பூக்குடலைகள் பெருமாரியாய் வந்து சேர்ந்தது. பழங்கள் பலவகை. இலையைப் பரப்புகிறார்கள் ஒருபக்கம் பூக்கள் நிறப்புகிறார்கள் மற்றப்பக்கம். பழங்களை அடுக்கிறார்கள் பின்னொரு பக்கம். கற்பூரம் கொளுத்துகிறார்கள் வேறொரு பக்கம். கள்ளுக்குடங்கள் கணக்கில்லாமல் அடுக்கப்பட்டிருக்கிறது சாராயப்புட்டிகள் சீராய் அடுக்குகிறார்கள். சுட்ட கருவாடுகள் தட்டுத்தட்டாய் வைக்கப்படுகிறது. பூசைபென்னமோ புகளாய் நடக்கும்போல் தோன்றுகிறது.

இந்தச் சமயம் பூசாரி வெளியே வந்து மடைபரவியிருப்பதைக் கண்டு மகா சந்தோஷங்கொண்டு எல்லாரையும் நோக்கி இருமிக் கனைத்துக்கொண்டு, கள்ளுக்குடம் ஒன்றைக் கையிலெடுத்து, சுட்டகருவாட்டைத் தட்டோடெடுத்து, சாராயப்புட்டியொன்றைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு எல்லாரும் வந்திருக்கிறார்களாவென்று சுற்று முற்றும் பார்த்தான்.

யாவரும் தயாரா யிருக்கிறார்கள். கள்வர் தலைவனை மாக்கிரங்காரனும், எங்கேபோனான் என்பது ஒருவருக்குந் தெரியவில்லை பூசாரியான கிருட்டிச்சாமி வேண்டியபடியே கள்ளைக் குடிக்கக் கருவாட்டைப் புசித்துக்கொண்டு அதன்மேல் சாராயத்தைச் சரிவரக்குடித்ததும், காத்தவராயன், கறுப்பண்ணன், சாமுண்டி, பாமுண்டி முதலிய எல்லாச் சாமிகளும் உல்லாசமாய் வந்துவிட்டது. வெறி அதிகரிக்க அதிகரிக்க சாமிகளும் ஆடவாரம்பித்தது என்னசெய்வான்? ஆடுகிறான்சாடுகிறான்! துள்ளுகிறான்! குதிக்கிறான்! உருப்பட்டுவிட்டது உள்ளே சென்று ஒரு கையில் வாளும், மற்றக் கையில் சூலமும் எடுத்துக்கொண்டு ஒரு சாட்டஞ்சாடி, எகிறிக் குதித்து வெளியே வந்தான். வாளைக் கையில் பிடித்து வகைவகையான வேடிக்கைகளை தொகை தொகையாய்ச் செய்கிறான். கோஷ்டங்களங்கே கோடி. கோடியாய்ப் புரிகிறான். மந்திரங்களெல்லாம் வெகு விரைவுடன் சொல்லுகிறான். "ஓம் புலியுங் கிலியும் பெலியும் மலியும், மவ்வும் சவ்வும் தோலும், ஒரு கையில் சூலமும் மற்றக் கையில் வாளும், தூக்கிய காலும், துள்ளிய தேகமும், ஏக்கிய வயிறும், நக்கிய நாவும், சிங்கப்பல்லும் புலியின் நகமும், பரந்த மூக்கும், சிவந்த மேனியும், பாசஞ் சடையும், பேயின் படையும், பறந்தோடிரா! சீக்கிரம்! சீக்கிரம்! உன் அண்ணன் காத்தவவாயனை சிறகு கட்டிப் பறந்துவா! ஓடிவா! ஆடிவா! தேடிவா! பாடிவா! பறந்து விழுந்து பாஞ்சுவா."

இவ்வாறாகச் சாமியாடிச் சண்டாளன் செய்யுங் கோஷ்டங்களைக் கண்ணுற்ற திருடர்கள் யாவரும் பயந்து நடுநடுங்கி, எழுந்து நின்று கைகட்டி, "சுவாமி! தேவிதேவே! கோயிகள் குஞ்சுகளை சிறகுள்ளில் வைச்சுக் காக்கும்போல், நம்பளையெல்லாங் காக்குங் கத்தாவே! சின்னவுங்களாகிய நம்ப தெரியாமல் செய்த தடவை, பெரியவுங்களாகிய நீங்கள் பொறுத்துக்கொண்டு அடிமைகளை ரச்சிக்கவேண்டுஞ் சாமீ" என்று சொல்லிக் கொண்டு எல்லோரும் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார்கள்.

இதைக் கேட்டதும் சாமியாடுபவன் கள்ளுச் சாராயம் பின்னுங் குடித்துவிட்டு, எகிறுகிறான், துள்ளுகிறான், பின்னுஞ் சாராயத்தைக் குடித்துப் பெருத்த கூச்சல் போடுகிறான். "அஸ், உஸ், தஸ், புஸ், அடே ஏஏ! உங்களே ஏஏஏ—உங்களே ஏ ஏ ஏ—நாஆஆன்—ராரச்சித்துதுஉ—வந்தேண்டா—பசங்களே ஏஏஏ—அஸ், உஸ் உம் உம்" என்று இவ்வாறாக அவன் ஆயிரம் ஆட்டமாடி தேகத்தை அறுபது கோணலாய் வளைத்து, மகா ஆச்சரிய வித்தைகளெல்லாம் அளவில்லாது செய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் திருடர்களெழுந்து "ஆம்! சுவாமி! நம்பளை ரச்சிக்க தேவீரல்லாது வேறே ஆருண்டு" என்று சாமியாடுபவனுக்கு [illegible] கூறினார்கள். இவ்வாறு கூறியதைக் கேட்டதும் சாமியாடுபவன் பின்னும் "உஸ் உஸ்! அப்புடி, அப்புடி, உங்களே—நான் காத்து—வந்தேனல்லவா ஆஆ ஆ ஆ ஆ—உஸ் உஸ்—நான் இட்டப்பட்டு ஊ

ஊ ஊ—நான் ஆசேப் பட்டு ஊ ஊ ஊ—சம், கிம், உம், உம்—உங்களே—அண்ணொருநாள் கேட்டேனே ஏஏஏ—மனிதபெலிதரொனு மென்னு—நரபெலி வேனுமென்னு ஊஊதக்தையளாடா—பசங்களேஏஏ ஏ ஏ ஏ'' என்று உரத்துக் கத்தி யுளறிக் கொண்டிருக்கும்போது "இன்னு தருகிறோம்சாமீ! இன்னுதருகிறோம் சாமீ! இப்ப தருகிறோம் சாமி! இதோ தருகிறோம் சாமி! சுவாமிக்குக் கண்குளிர, சுவாமிக்கு மனங்குளிர, சுவாமிக்கு வாய் குளிர, கன்னிப் பொண்ணின் கழுத்தறுத்து சுவாமி கையில் தாரோம். குமரியின் குரெகொடல் அறுத்து சுவாமிக்கு மாலே போடுறோம். வேண்டுமட்டுஞ் சுவாமிக்கு குமரி ரத்தம வவுறு நெறெயக் குடிக்கலாம்'' என்று பயத்தின் மிகுதியால் திருடர்கள் யாவரும் காக்கைபோல் கத்தி அலறிக்கொண் டிருந்தார்கள்.

இதைக்கேட்டசாமி எழுந்து குதித்தான் எட்டுத் தரம், ஆடிக்குதித்தான் அறுபது தரம். "ஆ—ஊ—கா—கூ'' என்ற கூக்குரலுங் கிளம்பிவிட்டது. "காளியுங் கூளியும் கடிதிலே யோடிவா—சாமுண்டி மாமுண்டி சடுதியில் பறந்துவா—கம்பளத்துக் காமாக்ஷி காடெல்லாந் தாண்டிவா—காட்டேரி ஆடிவா—வீட்டேரி யோடிவா—மதுரைவீரா தொரையே மகா வேகத்தில் வந்துவிடு—மங்தைமுனியே மறைவாய் வா—வீரபத்திரா விரைவிலே வந்துவில்'' என்று சாமியாடும் சண்டாளப்பாவி சந்தோஷக் கடலில் அமிழ்ந்தி தக்கபடி ஆடம்பரத்துடன் கூக்குரலிட்ட

பின்பு "வந்துவிட்டானே பொண்ணைக்கொண்டு—அளைச்சுவாங்கெடா அவசியம் செண்டு—தடதடபட பட பெண்ணெங்கெடா—பெரியவனெங்கெடா—சட சட கிணை கிணை தம்கிணா—தொம்கிணா—கொண்டுவந்தானே பொண்ணை—கொண்டுவந்தானே பெலியை—தரி தரி—கிட கிட—கடி பிடி தடி யடி—தரிகிணை ஜாம்தரி தத்திமி—தா—இழுத்துவாங்கெடா அவனை அளைச்சுவாங்கெடா பொண்ணை—தத்தரி கிட கிணை தோம் தோம்" என்றிவ்வாறாக சாமியாடுபவன் அளவுக்குமிஞ்சிக் குடித்து அட்டகாசஞ் செய்வதைக் கண்ட திருடர்கள் யாவரும் ஏக்கங்கொண்டு என்ன செய்வதென்றறியாமல் கள்வர் தலைவனுடைய வரவை எல்லாரும் மிகவும் ஊக்கத்துடன் எதிர்பார்த்தவண்ணமா யிருந்தார்கள்.

சாமியாடும் சூதுக்காரனும் சுளுகாய்ப் பார்த்துப் புழுகுகொண்டவனாய் பெருமையான ஆட்டங்களை பெரிது பெரிதா யெடுத்துவிடுகிறான்.

அதோ வருகிறான் கள்வர் தலைவன், நடக்கச் சக்தியற்றவனாய் மெல்ல மெல்ல நடந்து வந்து சிறிது தூரத்தில் நின்று தன் காரியஸ்தர்களைக் கூப்பிட்டான். "அடே முட்டாள் முடுக்கன், மட்டி, புடிச்சதுவிடாதவன், கிடைச்சது கொடாதவன், முதலானவங்களே வேகத்தில் வாங்கோ ! சல்திவாங்கெடா ! ஓடிவாங்கெடா !" என்று ஓலமிடுவதுபோல் கூவியழைத்தான்.

உடனே எல்லாருமெழுந்து கள்வர்தலைவனிடஞ் சென்றார்கள். சென்றதும் கள்வர் தலைவன் மற்றவர்களை நோக்கி "அடே ! பொண்ணைக் காணே

மடா! எங்கேயோ ஓடிப்பூட்டாப்போல் தெரியுது" என்று ஏக்கத்துடன் உரைத்தான்.

இவ்வாறு கள்வர் தலைவன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட யாவரும் அடங்கா ஆச்சரியங்கொண்டு ஏக்கத்தினால் நடுநடுங்கி நின்றார்கள். "பெண்போனாலும் போகட்டும், இப்போது சாமியிடமிருந்து தப்பிக்கொள்வதெப்படி" என்ற யோசனை எல்லார் மனதையும் இன்னல்படுத்திக் கொண்டிருந்தது. இவ்விதம் மரம்போல் விறைத்துநிற்கும் காரியஸ்தர்களை நோக்கி, "இன்று நீங்க யாராவது கண்டீங்களா" என்று கள்வர்த்தலைவன் கேட்டு எல்லாரையும் பார்த்த வண்ணமாய் நின்றான்.

"இன்று சாயங்காலம் பழம் பறிச்சுக்கொண்டு போய் குடிக்கும்போது அழுதுகொண்டிருந்தாள்" என்றான் மட்டி.

"அதுக்கப்புறம் நான்போய் காலையுங் கையையுமா நன்றா இறுக்கி கட்டிவிட்டு வந்தேன்" என்றான் முட்டாள்.

"கட்டின கயிறு அங்கேதான் கிடக்குது" என்று கள்வர் தலைவன் கடூரமாய்ச் சொன்னான்.

"இது என்ன மாயம். நீங்க நன்றாப் பார்த்தீங்களா? அங்கையெல்லாம் இன்னொருமுறைபோய் நல்லா எல்லாம் பாக்கலாம் [illegible] வாருங்க" என்று பிடிச்சது [illegible] தன் [illegible] யும் அழைத்துச்சென்றான். [illegible] பண்டை யாவருஞ் சென்று தேடித்தேடி அலுத்துப்போனார்கள். சாமியாடிபவன் செய்யும் பெருங்கோஷ்டம்

அவர்கள் காதில் படுகிறது. என்னசெய்வதென்றறி யாது ஏங்கித்தவித்தார்கள். எப்படி யுய்வதென்றறி யாது பிரமித்து நின்றார்கள்.

"என்ன செய்யலாம் சாமி நம்பளைச்சபிச்சுவிடும் சாமியை ஏமாத்திப் போட்டோமென்று நம்பமேல் எகிறிக் குதிக்கும்! நமக்கெல்லாம் நாசகாலம் வந்து விட்டது" என்று கள்வர் தலைவன் பயமாய்க் கூறினான்.

"அதெல்லா மிருக்கட்டு மொருபக்கத்திலே இப்போ சாமியண்டை எப்படிப் போறது! நம்ப சாமி காத்துக் காத்துக் கண்ணு விழிச் சிருக்கிதே, என்ன செய்யலாம் எப்படி உய்யலாம்." என நமூடிக் கன் மிகத் துடுக்காய்க் கேட்டான்.

"சாமியண்டை சென்று சங்கதியை சொல்லி, மன்னிச்சுக்கொள்ளச் சொல்லி மண்டாட்டம் கேக்கலாம்." என்று கிடைச்சது கொடாதவன் கூறியதைக் கேட்ட யாவரும் சாமி யாடுபவனிடம் நேராய்ச் சென்றார்கள்.

கள்வர் தலைவனும் மற்றவர்களும் வருவதைக் கண்டதும் சாமியாடும் சண்டாளன் நன்கு யுற்று நோக்கினான். பெண்ணையுங் காணோம், பெட்டியையுங் காணோம், என்னமோ! ஏதோ! என்று உள்ளுக்

குள்ளே நினைத்துக்கொண்டு எதிரே வந்தவர்களை நோக்கி. "பொண்ணெங்கெடா? பெலியெங்கெடா? அஸ்புஸ்—தரிகிட—தஸ்பஸ்—திமிகிட' என்று ஆட்டங்களெல்லாம் அளவு கணக்கில்லாது தொடங்கிவிட்டதும், எல்லாரும் மிகவும்பிரமித்து நின்றார்கள். இப்போது கள்ளர் தலைவன் சாமியெதிரே வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து "சுவாமி தேவா! என்னவென்று சொல்லுவேன் சங்குதியை! வைச்சடத்திலே பொண்ணைக்காணோம். நம்பளெல்லாங்கூடி காடெல்லாந் தேடியும் அப்புடலை! எங்கோ ஓடி விட்டாப் போல்—" என்று கள்வர் தலைவன் சொன்னதை சொய் முடிப்பதற்குள் வந்துவிட்டது சாமிக்குக் கோபம். கோபத்தீயில் கொழுந்தா யிருக்கிறான் சாமி 'ஆ! ஊ' என்றுகத்துகிறான். 'கூ! கூ' என்று கூச்சலிடுகிறான். தப்புதிப்பென்று நெஞ்சிலடிக்கிறான். தொப்புத்தொப்பென்று துள்ளிவிழுகிறான். வாளை யெடுத்து ஆட்டுகிறான். சூலத்தை யெடுத்து நீட்டுகிறான். வந்திருந்த திருடர்களுக்குச் சிந்தை கலங்குகிறது. ஆட்டம் சிறிது நின்றதும், பேச்சுகள் பெருமாரியாய்ப் புறப்பட்டது "அடே எஎ—திருட்டுப் பசங்களே ஏஎ ஏஐ—ஏடேஎஎஎ—சோதா ஆ ஆ ஆ ஆப்பசங்களே ஏஏஎ—அடேஎஎ—லுச்சாப்பயல்களே எ ஏ எ—அடே எ எ—சோம்பேறீஈஈ—கயுதைகளே ஏ எ—என்னை சத்தாச்சு ஊ ஊ—தபாச்சு ஊ ஊ—பவுசு கொலைச்சு ஊ ஊ—மொக்கை கொலைச்சு ஊ என்னை

ஏமாத்த வந்தீங்களாடா ஆ ஆ ஆ—விடு காலிப்பயல் களே—கட்டாமுட்டி நாயுங்களே ஏ ஏ—தறுதலே தலேமுறியன்களே ஏஏ—ஆஆ—கூகூ—இதோ பார்—பார்—முடிக்கிறேன் குடியை—கொளுத்துறேன் வீட்டை—கொல்லுறேன் உங்களே ஏஏ—ஒருபொண்ணுக்குப்பதிலாக உங்களேயெல்லாம் உயிர்வாங்கிறேன்—பாருங்கடா! பாருங்கடா! ஆ ஆ ஆ ஆ ஹா ஹாஹா.

என்றிவ்வாறாகச் சாமியாடுகிறவன் அளவில்லாக் கூக்குரலிட்டுக்கொண்டு கண்டகோடாலி யொன்றை கையிலெடுத்துக் கொண்டு எல்லாரையும் வெட்ட வருவதுபோல் எகிறிக் குதித்து வெளியேவந்தான். இவ்வாறு சாமி கோபாவேசத்துடன் வந்ததைக்கண்ட திருடர்கள் பதை பதைத்து நடுநடுங்கி, எழுந்தோட வாரம்பித்தார்கள். சாமியும் அவர்கள் பின்னே ஓட ஆரம்பித்தான். பிராணபயத்துடன் திருடர்களெல்லாம் திக்குத்திசை தெரியாது சிதறியோடினார்கள். சாமியானவன் மகா கோஷ்டத்துடன் அவர்களே வெருட்டிச்சென்றான். மரத்தோடு மோதுண்டவனும் மலேயோடடியுண்டவனும், முள்ளுப்புதரில் விழுந்தெழுந்தவனும், பள்ளத்தாக்கில் படுத்துக்கொண்டவனுமாய்த் திருடர்கள் யாவரும் திசைதெரியாது சென்றார்கள்.

சாமியாடிய ஈகசண்டியும், சிறிதுதூரம் அவர்கள் பின்னேலோடி, "இவர்களே இன்னும் வெருட்டினல் ஒருவேளே நமக்கே கெடுதிநேரிடும்" என்று

நினைத்து திரும்பி வந்து தன் இருப்பிடத்தில் உட்கார்ந்தான்.

உட்கார்ந்ததும் ஓர் ஆச்சரியமான சாக்ஷியைக் கண்டு அறிவுப் பயந்து நடுநடுங்கி என்னசெய்வதென்றறியாது ஏங்கித் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்தான். துணைவரை வெருட்டினது துயரமாய் விட்டதே என்று தவித்துத் தயங்குகிறான். யாரையோ கண்டு மனங்கலங்கிக்கொண்டிருக்கிறான்.

# பத்தாம் அத்தியாயம்.

சித்திரமாய்க் கட்டப்பட்ட ஓர் சிங்காரமான வீட்டினுள்ளில், ஆடம்பரமாகச் சிலர் வார்த்தையாடு கிற சத்தங்கேட்கிறது. நல்லமேதார் உல்லாசமாகக் கட்டிடம் வெகு அழகாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுதான் கனகசேகரத்தினுடைய கண்ணியமான பங்களா! இதற்கு "வனசுதவிலாஸ்" என்னப் பெயருண் வழங்கிவந்தது. வீட்டினுள்ளி னுள்ள விசாலமான மண்டபத்தில் கனகசேகரமும், சுந்தசீலனு முட்காரந்து, காணமற்போன வனசுதாவைக் கண்டுபிடிக்கும் வழி என்னவென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் பேசியதைக் கேட்டதும் மற்றோர் அறையில் மனங்கலங்கி அழுதுகொண்டிருந்த தெய்வானையம்மாள் திடீரென்று ஓடிவந்து [illegible] கிய சுந்தசீலனை நோக்கி "ஐயோ அருமை! [illegible] அருமைக் குழந்தையைக் காணவிட்டால் என்னுயிர் தரியாது. நானென்ன செய்வேன். என்னால் சகிக்க முடியவில்லையே" என்றுசொல்லி தன் தமையனை நோக்கி யலறினள்.

"அம்மா! தெய்வானை! உன்னுடைய மச்சாள் அன்னலக்ஷிமி யறிந்தால், எவ்விதம் துக்கப்படுவாளோ? ஈசனே யறிவார். என்குமாரத்தி தேவகி யறிவாளாயின், கண்ணீர் சொரியாதிருப்பாளா? தெய்வானை! நீ அழாதேயம்மா, என்னாலானவரையும் முயற்சிசெய்து உன் துக்கத்துக்கு நிவிர்த்தியுண்டாக்கு

கிறேன்'' என்று தங்கையைநோக்கி மிகவுமன்புடன் தமையன் கூறினார்.

''அண்ணா! என் கண்ணானகண்மணியை யிழந்து எவ்விதம் சகித்திருப்பேன். ஜீவித்திருக்கிறாளோ? உயிர் துறந்தாளோ? ஆகார மருந்தினாளோ? பட்டினி கிடக்கிறாளோ? என்னென்ன கஷ்டங்களையநுபவிக்கிறாளோ? ஐயையோ! ஈஸ்வரா! என் குஞ்சு எங்கே!'' என்று தெய்வானையம்மாள் கண்ணீர் சொரிந்தாள்.

''என்னத்துக் கழுகிறாய்! நாமென்ன செய்யலாம். நம்மாலாவது ஒன்றுமில்லை. எல்லாம் ஈசன் செயல். நம்மாலானவரையும் முயற்சிசெய்து பார்க்கிறோம்'' என்று கனகசேகரம் தன் துக்கத்தை ஒருவாறு தனக்குள்ளே யடக்கிக்கொண்டு மனைவிக்கு ஆறுதல் வார்த்தைகூறித் தேற்றினார்.

இவ்வாறாக இவர்கள் பேசிக்கொண் டிருக்குஞ் சமயத்தில் உள்ளேயிருந்து ஒரு சிறுபையன் வந்து கனகசேகரத்தை நோக்கி ''அம்மா என் அழுகிறாங்கோ'' என்று விம்மி விம்மி அழுதுகொண்டு கேட்டான்.

''தம்பி! நீ ஏன் இங்கேவந்தாய்! உள்ளேபோய் விளையாடு போ தம்பி!'' என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாது, கனகசேகரம் மகனை உள்ளே போகச்சொன்னார்.

இச்சிறுவன் கனகசேகரத்தினுடைய புத்திரன். இவன் பெயர் சந்திரசேகரன். இவன் தன் அக்காளிடத்தில் மிகவும் அன்பாயும் நேசமாயுமிருப்பான்

எந்தவேளையிலும், அக்காளும் தம்பியும், ஆடிப்பாடிக் களித்திருப்பார்கள். சில தினங்களாகத் தன் அக்காளைக் காணாததால் தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருப்பான். அடிக்கடி "அக்காளெங்கே! அக்காளெங்கே! என்று வீட்டுக்கு வருபவர்களை யெல்லாங் கேட்பான்! இவனுடைய துக்கமே எல்லோருக்கும் பெருந் துக்கமாயிருந்தது. "உன்னுடைய அக்காள் மாமா வீட்டுக்குப் போயிருக்கிறாள் நாளைக்கு வரும்" என்று சொல்லி இவனைத் தேற்றுவார்கள். இவ்விதம் நாட்களுங் கழிந்தது அக்காளையுங் காணோம்.

சிறுவனைக் கண்ட சுகந்தசீலன், அவனை எடுத்துத் தன் மடிமீதிருத்தி, "தம்பி! சேகரா! சாப்பிட்டாயா" என்று மிகவும் நயந்துகேட்டார்.

'ஆம்' என்று சொல்வதற்குப் பதிலாக தலையை யாட்டினான் சிறுவன்.

"பதார்த்தம் என்ன தம்பி" என்றார் சுகந்தசீலன்.

"கத்தெரிக்கா! மூங்கக்கா" என்றான் சிறுவன்.

"வேறே ஒன்றுமில்லையா"?

"வேஏஏறஏஏ பப்புக்கொயுப்பு"

"அவ்வளவுந் தானா"

"பின்னே பொரீரியல்"

"என்ன பொரியல்"

"வாளக்கா ஒருளேகியங்கு"

"இவ்வளவுதானா? வேறொன்றுமில்லையா"

"தயர், தயர், நான்மந்திட்டேன்"

"இனியொன்று மில்லையா"

"ஒண்ண்ண்ணூ ஊ ஊ ஊ மில்லே ஏ ஏ ஏ ஏ ஏஏ"—

"உன்னுடைய அக்காளெங்கே"

"அக்காள் அண்ணு மாமா வூட்டுக்கு பூட்டுது! என்னை வுட்டிட்டு" என்று சொல்லிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதான். சுகந்தசீலன் தன்னாலியன்ற வரையும் சமாதானஞ் செய்துபார்த்தார். ஒன்றும் பிரயோசனப் படவில்லை. இதைக்கண்ட தெய்வானையோடிவந்து தன் அருமைப் புதல்வனையெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு, "அழாதே துரையே! என்செல்வம் அழாதேயெடா? என்கண்மணி அழவேண்டாம்! நாளைக்கு நாங்கள் மாமாவீட்டுக்குப் போய்த் தம்பியின்னை அக்காளைக் கூட்டிக்கொண்டு வந்துவிடலாம். நீ அழவேண்டாம். என் ராசதுரை அழவேண்டாம்" என்றுசொல்லித் தன் முந்தானையாலவன் கண்ணீரைத் துடைத்துத் தேற்றினாள்.

சிறுவன் அழுததைக்கண்ட சுகந்தசீலன் மிகவும் விசனப்பட்டார் "அவன் அழுவதற்குக் காரணம் நான் தான்" என்று அவர்மனதில் நன்றுப்பட்டது.

இவ்விதமிருக்குஞ் சமையத்தில், கனகசேகரம், தன் துக்கத்தை யெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு, சுகந்தசீலனை நோக்கி "இச்சங்கதி உங்கள் வீட்டாருக்குத் தெரியாதுபோ லிருக்கிறது" என்றார்.

"இல்லையில்லை! முதலில் எனக்கே தெரியாது! இங்கே வந்த பிற்பாடு தான் நான் சேதியை யறிந்தேன்! அவர்கள் எப்படியறிவார்கள்? ஆனால் நான் இங்கே வருவதாக ஒரு கடிதம் எழுதியிருந்தேன்" என்று சுகந்தசீலன் மிகவிரைவாய்க் கூறினார்.

"அது மிகவும் நல்லதுதான். அவர்களுக்குச் சங்கதியைத் தெரிவித்துச் சஞ்சலப் படுத்துவானேன்" என்று சொன்ன கனகசேகரம் பின்னும் ஏதோ நினைத்து சுகந்தசீலனை நோக்கி "உங்களுடைய ஏகபுத்திரியாகிய தேவகியின் விவாகத்தைப்பற்றி நீங்கள் ஒரு ஏற்பாடுஞ் செய்யாதிருப்பதன் காரணமென்ன? வீணில் காலங்கழிந்து போகிறதே, உங்களுடைய செல்வப் புதல்வியின் சீருஞ் சிறப்புந்தானே! நீங்கள் கண்டு மகிழவேண்டியிருக்கிறது. ஏன் காலதாமதம் செய்யவேண்டும்." என்று சிறிது உற்சாகத்துடனும் சிறிது ஊக்கத்துடனும் மைத்துனரைப் பார்த்துப் பக்குவமாய்க் கேட்டார்.

'ஆம்! ஆம்! அதைப்பற்றி விரைவில் ஏற்பாடு செய்யவேணும் இனிமேல் வீணைக் காலங் கழிக்கக் கூடாது! முதலில் இந்தக்காரியம் முடியட்டும். பின்னால் அதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்" என்று சுகந்தசீலன் விரைவாய்க் கூறினார்.

இப்போது தெய்வானை எதிரேவந்து "அண்ணா! தேவகியை வாசுதேவனுக்கா கொடுக்கப் போகிறீர்கள்" என்று ஆச்சரியத்தோடு அவசரமாய்க் கேட்டாள்,

" அப்படித்தான் நான் நினைத்திருக்கிறேன். வாசுதேவனுக்குக் கொடுப்பதுதான் நல்லதென்று தோன்றுகிறது" என்று தங்கையையும் மைத்துனனையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு கூறினார்.

தேவகிக்கு, வாசுதேவனை விவாகஞ் செய்து கொள்ள விருப்பந்தானா" என்று அண்ணனை நோக்கித் தங்கை கேட்டாள்.

"அந்த விஷயத்தில் தான் எனக்கும் திருப்தி கரமாயில்லை" என்று சுகந்தசீலன் முகங்கோணி யுரைத்தார்.

"அண்ணா! என்ன இருந்தாலும், இருக்கிறது ஒருபிள்ளை! அதினுடைய இஷ்ட சந்தோஷத்தை யனுசரித்தே நாம் நடக்கவேண்டும். 'கடைசியில் தாய் தந்தையர்கள் என்னை இந்தமாதிரி இழவில் இழுத்து விட்டார்கள்' என்று சொல்வதற்கு இடம் வைத்துக் கொள்ளக்கூடாது! தேவகியின் விருப்பத்தைத் தீரவிசாரித்து, அவளுக்கு விருப்ப முள்ள கணவனெவனோ அவனுக்கே விவாகஞ்செய்து வைக்க வேண்டும். அவளுக்கு இஷ்டமில்லாதவனுக்கு கட்டிக் கொடுத்து, அவள் வாழ்நாளைப் பாழ் நாளாக்கக் கூடாது" என்று தெய்வானை யம்மாள் தமையனை நோக்கி மிகவும் ஒய்யாரமாய்ச் சொல்லி முடித்துக் கணவனைப் பார்த்தாள்.

"இந்த ஏற்பாடு நிச்சயமாய் விட்டதா" என்று கனகசேகரம் குறிப்பாய்க் கேட்டார்.

"இல்லை இல்லை! பேச்சு வார்த்தையில்த் தான் இருக்கிறது" என்று சுகந்தசீலன் விரைவா யுரைத்தார்.

"அந்த விஷயம் ஒருமாதிரித்தான்" என்றார் கனகசேகரம்.

"எனக்கு அந்தச் சடங்கில் விருப்பமில்லை. தேவகிக்கும் விருப்பமில்லையென்று நான் நன்றாயறிவேன். இனி உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச்செய்யுங்கள்" என்று தமையனிடந் தன் எண்ணத்தை வெளியிட்டாள் தங்கை.

இதைக்கேட்ட சுகந்தசீலன் சற்று யோசித்து, தன்னுடைய எண்ணம் மாறுபட்டிருக்கிறதே என்று நினைத்து "உங்களுடைய விருப்பத்தையும் நீங்கள் என் புதல்விக்கு நியமித்திருக்குங் கணவனையும் என்னிடஞ் சொல்லுங்கள். அவ்விஷயம் என் செல்வப் புதல்விக்கு விருப்பமாயிருந்தால் எனக்குஞ் சம்மதமே" என்று தங்கையையும் மைத்துனனையும் தக்கபடி கேட்டார்.

ஆஹா! அவ்விஷயத்தில் தேவகிக்குப் பூரணசம்மதமுண்டென்பது நான் திடவரமாயறிவேன்" என்று தெய்வானையம்மாள் தமையனை நோக்கி உறுதிமொழியுரைக்குஞ் சமயத்தில், வெளிக்கதவில் யாரோ தட்டுகிற சத்தம் எல்லாருடைய காதிலுங்கேட்டது.

கதவில் தட்டியதைக்கேட்ட கனகசேகரம் விரைவில்சென்று கதவைத்திறந்தார். சுந்தரராஜன் உள்ளே வந்தான். சுந்தரராஜனைக் கண்ட கனகசேகரம் ஆனந்தங்கொண்டு, "என்ன தம்பீ எவ்விதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்" என்று கேட்டுக்கொண்டே இருவரும் ஹாலுள் வந்தார்கள்.

"தாசன் மாமா" என்று சுந்தரராஜன் சுகந்த சீலனை நோக்கி ஒரு கும்புடு போட்டான்

"நல்லது! வா அப்பா! என்னவிதமாய் ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்" என்று சுகந்தசீலன் சுந்தரராஜனை நோக்கி ஆவலுடன் கேட்டார்.

"அரசாங்கத்தாருக்கு அறிக்கை கொடுத்திருக்கிறேன். துப்பாக்கிகளைக் கையில்கொடுத்துச் சிப்பாய்களை அனுப்புவதாக ஒப்புக் கொண்டார்கள். நாமும் அவர்களோடு மணிக்கம்பி தோட்டத்துக்குச் சென்று கள்ளர்களைக் கொன்று கன்னிகையை மீட்டுவர வேண்டியது தான்" என்று சுந்தரராஜன் சுறுசுறுப்பாய் உரைத்தான்.

மணிக்கம்பி தோட்டத்துத் திருடர்கள் தான் வனசுதாவைத் திருடினார்கள் என்பதை எப்படி நம்பலாம். உண்மையையறியாது நாம் வீண்காரியம் செய்வதில் யாதுபலன் என்றார் சுகந்தசீலன்.

"ஆமாம்! பக்கத்து வீட்டுப் பார்வதியம்மாளுடைய நகைகளுந் துணி மணிகளும் அப்படியே கொண்டுபோய் விட்டார்கள" என்றார் கனகசேகரம்.

"யாரோ இருவராம்! நீலகண்டன் கோலகண்டனென்ற பெயராம். இவர்கள் மர்மத்தைத் தெரியப் படுத்தினதாக நான் கேள்விப்பட்டேன்" என்று சுந்தரராஜன் சூக்ஷுமமாய் உரைத்தான்.

"என்ன! என்ன" என்றார் கனகசேகரம்.

"எப்படி! எப்படி! என்றார் சுகந்தசீலன்.

"எப்போ! எப்போ!'' என்று சொல்லிக்கொண்டே எதிரே போடிவந்தாள் தெய்வானையம்மாள்.

"அவர்களிருவரும் மணிக்கம்பி தோட்டக்குத் திருடர்கள்கூட சவகாசஞ்செய்துவந்தவர்களாம் வனசுதாவைத் திருடிக்கொண்டுபோன சேதியும் அறிவார்களாய்'' என்றிவ்வாறு சுந்தரராஜன் கூறியதைக் கேட்ட யாவரும் ஆச்சரியப்பட்டு வாயில் விரலைவைத்தார்கள்.

"உனக்கெப்படித் தெரியும்'' என்றாள் தெய்வானையம்மாள்.

"உனக்கு யார் சொன்னது'' என்றார் கனகசேகரம்.

"உண்மையா பொய்யா? என்பதை நாம் எப்படியறிவது'' என்று சுகந்தசீலன் ஆலோசித்துக் கூறினார்.

"அது உண்மையே அதற்குச் சந்தேகம் அணுவளவுங் கிடையாது'' என்று சுந்தரராஜன் உறுதியாய்க்கூறி எல்லாரையும் பார்த்தான்.

இவ்வாறாக இவர்கள் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் திடீரென்று கதவு திறக்கப்பட்டு உள்ளேயொருவ னோடிவந்தான். வந்தவனைக்கண்ட சுந்தரராஜன் மிகவும் ஆவலுடன் அவனைநோக்கி "என்ன ஹயாத்ஹான்! என்னவிசேஷம் என்ன சொன்னார்கள்!'' என்று விரைவுடன் கேட்டான்.

"ஐயா! அவங்க எல்லாந் தயாராயிருக்கிறாங்கோ! உங்களை யல்தி வரச்சொன்னாங்கோ!'' என்று பதி

னுரைத்து முகத்திலுள்ள வியர்வையைத் துவாலையால் துடைத்தான்.

இதைக்கேட்ட மூவரும் ஒருவரையொருவர் பார்த்து "நாமெல்லாந் தயாராயிருக்கிறோம்! நீ விரைவில்சென்று அவர்களை இவ்வழியாக வரச்சொல்லு! நாங்கள் தயார்! சீக்கிரம்! போ" என்று மூவரும் மாறிமாறி யுரைத்து வந்தவழியே துலுக்களை வாயு வேகத்துடன் போகச்செய்தார்கள்.

துலுக்கன் போனதும், மூவருமெழுந்து சிற்றுண்டி யருந்திவிட்டுப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் ஒழுங்காய்ச்செய்து முடித்துப் பட்டாளத்தின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள்.

"இப்போது நேராக மணிக்கம்பி தோட்டத்துக்குத்தான் போகவேண்டுமோ" என்று சுகந்தசீலன் குறிப்பாய்க்கேட்டார்.

"ஆமாம்! மணிக்கம்பி தோட்டத்துத்திருடர்களை நாசமாக்கிவிட வேண்டுமென்று அரசாங்கத்தார் மிகவும் ஊக்கமா யிருக்கிறார்கள். அதனால்தான், துப்பாக்கிகளையும் பீரங்கிகளையுந்துடுத்து..ன் கொடுத்து பட்டாளத்தைப் பக்குவமாய் அனுப்புவதற்கு ஒப்புக் கொண்டார்கள்." என்று சுந்தரராஜன்கூறி சுகந்தசீலனை நோக்கினான்.

"சங்குச் சத்தங்கேட்கிறது! நம்பெற் ஊதுகிறார்கள்," என்று கனகசேகரம் அவசரமாயுரைத்தார்.

வந்துவிட்டது பட்டாளம்! வனசுத விலாஸ் எதிரே வரிசையாய் நின்றுவிட்டது! குதிரையின்மேல் ஆயிரம்பேர். கால்நடையில் பதினாயிரம்பேர். பட்டாளத்தைக்கண்ட மூவரும் எழுந்து வேகத்திலோடி வந்து கப்ரினுக்கு வந்தனமளித்துப்பின் தமக்கென்று தயாராய்க் கொண்டுவரப்பட்ட மூன்று குதிரைகள் மேல் மூவரும் ஏறிக்கொண்டு மணிக்கம்பி தோட்டத்தை நோக்கி விரைவாய்ச் சென்றார்கள்.

ஒன்றுமறியாத ஊர்ச்சனங்களெல்லாம் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறு பேச வாரம்பித்தார்கள்

“யாரோ ஒரு அரசன் கொடுங்கோல் செலுத்திக் குடிகளுக்குக் கோரம் விளைக்கிறானாம். அவனைப் பிடித்து உக்கிரமம் செய்யப்போகிறார்கள்” என்றான் ஒரு வழிப்போக்கன்.

“இல்லையையா! சண்டை என்னமோ சடுதியில் உண்டாய்விட்டது! அதுக்காகத்தான் பட்டாளமெல்லாம் அப்படி யப்படியே நீட்டிய துப்பாக்கிகளுடன் நேராய்ப்போகிறது” என்றான் வேறொருவிறுதாசாமி.

“ஊரைப்பிடிப்பதற்கு யோராய் போகிறார்கள்” என்றான் நடுத்தெருவு நாராயணசாமி.

வேகத்தில் சென்ற பட்டாளம், பட்டணத்தைத் தாண்டி காட்டுக்குள் செல்லுகிறது ஹா! ஹா! என்னவென்று சொல்வோம்! எதெனவுரைப்போம்! நாட்டுப்புறத்து நாகரீகமற்றஜனங்கள் படும்பாட்டை “ஈசனே! நேசனே! வாசனே! போசனே! என்செய்வோம்! எங்கே

ஓடுவோம்! எங்கேயொளிப்போம்! ஐயையோ! அப்பாடா! சண்டைக்காரர்! துப்பாக்கிகளு மீட்டிகளுங்கொண்டு, நம்மையெல்லாஞ் சுட்டுத்தொலைக்க வருகிறார்கள்! பகவானே! தெய்வமே உனக்கென்ன குற்றஞ்செய்தோம்! என்ன குறை விட்டோம்! அதோ பாருங்கள் கொள்ளை கொள்ளையாய்ச் சிப்பாய்கள் வெள்ளை வெள்ளையான குதிரைகள் மேலேறித் துள்ளித்துள்ளித் துடுக்குடன் வருகிறார்கள்! காட்டுக்குள் நுழைவோம்! மரங்களி லேறிக்கொள்ளலாம்! மலைமேல் பதுங்கிக்கொள்ளலாம்! வாருங்கள்! வாருங்கள்! வாட்டமில்லாம லோட்டம் பிடிக்கலாம்! காட்டை நோக்கிக் காற்றாய்ப் பறக்கலாம்! மலையைத்தேடி மான் போலோடலாம்! புலி யடித்தாலும் அடிக்கட்டும்! ஓநாய் கடித்தாலும் கடிக்கட்டும்! பாம்புதீண்டினாலுந் தீண்டட்டும்! சிறுத்தை பீறினால் பீறட்டும்! ஐயோ! கடவுளே! யார்செய்த கொடுமைக்காகப் போர்புரிய வருகிறார்கள்! ஏழைகளாகிய எங்களை ஏழாட்டங் காட்ட வருகிறார்கள்! ஆடுமாடு வீடுவாசல் பெண்டிர் பிள்ளை உற்றார் பெற்றார்! ஒருவரும் வேண்டாமெனக்கு! என்னுயிர் தப்பினால்போதும்! நான் ஜீவனோடிருத்தல்போதும்.'' என்றிவ்வாறாக நாட்டுப்புறத்து ஜனங்களெல்லாம் நாயைக்கண்ட முயல்களைப்போல், வாயில்வந்தபடிக் கூக்குரலிட்டுக் கொண்டு, காட்டு மார்க்கமாய் ஓட்டம்பிடித்தார்கள்.

கடைக்காரன் கடையைப் பூட்டாதெழுந்தோடினான்! சந்தையிலிருந்த ஜனங்களெல்லாம் சாமான்களை அப்படி யப்படியே விட்டோடினார்கள்! மாட்டைக்

கொண்டு போனவன் நடுத்தெருவில் விட்டோடினன்! ஆடுமேய்த்தவன் அப்படியே விட்டுத் தக்கபடி யோடி ஞன்! வயலுழுது நின்றவன் கலப்பையையும் எருதுகளை யுங் கட்டினபடியே விட்டோடினன்! நெல்லுக்குத்தின பெண்களெல்லாஞ் சொல்லாமல் ஓட்டம் பிடித்தார் கள்! கன்னிகைப் பெண்களெல்லாம் நாணத்தை விட் டுக் கோணுது ஓடினர்கள். கிழவிகளெல்லாந் தட்டுத் தடுமாறித் தத்தளிக்கிறார்கள். ஸ்நானஞ் செய்திருந்த வர்களெல்லாம் நிர்வாணமா யோடினர்கள்! சாப்பிட் டுக் கொண்டிருந்தவர்களெல்லாங் கையை யுதறிக் கொண்டே காற்றுய்ப் பறந்தார்கள்! தூங்கி யெழுந்த வர்களெல்லாந் திகைத்து விழித்து எலலாருமோடுவ தைக் கண்டு தாமுமோடுகிறார்கள்! குழந்தைகளெல் லாம் அலறி யழுகிறார்கள்! சிசுக்களெல்லாம் வீரிட்டுக் கத்துகின்றன! ஆடு மாடுகள் கத்துகின்றன! நாய்கள் குலைக்கின்றன! கோழிகள் கொக்கரிக்கிறது! குருவிகள் வீச்வீச்சென்று கத்துகின்றன! இவ்வாருக அக் கிரா மத்திலுள்ள ஜனங்களெல்லாம் பிராண பயத்துடனேட் டம் பிடித்ததும் யாவும் அலங்கோலமாயிற்று. ஓடிப் போன ஜனங்கள் படுமுபத்திரவத்தை யாராலெடுத்துக் கூறமுடியும். ஓடியோடிச் சிலர் வாடி விழுகிறார்கள்! காலில் கல்லடித்துக் கறணம் போடுகிறார் சிலர்! ஐயோ முள்ளு நட்டுக்கொண்டதே யென்று குந்திக் கொள்ளு கிறார்கள் பலர்! வரம்பு தடக்கி விழுந்து வயலில் புரளு கிறார் சிலர்! வாய்க்காலில் விழுந்து சேற்றிலமிழ்ந்து கிறார் பலர்! மரங்களிலேறி மகா வேகமா யொளிக் கிறார்கள் சிலர்! பள்ளத்தாக்குகளில் துள்ளிக் குதிக்

11

கிறார்கள் பலர்! மலைமேலேறி மயங்கி விழுகிறார்கள் சிலர்! மரங்களிலிருந்து தவறி விழுகிறார்கள் பலர்.

இவ்வாறாக இந்த ஏழை ஜனங்கள் தத்தளித்துத் தடுமாறித் தவித்தோடுவதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் தூரம் நோக்கிப் பார்த்துக்கொண்டு வந்த சுகந்தசீலன், மற்றவர்களை நோக்கி "இந்தக் கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு என்னவோ ஆபத்து எப்படியோ உண்டாய் விட்டது!" என்றார்.

இதைக்கேட்ட சுந்தரராஜன் "ஆமாம்! அதோ பாருங்கள் ஜனங்களையெல்லாம்! நாய்க்கூட்டங்களுடன் வரும் வேடர் கூட்டங்களைக்கண்ட மான் கூட்டத்தைப் போல், பருண்டு விழித்து வெருண்டு திகைத்தோடுகிறார்கள்." என்று சொல்லி எல்லாரையும் நோக்கினான்.

"புலிகள் நுழைந்து வெருட்டி விட்டனவோ? கரடிகள் சென்று கடிக்க நின்றனவோ? ஓநாய்கள் சென்று ஓட்டி விட்டனவோ? என்ன வென்பது தெரியவில்லையே? அவர்களில் யாரையாவது கூப்பிட்டால், சங்கதியைத் தெரிந்து நம்மாலான உதவி செய்யலாம்!" என்று கனகசேகரம் மிகவுங் கவனமாயுரைத்தார்.

"எல்லா ஜனங்களும் மந்திக் குரங்குகளைப்போல் மலை மேலும் மரங்கள்மேலு மேறிக் கொண்டபின், யாரைக் கூப்பிடுவது! எவரை விசாரிப்பது!" என்று சுந்தரராஜன் மற்றவர்களை நோக்கிச் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"நீர் தான் இதற்கெல்லாந் தகுந்தவர்! உம்முடைய குதிரையை வேகமாய் செலுத்தி அவர்களிடஞ் சென்று, என்ன ஆபத்து எவ்வித முண்டாயிற்றென்பதைக் கேட்டறிந்து வாரும், பின்னால் நாமெல்லாமதற்கு வேண்டியதைச் செய்து அவர்களுடைய சஞ்சலத்தைத் தீர்க்கலாம்." என்று சுந்தராஜனை நோக்கிச் சிரித்துக்கொண்டே கப்ரின் கூறினர்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட சுந்தராஜன், தன் குதிரையைக் காட்டு மார்க்கமாகச் செலுத்தி மிக வேகமாய்ச் சென்றான். சுந்தராஜன் காட்டு மார்க்கமாக வருவதைக்கண்ட ஜனங்களுக்குப பயமதிகரித்து, முன்னிலும் விரைவாக ஓட ஆரம்பித்தார்கள். மரங்களிலிருப்பவர்கள் விழுந்தெழுந்தோடினார்கள். மலையிலிருந்தவர்கள் மகா பயங்கொண்டு எல்லாருமொரே குரலாய் "சுவாமி நாம் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை! நம்மை கொல்ல வருவது தர்மமா" என்று அச்சத்தின் மிகுதியால் அலறிய வார்த்தைகள் சுந்தராஜன் காதில் நன்றாய்ப்பட்டது. இதைக்கேட்ட சுந்தராஜன் மிகவும் பரிதாபப்பட்டுத் தன் குதிரையைத் திருப்பி விரைவாகப் பட்டாளத்தில் வந்து சேர்ந்தான்.

"என்ன சங்கதி அறிந்து வந்தீரா?" என்றார் கப்ரின்.

"அதை யென்னவென்று சொல்வேன்" என்றான் சுந்தராஜன்.

"என்ன! என்ன! சொல்லு" என்றார் சுகந்த சீலன்.

"ஒன்றுமில்லை! அவர்கள் நம்மைக்கண்டு பயந்து நாட்டைவிட்டுக் காட்டுக்குள் நுழைந்தார்கள்" என்று சுந்தரராஜன் எல்லாரையும் பார்த்துச் சொன்னான்.

"ஐயோ பாவம்! அறியாத ஜனங்களை அவஸ்த்தைக்குள்ளாக்கினோமே" என்றார் கனகசேகரம்.

"இவர்கள் அநாகரீக ஜனங்கள். விசேஷ புத்தி கிடையாது! படிப்பில்லாதவர்கள்! கிணற்றுத் தவளையைப்போல், தம்முடைய ஊரே பிரபஞ்சமென்று நினைத்திருப்பார்கள். நாகரீக ஜனங்களை யிவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். சட்டம் பிரமாணமொன்றுந் தெரியாதவர்கள். பட்டாளம் வருவதைக்கண்டு பயந்தோடி யொளித்தார்கள் போலிருக்கிறது," என்றார் சுகந்தசீலன்.

"சரி நேரமாகுது நாம் குறித்தவிடத்திற்குபொழுது போக முன்போய்ச் சேரவேண்டும்." என்று கப்ரின், சொன்னதைக் கேட்ட யாவரும் வேகத்தில் குதிரைகளை யோட்டிச் சென்றார்கள்.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## பதினொன்றும் அத்தியாயம்.

மணியும் ஆறாய்விட்டது! எல்லாருமெழுந்து விட்டார்கள். தூங்கி யெழுந்ததும், நீலகண்டன் ஜெய வீரசிங்கனை நோக்கி, "தம்பி நீங்களிருவரு மிங்கே யிருங்கள். நாங்களிருவரும் நாட்டுக்குப் போய்ச் சந்தைகடையில் சாமான்கள் வாங்கிக்கொண்டு சடுதியில் வந்து விடுகிறோம்." என்று சொல்லிவிட்டுக் கோல கண்டனையுமழைத்துக்கொண்டு போய்விட்டான். இவர்கள் போனபின் ஜெயவீரசிங்கனும், சித்திராங்கனுகிய சிங்காரவதனியும் சிறிது நேரமங்குமிங்குமாக வுலாவிக் கொண்டிருந்து பின்னொரிடத்தி லுட்கார்ந்துகொண்டு சித்திராங்கனை நோக்கி ஜெயவீரசிங்கன், "தம்பி! உன்னைப் பார்க்கும்போதெல்லாம் மென்மனம் புண்ணுகிறது! உன் மீதிலெனக்கு மிகவும் அன்புண்டாகிறது! அதன்காரணமென்னவென்று தெரியவில்லை" என்றான்.

இதைக்கேட்ட சுந்தரவதியானவள் சந்தோஷங்கொண்டு "எனக்கு மவ்வாறே உங்கள் மீதில் அளவிறந்த அன்பும், ஆசையும், நேசமுமுண்டாயிருக்கிறது, அது என்றென்றும் நிலைத்திருக்குமென்று பூரண நம்பிக்கை கொண்டு, என் மனம் அளவில்லாத ஆனந்தமடைகிறது" என்று மெல்லிய குரலில் சொல்லி முடித்தாள்.

"தம்பி! உன்னுடைய விருத்தாந்தத்தை என்னிடஞ் சொல்லு, உனக்கு என்ன உதவி வேண்டுமானாலுஞ் செய்வதற்குத் தயாராயிருக்கிறேன். நமக்குச்

சூக்ஷவாசஷ்னை செய்துவருமிந்த மனிதரிருவரும் யார்? இவர்களை நீ எவ்விதமறிவாய்? உன்னுடைய வூரெங்கே? உன் தாய் தந்தையரெங்கே? யாது காரணத்துக்காக இவர்கள் கூட்டத்தில் சேர்ந்தாயென்பதை யென்னிடத்தில் சொல்லு" என்று ஜெயவீரசிங்கன், பையனாகிய பாவையை நோக்கி மெய்யுருகிப் பரிதாபங்கொண்டு மிகவும் நயந்து கேட்டு நன்ருய்ப் பார்த்தான்.

இதற்கென்ன பதில் சொல்வதென்றறியாத கன்னிகையானவள் சிறிது தயங்கி "நீங்களிங்கே யெப்படி வந்தீர்கள்? இந்த மனிதரிருவரையு மெப்படி யறிவீர்களென்பதைப் பற்றி யறிவதற்காக நான் மிகவுமாவலுடனிருக்கும்போது, நீங்களென்னைக் கேட்ப தெனக்காச்சரியத்தை விளைவிக்கிறது" என்று சொன்னாள்.

"அமெரிக்காவிலிருந்து, நானும் இன்னுமிருவர்களும் ஆகாய விமானத்திலேறி வரும்போது, இக்காட்டுக்கு நேராக வந்ததும், விமானம் பழுதுபட்டுக் காட்டுக்குள் விழுந்துவிட்டது, என்னுடன் வந்த இருவரும் மடிந்து விட்டார்கள். தெய்வ சங்கல்பத்தால், நான் தப்பிப் பிழைத்துப்போக வழி தெரியாது தவித்து நிற்குஞ் சமயத்தில், ஓர் புலியைக்கண்டு பயந்தோடி வரும்போது, இவ்வீட்டைக் கண்டு, களைப்பு மிகுதியாலும், இருட்டாயிருந்தபடியாலு மிந்தத்திண்ணையில் படுத்துத் தூங்கினேன், மறுநாட் காலையி லியமனிதர்களிருவருமென்னை யெழுப்பி விட்டார்கள். மாலையில் வரும்போது, உன்னையுங் கொண்டு வந்தார்கள்! இதுவே என் விருத்தாந்தம்," என்று ஜெயவீரசிங்கன், ஆண் வேஷங்

தரித்த அரிவையும், தன் ஆருயிற் காதலியுமாகிய வன சுதாவை நோக்கிக் கூறினான்.

இதைக்கேட்ட வனசுதா ஏங்கித் தவித்து "ஐயையோ! தெய்வமே! நானென்ன புண்ணியஞ் செய்தேனோ? உங்களுக்கிவ்விதமான யிடையூறுகள் நேரிடவும்! நான் உங்களை யிக்காட்டில் சந்திக்கவும்? எனக்கு உங்கள் மீதிலளவில்லாத அன்பை யுண்டாக்கவும்! எல்லாம் தெய்வத்தின் திருவிளையாட்டே!" என்று வனசுதா கூறிக் கண்ணீர் சொரிந்தாள்.

இவ்வாறு துக்கப்படுங் கன்னிகையை யறியாத ஜெயவீரசிங்கன், ஆச்சரியங்கொண்டு "இதென்ன எங்கேயோவிருந்து எப்படியோ வந்து சேர்ந்த அன்னியனான இவ்வாலிபன் எனக்காக இவ்வளவு துக்கங்கொண்டு கண்ணீர் சொரியவேண்டிய காரணமென்ன" என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு வனசுதாவை நோக்கி "தம்பீ சித்திராங்கா நீ எதற்காக இவ்விதம் துக்கப்படுகிறாய்! எனக்காக யிவ்விதம் துக்கிக்க வேண்டிய காரணமென்ன?" என்று மிகவும் அன்புடன் கேட்டான்.

"நான் பூரண அன்பு வைத்துள்ள வொருவருக்கு இவ்விதம் துன்பம் நேரிட்டால் நான் துக்கப்படவேண்டியது தானே?" என்று வாலிப வேஷங்கொண்ட வனசுதா வுரைத்தாள்.

"நீ யாரென்பதெனக்குத் தெரியாது! நான் யாரென்பதுனக்குத் தெரியாது! இவ்வித சந்தர்ப்பத்தில் உனக்கு எவ்விதம் என்மீதில் அவ்வளவு அன்புண்டாயிற்று?" என்று ஜெயவீரசிங்கன் மிகவுமிரக்கத்துடன் கேட்டான்.

"நாமிருவரும் இக்காட்டைவிட்டு நீங்கி உங்களுடைய வீட்டை யடைந்து, சுகமாயிருக்கும் சமயத்தில், இதற்கெல்லாங் காரண மென்னவென்பதைத் தெளிவாகச் சொல்லுகிறேன் இப்போது சொன்னால் நம்பமாட்டீர்கள்" என்று வனசுதா சிரித்துக்கொண்டே யுரைத்தாள்.

"மிகவுஞ் சந்தோஷம் தம்பி! நீ என் வீட்டுக்கு வந்து என் கூடவே யிருக்கலாம்! ஆனால், இம்மனிதர்களிருவரு முன்னை விடுவார்களா? உன் தாய் தந்தையர் சம்பதிப்பார்களா?" என்று ஜெயவீரசிங்கன் சிறிது ஆலோசித்துக் கேட்டான்.

"என்னுடைய விருப்பத்தைத் தடைசெய்வதற்கு யாரால் முடியும்? உங்களை யிவ்விடத்தில் கண்டது முதலாக, எனக்குண்டாயிருக்கு மன்புக்கு அளவில்லை! நான் உங்களை விட்டு அரை நாழியும் பிரியமாட்டேன். நீங்களங்கு சென்றாலு முங்களுடன்கூட நானும் வருவதற்குச் சித்தமாயிருக்கிறேன். விண்ணைவிட்டு வன் பிரிந்தாலும், கண்ணைவிட்டு மணிபிரிந்தாலும், பண்ணைவிட்டுப் பாப்பிரிந்தாலும், மரங்களைவிட்டு நிழல் பிரிந்தாலும் உங்களைவிட்டு நான் பிரியமாட்டேன். இது

வுண்மையான வார்த்தை திண்ணமாயுரைக்கிறே னென்றறியுங்கள்" என்று வனசுதா ஜெயவீரசிங்கனை நோக்கி, யுறுதியாக வுரைத்தாள்.

"தம்பி! நீ கூறிவந்த பிரகாரம், என்றும் பிரியாதென்னுடன் வாழ்வதற்கு, என்னுருயிர்க்காதலியும் என்னுயிரினிருப்பிடமுமாகிய, என் அம்மான் குமாரத்தி வனசுதா, மிகவுமேக்கத்துட னெதிர் பார்த்திருக்கிறாள். அவள் என்னை நோக்கி யிவ்விதம் சொல்லுவாளாயின், ஆகா! தம்பி! அவளை யெடுத்தென் மடிமீதி நத்தி மார் போடணைத்து, அவளை யெவ்விதம் முத்தமிட்டு நேசித்துப் பாசித்திருப்பேனென்பதை வாயாலுரைக்க முடியாது" என்று ஜெயவீரசிங்கன் மனமுருகி யுரைத்தான்.

இதைக்கேட்ட வனசுதா, ஆனந்தங்கொண்டு தன் தன் காதலனாகிய ஜெயவீரசிங்கனை நோக்கி "உங்கள் காதலியின்மேல் அவ்வளவு, அன்பு வைத்திருக்கிறீர்களா? அவ்விதம் அன்பு பாராட்டத் தகுந்தவளா? என்று விரைவாய்க் கேட்டாள்."

"ஆகா! அழகிலோ அவளுக்கிணையுள்ள பெண் அகிலத்திலில்லை! குணத்திலோ! அவள் குணம் மிகவும் விசேஷமானது! நடையோ, அன்னநடை! இடையோ, இறகிய யிடை! நகையோ, முத்து நகை! மொழியோ, தத்தைமொழி! உடலோ, கோமளவுடல்! ஜடையோ, அடர்ந்து வளர்ந்த அழகிய கூந்தல்! இதழோ, பவளவிதழ்! கண்களோ, இருண்ட விழிகள்! ஒயிலோ, மயில்போலொயில்! குரலோ, குயில்போற்

குரல்! மூக்கோ, கச்சிதமானது! நாக்கோ, சிறிய நாக்கு! கன்னமோ, ரோஜாமலர்போலிருக்கும்! பல்லோ, சிலாபமுத்தும்! அவள் பல்லுக்கு நிகராக மாட்டா! தோற்றமோ, கொஞ்சுங் கிளிமொழி அஞ்சுகம் போலிருப்பாள்." என்றிவ்வாறாக ஆறுதலையுடனிருக்கும் வனசுதாவை யறியாத ஜெயவீரசிங்கன், அவளைப் புகழ்ந்துரைத்தான்.

இவ்வாறாகத் தன்னைத்தன் காதலன் புகழ்ந்துரைத்ததைக் கேட்ட வனசுதா, அளவில்லாதானந்தங் கொண்டு, தான் யாரென்பதைத் தன் காதலனுக்கு வெளியிடலாமாவென்று நினைத்தாள். "ஐயையோ! என்மீதிலிவ்வளவு அன்பு வைத்திருக்குமெனதுருயிற் காதலர், என்னை யிக்கோலத்துடனறிவாராயின், என்ன சம்பவிக்குமோ! கடவுளே யறிவார்! நான் இப்போது சொல்லக்கூடாது! இன்றைக்கு மிவ்விதமிருப்போம். நாளைக்காலையில், நான் யாரென்பதை வெளியிடுவோம்" என்றிவ்வாறாகத் தீர்மானித்துக்கொண்டு, ஜெயவீரசிங்கனை நோக்கி "நீங்கள் சொல்லிய லக்ஷணங்கள், அவ்வளவு சிறந்தவைகளாகக் காணப்படவில்லையே! பெண்களுக்கரிய பிரதானமான லக்ஷணங்கள் வேறே யனேகமுண்டு!" என்றாள்.

"எங்கே கொஞ்சம்சொல்லு கேட்கலாம்" என்று ஜெயவீரசிங்கன் மிகவுமாவலாய்க் கேட்டான்.

"கணவனுக்கினியவளாய் மிருது பாஷினியாய், மிக்கக் கமலநிக ரூபவதியாய், நோய், பழியில்லாதபேர்

கால்வழியில் வந்தவளுமாய், மணமிக்க நாணமடமச் சம் பயிற்பென்னுங் குணமினிய மார்க்கவதியாய்! மாமி மார்க்கினியவளாய்! தன் வாசல் வருவிருந்தோம்புபவ ளாய்! இணையில்லா மதியுடையவளுமாய்! நன்சொல் வழி நிற்பவளுமாய்! ரதியைப்போல் லீலா விநோதங் கள் புரிபவளுமாய்! அன்னிய புருஷரைக் கண்ணெடுத் துப் பார்க்காதவளுமாய்! அயல் வீடு செல்லாதவளு மாய்! அனுவசிய வார்த்தைகளில் கலக்காதவளுமாய்! வீண் வம்புக்காரிகளுடன் சினேகஞ் செய்யாதவளுமாய் கொண்டானே தெய்வமெனக் கொண்டொழுகுபவளு மாய்! எப்பொழுதும் தேகசுத்தி யாத்மசுத்தி யுடைய வளுமாய்! வீண் வேடிக்கைகளை யெல்லாம் விரும்பாத வளுமாய்! கற்பென்னும் விலையில்லா மாணிக்கத்தைக் கருத்துடன் காத்துக் கொள்பவளுமாயிருப்பவ ளெவ ளோ அவளே உத்தமி யெனக் கூறலாம்." என்றிவ்வா றாக வனசுதா சொன்னவைகளைக் கேட்ட ஜெயவீரசிங் கன். சந்தோஷங்கொண்டு, "தம்பி! நீ சொன்னது வாஸ்தவமே! ஆயினும். என் கண்மணியானவள்! இவ்விதக் குணங்கள் யாவும் பூரணமாய் நிறைந்து விளங்கும் ரத்தினக்கட்டி யென்றறிவாய்" என்றான்.

"நீங்கள் அவள்மீது கொண்டிருக்கும் அளவில் லாக் காதலானது! அவளை யிவ்விதம் புகலச் செய்கி றது" என்று சுந்தரவதி சுளுகா யுரைத்தாள்.

"இல்லைத் தம்பி! நீ யவளை நேரில் பார்த்தால் தான் நம்புவாய்! நான் என்ன சொன்னபோதிலும், நீ

நம்பமாட்டாய்" என்று ஜெயவீரசிங்கன் சமாதானங் கூறினான்.

"நீங்கள் என்னிடத்தில் சொன்ன விஷயங்களை அவளிடத்தில் சொல்வீர்களானால் உங்களை நன்றாய் ஏமாற்றுவாள்" என்றாள் வனசுதா.

"என் கண்மணி! என்னை ஏமாற்றுவாளா? நீ சொல்வது தப்பு" என்றான் ஜெயவீரசிங்கன்.

"பெண்களை நம்ப முடியாது! ஒரு நாளைக்காவது அவள் உங்களை ஏமாற்றுவாள்! அத்தருணத்தில் நான், உங்களுக்குப் பிரத்தியக்ஷமாய்ச் சொல்லுகிறேன்! என்ன விஷயத்திலவளுங்களை ஏமாற்றினளென்பதைப் பற்றி" என்று வனசுதா தன் காதலனுடன் சொல்லிக் கொண்டிருக்கும்போது அவனுடைய முகம் வாட்ட முற்று ஏதோ ஆழ்ந்தகவலையடைந்தவன்போல் காணப் பட்டான். இதைக் கண்ட பெண்மணி தவித்து உங்க ளுக்குத் திடீரென்று துக்க முண்டானதின் காரண மென்ன" என்றாள்.

"என் காதலியின் ஞாபகம் என் மனத்தை வருத்து கிறது, பெற்றோருடைய எண்ணமுமதனுடன் சேர்ந்து என் அகத்தை வருத்துகிறது" என்று ஜெயவீரசிங்கன் மிகவுந் துக்கத்துடன் சொன்னான்.

"அவர்களைப் பற்றித் துக்கப்படுவதி லென்ன சுகம்.!

அதுவு மன்றி தூக்க மென்பது பெரும் பிசாசு, அதற்கு இடங்கொடுத்தால் மடம்பிடுங்கு மென்பது போல் தூக்கத்துக்குக் கொஞ்ச மிடங் கொடுத்தால், உங்களையும் விழுங்கி என்னையும் விழுங்கி ஊரிலுள்ளாரனைவரையும் விழுங்கிக் கடைசியில், ஏப்பமும் விடும்! ஆதலால் தூக்கத்துக் கிடங் கொடுக்கக் கூடாது. சிறிது சந்தோஷமாயிருங்கள்" என்று வனசுதா மிகவுமுருக்கமாய்க் கூறினாள்.

"என் கண்ணாட்டி யென் பக்கத்திலிருப்பாளாயின் நான் எவ்வளவு சந்தோஷத்துட னிருப்பேனென்பதைப் பகவானே யறிவார்! உன்னைக் கண்டது முதலாக என் எண்ணமெல்லா மவளையே நாடுகிறது! அவளுடைய சாயல் ஏறக்குறைய உன்னைப்போலே தானிருக்கும்! அதுவே யெனக்குத் துக்கத்தை யளவில்லாதுண்டாக்குகிறது" என்று ஜெயவீரசிங்கன் சிறிது யோசித்துக் கொண்டே கூறினான்.

"நாமிருவருமிங்கிருந்து தப்பிக் கொள்வோமானால், உங்களுடைய காதலியிடஞ் சென்று இனிய வார்த்தை பேசி ஆனந்தித்திருக்கலாமே! இங்கிருந்து துக்கப்படுவதி லுபயோகமில்லை! ஆதலால் காட்டை விட்டுப்போவதற்கு ஏதாவதுபாயஞ் செய்யவேண்டும்." என்று கன்னிகையானவள் கடிதிற் கூறினாள்.

"என்ன செய்வதென்று தான் யோசிக்கிறேன். எனக்கொன்றும் புலப்படவில்லை" என்றான் ஜெயவீரசிங்கன்.

"தலைவிதிபோல் நடக்கும்" என்றாள் கன்னிகை.

"எல்லாந் தலைவிதிபோல் நடக்குமென்று நினைத்துச் சுகமாக வோரிடத்தில் படுத்திருந்தால், ஆகவேண்டிய காரியங்களெல்லாந் தலைவிதி செய்து முடிக்குமா?" என்று ஜெயவீரசிங்கன் சிறித்துக்கொண்டே கேட்டான்

"அப்படியல்ல! முயற்சி செய்ய வேண்டும், அதோடுகூட விதியுமுதவி புரியும்" என்றாள் வனசுதா.

"முயற்சிசெய்தால் விதி யென்னத்திற்கு! முயற்சிக்குத் தக்கவாறு செய்கைகளுமனுகூலமாகும்! முயற்சியைக்கொண்டும் புத்தி கூர்மையைக்கொண்டும் உலகத்திலெவ்வளவு விஞ்ஞானங்கள் ஏற்பட்டிருக்கிறது! கடலில் கப்பலோடுவதும், ஆகாயத்தில் விமானம் பறப்பதும், மோட்டார்வண்டி மிக விரைவாயோடுவதும், புகைவண்டி அதிவேகமாய்ச் செல்வதும், எல்லாம் முயற்சியால்தான். இதை யெல்லாமாலோசிக்குமளவில் விதியென்பது வேறெங்கேயோ போய்விடுகிறது! மதி எதிரே நின்று மகா தாண்டவமாடுகிறது! உலகத்தில் எவ்வளவோ அதிசயங்களிருக்கின்றன. அவைகளைப் பற்றி யுனக்கு நன்றாய்க் கற்றுக்கொடுக்கிறேன்." என்றிவ்வாறாக இருவரும் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், வீட்டினுள்ளிருந்தோர் சத்தங் கேட்டது. சத்தத்தைக் கேட்ட இருவரும் ஆச்சரியப்பட்டு, வீட்டண்டை பார்த்தார்கள். ஒன்றுந் தென்படாததால், வீட்டின்திருந்தையில் அங்குமிங்குமாக வுலாவிக் கொண்டிருந்தார்கள். உலாவுஞ் சமயத்தில் ஜெயவீரசிங்கன், கதவு பூட்டியிருக்கிறதா, அல்லது திறந்திருக்கிறதா? என்றறிய வேண்டித் தன் கையால் கதவை யழுத்தின

தும், உடனே கதவு திறக்கப்பட்டது. கதவு திறக்கப் பட்டதும் ஜெயவீரசிங்கன் மிகவுமாச்சரியப்பட்டு, வன சுதாவை யழைக்க அவளும் வந்து பார்த்துப் பயப் பட்டு, "இது பாழடைந்த வீடு. இதனுள்ளில் பேய் பிசாசுகளிருக்கும், கதவைச் சாத்தி விடுங்கள்" என்றாள்.

இதைக் கேட்டதும் ஜெயவீரசிங்கன், சிரித்து "என்ன தயபீ! இவ்விதம் பயப்படுகிறாய்! உன்னைப் போலொத்த வாலிபர்களுக்குரிய தைரியம் உன்னிடத் தில் காணப்படவில்லையே? நாமிருவருமிந்த வீட்டினுட் பிரவேசித்து, இதிலென்ன இருக்கிறதெனபதை யறிய லாம் வருகிறாயா?" என்றான்.

அவன் வேண்டுகோளுக்காக வனசுதா தைரியங் கொண்டு சம்மதிக்க, இருவரும் வீட்டினுள் புகுந்தார் கள். உள்ளே யோர் விசாலமான மண்டபமும அத னுள்ளில், அனேக காலங்களுக்கு முன் வைக்கப்பட் டுள்ள மேஜை நாற்காலிகள் யாவுமப்படியப்படியே யிருந்தனவாயினும், எல்லாம் பூச்சி புழுக்களாலரிக்கப் பட்டுச் சீரளிந்திருந்தன! சலவைக் கற்களால் செய்யப் பட்ட அனேக விதமான சிலைகளுமங்கே யங்கு மிங்கு மாகக் கிடந்தன. கருங்கற்சுவரில் செய்யப்பட்டுள்ள விசித்திர வேலைகள் யாவையுங் கண்ணுற்றுக் களித்தார் கள். இவ்விதமாக விருவருமங்கு பாழடைந்து கிடக் கும் அபூர்வமான சாமான்கள் யாவையுமூக்கத்துடன் கண்ணுற்றுவருஞ் சமயத்தில் சுவரினோர் பாகத்திலோர் சிறிய கதவு காணப்பட்டது. கதவைக்கண்ட வனசுதா,

ஜெயவீரசிங்கனை நோக்கி, "இதோ பாருங்கள்! இங்கே யொரு கதவிருக்கிறது! இதையுந் திறந்து பார்க்கலாமா? என்று கேட்க, ஜெயவீரசிங்கன், உன்னால்முடியுமானால் திற" என்றான். உடனே வனசுதா தன் கையாலழுத்தினதும் கதவு சுலபமாய்த் திறபட்டது. இதுவோர் சிறிய அறையாயும் மிகவுமிருட்டாகவு மிருந்தது! இதைக்கண்ட வனசுதா முதலில் பயப்பட்டுப் பின்னொருவாறு துணிந்து, உள்ளே பிரவேசித்தாள்.

"ஆஹா! இது என்ன அதிசயம்! இது என்ன கொடுமை! இவ்விதமாகத் தெய்வமுபத்திபவத்தால், உயிர் பிழைப்பதெப்படி! இது என்ன கோரம! நமது கதாநாயகியும் கண்ணிய ரூபலாவண்ய சௌந்தரியுமாகிய வனசுதா அறையினுள்ளே சென்றவுடனே, திடீரெனக் கதவு சாத்திப் பூட்டப்பட்டது! ஐயையோ! இதுவென்ன கஷ்டகாலம்! இவ்விதமான இடையூறுகள், மாறிமாறி யொரு மங்கையை வருத்திவருமாயின், அவள் உயிர் தரிப்பாளா, ஆத்மா நிலைக்குமா? தேகம் சகிக்குமா? மெல்லினமான தேகத்துடனுமிருதயத்துடனுங்கூடி மல்லிகைப் போன்ற மங்கையற்கரசியாகிய வனசுதா, இவ்விதமான இன்னல்களுக்காளாகி, எவ்விதம் மனம் பொறுத்திருப்பாள். அருமையான பெற்றாருடன் அகங்களித்திருந்து, ஆசையுள்ள தம்பியுடன் நேசமாய் விளையாடி, வீட்டுக்கோர் விலையில்லாத ஆபரணம் போலவும், பார்ப்பவர்கள் கண்ணுக்கு, ஆருதலைவிளைத்தும் எல்லாருக்குமோர் இரத்தினக்கட்டி போலிருந்து வந்தவளைக் கள்ளர்கள் சென்று தூங்குஞ் சமயத்தில் கொள்ளையடித்துக் கொண்டுபோய்ப் பேய்க்குப்

வெளியிடவேண்டி மிகவும் ஊக்கத்துடனிருந்தது யாவருக்குந் தெரிந்தவிஷயம். ஏதோ தெய்வானுக்கிரகத்தால், இச்சேதியை நீலகண்டனுங் கோலகண்டனுமறிந்து 'பெண்ணென்றால் பேயுமிரங்கும்' என்பதுபோல் அவளுடைய அழகிய ரூபலாவண்யத்தைக்கண்டு மனமிரங்கிக் கொலை செய்வதற்கிஷ்டமில்லாதவர்களாய்க், தமக்குத் தாரை வார்த்து தத்தஞ்செய்து கொடுக்கும்படி தம்மவர் தலையினைக் கேட்க, அவன் அவ்விஷயத்தில் விருமபாததினால், விரோதஞ் செய்துகொண்டு வெளியே சென்று, உபாயமாகப் பெண்ணை மீட்டு, உயிர் பிழைக்கச் செய்ததுமன்றி, அவளுடைய காதலனையுங் கண்டு களித்திருக்கச் செய்தார்கள்.

ஆஹா! எவ்விதம் ஆனந்தித்திருப்பாள். எவ்விதம் சந்தோஷித்திருப்பாள். தன் காதலனைக் காட்டிலே கண்ணாரக் கண்டபோது! அவன் அவளையாரென்று அறியாமல் அவள்மீதுள்ள காதலைதன்மனதார வெடுத்துரைத்தபோது, அவள் அகங் களித்து, ஆனந்தித்து! எல்லாக் கஷ்டங்களையும், சகல துக்கங்களையும் மறந்து. பரமானந்தத்துடன், தன் காதலனுடைய மனதைப் பலவாறு கப் பரிசோதித்துக் கொண்டிருந்தவளுக்குக் கடைசியாக இவ்விதமான ஆபத்து நேரிட்டால், அவள் எவ்விதம் சகிப்பாள்! செத்தாளோ! பிழைத்தாளோ! கடவுளொருவர் உண்டாயிருந்தால், அவரே அறிவார். அவளுடைய தற்கால ஸ்திதியை.

கதவு மூடப்பட்டதும், ஜெயவீரசிங்கன் அதிக பயங்கொண்டு, யார் பூட்டியதென்றறியாது தவித்து

அங்குமிங்கும் பார்த்தான், வனசுந்தரைவைக் காணவில்லை, "தம்பீ சித்திராங்கா! கதவை ஏன் சாத்திக் கொண்டாய்" என்று சொல்லிக்கொண்டு கதவண்டைபோய்த் தன் கைகளால் பலமாய்த் தள்ளினன். உள்ளே பூட்டப்பட்டிருந்தது. தன்னாலியன்றமட்டும் பலமாய் தள்ளிப் பார்த்தான். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. "தம்பீ சித்திராங்கா! சித்திராங்கா! என்று கூப்பிட்டான். பதில் கிடைக்கவில்லை. எவ்வளவு உரத்துச் சத்தஞ் செய்தபோதிலும், மறுமொழி கிடைக்கவில்லை. இவ்வாறிருக்கக்கண்ட ஜெயவீரசிங்கன் ஏங்கித் தவித்து "ஐயையோ! ஆருமில்லாத இந்தப் பாழடைந்த வீட்டில், இவ்விதமான அதிசயமுண்டாவதன் காரணமென்ன? பூதங்கள் வாசஞ் செய்யும் வீடோ? பேய்கள் வசித்துவருங் களரியோ? இங்கே பேய் பிசாசுகளிருக்கின்றன! அதற்கு அணுவளவுஞ் சந்தேகமில்லை! அழகுள்ள வாலிபர்களைக் கண்டால், பிசாசுகள் இஷ்டப்படுமென்பது வுண்மையே! இவனுடைய இணையற்ற ரூபத்தைக்கண்டு, இங்குள்ள பிசாசுகள் அவனைப் பங்கப்படுத்திவிட்டன போலிருக்கிறது! பிசாசுகள் பெலியெடுத்துவிடுமா? ஐயோ தெய்வமே! இதென்ன திருக்கூத்து! நீ இவ்விதம் ஏழைகளை வதைப்பது தர்மமா? யார்பெற்ற பிள்ளையோ? அவனுடைய பெற்றூர் அவனை எவ்வளவு அருமையாக வளர்த்து வந்தார்களோ! என்ன அழகு! என்ன அறிவு! என்ன அருமை! என்ன விசேஷ குணம்! என்னுருயிற் காதலியின் சாயல் அவனிடத்தில அப்படியே அமைந்திருந்ததே! அவனுடைய முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் என்

மனம் ஆறுதலடைந்திருந்ததே! என்மீதில் அவன் எவ்வளவு அன்பு பாராட்டி யிருந்தான். என்னைவிட்டுப் பிரிவதில்லையென்று திட்டஞ் செய்திருந்தானே! ஐயையோ! இவ்வளவு அருமையான சிநேகிதனைப் பறிகொடுத்து நான் எவ்வளவு பாவியா யிருப்பேன். இதென்ன அனியாயம்! பிசாசுகள் இவ்விதமான கோஷ்டங்கள் செய்யுமா? "பேயுமில்லைப் பிசாசுமில்லை வாதமுமில்லைப் பூதமுமில்லை, எல்லாம் மனதின் தோற்றம். அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பிசாசு, பயந்தவன் கண்ணுக்குப் பார்த்தவிடமெல்லாம் பேய். பேய் பிசாசுகளுக்குச் சொரூபமில்லை, அஞ்சினவன் மனதிலெவ்விதம் நினைக்கிறானோ, அது போலவே அவனெதிரில் தோற்றப்படும்" என்று சிலர் வீண் வாதம் புரிகிறார்களே, இப்போது நான் நேரில் கண்ட காட்சிக்கு யார் உத்தரம் சொல்வார். இதை யொக்க அமெரிக்காவில் பிரொவெஸர்-வெஸ்ட், நிபுணர் பேய் பிசாசுகளுண்டு அவைகளை நம் கண்ணால் காணக் கூடும். என்று சொல்வதுமன்றி, அனேகம் பிசாசுகளையும் அனேகம் இறந்துபோன மனிதர்களையும் படம் பிடித்து வைத்துப் பக்குவமாய்க் காட்டுகிறார். இது மட்டுமா? ஒரு தினம், அவருந் தன்னுடைய சிநேகிதர்களும் ஒரு வட்ட மேஜையைச் சுற்றி யுட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது, சிறந்த பரிமளத்தோடு கூடிய அனேகவிதமான புஷ்பங்கள் மேஜைமேலே கொண்டுவந்து போடப்பட்டதைக் கண்டு எல்லாரு மாச்சரியப்பட்டு, எங்கிருந்து வந்ததென்றறியாமல், ஏக்கங்கொண்டு பூவைத் தொடுவதற்குப் பயந்து, அதை

ஆச்சரியத்துடன் நோக்கிக் கொண்டிருக்கும்போதே மறுபடியும் பூக்கள் மாயமாய்ப் போய்விட்டது. இதைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் பிசாசு உண்டென்று நம்பினார்கள். அதுபோலவே நானும் இப்போது நம்பினேன்.'' என்றிவ்வாறு நினைத்துக் கொண்டு, அங்கு தங்க இஷ்டமில்லாதவனாய், மனம் போனவாறு காட்டு மார்க்கமாய் நடக்கலானான்.

# பன்னிரண்டாம் அத்தியாயம்.

சேனைகள் சென்று மணிக்கம்பி தோட்டத்தை வளைத்துக்கொண்டது. திருடர்களுடைய குடிசைகளைச் சூழ்ந்து கொண்டது. குடிசைகளிலுங் குகைகளிலும் ஒருவருமில்லாது காலியாயிருப்பதைக் கண்டு மிகவுந் தைரியத்துடன், திருட்டுச் சொத்துகளையும் பணங்களையு மெடுத்துக் கொண்டார்கள் திருடர்களொருவரையுங் காணாமையால் சிறிதுதயங்கி, அங்குமிங்குமாகப் பார்த்துக்கொண்டு வருஞ் சமயத்தில், சற்றுத் தூரத்திலொரு தீவட்டி வெளிச்சம் தென்பட்டது. வெளிச்சத்தைக் கண்டதும் அதன் நேராகச் சந்தடி செய்யாமல் நடந்தார்கள்.

இந்தச் சமயந்தான், சாமியாடினவன் திருடர்களையாவரையும் வெருட்டிவிட்டுத் திரும்பி வந்துட்கார்ந்தான். இவனுடைய அகோர ரூபத்தையும், அங்கே சிந்திக் கிடக்கும் பூக்கள், பழங்கள், கள்ளுக்குடங்கள், யாவையும் பார்த்து அதிசயங் கொண்டார்கள். சிப்பாய்களைக் கண்டதும், சாமியாடினவன் தத்தளித்துத் தடுமாறி அஷ்டதிக்கும் பார்த்துப் பிரமித்து விழிக்கிறான். "ஐயையோ நான் செய்தது மோசமாய்ப் போய் விட்டதே, நான் அவர்களை வீணே வெருட்டியதால், என்னுயிருக்குச் சேதம் வந்து விட்டதே அவர்களிருந்தால், தாங்களிறந்தாலும் என்னைக் காப்பாற்றிக் கொள்வார்களே!" என்று திருட்டுச்சாமி மனதில் நினைத்து, மருண்டு விழித்துக்கொண்டு எழுந்தோடினான். ஓடினதும் எதிரே வந்த சிப்பாய்கள் கையிலகப்பட்டுக் கொண்டான்

ஒருவனாவது அகப்பட்டானே என்று சிப்பாய்கள் ஆனந்தங்கொண்டு, அவனை மிகவும் பந்தோபஸ்துடன், தங்களுடைய எஜமானாகிய கப்ரினிடத்தில் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

திருடனொருவன் அகப்பட்டான் என்றறிந்த கப்ரின் மிகவும் சந்தோஷங்கொண்டு, "இவனிடத்தில் எல்லா உண்மைகளுங்கேட்டறியலாம்" என்று நினைத்து அவனைத் தன் எதிரில் கொண்டுவந்து நிறுத்தும்படி கட்டளை யிட்டார். அப்படியே சிப்பாய்கள் கப்ரின் எதிரில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். திருடனைக் கண்டவுடன் கப்ரினுக்குத் திடீரென்று வந்துவிட்டது கோபம், கண்கள் சிவந்தது, விழிகள் பரந்தது, மீசை துடித்தது, ஓசை கடுத்தது, நாகம்போல் சீறி நன்றாய்ப் பார்த்தார் திருடனை! பல்லைக் கடித்தார், முகத்தைச் சுளித்தார், இருபிக்கனைத்தார், செருமிமுடித்தார், துள்ளி யெழுந்து துடிக்குடன்வந்து கள்ளனை நோக்கிக் கடுகடுத்துச் சொல்லுகிறார் "அடே! கள்ளர்களில் குள்ளனே! காப்பிலித் தலையா! காட்டுமிராண்டிப்பய லே! நீ உள்ளது உள்ளபடி ஒன்றும் ஒளிக்காமல் சொல்லாவிட்டால் உன்னை உலையி லிட்டுக் காச்சி விடுவேன்! பொய்யென்பது நீ பேசுவா யானால், உன்னைக்கத்தியால் வெட்டிச் சித்திரவதை செய் திடுவேன்! துவக்கால் உன்னை இலக்காய்ச் சுடுவேன்! பீரங்கியால் உன்னைக் கோரங்கு வெடி வைப்பேன்! ஆகவே, அடே! கருங்குரங்குபோலுள்ள பெருங் குரங் குக் கள்ளா! கரடிபோலொத்த பிடரித்தலையா! இரத்தக் கண் படைத்த இரணியப் பயலே! காப்பிலிபோன்ற

வேப்பிலைச்சாமீ! ஆகவே! நீ எனக்குப் பயந்து நடுநடுங்கி நான் கேட்கப்போகுங் கேள்விகளுக்கெல்லாம், அணுவளவும் மறைக்காது கடுகளவு மொளிக்காது, வெட்ட வெளிச்சம், பட்டப்பகல் போல், என்னிடம் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், உன்னை ஆட்டாக ஆட்டம் அறுபத்தெட்டாட்டமு மாட்டிப் பகுத்தாக பாகு பதினெட்டும் படுத்தி விடுவேன்! ஆகவே, கள்ளப்பயலே! திருட்டு ஜெகஜில்லி! நீ உள்ளதை யெல்லாம் ஒன்று மொளிக்காது அப்படியப்படியே, செப்ப வேண்டும்." என்று கப்ரின், காரத்தைக் காட்டிக் கோரத்தைமூட்டித் தீரதையோடு பேசி முடித்தார்.

இவ்விதங் கப்ரின் வெருட்டி யுருட்டினதைக் கேட்டதும் கள்ளச்சாமிக்கு, ஒருபாதி ஜீவன் சரிபாதியாய்ப் போய்விட்டது! என்ன உய்வான்! தத்தளிக்கிறான் தடுமாறுகிறான், நிற்கச் சக்தியற்றுச் சோர்கிறான், கள்ளினாலுண்டான சக்தி யெல்லாங் காற்றாய்ப் பறந்துவிட்டது. கால்மணி நேரத்தின் முன் ஆயிரந் திருடர்களை வெருட்டியோட்டின சாமியானவன், இப்போது கப்ரின் கையிலகப்பட்டுக்கொண்டு படும் அவஸ்தையைக் கண்ணுற்றால், எவருக்கும் மனமிரங்காதிராது! திருடர்களை யெல்லாம் வெருட்டி யோட்டினதும், சாமியைப் பிடித்துக் கொண்டது அஷ்டமத்துச்சனியன். என்ன செய்வான்! ஏங்கித் தவிக்கிறான்.

மறுபடியும் கப்ரின் திருட்டுச் சாமிக்கெதிரே வந்து "அடே! திருட்டுக்கொட்டே! நான் கேட்குங் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவாயா? என்று இரைந்து கொண்டே கேட்டார்.

இப்போது திருட்டுச்சாமி ஒருவாறு தைரியங் கொண்டு பதில்சொல்ல ஆரம்பித்து "சுவாமிக்கு என்ன ஒன்னுமின்னாலும், அப்புடி அப்புடியே சொல்றேன்." என்று சொல்லி ஒரு கும்புடு போட்டான்.

"என் கேள்விகளுக்கெல்லாம் உண்மையாகப் பதில் கூறவேண்டும்! பொய் சொல்லுவாயானால் உன் உயிர் தப்பாது" என்று மறுபடியுங் கப்ரின் ஒரு அதட்டதட்டினார்.

"ஆண்டவருக்கு, ஒனுமுண்ணதெல்லாம் ஒளிக்கமெல் சொல்றேன்! கேக்குறதுக்கெல்லாம் வாக்குவதில் சொல்றேன்! என்னே கொல்லாமே ரச்சிக்கணும்! சுவாமீயுங்க! என்ரே ஓயிர் கிடைச்சாபோதும் எனக்கு! என்று திருட்டுச்சாமி மிகவும் பணிவாகக் கப்ரினை நோக்கிக் கெஞ்சிக் கேட்டான்."

"அடே! இங்கேயுள்ள திருடர்கள் யாவரும், எங்கே போயிருக்கிறார்களென்பது நீ அறிவாயா?" என்று கப்ரினவர்கள் கர்வித்துக் கேட்டார்.

"நல்லெணும் அறிவேன் சாமீ" என்றான் திருடன்

"திருடர்களெல்லாம் எங்கே யிருக்கிறார்கள்' என்று கப்ரின் கடோமாய்க் கேட்டார்.

"இந்தக் காட்டில், அந்தப்புறத்தில் இருக்குறாங்கோ" என்று கள்ளச்சாமி உள்ளதைக் கூறினான்.

"யாதுப் காரணம்பற்றி அங்கு சென்றார்கள்' என்று கேட்டார் கப்ரின்.

இப்போது கள்ளச்சாமி முன்னிலும் சற்றுத் தைரியங்கொண்டு, கப்பினையும் மற்றுமுள்ளவர்களையும் நோக்கி "சுவாமீயுங்க! நான் சொல்லுறதை கொஞ்சம் கவனமா கேயுங்க—நான், திருடனுங்களுக்கெல்லாம் குருக்கேள். என்னை எல்லாரும் கொலதெய்வம் எண்ணுசொல்லி கும்புடுவாங்கோ! நான் சுவாமீயைப்போலே, ஆடி ஓடி, அட்காசம் செய்வேன், அவுங்கௌல்லாம் என்னைப்பாத்து பயெந்து வேண்டிக்குவாங்கோ? அப்போ எனுக்கு இட்டமுள்ளதெல்லங் கேப்பேன், என்ன கேக்கிறேனோ, கொணந்து தர்வாங்கோ! தமாசாக இருக்கோவிரும்பினா! வேடியா இருக்கோ இட்டப்பட்டா? வீரபெலிதரெணும் நரபெலிதரெணும்! எண்ணுகேப்பேன். அப்புடியேஇண்ணு நரபெலிதாறமெண்ணுசொல்லி, ஏய்ச்சுபூட்டாங்கோ! என்னை! அயகுள்ள பொண்ணு! கன்னிகேப் பொண்ணு! ஆப்புட்டிருக்குது! சுவாமிக்கு பெலி தாரோம் இண்ணுங்கோ! — என்றிவ்வாறாகத் திருட்டுச்சாமி சொன்னதைச் சொல்லி முடிப்பதற்குள் சனகசேகரம் எதிரேவந்து "அடே பாவிப்பயல்களே! என் குழந்தையைக் கொன்றுவிட்டீர்களா?" என்று திருட்டுச்சாமியை நோக்கி, உரத்த சத்தத்துடனும் பெருத்த துக்கத்துடனுங் கேட்டார்.

"பெண்ணைக் கொன்று, பெரும்வேடிக்கை செய்தீர்களாடா, பாவிப்பயல்களே" என்று கப்பின் கடுகடுத்துக் கூறித் துப்பாக்கியை யெடுத்துத் துடுக்குடன் நீட்டினார்.

"பெண்ணைக்கொன்று விட்டீர்களா" என்று ஆச்சரியமிகுதியால் அவசரமாய்க் கேட்டான் சுந்தரராஜன்.

"சொல்லடா சொல்லு! சீக்கிரஞ்சொல்லு! உள்ளதைச் சொல்லாவிட்டால், ஒரு நொடியில் சுட்டுத்தொலைக்கிறேன் பார்" என்று மறுபடியுங் கப்பின் மகா கோரத்துடன் மருட்டியதைக் கண்ட, கள்ளச்சாமி, பயந்து நடு, ங்கி வாய்குழறி, எல்லாரையும் பார்த்து "பொண்ணே பெலி தாரேமென்னுங்கோ! அப்புறம், பொண்ணே கண்ணிலேகூடக் காணோம்! எங்கேயோ ஓடிப்பூட்டுது! எண்ணுங்கோ வூடெல்லாம் தேடினுங்கோ! காடெல்லாம் ஓடினுங்கோ! ஆப்புடயில்லே ஆண்டவனே என்று படபடத்துக்கொண்டே சொல்லி முடித்து மருண்டு விளித்தான்.

இங்கே நடந்தவைகள் யாவையும், மிகவும் ஊக்கத்துடனும், அதிக நோக்கத்துடனுங் கவனித்திருந்த சுகந்தசீலன், இப்போது திருட்டுச்சாமியின் முன் வந்து, அவனை நன்றாய் உற்றுநோக்கி "திருடர்களெல்லாம் பெண்ணைத் தேடப்போயிருக்கிறார்களா?" என்று கேட்டுச் சிறிது நிதானித்து நின்றார்.

"பெண்ணு பெலிதாறமென்னு என்னை வச்சுப் பூட்டாங்கோ! நான் கோவங்கொண்டு, கள்ளைக் குடிச்சு, துள்ளிக்குதிச்சு, சாடிவிளுந்து கோஸ்டம் செஞ்சு, வாளை எடுத்து, வெட்டறேன், குத்தறேன், என்னு சொல்லிக்கொண்ணு வேடிக்கையாக வெளியே வந்தேன். என்னைகண்டதும், எல்லாரும் பயந்து ஓடிப் பூட்டாங்கோ! நானு திரும்ப வந்து என்ரெ எடத்திலே ஒக்காந்திருக்கும்போ, நீங்கவந்து புடிச்சுக்கிண்ணீங்க." என்று திருட்டுச்சாமி உள்ளது யாவற்றையும், ஒழுங்காய்க்கூறி முடித்தான்

இவ்வாறாகத் திருட்டுச்சாமி யானவன் கூறியதைக்கேட்டு, எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள். கள்ளர் கையினின்றும் மகள் தப்பிக் கொண்டாள் என்று நினைத்துக் கனகசேகரம் மிகவும் ஆனந்தங் கொண்டார்

“இனிமேல் என்ன செய்வது!” என்று கப்ரின், எல்லாரையும் நோக்கி உல்லாசமாய்க் கேட்டார்.

“திருடர்களின் குடிசைகளுக்குத் தீமூட்டவேண்டியதுதான்! அகப்படுந் திருடர்களையெல்லாஞ்சுட்டுத் தொலைக்க வேண்டியதுதான். இனிமேல், இத் திருடர்களால் ஊர் ஜனக்களுக்கு ஒரு விதமான இடையூறும் நேரிடாதிருக்கும்படி, செய்யவேண்டும்.” என்று சுந்தரராஜன் சுறுசுறுப்பாய்க் கூறினான்.

“சரி! சரி! அப்படியே ஆகட்டும்” என்றார் கப்ரின்.

சாமியாடினவன் வெருட்டிய வெருட்டுக்குப் பயந்தோடின திருடர்கள், இருட்டிலே போகவழி தெரியாமல், மரத்துடன் மோதுண்டவனும், பள்ளத்தாக்கில் விழுந்தவனும்! முள்ளுப்புதரில் சாடினவனுமாய், அவஸ்தைப் பட்டார்கள். முடிவில் சுவாமி யாடினவன் திரும்பிவந்து உட்கார்ந்ததைக் கண்டதும் சற்றுத் தைரியங்கொண்டு, எல்லாரும் ஓரிடத்தில்வந்து சேர்ந்து, சாமியிடத்தில் போவ தெப்படியென்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது முடுக்கன் எழுந்து மட்டியை நோக்கி “சாமியின் கோபாவந் தணியட்டும். ஆட்டம் நின்

டட்டுது! ஓட்டம் ஒடுங்கியிட்டுது! கொஞ்சம் பொறுத்தால், சாமிசந்தோச மாயிருக்கும், அப்போநம்பளெல்லாம் பூகலாம்!'' என்றான்.

''சுவாமிக்கு கோவம் தணிஞ்சுட்டுதெடா! நீ மொதலிலே சாமியண்டைபோய் சமாதானம் பண்ணெடா! நம்பளெல்லம் பின்னாலே வர்ரோம்.'' என்று முடுக்கனை நோக்கி மட்டி சொன்னான்.

''ஆமாண்டா, நீ முன்னேபூடா, சாமியண்டை போய் சாட்டாங்கம் பண்ணெடா?'' என்று கள்வர்த் தலைவனுங் கவனமாய்க்கூறி முடுக்கனைப்பார்த்தான்.

இவ்வாறாகக் கள்வர்த்தலைவனும் மட்டியும், மாறி மாறிச் சொன்னதைக் கேட்டவுடன், முடுக்கன், சாமியிருக்கு மிடத்தைநோக்கி விரைவாய் நடந்து வந்து, சாமி அங்கில்லா திருப்பதைக்கண்டு, சுற்றுப் பக்கங்களில் பார்த்து அங்கில்லாத தைக்கண்டு குடிசையை நோக்கி நடக்கலானான். இவன் வருவதைக்கண்ட சிப்பாய்கள் சந்தடிசெய்யாமல் அவன் பின்னே சென்று பிடித்துக் கொண்டார்கள்.

அகப்பட்டுக் கொண்டதும் முடுக்கன் படும்பாடு இவ்வளவவ்வளவல்ல! வலையில்பட்டமானைப்போல் மருண்டு திகைத்துத் திமிறுகிறான். தப்பிக்கொள்வதற்கு, எவ்வளவோ எத்தனங்கள் ஏராளமாய்ச் செய்கிறான். ஒன்றும்பயன் படவில்லை. மாறிமாறி இடியுங் குத்தும் தாறுமாறாகக் கொடுத்துக் கைகால்களைப் பெலமாய்க் கட்டி, கப்பின் எதிரில்கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கப்ரின் எதிரில்கொண்டு வரப்பட்ட முடுக்கன், முன்பே கைதியாக்கப்பட்டுள்ள சாமியின் நிலைமையைக் கண்டு மனம்நடுங்கி "ஐயையோ! நம்பகொலத்துக்கு நாசகாலம் வந்துவுட்டதே, நான் அண்ணுசொன்னேன் அவங்களண்டை வேண்டாம், வேண்டாம் மிண்ணு, கேக்காது பூட்டாங்கோ! சவுனிக்காது வுட்டாங்கோ! என்று வாய்விட்டலறி சாமி யிடங் கூறினன்.

"அடே! சத்தம்! மூச்சு! பேச்சு! நம்பெண்டிரு!" என்று கப்ரின் கடோமாய்க் கூறிக்கொடூரமாய்க் கண்ணை விழித்தார்.

அடே! உன் கூட்டத்தா ரெல்லாமெங்கே? என்று சுகந்தசீலன் விரைவாய்க் கேட்டார்.

"அவங்க ளெல்லாம் இந்தக்காடில் ஒருபுறமாய் இருக்கிறாங்கோ" என்றான் முடுக்கன்.

"உன்னுடைய பெயரென்ன" என்றார் கப்ரின்.

"என்னோபேரு முடுக்கேன்" என்றான் முடுக்கன்.

இதைக்கேட்ட யாவருஞ் சிரித்து முடுக்கனை நோக்கி இன்னு பலவிதமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இங்கே யிவ்வாறாக, சாமியிடஞ்சென்று சமாதனஞ் செய்வதாகச் சொல்லிப்போன, முடுக்கன் திரும்பி

வராததால், கள்ளர் தலைவன், பயங்கொண்டு, மட்டியை நோக்கி, "அடே! மட்டி! முடுக்கனை இன்னுங் காணோம், நீ விரைவாகப்போய் சங்கதியைத் தெரிஞ்சு வா" என்றான்.

கள்ளர்தலைவன் சொல்லியதைக் கேட்ட, மட்டி எழுந்து விரைவாய் நடந்து வந்து, சாமிருக்கு மிடத்தைச்சுற்றிச் சுற்றிப் பார்த்து அங்கே ஒருவரு மில்லா திருக்கக் கண்டு, அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு நின்றான். பட்டென்று ஒரு அடி அவன் தலைமேல் விழுந்தது. சித்தங்கலங்கிப், பித்தும் பிடித்தவனாய், உள்ள பயத்துடன், கொள்ளைப் பயம் சேர்ந்து, அவனைத் தொல்லைப்படுத்த, என்ன செய்வதென்று தெரியாது, தடுமாறி நிற்கும்போது, பக்கத்தில் நின்ற சிப்பாய்கள், அவனைப்பக்குவமாய்ப் பிடித்துக்கொண்டுவந்து, கப்ரின் எதிரில் விட்டார்கள்.

கண்டதும், கடூரமான கப்ரின் திடீரென் றெழுந்து மட்டியெதி ரில்வந்து, "அடே! உன்னுடைய கூட்டாளிகளெல்லாம் எங்கேயிருக்கிறார்கள்? நீ எதற்காகத்தனியேவந்தாய்? உள்ளதைக்கள்ள மில்லாதுசொல்லிவிடு, இல்லாவிட்டால், உன்னைத் துப்பாக்கியால் தப்பாமல் வெடி வைத்துக்கொன்று விடுவேன்." என்று தீரமாய்க் கூறிக்கோரமாய் முடித்தார்.

இதைக்கேட்ட மட்டி நடுநடுங்கி, எல்லாரையும் நோக்கி "சுவாமீயுங்களே! தேவுங்களே! நான் சொன்றதை நம்புங்கோ! நம்பமனுசாளுங் களெல்லாம்,

அதோ அந்தப்புறத்திலே குந்திக்கொண்டிருக் கிறாங்கோ! என்று பட்டிமிசனரை வாய்க்கூறி முடித்தான்.

"எங்களுடன் வந்து, அவர்களிருக்கு மிடத்தைக் காட்டுகிறாயா?" என்றார் சப்ரின்.

"அப்படியே காட்டுகிறேன், சுவாமீ யுங்களுக்கு" என்று பட்டி அழுதாற்போல சொன்னான்.

"உன் பெயரென்னடா" என்றான் சுந்தரராஜன்

"பட்டி ச,! சுவாமி!" என்றான் மட்டி.

"நல்லபெயர், நீ மிகவும் புத்திசாலி யாகத்தான் காணப்படுகிறாய், அதிருக்கட்டும், திருடர்களிருக்கு மிடத்திற்கு எங்களையெல்லாம், அழைத்துக் கொண்டு போகிறாயா?" என்று கனகசேகரம், கடுங்கோபத்துடன் கேட்டார்.

"அப்படியே செய்கிறேன்" என்றான் மட்டி.

இதைக்கேட்ட சப்ரின் கடிதிலெழுந்து, எல்லாரையும் நோக்கி, "திருடர்களைப் போய்வளைத்துக்கொள்ளலாம்! காலதாமதம் வேண்டாம். தயாராகுங்கள்!" என்றார்.

முதலில் சிப்பாய்களை அனுப்பலாம், ஆனவரைக்கும், உயிருடன் பிடிக்கலாம், பின்னால் துப்பாக்கியை யுபயோகிக்கலாம! என்றார் சுகந்தசீலன்.

"சிப்பாய்களைக் கண்டவுடன். ஓட்டம் பிடிப்பார்கள் திருடர்களெல்லாம், அப்பால் ஒருவனையும் பிடிக்க

முடியாது! சுற்றிவளைத்துக்கொண்டு, குண்டுப்பிரயோ
கம் செய்ய வேண்டியதுதான்." என்றார் கப்ரின்.

"உம்முடைய விருப்பம்போல் செய்யும்" என்
றான் சுந்தரராஜன்.

"அப்படியே! ஆகட்டும்! எல்லாருந் தயாராகுங்
கள்! சோல்யர்கள், சிப்பாய்கள்! சீராய் நடவுங்கள்!
முடுக்கன் முன்னேநட! மட்டிபின்னே நட, சுவாமி
நடுவே போ! வழியைக்காட்டுங்கள், துப்பாக்கியை
நீட்டலாம்!" என்று கப்ரின் கூறி, எல்லார் மனத்தை
யுமெழுப்பிவிட, கள்ளரைத்தேடி எல்லாரும் மெள்ள
நடந்தார்கள்.

சாமியிடத்தில் சென்று சமாதானஞ்செய்துவருவ
தாகச் சொல்லிப்போன, முடுக்கனும், மட்டியும், திரு
ம்பி வாராததைக்கண்ட, கள்ளர்த்தலைவனுக்குப் பயம்
அதிகரித்து அவன் மனத்தை வருத்திற்று. என்ன
செய்வதென்றறியாது ஏங்கித்தவிக்கிறான். அப்படி
யிப்படித்திரும்பி. நாலுபக்கமும் நன்றாய்ப்பார்த்து!
கிடைச்சது கொடாதவனை நோக்கி "அடே கிடைச்
சதுகொடாதவா! அவங்காண்டு பேரும், சாமியண்டை
போயி, இன்னும் வரலெயே! சுவாமி அவங்களை
சம்மாரம் பண்ணிட்டுதோ! என்னமோ! எனக்குச்
சந்தேகமாயிருக்குது. நம்பள் இப்போ என்னசெய்ய
லாம், எங்கேபோகலாம்? எண்டு சொல்லுங்கடா,
பாக்கலாம்!" என்று அதிக ஆலோசனை யுடன்கேட்டு
அனைவரையும் நோக்கினான்.

"நம்பளெல்லாரும் ஒண்ணாய்க்கூடி சுவாமியண்டை பூகலாம், அப்புறம், சுவாமி என்னுசொல்லு திண்ணுபாக்கலாம்!" என்றான் கிடைச்சது கொடாதவன்.

"அப்புடி வேண்டாமெடா! அது நன்னாயிருக்காது! நம்பளெல்லாரும். நம்பளை ஆடுங்கயுக்குப்போயி நல்லெலனும் ஒறங்கலாம். காத்தாலைக்கு கோயிகூவுது! பாருங்கோ! அப்போ எயிந்து சாமியண்டை பூகலாம்! அதுதான் நெல்லெதெண்ணு நான் நெனைக்கிறென். நீங்க என்னெசொல்றீங்க?" என்று பிடிச்சது விடாதவன், எல்லாரையும் நோக்கிக்கேட்டு, என்னபதில் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தான்.

"அப்புடித்தான் செய்யெலாம்! வாங்கெடா பூகலாம்! தூக்கெம்வந்து, தொங்கெறேசெய்யிது! எளும்புங்கெடா! வாங்கெடா! என்று அவசரங்காட்டி, கள்வர்த் தலைவன், யாவரையும் மழைத்தான்.

இதைக்கேட்ட யாவரும் எழுந்து, குடிசைகளை நோக்கிவரிசையாய் நடந்தார்கள்.

திரள்திரளாகத் திருடர்கள் வருவது, தேடிச்செல்லுஞ் சிப்பாய்கள் கண்களில் திடவரமாய்த்தென் பட்டது. திருடர்கள் வருவதைக்கண்ட கப்பரின், துப்பாக்கிப்பிரயோகஞ் செய்யும்படி சைகைசெய்தார்.

பட், பட், டும், டப், டிப், என்று துப்பாக்கிச்சத்தம் ஏகமாய்ப்பரவியது! "கேஜ்லைபிட்" என்னும்

சூரியகாந்தி விளக்கை, கப்ரின் சடிதில்போட்டார். குண்டுப் பிரயோகத்துடன், கண்ணை மயக்கும் காந்தியுள்ள வெளிசத்தையுங்கண்ட திருடர்கள். ஏங்கி நின்று, தயங்கி விழுகிறார்கள். பட்டாளத்தைப்பார்த்தவுடன், பகீரென்று வயிற்றில் நெருப்பாய் மூண்டது எங்குபோவது! என்னசெய்வது! எங்கே ஓடலாம்! எங்கே ஒளிக்கலாம்! என்று ஒன்றுந் தோன்றாது திகைத்து விழித்தார்கள். பிரளயகாலம் வந்துவிட்டது? உலகம் அளிகிறது! என்றே நினைத்தார்கள் திகைத்து விழித்தார்கள், மயங்கி விழுந்தார்கள்.

“அதோ, ஓடுகிறான் பிடி! இதோ சாடுகிறான் அடி! குடிசைக்குப்பின்னால் ஒளிக்கிறான்! மலையின் பக்கத்தில் பதுங்குகிறான்! அதோமரத்தின்மேல், மந்திக் குரங்கைப்போல், தொத்துகிறான்! நேராகச்சுடு! இலக்காய் வெடியை! என்றிவ்வாறாகச் சிப்பாய்களிடையில் கோஷ்டமுண்டானதும், திருடர்களுக்குப்பதின் மடங்கு பயமதிகரித்து” ஐயையோ! அப்பப்பா! அம்மாடி! என்று கூக்குரலிட்டுக்கொண்டு ஓட்டம் பிடிக்கிறார் சிலர்! குண்டுபட்டுக் குற்றுயிராய்க்கிடக் கிடக்கிறார் பலர், இறந்தபிணங்களை எண்ணமுடியாது.

இவ்விதமாக இறந்து கிடக்கும் பிணங்களையுங் குற்றுயிராய்க்கிடக்குங் கள்ளர்களையும், கப்ரின்சென்று கணக்கெடுத்து வருஞ்சமயத்தில், கள்வர்த்தலைவன் குற்றுயிராய் கிடப்பதைக்கண்டார். இவன் அணிந்திருந்த மணிமாலைகளையும் இறகுக் கிரீடத்தையும் புலித்தோலையும், கெம்பீரமான பெரிய உருவத்தையுங்கண்ட

கப்ரின், இவன் தான் கள்ளர்களுக்குத்தலைவனுக இருக்கலாமென்று நினைத்து, அவனருகில் சென்றார்.

கப்ரினைக் கண்டதும், கள்ளர்த்தலைவன், தன் பிராண அவஸ்த்தையை அடக்கிக்கொண்டு, கைகூப்பிக்கண்ணீர் சொரிந்தான்.

"அடே! நீ செய்துவந்த அநிக்ராமமான பாவங்களுக்கு, கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை" இதுவே! என்றார் கப்ரின்.

"என்னுடைய ஜீவன் போகிறது! இப்போது நான், பகவான் என்கண்ணில், தென்படுகிறார்! கடவுள் என்முன்னில் நிற்கிறார். ஈஸ்வரன் ஒருவன் உண்டென்ற எண்ணம், இப்போதான் என்மனதிலுதித்தது. என் ஜீவியகாலத்தில் நான்செய்த பாதகங்களுக்குங் கொடுமைகளுக்கும் கணக்கில்லை. தெய்வமுண்டென்ற எண்ணம் எனக்குத் தினையளவு உண்டாயிருந்துமாயின், நான் இவ்வளவு பாவியாகி, இறக்கமாட்டேன். இனிமேல், என்னபலன்; கடவுள் என்பாவத்தையெல்லாம் மன்னித்து ஆட்கொள்ளுவாராக! மறுஜென்மம், உண்டாயிருக்குமாகும், நான் இந்தஜென்மத்தில் செய்த தீங்குகள் யாவற்றிற்கும்: மறுஜென்மத்தில் மண்ணிப்புக்கேட்டு, என்னுடைய ஆத்மாவுக்கு முக்தி மோக்ஷத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்," என்றிவ்வாறுகத் திருத்தமான வார்த்தையில், வருத்தமாகச்சொல்லிக் கொண்டிருந்த கள்வர்த்தலைவனுக்கு, தன்னையறியாமல் ஒருவிதமானமுமபக் கண்டானது.

கண்கள் விழிபிறண்டன. கைகால்கள் நீண்டது. நாவு விழுந்தது. நாடிதரித்தது. சுவாசம் நின்றது. தேகம் ஒருங்கிற்று, உயிர்துறந்து விட்டான்.

கள்வர்தலைவன் சொன்ன வார்த்தைகளானது சுகுணமுடைய கப்ரின் மனதைக்கசியச்செய்தது. உடனே திரும்பிவந்து தன் துணை வரிடத்தில் கூறினர் எல்லாருங் கேட்டுவிசனப் பட்டார்கள்.

இப்பொழுது சுகந்தசிலன், கப்ரினை நோக்கி, "இனி ஆகவேண்டிய விஷயமென்ன? நடக்கவேண்டிய காரியமென்ன ;" என்றார்.

"பட்டாளத்தைத் திருப்பிக் கொண்டுபட்டணத் துக்குப்போக வேண்டியது தான்! அகப்பட்ட திருடர் யெல்லாம் அந்தமானுக்கு ஏத்தவேண்டியது தான்! கையில் கிடைத்தகள்ளரை யெல்லாம், நிக்கோபாவுக்கு ஓட்டவேண்டியது தான்! பட்டாளம்! சோல்யர்கள்! சிப்பாய்கள்! கம்மோன் பான்ட், வாசியுங்கள், வீர சங்கை யூதுங்கள்! வெற்றிக் கொடியைப் பிடியுங்கள்! திருடர்கள் கைகளைக்கட்டி நடுவேவிடுங்கள்., மார்ச், ஓன்" என்று கப்ரின் செய்த கோஷ்டத்தால், யாவருந் துயராகி, பட்டணத்தை நோக்கித்திட்டமாய் நடக்க லானார்கள்.

சிறிதுதூரஞ் சென்றதும் சுந்தரராஜன் மற்றவர் களைநோக்கி "நான் இந்தவழியாகச் சென்று, இக்

காட்டின் சுற்றுப்பக்கங் களிலுள்ள கிராமங்களில் பார்த்து வருகிறேன். நீங்கள்யாவரும், ஊரில்போய்ச் சேருங்கள்! நான் இரண்டு தினங்களுள் திரும்பிவந்து விடுகிறேன்.'' என்று சொல்லிவிட்டுத் தன்குதிரையைத்திருப்பிக் குறுக்குவழியாகச் செலுத்திக்கொண்டு சென்றான்.

# பதின்மூன்றாம் அத்தியாயம்.

ஜெயவீரசிங்கனையும், வனசுதாவையும் விட்டுப்பிரிந்த நீலகண்டனுங் கோலகண்டனும், தாம்குளித் தகிராமத்தைநோக்கி விரைவாய் நடக்கலானார்கள்.

தங்கள்மனம்போனபடி காடுமுழுவதுஞ் சுற்றிப் பழங்களைப்பறித்தருந்தி, சாயங்காலவேளையில் கிராமத்துள்பிரவேசித்துத் தாம்வழக்கமமாகச் சாமான்கள்வாங்குங் கடைத்தெருவுக்கு வந்தார்கள்.—பட்டாளம் வருவதைக்கண்டு, வெருண்டோடிய நாட்டுப்புறத்துநாகரீக மற்றஜனங்கள், இன்னும் காட்டைவிட்டுத்தம் வீடுகளுக்குவந்து சேராததால், அக்கிராமம் முழுவதும் காலியாயிருந்தது. சந்தைகடைகளிலும் வீடுகளிலும் ஜனங்களில்லாதிருப்பதைக்கண்டு, நீலகண்டனுங்கோலகண்டனும், அதிக ஆச்சரியங்கொண்டு, சங்கதியென்னவென்றறியாது, பிரமித்தார்கள்.

"இதென்ன ஆச்சரியம்! ஊர் முழுவதிலும் ஒரு மனிதனைக் கூடக்காணோமே!" என்று நீலகண்டன், கோலகண்டனை நோக்கி அதியாச் சரியத்துடன் கேட்டான்.

"ஆமாம்! கோலகண்டா! இதென்ன செப்படி வித்தையா! ஜாலவித்தையா! மந்திரவித்தையா? மாயவித்தையா? அதோபார்! வீடுவாசல், ஆடுமாடு, பொருள் பண்டம்! சாமான்சட்டு! எல்லாம் அப்படியப்படியே யிருக்கிறது. இதோபார்! சந்தைகடைச் சாமான் களெல்லாம், அப்படியப்படியே அடுக்கிவைத்

கப்பட்டிருக்கிறது! அப்பக்காரக்கிழவி கூடத்தப்பாம லோட்டம் பிடித்து விட்டாளே!" என்று நீலகண் டன், நாலுபக்கமும் பார்த்து, நன்றாயுரைத்தான்.

"அதோபார், சுட்ட அப்பம் தட்டிலே யிருக் கிறது, சட்டியிலப்பம், வெந்துபோயிருக்கிறது. கிழவி யைமாத்திரங் காணவில்லையே! இதென்னமாயம்? என்றுகோலகண்டன், குறிப்பாய்ச்சொன்னான்.

"அதுபோலவே சந்தைக்குச்சாமான் கொண்டு வந்தவர்களும், அப்படி யப்படியே வைத்துவிட்டு, எங்கேயோ போய் விட்டார்கள்!" என்றான், நீல கண்டன்.

"இதற்கெல்லாங் காரணமென்ன! புலிகள்வந்து, உபத்திரவித்தனவோ? என்னமோ! ஏதோ!" என்று கோலகண்டன் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு ஆயா சமாயுரைத்தான்.

"சந்தை கூடியிருந்த ஜனங்களுக் குண்டான விந் தையைப்பார்! விற்கவந்த சாமான்கள் விற்றுமுடி வதற்குள், மிக்கமனங் கலங்கி, ஏக்கங்கொண்டு, தக்க படியோட்டம் தப்பாது பிடித்தார்கள் போல்தெரி கிறது!" என்று சந்தையைப் பார்த்துக்கொண்டு நீல கண்டன் சொல்லித் தன்துணைவன் தோள்மேல் தட்டினான்.

"தோழா! நாம் இங்கே நிற்பது தகுதியல்ல! இவ்வூர் ஜனங்களுக்கு என்ன விபத்துநேர்ந்த தென்

பதைநாம் அறியோம், ஒருவேளை அவ்விதமே நமக்கும் சம்பவிக்கக்கூடும். இப்போதே! போய்விடுவோம் வா'! என்று கோலகண்டன் அவசரங்காட்டி நீலகண்டனை யழைத்தான்.

இவ்வாருகக் கோலகண்டன் சொன்னதைக் கேட்டு நீலகண்டனுஞ் சம்மதித்து, இருவருமாக மிக விரைவுடன் நடந்து ஓர்பட்டணத்தை யடைந்து, அங்குள்ள, கடைவீதிகளில் சென்று, கடைகள் சிங்காரித்திருக்கும் விசேஷத்தையும், ஷாப்புகள் அலங்கரித்திருக்கும் அதிசயத்தையுங்கண்டு, களித்து, வீதிகள் தோறுஞ் சென்றார்கள். இவ்விதமாக, இவர்கள், தெருத்தெருவாய்ச் சுற்றிவருஞ் சமயத்தில், ஓர்ஹோட்டேலைக்கண்டு, பசியாறி போகலாமென்று நினைத்துக் ஹோட்டேலுட் பிரவேசித்தார்கள்.

இவர்கள் வந்ததைக் கண்டதும், ஹொட்டேல் தலைவனுகிய, பட்டாபி ராமையர், எழுந்துவந்து, "யாருங்காணும்" என்றுகேட்டு இருவரையும் நோக்கினுர்.

"பணங்கொடுத்தால் ஆகாரங் கொடுப்பீர் களென்று நினைத்து, இங்கேவந்தோம்." என்றான், நீலகண்டன்.

"சற்றுமுன்னே வந்திருந்தால், சாப்பிட்டு உட்கார்ந்து இப்போ, எப்பம் விடுவீர்களே! நீங்களென்னுங்காணும், காலந்தவறி! வேளைதப்பிவந்து கஷ்டத்தை விளைக்கிறீர்களே" என்று பட்டாபிராமையர் மிகவும் உற்சாகத்துடன் கூறினுர்.

"சுவாமீ! தயவுசெய்யுங்கள்! மனமிரங்குங் கள்! பசிவந்து நம்மைப்பதைக்கச் செய்கிறது! தாக மெடுத்துத் தவிக்கச் செய்கிறது!" என்று கோலகண் டன், கோணாது சொல்லிமுடித்து, ஐயரைநோக் கினான்.

"சற்றுப் பொறுங்கள்! கொஞ்சங் குந்துகள்! சாதம் அடுப்பிலிருக்கிறது! அதோ, கத்தரிக்காய்கழுவு கிறான் கண்ணுசாமி! வெண்டைக்காய் வெட்டுகிறான் வீரசாமி! புடலங்காய் அரிகிறான் பொன்னுசாமி! தேங்காய் யுடைக்கிறான் திருவேங்கடம்! வெங்காய முரிக்கிறான் றங்கநாதம்! மிளகாயரிகிறான் மூக்குறிஞ் சான், அம்மியடியிலே கும்மியடிக்கிறான் அண்ணாசாமி! இதோ! எல்லாருங்கூடி, ஆக்கிப்போடுவா! கொஞ்சம் பொறுங்கள்! சற்றே உட்காருங்கள்; இதோபுறப்பாய்! அதோமானிப்பாய்! பக்கத்திலே பந்திப்பாய்! இருங் கள்; இதோதயாராய்விடும்." என்று பட்டாபிரா மையர், இஷ்டசந் தோஷத்துடன், இருவரையு முப சரித்து உட்காரவைத்து, வேலைக்காரரிடத்தில் சென் று "சீக்கிரம் ஆகட்டும்! இரண்டு மனிதர் பசியால் வருந்துகிறார்கள்." என்று அவசரங்காட்டி ஆவேசம் விளைத்து விட்டு, அங்குமிங்குமாக உலாவிக் கொண் டிருந்தார்.

இவ்விதமாக உலாவிக் கொண்டிருந்த, பட்டா பிராமையர், பின்னுமேதோ மனதில்நினைத்து. "அடே! போதகுருசாமி! "கறண்ட்டு" இல்லாததனால். அந்த அறையிலுள்ள விளக்கு அமிந்துபோய்விட்டது. அதை

பழுதுபார்த்து, நல்லாய்க் "கறன்டு" வரும்படிசெய்! எழுந்திரு! இவ்வளவு சீக்கிரம்! என்ன தூக்கம்; எழுந்து போ!" என்றுசொல்லி ஒரு மூலையில் தூங்கியிருந்த ஒருவனை அதட்டி யெழுப்பிவிட்டுப் பின்னும், நீலகண்டன் கோலகண்ட னருகில்வந்து! "என்னுங்க! சார்! கோவம் பண்ணிக்கொள்ளக் கூடாது! கொஞ்சம் தாமசமாகும்போல் தெரிகிறது" என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் பக்கத்திலுட்கார்ந்து. "என்ன செய்வோம். அப்பப்பா! சாமான்களுக்கு விலை, தலைக்கு மேலேறி, விட்டது! அரிசியின் விலையை யாரிடத்தில சொல்வது! கைக்குளஞ் சந்தையில் காய்கறி, கிடைப்பதரிதாய்விட்டது, முருங்கக்காய் மேளமடிக்கப் போய் விட்டது, உருளைக்கிழங்கு யுத்தஞ்செய்யப் போய் விட்டது. வெங்காயம் சிங்கப்பூர் கப்பலில் பிரயாணஞ்செய்கிறது. இந்தப்பஞ்ச காலத்தில், பாலைப்பழம் போலப் பணத்தைக்கொண்டு போய்க்கொட்டிக் குடுத்துச் சாமான்களை வாங்கிக் கொண்டுவந்து, ஆக்கிப்போட்டால், மூக்குப்பிடிக்கத் திருப்தியாய்ச் சாப்பிட்டுவிட்டு மூச்சுப் பேச்சில்லாமல், சமயம்பார்த்து ஓட்டம்பிடிக்கிறார்கள். தப்பித்தவறி, இவர்களைப் பிடித்துப்பணங் கேட்டாலோ! வந்துவிடும்மோசம், சண்டைக்குவா, என்று கச்சை கட்டிக்கொண்டு, மார்பில்தட்டி, மீசையைமுறுக்கி, "பாப்பான் மண்டையைப் பதினெட்டுச்சுக் கலாயுடைக்கிறேன், வாடாகீழே! நில்லெடா ரோட்டிலே" என்று கோஷ்டஞ்செய்து மரியாதையைக் கெடுத்து விடுகிறார்கள், மானத்துக்கஞ்சி, மரியாதைக் குப்பயப்பட்டு, போனுப்போகு தென்னுவிட்டு விட

வேண்டியதுதான். இப்படியாயிருக்கிறது நம்மபிழைப்பு." என்று பட்டாபிராமையர், இவர்களும் பணங் கொடுக்காமல் கம்பி நீட்டி விடுவார்களோ " என்று சந்தேகங்கொண்டு மனம்வருந்தினாற்போல் சொல்லி முடித்து இருவரையும் நோக்கினார்.

இவ்வாறு பட்டாபி ராமையர் சொல்லியவற்றை மிகவுங்கவன மாய்க்கேட்டு வந்த கோலகண்டன், "ஐயோ! பாவம்! உண்டவீட்டுக்கு ரண்டகஞ் செய்யும் தொண்டா மிண்டர்களும், இவ்வுலகிலிருக்கிறார்களே! இவர்கள், ஏழாம் நரகத்தில் வீழ்ந்து மீளாத துன்பத்தை யனுபவிப் பார்கள்." என்று பட்டாபிராமையர் மேல்ப்பரிதாபங் காட்டிக்கூறினான்.

" அதெல்லா மிருக்கட்டும்.!, சுவாமி! காலத்தின் கொடுமையை யாரிடத்தில் சொல்வது! ஏழைகள் படும் பாட்டை எடுத்துரைக்க முடியவில்லை! ஐயையோ! என்னகாலம், என்ன கோலம்!" என்று நீலகண்டன் பட்டாபி ராமையரை நோக்கிக்கூறினான்.

" காலத்தின் கொடுமை போதாதென்று, திருடர்களும் சென்று உள்ளசொத்துக் களையெல்லாங் கொள்ளையடித்துக்கொண்டு, கூவாது போய்விடுகிறார்கள்." என்று கோலகண்டன் கொஞ்சம் யோசித்தாற்போல் கூறினான்.

முன்காலத்துத் திருடர்கள் பணத்தையும் பொருளையுந்திருடிக் கொண்டுபோனார்கள், தற்காலத்துத் திருடர்கள், பெண்களையும் பிள்ளைகளையுந் திருடிக்கொண்டு

போகிறார்கள்! இது என்ன அனியாயம் இது என்ன காலக்கேடு,'' என்றுபட்டாபி ராமையர், பட்டெனச சிரித்துச் சட்டென அடக்கிக்கொண்டு, பரிதாபங்கொண்டவர்போலப் பரிந்துபேசிப் பக்குவமாய் முடித்து, பக்கத்திலிருந்தவர்களை யுற்றுநோக்கினார்.

"ஆம்! ஆம்! பாருங்கள்! இவ்விதச் செயல் மனிதற்கடுக்குமா?'' என்று நீலகண்டன் ஆச்சரியம் மிகுதியால், அவசரமாய்ச் சொன்னான்.

"நீங்களெப்படி யறிவீர்கள் இச்சங்கதியின்மர்மத்தை''? என்றுகோலகண்டன், ஒன்றுமறியாதவன் போலக்கேட்டு, ஐயரின் பதிலுக்காக எதிர்பார்த்திருந்தான்.

"எனக்கொன்றுந் தெரியாது! பட்டாளம் மிக வேகமாக நீட்டிய துப்பாக்கிகளுடன், பத்தாயிரம் பேருக்குமேல், இந்தவழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். எங்கேபோகிறார் களென்று விசாரித்தளவில், "யாரோ ஒருதனவானுடைய குமாரத்தியை, மணிக்கம்பிதோட்டத்துக் கள்ளர்கள் திருடிக்கொண்டு போய் விட்டதாகவும். அவர்களைச்சுட்டுத் தொலைத்து விட்டுப் பெண்ணை மீட்டுவரவேண்டிப் போகிறார்கள்'' என்றும் சொல்லக்கேள்விப் பட்டோம்.'' என்றார் பட்டாபி ராமையர்.

பட்டாபிராமையர் சொன்ன வார்த்தை க கேட்டு நீலகண்டனுங் கோலகண்டனும், அடங்கா ஆச்சரியங்கொண்டு, ஒருவரை யொருவர்மாறிமாறிப்பார்

த்து, ஒன்றுந்தோன்ருது பிரமித்துவிழித்தார்கள். இவர்களின் நிலைமையைக்கண்ட பட்டாபி ராமையருக்குச் சந்தேக மதிகரித்துச் சஞ்சலத்தை விளைத்துக்கொண்டிருந்தது. இப்போது, பட்டாபிராமையர், சமாளித்துச்சிரித்துக்கொண்டு "என்ன! நான்சொன்னது உங்களுக்கு மனச்சஞ்சலத்தை யுண்டாக்கி விட்டாப்போலிருக்கிறதே"? என்று இருவரையும் நோக்கி ஒருவாருய்க் கேட்டார்.

இல்லையில்லை! அந்த ஆகாவளிக்கள்ளர் களைச் சுட்டுத்தொலைப்பது நல்லதுதான்! அவர்களால் ஊரவர்களுக்கு எவ்வளவோ உபத்திரவங்கள் சம்பவித்து வருகின்றது, அவர்களைச் சுடுவதால் நமக்கென்ன! ஆதலால் அவர்களிடத்தில் சண்டைசெய்வது மிகவுங் கஷ்டம். ஒருவன் பத்துப்பேரைக் கொல்லும் சக்தியுடையவன், பட்டாளம் வருகிறதென்று, தெரிந்தால், குகைகள் வழியாக ஒளித்தோடி விடுவார்கள். எதிர்த்துச்சண்டை செய்வதுங்கஷ்டம். அது தான்யோசிக்கிறோம் வேறொன்றுமில்லை" நீலகண்டன் நிதானமாய்க் கூறிக்கோல கண்டனை நோக்கினுன்.

"எப்படியாவது போகிறார்கள்! நமக்கென்ன?" என்று கோலகண்டன், பட்டாபிராமையரின் சந்தேகத்தைப் போக்கவேண்டிக் கவலையீன மாய்க்கூறினுன்.

"ஆம்! ஆம்! நமக்கென்ன!" என்று பட்டாபிராமையர், சிறிது தைரியத்துடனுஞ்சிறிது உற்சாகத்துடனுங் கூறிவிட்டுப் போதகுருசாமிப் பிள்ளை யிடஞ்

சென்று "கறண்டு வருகிறதா? விளக்கு எரிகிறதா?" என்றுகேட்டார்.

போதகுருசாமிப் பிள்ளைக்குத் தூக்கம்மிகுதியா யிருந்தபடியால், கண்திறக்கவும் தலை தூக்கவும் முடியா மல் படுத்தபடியே "ஆமா" என்று சொல்லி விட்டு அயர்ந்து தூங்கினார்.

"மற்றோர் அரறையில், முன்பாகவே போஜனம் முடித்துக்கொண்டு, படுத்திருந்த ஓர் வாலிபன்! நீலகண் டன் கோலகண்டனுக்கும், பட்டாபிராமையருக்கும் நடந்த சம்பாஷணையைக்கேட்டு அகமகிழ்ந்து, "ஆகா! இவர்களிருவரையும் பிடித்தால், நான்வந்தகாரியத்துக்கு ஏதாவது சைகையறியலாம், இவர்களின்னும் சாப்பிட வில்லையே, சாப்பிட்டுமுடிந்ததும் இவர்களிடஞ் சென்று கலந்துபேசிப் பார்க்கலாம்." என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, எப்போ சாப்பிடுவார்க ளென்று எதிர்பார்த்திருந்தான்.

"சாப்பாடு தயாராய் விட்டது" என்று அடுப் பங்கரையிலிருந்து யாரோ சொன்னார்கள்.

இதைக்கேட்ட பட்டாபிராமையர் அதிகசந்தோ ஷங்கொண்டு "எழுந்திருங்கள்! சார், எல்லாந் தயா ராய்விட்டது! கைகால்லலும்புங்கள்! வாய்கொப்பளியுங் கள். சாப்பிட்டுச் சற்றேவெளியி லுட்கார்ந்து களையா றுங்கள்!" என்றுசொல்லி இருவரையுமெழுப்பி விட் டுப்பின்னே சமையலறைப் பக்கமாகத் திரும்பி, 'அடே! சீக்கிரங் கொண்டுவந்து சேருங்கள், இலை,

யொருவன், சோறொருவன், பருப்பொருவன்! நெய்யொருவன், குழம்பொருவன், தயிரொருவன், சாறொருவன், வேறுமற்றவர்கள்! எல்லாருங்கூடி விரைவில் கொண்டுவந்து வையுங்கள்." என்று பட்டாபிராமையர், தடபுடலாய்க் கூப்பிட்டு வேடிக்கையாய்ப்பேசி விளையாட்டுக்காட்டி, வேலைக்காறருக்கு உற்சாகத்தையூட்டித் தூக்கத்தைப் போக்கினார்

சாப்பாடு பருமாறப்பட்டதும், நீலகண்டனுங் கோலகண்டனும், ஆகாரமருந்திவிட்டு வெளியேயுள்ள திண்ணைமேலுட் கார்ந்தார்கள்.

இவர்கள்வெளிபோ யுட்கார்ந்ததைக் கண்டவாலிபன், எழுந்து வெளியேவந்து, அவர்கள் பக்கத்திலுட் கார்ந்து, இருவரையும் நன்றாயுற்று நோக்கினான்,

இவ்வாலிபன் யாரென்பதையும்! இங்கே எப்படி வந்தானென்பதையுஞ் சற்றுக்கவனிப்போம்.

"சுகந்த சீலனுடைய ஏகபுத்திரியாகிய தேவகியுடன் பூந்தோட்டத்தில் நின்று காதல்வார்த்தைகளைக் களங்கமில்லாது பேசியவாலிபன், இவன் தானென்றறிக. மனோதயனுடைய இளையகுமாரனாகிய சோமநாதனும் இவன் தானென்றறிக.

தன்திவ்விய காதலியாகிய தேவகியை விட்டுப் பிரிந்த, சோமநாதன், தன்தாய் தந்தையரைக் காணவேண்டி காவிரிப்பூம் பட்டினத்தைவிட்டு வச்சிரபுரியை யடைந்து, தன் வீட்டுக்குச் சென்றதும், "வனசுதாவையாரோதிருடிக் கொண்டுபோய் விட்டார்கள்"

என்றுமனோதயனும், இராசம்மாவும், மாறி மாறிச் சொல்லியதைக்கேட்டு மனந்தாளாது, எங்குசென்றாவது தேடிப்பிடித்து வருவதாகச்சொல்லி உடனே வீட்டை விட்டுப்புறப்பட்டான்.

புறப்பட்டுச்சென்ற சோமநாதன், அனேகவிடங்களில்சென்று விசாரித்து, ஒன்றும் பலன்படாமையால் மனந்தளர்ந்து, இராத்தங்கிப் போகலாமென்று நினைத்து ஹோட்டேலில் தங்கினான் ;—

தமக்குப்பக்கத்தி லுட்கார்ந்து உற்றுநோக்கிக் கொண்டிருந்த வாலிபனைக்கண்ட நீலகண்டன் சற்றுத் திரும்பி "என்னுங்கோ! பார்கிறீங்க! நாங்கள் அயலூரைச் சேர்ந்தவர்கள்! எங்களை இதற்குமுன் பார்த்திருக்கமாட்டிர்கள்" என்றுவேடிக்கையாகக் கூறினான்.

"நானும் உங்களைப்போல அயலூரவன்தான்!;, என்று சோமநாதன் சுருகாய் கூறினான்.

உங்களூரில் என்ன விசேஷம்" என்றான் கோலகண்டன்.

"எங்களூர் விசேஷம் முதலியவற்றை சொல்லுவதற்க்கா ஷேபனையில்லை! முதலில் உங்களுடைய விருத்தாந்தத்தை அறியவேண்டுமென்கிற அவா என் மனத்தை வருத்துகிறது" என்று சோமநாதன் இருவரையும் நோக்கிக் கேட்டுச்சற்றே நிதானித்தான்.

"நாங்கள் பரதேசிகள்! ஊரூராகச்சுற்றி அங்கங்கேயுள்ள விசேஷகாக்ஷிகளையும் வர்த்தமான விஷ

யங்களையும் அறிந்து, நடப்பதே, நம்முடையதொழிலா யிருக்கிறது.'' என்று நீலகண்டன் சோமநாதனை நோக்கிச் சொன்னான்.

''உங்களை நம்பினவர்களைக் காப்பாற்றுவீர் களா'' என்று சோமநாதன் ஆழ்ந்த கருத்துடன் கேட்டான்.

''நம்பிக்கைத் துரோகம்! விசுவாசம் வஞ்சனை, முதலிய செய்கைகள், எங்கள் உயிர்போனாலுஞ்செய்ய மாட்டோம்! எங்களை நம்புகிறவர்களை எவ்விதமான ஆபத்தில் நின்றுங் காத்துக் கொள்வோம்'' என்று நீலகண்டன் மிகவும் உறுதியாகக் கூறினான்.

''அப்படியானால் நான் உங்களை நம்புகிறேன். எனக்கு வேண்டிய உதவிபுரிய வேண்டியது உங்கள் கடமை! ஆயினும்! முதலில் உங்களுடைய ஊர் பேர் குடும்பவரலாறு முதலியவற்றை சொல்லி, என்னைத் திருப்தி செய்வீர்களானால், நான், என்னுடைய விருத் தாந்தத்தை உங்களிடஞ்சொல்லி, அதற்கு வேண்டிய உதவி பெறுவதற்குத் தயாராயிருக்கிறேன்.'' என்று சோமநாதன், தன் மனதிலுள்ள எண்ணத்தை வெளிப் படுத்தினான்.

''இதைக்கேட்ட நீலகண்டன், ஐயா! எங்களு டைய விருத்தாந்தத்தைச் சொல்வதற்காக்ஷேபனை யில்லை! ஆனால், நாம்சொல்வோ மாயின், உமக்கு எங் கள் மீது வெறுப்புண்டாகும். அதற்காக நாம் அஞ்ச வேண்டியதாயிருக்கிறது, ஏனெனில், நமது வாழ்நாள்

முழுவதையும், கெட்டநடத்தையில் களித்துத் துஷ்டர்களாய் நடந்து வந்தோம். தற்காலத்தில் சகல துன்மார்க்கங்களையு மொழித்துவிட்டு நன்னடத்தையைக் கைகொண்டொழுகுகிறோம்! எங்கள் பூர்வ விருத்தாந்தத்தைச் சொன்னால், உங்களுக்கு அருவருப்புண்டாகு மென்பதற்குச் சந்தேகமில்லை" என்று மிகவும் வருத்தத்துடன் சொன்னான்.

"இதற்காகவா யோசிக்கிறீர்கள்! இவையெல்லாம் உலகத்தில் சகஜம். 'ஸம்ஸர்க்ஜா தோஷகுணா பவந்தி' என்பதுபோல் நல்லவன் கெட்டவனாவதும், கெட்டவன் நல்லவனாவதும் ஒவ்வோர் காலத்திலுண்டாகுஞ் சினேகிதரின் மாற்றத்தாலுங் காலத்தின் மாற்றத்தாலுமேயுண்டாகும். உலகத்தில் காணப்படுவன வெல்லாம், ஸ்திரமல்ல! தனவான், பிச்சைக்காரனாவதும்! ஏழை கோடீஸ்வரனாவதும், நீங்கள் கண்டதில்லையா? ஊரூராய்ச் சுற்றினீர்களே! ஒவ்வொரு ஊரிலும், பாஷைகள் வேறு! வழக்கங்கள் வேறு! உடைநடை வேறு! ஆசாரம் முதலியவைகூட வேறாகக்காணப்படவில்லையா? முன்காலத்தில் சட்டை வண்டியில் யாசக்கணக்காய் பிரயாணஞ் செய்தார்கள். தற்காலத்தில், புகைவண்டியில் மணியொன்றுக்கு நாற்பதுமுதல் எழுபது மைலில் வரையும் பிரயாணஞ் செய்கிறார்கள். கௌபீனந்தரித்த காலம்போய் இப்போ 'கால் சட்டை கோட் காலர் டைசாற் பூட்ஸ்' அணியுங்காலமாய்விட்டது! ஓலைவீடுகளில் ஒதுங்கியிருந்தகாலம்போய், ஒப்பற்ற உப்பரிகையில் உலாவுங் காலம் வரவில்லையா? குடுமியைத் தரித்தக்காலம், மொட்டையடித் தரித்தக்காலம்! இம்மாதிரியாகக்

காலத்துக்குத் தக்கவாறு கோலம் போடுவதால், குற்றமொன்றுமில்லை? "ஊருடன் கூடிவாழ்" என்றும் "பழையனகழியும் புதியனவிளையும்" என்றும் ஆன்றோர்கூறியிருக்கிறார். ஆதலால் நீங்களுங்களுடையவரலாற்றைக் கூறுவதற்குப் பின்வாங்காதீர்கள். நான் உங்கள் மீதில் ஒரு விதக்கெட்ட எண்ணமுங் கொள்ளமாட்டேன்" என்று சோமநாதன் சமாதானங் கூறியதைக்கேட்ட இருவரும் அதிகசந்தோஷங் கொண்டார்கள்.

இப்போது நீலகண்டன் சற்று அருகே வந்து சோமநாதனை நோக்கி "நாமிருவரும், சோழ நாட்டில், சிறந்து, கீர்த்திபெற்று விளங்குங் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முறையே மைத்துனர்களாவோம். என்பெயர் நீலகண்டன், அவர்பெயர் கோலகண்டன். ஏறக்குறைய இருப்பத்தைந்து வருஷங்களுக்குமுன், அரசாண்டுவந்த பராக்கிரமசாலியாகிய ஓர் அரசனிடத்தில், என் தகப்பனார் மந்திரியாகவும் கோலகண்டனுடைய பிதாவானவர், சேனைத்தலைவராகவு மிருந்து வந்தார்கள். ஒருகாலத்தில் அரசன், பத்தினி, மித்திரர் மந்திரி, படைத்தலைவர் சேனைத்தலைவர், முதலானவர்களுடன். வேட்டைக்குச்சென்று, மூன்று மாசக்காலமாகக் காடுமலைகளில் கூடாரமடித்துத் தங்கியிருந்தார்கள் இப்படியிருக்குஞ் சமயத்தில், பெருமழையும் புயற்காற்றுங் கூடி, அவ்வரசனுடைய ஊரை அழித்துவிட்டது. அரசன் முதலானவர்கள் திரும்பிவருஞ் சமயத்தில், ஊரெல்லா மளிந்திருக் கக்கண்டு, அடங்கா விசனங் கொண்டவனாய் அயலூருக்குச்சென்று, சாதாரணமணி

தனைப்போல் வசித்துவந்தார். அன்று முதலாக எங்கள் பிதாக்களும், அவ்வாசனுடனிருந்து வந்து, சிறிதுகாலங்கழிந்ததும், மரணமடைந்தார்கள்.

எங்கள்தந்தையர் களிறக்கும்போது நாமிருவரும் சிறுவயதுடையவர்களா யிருந்தோம், நம்மைப்பெற்ற, தாய்கள், அளவில்லாத செல்லங்கொடுத்து மிகவும் அருமையாகப் பாவித்துவந்தார்கள். அதனால் நாம் நினைத்த பிரகாரம் நடக்கவும் பள்ளிக் கூடத்துக்குப் போகாது, வீண்பிள்ளைகளுடன் கூடிவிளையாடித்திரியவும், கெட்டவர்களென்று பெயரெடுக்கவுங் காரணமாயிற்று. பின்பு சிறிதுகாலஞ் சென்றதும், நம்மைப் பத்து மாதஞ்சுமந்து, பெற்று, ஆசையுடன் காப்பாற்றி வந்த அருமை மாதாக்களும், இவ்வுலகைவிட்டு நீங்கினார்கள். அதன் பின்பு நம்மைக்கவனிப்பதற்கு ஆளில்லாமல் போய்விட்டது, இனி ஜனங்களுடைய வீடுகளுக்குச்சென்றால் நம்மைச்சேர்க்காது விட்டார்கள். ஊரவர்களெல்லாம் நம்மை மகாதுஷ்டர்களென்றுபழித்துக்கேலிசெய்து வந்தார்கள். இவ்விதமாக நமக்கு எங்கு சென்றாலும் அபகீர்த்தியாயிருந்தது. அதனால், நாமிருவரும் மனம்வெறுத்து. நமதுதாய் நாட்டை அடியோடே விட்டுவிடுவதற் காகவேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்குஞ் சமயத்தில், அனியாயமான ஒருகொலைக்கேஸை, ஊர்ஜனங்கள் சேர்ந்து எங்களிருவரையுங் குற்றவாளிகளாகச்சந்தேகித்து, கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இச்சேதியை யறிந்ததும் நாமிருவரும், வேஷத்தை மாற்றிக்கொண்டு ஊரைவிட்டோடி விட்டோம். உண்

மையில் நாங்களத்தக் கொலைக்கேசுக்கு உத்தரவாதி களல்ல! நம்முடைய ஜீவியகாலத்தில் நாங்களவ்வித மான செயல்களொன்றுஞ் செய்ததில்லை ஆனால், ஊரா வர்கள் யாவரும் நம்மேல் பகையாயிருந்தார்கள். அவர் களுக்கு நம்மால் அனேக உபத்திரவங்கள் நேரிட்டன. எப்படியாவது நம்மைஜெயிலுக்கு அனுப்பவேண்டு மென்று ஊர்ஜனங்களெல்லாந் தீர்மானம்பண்ணியிருந் தார்கள். இதற்குப்பயந்து நாம் ஊரைவிட்டோடிக் காட் டுக்குள்சென்று, திருடர்கள் கூட்டத்தில் சேர்ந்து, சில காலம் அவர்களுடனிருந்து, அவர்கள் செய்துவரும் கொடுமைகளைக்கண்டு பொறுக்கமுடியாமல், அவர்களு டனுங் கோபஞ்செய்து கொண்டு, வந்து விட்டோம். என்று நீலகண்டன் ஆயிரம்பேச்சை அரைநொடியில் பேசிமுடித்து அடுத்திருந்த கோலகண்டனை நோக்கிக் கொண்டிருந்தான்.

இவ்வாறாக நீலகண்டன் சொன்னவற்றை யெல் லாங் கவனத்தோடு கேட்டிருந்த சோமநாதன், இரு வரையும்நோக்கி "என்னசெய்யலாம்! எல்லாம் காலத் தின் தோஷமும், கிரகசாரப்பலனுமே! போனதுபோ கட்டும்! இனிமேலாவது உங்களுடைய, சொயபுத்தி யைக்கொண்டு முன்னேற்றத்துக்கு வழிதேடவேண்டும்' என்று சொல்லி முடித்தவன், பின்னும், யாதுகாரணத் துக்காகத் திருடர்களிடத்தில் பகைத்தீர்கள்? என்று சிறிது ஆலோசித்தாற்போல் அவசரமாய்க்கேட்டான்.

ஒரு கன்னிகைப் பெண்ணைக் களவாடிக்கொண் டுவந்து பேய்க்குப் பலியிடுவதாகத் தீர்மானம்பண்ணி னார்கள். பெண்ணின் அழகைக்கண்ட நாம்பரிதாபப்

பட்டுக்கொலைசெய்ய விரும்பாதவர்களாய்க் கள்ளர்த் தலைவனைநோக்கி, பெண்ணைக் கொலைசெய்யாதே நம்மிடத்தில், கொடுத்துவிடு, இல்லாவிட்டால், அதனாலுனக்கு அனேககெடுதிகள் ஏற்படும், என்றோம். அவன் நம்முடைய வார்த்தையைக் கவனியாது, பெண்ணைப் பெலியிடுவதாக உறுதியாய்க் கூறினான். என்றிவ்வாறாகக் கோலகண்டன் சொன்னதைச் சொல்லிமுடிப்பதற்குள், சோமநாதன். மனம்நடுங்கி இருவரையும் நோக்கி "ஐயையோ! பெண்ணைப் பெலி கொடுத்துவிட்டார்களா! தையலைத் தலைவெட்டினார்களா! உள்ளதைச் சொல்லுங்கள்." என்று அளவிலலாதகவலை அவன் மனத்தைவருந்த, ஆவலுடன் கேட்டு, அங்குமிங்கும் பார்த்தான்.

"இல்லை! இல்லை!" பெண்ணைக் கொல்லவில்லை! அதிருக்கட்டும், உங்களுக்கு அவ்விஷயத்தில், இவ்வளவுதுக்கமும், ஆவாவும் உண்டாகவேண்டியதன் காரணமென்ன? என்று நீலகண்டன், கேட்டுச்சற்றே நிதானித்தான்.

"சகோதரர்களே! அப்பெண்ணைத் தேடியே நான் இவ்வூருக்கு வந்தேனென்றறியுங்கள்! அவள் எனக்குச் சகோதரியாவாள், அவளைத் திருடரிடமிருந்து மீட்டு, என்னைவசம் ஒப்பிவித்தால், உங்களிருவருக்கும் ஒருலட்க்ஷம்ரூபாய் உண்மையாகத்தருவேன் அதுவுமன்றி உங்கள் ஜீவியகாலம் வரையும். என்னுடன் ஜீவித்துவரும் அதிகாரத்தையுங் கொடுக்கிறேன்." என்று சோமநாதன் உறுதியாய்க் கூறினான்.

இதைக்கேட்ட இருவரும் அதிக ஆனந்தங்கொண்டார்கள். "பெண் எங்களுடைய காபந்தில் தானிருக்கிறது" என்றான் நீலகண்டன்.

"எங்கே விட்டிருக்கிறீர்கள்! எவ்விடத்திலிருக்கிறாள்." என்று சோமநாதன், ஆத்திரத்தால் அவஸ்தைப்பட்டுக் கொண்டே வினவினான்.

"ஐயா! நான் சொல்வதைச் சற்றேகவனியுங்கள்!:- திருடர்களுடன் விரோதித்து நாமிருவரும் வெளியே நடந்து, காட்டின் நடுவில் ஓர் பாழடைந்த வீட்டில், படுத்துறங்கினோம், மறுநாட்காலையில், எழுந்து பார்க்கும்போது, ஒருவாலிபனும் அவ்விடத்தில் படுத்திருந்தான், அவனைக்கண்டு நாமிருவரும் ஆச்சரியங்கொண்டு அவனை எழுப்பி விசாரிக்குஞ் சமயத்தில், ஆகாய விமானமூலமாய்ப் பிரயாணஞ் செய்துவருஞ் சமயத்தில் விமானம் காட்டுக்குள் விழுந்து உடைந்து விட்டதாகவும், தான் தப்பிப்பிழைத்து வழிதெரியாது தவித்து நிற்குஞ்சமயத்தில், அவ்வீட்டைக்கண்டு அங்கு படுத்துறங்கினதாகச்சொன்னான். அவனிடத்தில் சம்பாஷித்ததில், அவன் மிகவும், அரியகுணமுடையவனென்று கண்டு, அவனிடத்தில் சன்மார்க்கங் கற்றுக்கொள்ள விரும்பி அவ்விடத்திலேயே அவனை இருக்கச்செய்து, அன்று மாலையில், திருட்டு வழியாகத் திருடர்கள் பெண்ணை வைத்திருந்த இடத்துக்குச்சென்று, பெண்ணை மீட்டு, ஆண்வேஷந் தரிக்கச்செய்து, அழைத்துக் கொண்டுபோய், அவ்வாலிபனிடத்தில் விட்டிருக்கிறோம். இருவரும் சந்தோஷத்துடன் காட்டில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பக்ஷணாதிக

ளெல்லாம், வாங்கிக் கொடுத்திருக்கிறேம்." என்று நீலகண்டன் நிதானமாய்ச்சொல்லி முடித்தான்.

இதைக்கேட்ட சோமநாதனுக்கு, ஏதொன்றும் தோன்றவில்லை. யாதொன்றும் விளங்கவில்லை, தேனில் விழுந்தாரையைப்போல், அவன்மனம் தத்தளித்துத் தவித்தது, கடவுளின் மகிமையைக்கண்ணுல்கண்டவன்போல், ஆனந்தக்கண்ணீர் சொறிந்தான்.

இவ்வாறுகச் சோமநாதன், மௌனமாயிருந்ததைக்கண்ட கோலகண்டன்: "ஐயா! காலையில் எங்களுடன் வருவீராளுல், உமது சகோதரியை உம்மிடத்தில், சேர்த்துவிடுகிறேம்! அவ்வாலிபனையும் நீர்கண்டறிந்துகொள்ளாய்." என்று குறிப்பாய்ச் சொன்னன்.

"அப்படியே வருகிறேன்! ஆனல், பெண்ணினுடைய விருத்தாந்தத்தை அவ்வாலிபன் அறிவானே?" என்று சோமநாதன் மிகவுந்தாழ்மையான குரலில், இருவரையும் நோக்கிக் கேட்டான்.

"இல்லை யில்லை! ஆணுடுப்பையுடுத்தி, சித்திராங்கன், என்று பெயருமிட்டிருக்கிறேம் பெண்ணென்று, சந்தேகிப்பதற் கிடமில்லை." என்றிவ்வாறுக கோலகண்டன் சொல்லிக் கொண்டிருக்குஞ் சமயத்தில் பட்டாபிராமையர், எதிரே வந்து "நேரமாகிறது! கதவு பூட்டவேணும்" என்றார் இதைக்கேட்ட யாவருமெழுந்து உள்ளே சென்று படுத்துக்கொண்டார்கள் சோமநாதனுடைய இருதயம் படுமவஸ்த்தையை, இறைவனே யறிவார்.

# பதினான்காம் அத்தியாயம்,

---

சுகந்தசீலன் வீட்டுக்குவந்து சேரக்கால தாமசமான படியால், அவருடையமனைவியும் மகளும், சேதியென்ன வென்றறியாது சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாளிரவு ஒன்பது மணியிருக்கும். எல்லாருஞ் சாப்பாடு முடித்துக்கொண்டு, அங்குள்ள விசாலமான மண்டபத்தி லுட்கார்ந்து, வேடிக்கையாக வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்தச்சமயம், அன்னலக்ஷுமி, அருகே நின்ற சாமிநாதனை நோக்கி "சாமிநாதா! ஐயா, வீட்டைவிட்டுப்போய் எவ்வளவு நாளாயிற்று, இன்னும் வராமலிருக்கிறாரே! அவருடைய க்ஷேமலாபங்களை நாமெப்படியறிவது! ஒன்றுந்தெரியவில்லையே! ஏதும்விளங்கவில்லையே!" என்று என்னென்னவோ மனதில் நினைத்து ஏங்கித் தவித்தவள் போல், பாங்குடனுரைத்தாள்.

"ஆமாம்! நானும் அதைப் பற்றித்தான் யோசிக்கிறேன்! ஐயா, இருக்குமிடந் தெரிந்தால், அங்குசென்று சங்கதியாவையும் பங்கமில்லா தறிந்து கொண்டு பத்திரமாய்வந்துவிடுவேன். அதுவுந் தெரியவில்லை." என்று அதிக ஆலோசனையுடன் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டுரைத்தான் சாமிநாதன்.

'' கனகசேகரத்தினுடைய வீட்டுக்குப் போவதாகத்தான் காயிதமெழுதியிருந்தார். அங்கேதான்

போயிருப்பார்! வேறெங்குபோவது!" என்று அன்னலக்ஷிமி யம்மாள், அவசரமாய்ச் சொன்னாள்.

அப்படியானால், காலையில் வச்சிரபுரிக்குச் சென்று, சங்கதியாவையுஞ் சங்கடமில்லா தறிந்து வருகிறேன். என்று சாமிநாதன் உற்சாகமாயுரைத்தான்.

இது வரையும் ஒன்றும் பேசாதிருந்த, நடனசிங்கார நடைபழகியாகிய தேவகியென்னுந் திவ்வியப் பெண்மணியானவள். தன்தாயைநோக்கி, "அம்மா! சாமிநாதனை வச்சிரபுரிக்கு அனுப்பினால், இங்கே நமக்கெல்லாம் யார்துணை. திருடர்கள்பயம், ஊரெல்லாம் பரவியிருப்பது தெரியாதா! எங்கேயோ ஒரு ஊரில், யாரோ ஒரு கன்னிகைப் பெண்ணைத் திருடிக்கொண்டு போய்விட்டதாக, எவரோ வழிப்போக்கர்கள் பேசிக்கொண்டு போனதை, என்தாதிகேட்டுவந்து என்னிடத்தில் சொன்னாள். அன்று முதலாக நான் பூந்தோட்டத்துக்குப் போவதற்கும் பயந்திருக்கிறேன்." என்று, குயில்போற் குரலுடைய, கொஞ்சுங் கிளிமொழியாள் அன்னையைநோக்கி அவாவுடன் சொன்னாள்.

"இதெல்லாம்பொய்! அம்மா! யாரோ சொன்னான், எவனோகேட்டான், எங்கேயோ நடந்தது. என்று இந்தமாதிரி ஊர்ப்பேச்சைக்கேட்டு நாம் உண்மையாக நம்பக்கூடாது. கண்ணாரக் கண்டதுமெய். காதாரக்கேட்டது பொய் என்று முன்னோர் மொழிந்துள்ளதை நீங்கள் கேட்கவில்லையா?" என்று சாமிநாதன் இருவரையும் நோக்கித்தைரியங் கூறினான்.

இவ்வாறாக இவர்கள் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், தெருக்கதவில் யாரோ தட்டுகிற சத்தங் கேட்டது. சத்தத்தைக்கேட்டதும் சாமிநாதன் எழுந்து கதவண்டை யோடினுன்.

யாரோ! எவரோ! என்று தாயும் மகளும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

கதவுதிறக்கப்பட்டதும் உள்ளே வந்தார் சுகந்தசீலன். புருஷனைக்கண்ட அன்னலக்ஷிமி அடங்கா மகிழ்ச்சிகொண்டு அவரெதிரே ஆவலுடன் சென்று, என்ன சொல்லுவாரென்று எதிர்பார்த் திருந்தாள். தேவகி எழுந்து தந்தையெதிரில் வந்துநமஸ்காரமிட்டுப் பிதாவின் முகத்தையுற்று நோக்கினாள்.

உள்ளே வந்த சுகந்தசீலன் ஒரு நாற்காலியின் மேலுட்கார்ந்து தேவகியைப்பார்த்து அடங்காமகிழ்வு கொண்டு, அவளைநோக்கி "அம்மா! தேவகி! க்ஷேமந் தானு!" என்று தன் அருமைமகளை நோக்கி ஆவலுடன் கேட்டு, அவளுடைய களங்கமற்ற முகத்தைக் கருணையோடு பார்த்தார்.

"ஆம், அப்பா! நாங்கள்யாவரும் சுகமேயிருக்கிறோம்! உங்களுடைய தேகம் மெலிந்து போயிருக்கிறதே, என்ன காரணம்." என்று தந்தை மொழியாள் மெத்த உருக்கத்துடன் தகப்பனை நோக்கி இரக்கமாய்க் கேட்டாள்.

"ஆம்! அம்மா! பிரயாணஞ் செய்வதென்றால் விளையாட்டா? அதுவுமன்றி, காடுமலையெல்லாம் ஓடி

யலைந்து அவர்களுடன் கூட நானும் அவஸ்தைப்பட்டு வந்ததில் தேகம்மிகவுஞ் சக்தியற்றுப் போய்விட்டது.'' என்று சுகந்தசீலன் சிறிது ஆலோசித்துக் கொண்டே கூறினார்.

"என்னங்கோ ! சங்கதி ! என்னகாரணத்துக் காகக் கனகசேகரம் வீட்டுக்குப் போயிருந்தீங்க !'' என்று அன்னலக்ஷிமி அவசரமாய்க்கேட்டுப் புருஷன் முகத்தை நோக்கினாள்.

"ஐயையோ ! அதையெப்படிச் சொல்லலாம் ! மன தில் நினைக்கவும் முடியாது, வாயால்சொல்லவும் முடி யாது.'' என்று சுகந்தசீலன் அகம்வருந்தினாற் போல் கூறினார்.

" என்ன ! என்ன ! என்றாள் தேவகி

"சொல்லுங்கோ ! சொல்லுங்கோ ! என்றாள் அன்னலக்ஷிமி.

'' வனசுதாவை யாரோ திருடிக் கொண்டுபோய் விட்டார்கள். '' என்று சுகந்தசீலன் மெதுவாய்ச் சொன்னார்.

"ஐயையோ ! என்ன அனியாயம் ''
" அப்பப்பா ! என்ன அக்கிரமம் ''
" யார்செய்தது ?''
" எவர் செய்தார்கள் ''
" எங்கு கொண்டுபோனார்கள் ? ''
' எவ்விடத்தில் வைத்திருந்தார்கள் ?''

" அகப்பட்டாளா? "
" வீடுவந்து சேர்ந்தாளா ? "
" தாதி சொன்னாளே "
" நம்பாது விட்டோமே "
" சாமிநாதா! சங்கதிகேட்டியா "

என்றிவ்வாறாகத் தாயும் மகளும் வாயில் வந்த வாறு, வகைவகையான கேள்விகளைத் தொகைதொகையாய்க் கேட்டார்கள்.

"பெண் அகப்பட வில்லை! காடெல்லாந்தேடி திருடர்களையெல்லாம் சுட்டுத்தொலைத்தோம்! சுந்தர ராஜன். தேடிவருவதாகச்சொல்லி ஓடிவிட்டார், ஒரு வழியாய்! சோமநாதன், மற்றவழியாய்ப் போயிருக்கிறாம்; என்னமோ ஈசன்செயல், எல்லாங்கடவுளின் திருக்கூத்து." என்று சுகந்தசீலன் சொன்னவற்றைக் கேட்டதாயும் மகளும், ஒன்றுந்தோன்றாது திகைத்து விழித்தார்கள். இப்போது சாமிநாதன் எதிரேவந்து "ஐயா! ஆகாரம் தயாராயிருக்கிறது! வந்து சாப்பிடலாம்," என்று மிகவும் வணக்கத்துடன், சுகந்தசீலனை நோக்கிச் சொன்னான்.

சாமிநாதன் சொன்னதைக்கேட்ட சுகந்தசீலன் எழுந்து உள்ளே சென்று, கை கால் கழுவிக்கொண்டு சாப்பிடச்சென்றார்.

இந்தச்சமயம் அன்னலக்ஷ்மி, தேவகியை நோக்கி "என் கண்மணி! நீ சொன்னது சரியாயிருக்கிறதே! நீ தனியாய் படுக்காதே யம்மா! தனியாய் வெளியே

போகாதே! என் செல்வமே! கவனமாயிரு என்று அளவில்லாத அன்புகாட்டி அருமையான தன் குமாரத்தியிடம் பெருமையாய்ச் சொன்னாள்.

"ஆம்! அம்மா! எனக்குப் பயமாயிருக்கிறது. நினைக்கும்போதே ஏக்கத்தை விளைக்கிறது. ஐயோ! என்ன அனியாயம் அம்மா! வனசுதர் எப்படி ஜீவனோடிருக்கிறாரோ? தெய்வந்தான் அறியும்!" என்று தேவகி மிகவும் இரக்கத்தோடு சொன்னாள்.

இவ்விதமாக இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, சுகந்தசீலன், ஆகாரம் அருந்திவிட்டு ஹாலுள்வந்து, ஓர் சாய்வு நாற்காலியின் மேலுட்கார்ந்ததும் அன்னலக்ஷிமி எழுந்து அருகேசென்று தாம்பூலங்கொடுத்து விட்டுத்தன் மகளின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

இப்போது சுகந்தசீலன் என்னவோ மனதில் நினைத்து மகா ஆனந்தங்கொண்டு, புன்சிரிப்புடன் தன் மனைவியைநோக்கி "அன்னம்! சோமநாதன், பி. ஏ. பரீக்ஷையில் முதலாகத்தேறி யிருக்கிறாராமே! நீ யதைப்பற்றிக் கேள்விப்படவில்லையா!" என்று கேட்டு மனைவியையும் மகளையும் மாறி மாறி நோக்கினார்.

"மெய்தானா' நல்லதுதான்! உங்களுக்கு யார் சொன்னது." என்று அன்னலக்ஷிமி கணவனைநோக்கிக் கவனமாய்கேட்டு, மகளின் முகத்தை மகிழ்வுடன் பார்த்தாள்.

"கனகசேகரமும் தெய்வானையும், அவரைப்பற்றி என்னிடத்தில், அநேகமான விஷயங்களைச் சொன்னார்

கள். அப்போ இதையுங் கேள்விப்பட்டேன்." என்று சுகந்தசீலன் மலர்ந்த முகத்துடன் கூறினார்.

பிதாசொல்லியவற்றைக் கவனத்துடன் கேட்டிருந்த தேவகிக்கு அடங்காமகிழ்ச்சி அகத்திலிருந் தெழுந்து, முகத்தில்வந்து தாண்டவம் போடுவதைக் கண்டு, அன்னையும் பிதாவும் தம்முடைய அருமைமகளின் முகத்தை அன்புடன் பார்த்து, அகமகிழ்ந்தார்கள். அவளிடத்தில் என்றுமில்லா அழகை இன்று கண்டார்கள். களங்கமற்ற அவள் முகம் கமலம்போலிருந்தது. அவளைப்பார்த்துப் பார்த்து இருவரும் பரவசமடைந்தார்கள்.

மகளின் முகத்தைப்பார்த்து மகிழ்வடைந்த சுகந்தசீலன், பின்னுந் தன் மனைவியைநோக்கி "சோமநாதன் ஊருக்குப்போகும்போது இங்கேவந்து சொல்லவில்லையா" என்று கேட்டார்.

"இல்லையுங்கோ! இங்கேவரவில்லை!" என்றாள் மனைவி.

"என்னகாரணம்? எதற்காகவரவில்லை? நான் இங்கே யில்லாததினால்தான், வரவில்லையா? என்று சுகந்தசீலன் மனைவியை நோக்கி அவசரமாய்க் கேட்டார்.

"நீங்களில்லா ததினால்தான் வரவில்லைப்போலிருக்கிறது" என்றாள் அன்னலக்ஷிமி.

"நான் இல்லாவிட்டால் உங்களைவந்து பார்த்துவிட்டுப்போகக் கூடாதா!" என்று சுகந்தசீலன் அதிக

உருமைகாட்டி மிகவும் உற்சாகத்துடன் மனைவியை நோக்கிமனமகிழ்ந்து சொன்னார்.

"கனகசேகரமும், தெய்வானையம்மாளும், சோமநாதனைப்பற்றி என்ன சொன்னார்கள்" என்று அன்னலக்ஷ்மிசிறிது ஆலோசனையுடனே கேட்டாள்.

"அவ்விஷயங்களெல்லாம், நாளைக்குச் சொல்லுகிறேன். தூக்கம் வருகிறது, படுத்துக்கொள்ளலாம், அம்மாதேவகி! போய்ப்படுத்துக் கொள்ளம்மா! அதிகநேரங் கண்விழித் திருக்காதே!" என்று மகளை நோக்கி அன்புடன் சொன்னார்.

இதைக்கேட்ட தேவகி உடனே எழுந்து தன்னுடைய படுக்கையறைக்குட் சென்றாள்.

சுகந்தசீலனும் அன்னலக்ஷ்மியும், ஏதோ சிலவிஷயங்களைப்பற்றி, வெகுநேரம் வரையில் சம்பாஷித்துக் கொண்டிருந்து, நித்திரை அதிகரித்ததும், தங்களிடங்களுக்குச்சென்று சயனித்துக் கொண்டார்கள்.

படுக்கையறைக்குட் சென்ற பஞ்சவர்ணக்கிளியாள், பக்குவமாய்க் கதவைப்பூட்டிவிட்டு, தன்னுடைய சிங்காரக்கட்டிலின்மேல், அலங்காரப்பதுமை போலுட்கார்ந்தாள். கட்டிலிலுட்கார்ந்ததும் கண்மணியாளுக்கு மட்டில்லாயோசனைகள் மகாவேகமாயெழுந்து மங்கையின் மனதைப் பங்கப்படுத்தின.

"ஹா! வனசுதாவைத் தேடி வருவதாகச்சொல்லி என்னுடைய அன்பானகாதலர், அவசரமாய்ப்புறப்

பட்டு விட்டாரென்று, அப்பா சொன்னாரே! எங்கு சென்றாரோ! எப்படியலைகிறாரோ! என்ன கஷ்டங்களை யனுபவிக்கிறாரோ! சர்வவியாபியாகிய ஜெகதீஸ்வரனே சாக்ஷி. ஊருக்குப்போகும்போது, என்னைப்பார்க்காது போய்விட்டாரே! என்னிடத்திலொரு வார்த்தையுஞ் சொல்லாது போய் விட்டாரே! கடைசியாக என்னைக் கண்டபோது, "சில தினங்களில் லீவுகிடைக்கும் அப்போ வந்துபார்க்கிறேன், என்றாரே! ஏன், என்னிடத்தில் வாராதுபோய் விட்டார்? என்ன காரணமென்று தெரியவில்லையே! ஒருவேளை என் மீதில் வெறுப்புக் கொண்டாரோ? ஏதாவது குற்றங்கண்டு பிடித்தாரோ? ஐயையோ! அவ்விதமிருந்தால், நான் என்ன செய்வேன்! ஆ! என் ஆருயிரே! என் உயிர்த்துணையே! என் கண்ணிறைந்த கண்ணாளா! பேதைப்பெண்ணாகிய என்மீது கோபங் கொள்வது தர்மமா? என் உடலுயிர் யாவும் உம்மிடத்தில் அடைக்கலந்தந்ததை நீர்நன்றாயறிவீரே! நீர் என்மீதில் கோபஞ்செய்தால், என்மனஞ் சகிக்காது! ஆத்மாநிலைக்காது! இருதயம் இரண்டாய்ப் பிளந்து போகும்! ஐயோ! என்நாதா! நான்செய்த குற்றத்தை என்னிடத்தில் சொல்லி யிருப்பீரானால்! அப்பொழுதே சாஷ்டாங்கமாக உம்முடைய காலில் விழுந்து நமஸ்கரித்து, அளவற்றகண்ணீரால், உம்மைத் தாழ்மையுடன் பன்னிப்புக் கேட்டிருப்பேனே! ஏன், என்னிடத்தில் சொல்லாதுவிட்டீர்! எதற்காக என்னைத் தண்டிக்காதுவிட்டீர்!" என்றிவ்வாறாகத் தன்மனதில் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கித்தவித்திருந்த பெண்மணியாளுக்கு 'இப்போதான் தன்காதலன்,

தீரா விரோதஞ்செய்து திரும்பிப் பார்ப்பதில்லை' யென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான், என்ற எண்ணம் மனதிலுதித்ததும், அவள் தன்னைத்தான் மறந்து, மெத்தைமேல் விழுந்து விக்கிவிக்கி யழலானாள்.

தேற்றுவாரற்ற தேன்மொழியாள் சிறிதுநேரந் தேம்பித்தேம்பியழுத பின்பு தன் எண்ணம் தனக்கு வந்ததும் திடீரென எழுந்து, ஏதோ கனவுகண்டு கதறி யழுதவள்போல், "சீச்சீ! இதென்ன! நான் பைத்தியக்காரியா? பெண்களுக்குரிய பேதைக்குணம், என்னிடத்தில் ஏராளமாயிருக்கிறதே! நான் எதற்காக அழுதேன்! பயித்தியகாரருக்கும், காதலருக்கும், கவிவாணருக்கும், ஸ்திரமானயோசனை யில்லையென்கிறார்களே! அதுவுண்மைதான். அதுபோலவே நானுமோர் பயித்தியக்காரி! யோசனையில்லாத சேணியப்பெண்ணின் கதைபோலிருக்கிறதே, என்கதையும்! "எது காரணம் பற்றியாவது நீ கண்ணீர்விடக்கூடாது" என்று என் உயிருக்கிறைவர், உறுதியாக வுரைத்தாரே! இப்போ என் கண்ணீரால் நனைந்திருக்குமிந்த மெத்தையைக் காணுவாரானால், அவர்மனம் எப்படிவருந்துமோ என் அன்பினிருப்பிடமே! மனதிற்கினியவரே! கண்ணுக்குக் குளிர்ந்தவரே! காதலுக்குத் தகுந்தவரே! ஆசைக்குகந்தவரே! நேசத்தில் நின்றவரே! பாசம் பகிர்ந்தவரே! அடியாள் தம்முடைய ஆக்ஞையை மீறி, அழுததற்காக என்னைமன்னிக்கவும். சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்பதுபோல், பேதைப்பெண்ணாகிய யான் தெரியாதுசெய்த சிறியகுற்றத்தைத் தம்முடைய

தயாளகுணமுள்ளமனம், மன்னித்துக்கொள்ளுமென்று முழுநம்பிக்கையுடன் பிரார்த்திக்கிறேன்" என்றிவ்வாறாக நினைத்துக்கொண்டு, கட்டிலைவிட்டெழுந்து தன் முகத்தை நன்றாகத்துடைத்து, உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு, ஒரு புஸ்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு சோபாவின் மேலுட்கார்ந்தாள்.

இந்தச்சமையம் கதவில் யாரோதட்டிகிற சத்தங் கேட்டது. சத்தத்தைக்கேட்டதும் எழுந்து சென்றாள் கதவுதிறக்க! சிங்காரம் மிகுந்த சித்திரப்பதுமை! இங்கிதம்பூத்த தங்கஸ்சொரூபி! அன்னம் வெட்கும்வன்ன நடையினள்! பூவைப்பழிக்கும் புனிதபாதத்தினள். திறந்தாள். கதவைத்திருத்தமாக கதவுதிறக்கப்பட்டதுங் கையிலேதோ ஏந்திக்கொண்டு உள்ளேவந்தாள் மற்றொருத்தி.

கையில்கொண்டுவந்த தட்டை மேசைமேல்வைத்துவிட்டுக்கதவைப் பெலமாய்ப்பூட்டிப் பின்தேவகி யருகில் வந்து. "அம்மா இன்னுந் தூங்காதிருக்கிறாயே! இதென்ன கட்டிலும் மெத்தையுங் காலாகோலமாயிருக்கிறதே! இந்தவயதிலுனக் கிவ்வளவுயோசனை யிருந்தால், காலம் போகப்போக எப்படியிருக்குமோ? கடவுள் தானறிவார்." என்று சொல்லிக் 'கல்' லென்று சிரித்தாள் தாதி.

"அடிதாதி! இந்த வீண்பேச்சும் விளையாட்டுப் பேச்சும், என்னிடத்தில் வேண்டாம், அதிருக்கட்டும். அப்பாவும் அம்மாவும் என்ன பேசினார்கள்? உனக்குத்தெரியுமா?

"வா, அம்மா! கொஞ்சம் பலகாரம் சாப்பிட்டுப் பாலைக்குடி, கண் சிவந்திருக்கிறது! முகம்வாடியிருக்கிறது, உண்மையாக நீ காதலனைநினைத்துக் கண்ணீர் விட்டிருக்கிறாயம்மா! கொஞ்சம் சிற்றுண்டியருந்திக் களை தெளியம்மா! அப்புறம், எல்லாம் அடியோடே சொல்லுகிறேன்." என்றிவ்வாறு தாதியானவள் வேண்டியதைக்கேட்டுத் தேவகியெழுந்து, சிற்றுண்டியருந்திப், பின்பு தாதியும் புசித்துவிட்டு இருவருமாக ஓரிடத்திலுட்கார்ந்து. வேடிக்கையாகச் சம்பாஷிக்கலானார்கள்.

"அப்பா என்ன சொன்னார்" என்று தாதியை நோக்கி ஆவலுடன் கேட்டாள் தேவகி.

"உனக்குச் சீக்கிரத்தில் கல்யாணஞ்செய்து விட வேண்டுமென்று தான் சொல்லுகிறார்." என்றாள் தாதி.

"அதிருக்கட்டும்! அம்மா என்ன சொன்னாங்க" என்று வேகத்தில் கேட்டாள் தேவகி.

"அம்மாவு மதுதான் சொல்லுறாங்க" என்றாள் தாதி.

"யாருக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்" என்று தேவகிதாதியைநோக்கி கவனமாய்க் கேட்டாள்.

உன்னுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்ட உத்தமபுருஷனாகிய வாசுதேவனுக்குத் தாரைவார்த்து தத்தஞ்செய்துக் கொடுப்பதாகப்பேசிக் கொண்டிருந்தார்கள். இவ்வளவுதான் நானறிவேன். வேறொன்றுமெனக்குத் தெரியாது." என்று தாதியானவள் முடிவாய்க்கூறி முகத்தைதிருப்பிக் கொண்டிருந்தாள்.

"அடிபாதகி! இந்த இழவுசொல்வதற்காகத் தானிங்கே வந்தாயா? போதும்! போதும்! வெளியே போ; என் முன்னில் நில்லாதே." என்று தேவகி அதிககோபங்கொண்டு தாதியை வெருட்டினுள்.

"என்னம்மாயிது! அடேடா! ரொம்பவுங்கெட்டிக் காரி! என் மீதிலேன் கோபிக்கிறுய்! நான்தானு உன்னைக்கல்யாணஞ்செய்து கொள்ளும்படி வர்ப்புறுத்துகிறேன்! நல்லாயிருக்கிறதே அம்மாளின்னை யோசனை! நீ கல்யாணஞ்செய்து கொண்டால், புருஷனும் நீயும், பஞ்சவர்ணக்கிளிகளைப்போல் கொஞ்சிக்குலாவி, அன்றிலும் பேடும் போல் என்றும் இணைபிரியாதிருந்து, கட்டிலில் படுத்துக்கொண்டு இஷ்டத்துடன் விளையாடி, கோடிக்கணக்கான வேடிக்கைகளைத் தேடித்தேடிப்புரிந்து, குதூகலத்துடன் குலாவிக்கொண்டு, மதலைப்பேச்சுகளும் இதழைக்கூச்சுதலுமாய்! மதுவையுண்டவண்டைப்போல் மதிமயங்கி, பேசுவதின்னது செய்வதின்னதென்றறியாது, வெட்கத்தையும் நாணத்தையும், தக்கபடி ஓட்டிவிட்டு, மிக்க மிக்க விநோதங்களை தக்கபடி செய்து, தப்பாத சுகங்களையெல்லாம், ஒப்புடன் அநுபவிப்பீர்களல்லவா! "உள்ளதைச்சொல்லப்போனுல் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம்" என்பது போல், கேட்டதைச்சொன்னுல், தாட்டியாய்க்கோபம் வந்து கொழுந்துவிட்டெரிகிறதே! நல்லதம்மா, நல்லது! இப்பவே யிப்படியிருந்தால், புருஷன்வந்தபிறகு புலியைப் போலத்தானிருப்பாய் போலிருக்கிறது, நான்வெளியே போகிறேனம்மா! நீ சுகமாய்ப்படுத்துறங்கு." என்று தாதியானவள், சற்றே சிரிப்புக்காட்டி கொஞ்சம்வெறுப்

புக்காட்டி, யுரைத்து, வெளியே போவதாகச்சொல்லிக் கொண்டெழுந்தாள்.

"என் அருமையானதோழி! எங்கேபோகிறாய்! சற்றே உட்கார்ந்து! நான் சொல்வதைகேள்! என்னுயிர்த்துணைவர்மீது, நான் கொண்டிருக்கும், எல்லையற்ற காதலை. நீ நல்லவண்ணமறிந்திருந்தும். எனக்கிஷ்டமில்லாதவனான. வாசுதேவனுக்கு என்னை விவாகஞ் செய்துகொடுக்கப் போகிறார்களென்றுகேட்ட என் மனம், எவ்விதம் வருந்தியிருக்குமென்பதை நீயே யோசித்துப்பார். நீயும் என்னைப்போலப் பெண்தான். நான் அதைப்பற்றி உனக்கு விபரித்துக் கூறவேண்டிய தனாவசியம்" என்று தேவகி தாதியைநோக்கி இரக்கமாக வுரைத்தாள்.

"அம்மா! நீ வாசுதேவனிடத்தில் கண்டகுற்றங்களென்ன? உன்காதலரிடத்தில் கண்டவிசேஷங்களென்ன? அவைகளை யென்னிடத்தில் சொல்லம்மா! என் கண்ணுக்கு இருவரும் ஒருமாதிரியாகத் தானிருக்கிறார்கள். உன்காதலரிடத்தில் ஒரு விதமான விசேஷ விற்பன்னங்களையும் நான் காணவில்லை. ஆனபடியால், ஆண்களைப்பகிர்தறியும் விதத்தை எனக்கும் கொஞ்சம் கற்றுக்கொடம்மா! பின்காலத்தில் நானும், ஒரு கணவனைத்தேர்ந்தெடுக்குஞ் சமயத்தில் நீ கற்றுக்கொடுத்த வித்தையை நன்றாக உபயோகப் படுத்துகிறேன் உன் மூலமாக நானும் நல்லபுருஷனைத்தேடிக் கொள்ளட்டும். அதையெல்லாங் கொஞ்சம் விபரமாய்ச் செல்லம்மா!" என்று தாதியானவள் தேவகியை நோக்கிச்சிரித்துக் கொண்டே கேலியாகக் கேட்டாள்.

இதைக்கேட்ட தேவகி இளநகைபுரிந்து, தாதியை நோக்கி 'தோழி! என் காதலரிடத்தில் நான், கண்டுள்ள விசேஷலக்ஷணங்களை வாயாலுரைக்க முடியாது. அவ்விதமுரைத்தாலும், அவைகளைச் சரியாகச்சொல்லுவதற்குத் தகுந்தவார்த்தைகள், எந்தப்பாஷையிலுங் கிடைக்காது, அவரிடத்திலுள்ள விசேஷகுணங்களையெல்லாம், என்னுடைய இருதயத்திலும் மனக்கண்ணிலுங்கண்டு மகிழ்கிறேன். வெளித்தோற்றத்தை நான் காரணமாகக் கொள்ளவில்லை, என் கண்ணாளரை மணப்புரிந்து மகிழ்வுடன் வாழ்வதற்கே நான் இப்பூமியில் பிறந்தேன். அவ்விதமில்லாது, வாசுதேவனையே மணம்புரியும்படி வற்புறுத்துவார்களானால், அவனுடைய மணக்கோலமும், என்னுடைய பிணக்கோலமும் ஒரே நாளில்நடக்கும்." என்று தேவகிமனவருத்தத்துடன் சொன்னாள்.

"ஆ! என் கண்ணாளா! நீயேன் அவ்விதஞ்சொல்லுகிறாய்? உன்னைப்போல் பாக்கியஞ்செய்தபெண், இவ்வுலகம் முழுவதிலுந்தேடினுங் கிடைப்பதரிது, உன்னுடைய பிரார்த்தனைபோலவே, உன் பெற்றோருடைய எண்ணமும்மாறியிருப்பதைக்கேட்டு, என்மனம் அடங்கா மகிழ்ச்சிகொண்டு ஆனந்தம் பொங்குகிறதம்மா! உன்னைப்போல் புண்ணியவதி உலகில்கிடைப்பதரிது! என்று சொல்லிக்கொண்டு தேவகியைத்தான் இருகைகளாலு மிறுகக்கட்டித் தழுவினான்.

தாதியின்வார்த்தையையும் செய்கையையுங்கண்ட தேவகி அடங்கா ஆச்சரியங்கொண்டு உள்ளதையுள்ள

படிசொல்லு! ஒரு விநாடிதாமதிப்பாயாயின் என்னுயிர் என்னைவிட்டுப்போய்விடும் போலிருக்கிறது'' என்றாள்.

''நீ, நினைத்த பிரகாரம் எல்லாங்கைகூடிவரும். நீ ஒன்றுக்கும்மனம் வருந்தாதே'' என்றாள் தாதி.

''உனக்கெப்படித்தெரியும்'' என்றாள் தேவகி

''உன் அன்னையும் பிதாவும், ஆனந்தத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.''

''மெய்தானா, உள்ளதைச்சொல்லு''

''வாஸ்தவமே! உள்ளதுதான் சொல்லுகிறேன்''

''என்ன பேசிக்கொண்டிருந்தார்கள்''

''உனக்குக் கல்யாணஞ் செய்யவேண்டுமென்று''

''யாருக்குக் கொடுப்பதாக ஏற்பாடு''

''யாருக்குக் கொடுப்பது, உன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட, உத்தமபுருஷனுக்கே!''

''தெளிவாகச் சொல்லெடி, அக்காள்!''

''திருத்தமாகத்தான் சொல்லுகிறேன். தங்காய்''

''பெயரென்ன! சொல்லு கேட்கலாம்''

''என்வாயால் சொல்லக்கூடாது''

''என்னிடத்தில் சொல்லுவதற் காக்ஷேபனை யென்ன?''

''உன்புருஷனுடைய பெயரைநான் சொல்லுவது ஞாயமா''

''பறுவாயில்லை கொஞ்சம்சொல்லு, ஏதோ உன் பொன்னான வாயைத்திறந்து, அந்த ஒப்பற்ற மாணிக் கத்தை வெளியேவிடு,

"வெளியேவிட்டால் நீ கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வாயா ?"

"அனுவளவும், வெளியேவிடாது, என் இருதயப் பெட்டியில் வைத்து இருபத்திநாலு பூட்டுபோடுவேன்.

"முதலில் பூட்டுகளைத் தேடிக்கொள். அதன் பின்னால் நான் சொல்லுகிறேன்.

"பூட்டுகள் என்னிடத்தில் தயாராகவேயிருக்கிறது"

"அப்படியானால் கொஞ்சம்பொறு"

"அக்காள்! அக்காள்! என் அருமையான தோழி, உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன், உன்னைக் கெஞ்சிக்கேட்கிறேன், உனக்கு என்னவேண்டுமானாலுந் தருகிறேன். உள்ளதைச்சொல்லு! ஒரு நிமிஷமும் தாமதிக்காதே அவருடைய பெயரென்ன"

"அவருடையபெயர் சோமநாதர்."

"ஆ! என் தோழி! நான் கனவுகாண்கிறேனா! அல்லது உண்மையாகத்தான் நீ என்னிடத்தில் சொல்லுகிறாயா."

"உண்மைதானம்மா! இதோ! என்னைத்தொட்டுப்பார்! நீயேன் அம்மா சந்தேகிக்கிறாய்."

"உனக்கு வேண்டியவைகளையெல்லாஞ்சொல்லு இப்பொழுதே தருகிறேன்."

"தெய்வசகாயத்தாலும் உன்னுடைய ஆசீர்வாதத்தாலும், எனக்கு ஒருவிதமான குறைவுமில்லை, ஆனால், எனக்கொரு, புருஷன்தான் நீ சம்பாதித்துக்கொடுக்க வேண்டியது"

"உன்மனதிற் கிசைந்தவனைக் காதலித்துக் கல்யாணஞ் செய்துகொள்"

"காதலென்றால் என்னவென்பது எனக்குத் தெரியாது"

"நான்கற்றுக் கொடுக்கிறேன்! அதன்படிசெய்"

"அப்படியே செய்கிறேன். சொல்லு"

"ஒரு ஆடவனைக் காதலிப்பதற்கு முன்பாக. அவன் உன்னுடைய அந்தஸ்த்துக்குத் தகுந்தவனா என்றும் அவனைக்காதலித்தால், ஒருவித இடையூறுமின்றி ஊரறிய அவனைமணம் புரிந்துவாழலாமா? என்பதையும், பிரதானமாகக் கவனிக்கவேண்டும். அதுவுமன்றி உன்னைப்பெற்றெடுத்த தாய்தந்தையருக்காவது, உன்னைக்காப்பாற்று பவர்களுக்காவது விருப்பமாயிருக்குமா வென்பதைச்சற்றே நீ கவனித்து நடக்கவேண்டும். வீண்வாலிபர்களுடைய, விறுதாப்பேச்சுக்கும், ஆசைவார்த்தைக்கும், இடங்கொடுத்து, அவர்களுடைய உடைநடை, களைக்கண்டு ஆசைப்பட்டு, அவர்கள்பின் செல்வாயானால், முடிவில் ஆருமற்ற பாவியாய் அந்தரித்துத் திரியுங்காலம் வந்துசேரும், அப்போது, உனக்குத்துணைவரும் இருக்கமாட்டார்கள். ஒரு காலத்தில் உனக்கு அரியகாதலராய் யிருந்தவர்கள், உன் கஷ்டகாலத்தில், கடைக்கண்ணாலுந் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இவ்விதமாக எத்தனையோபெண்கள் அவஸ்த்தைக்குள்ளா யிருக்கிறார்கள். ஒரு பெண்ணிடத்திலுள்ள விலையற்ற ஆபரணம், அவளுடையகற்பென்னும் ஒப்பற்ற மாணிக்கமேயாகும். அதை அவள்

வது காரணம் பற்றியாவது இழப்பாளாயின், அத்துடன் அவளுடைய ஜென்மமும் பாளாகிவிடும். பின்னுல் அவள் எவ்வளவு தானதர்மமங்களுடன் பிராயச்சித்தஞ்செய்தபோதிலும். அதற்கு விமோசனமுண்டாகாது, அவளுடைய செய்கைக்குத் தக்கவாறே. அவளுடைய வாழ்நாளின் பலனையுமனுபவிப்பாள். ஒருகாசுக்கிழந்தகற்பு, கோடிகோடியாய் பவுனைக்கொட்டிக்குடுத்தாலும் மீண்டுவராது, ஒரு முறையிழந்தது, மறுமுறை வாராது. சிறுவயதில் அவிவேகத்தினுல் தம்முடைய கற்பைக்கெடுத்தபெண்கள், பின்னுல், விவாகஞ்செய்து புருஷருடன் சுகித்திருக்கும்போது, தாம் முன் செய்த குற்றத்தை நினைத்துவருந்துகிருர்கள். அதற்குக்காரணமாய் நின்ற ஆண்களை நிந்திக்கிருர்கள். அதனுலென்ன பலன். "முதல்கோணல் முற்றுங்கோணல் தான்" இவர்கள்தாமுன்கெட்டு, தம்மை அன்புடன் விவாகஞ்செய்துள்ள புருஷர்களுக்கும், கழுத்துச்சத்தியாகவிருக்கிருர்கள். ஆதலால், தாதி! காதல், எவ்விதமிருக்குமென்பதைச்சற்றுக் கவனிப்பாயாக.

காதலர்கள் சந்திக்குஞ்சமயம், இரண்டு கிரகணங்கள் சந்தித்தாற் போலிருக்கும் இச்சந்திப்பில் தம்மையறியாத தடுமாற்றங்களுடன் தேகம், ஜீவன், இருதயம் முதலியவைகளுங் குலுக்கப்படும், நெஞ்சுசிலிர்த்து, திடுக்கிடச்செய்புஞ் சந்திப்பேயாம், பழையசிந்தனைகளும், நினைவுகளும், யோசனைகளும், மறைந்துவிடுவார்கள். எல்லா எண்ணங்களும், காதலின் அழகிய பிரகாசமான சொரூபத்திலடங்கும். நடந்தேறியசங்கதிகளாவது, நடக்கப்போகும் சங்கதிகளாவது, நினைவில்

னில்லாது, தாம்சந்தித்த சமயத்தில் என்ன அனுபவ மோ அதையே காண்பார்கள், அளவுக்குமீறிச் சாராயங்குடித்தவன் ஆனந்தக்கடலி லமிழ்ந்துவதுபோல், காதலர்களும், காதலமிர்தத்தைப் புசித்துக்கனவு கண்டாற்போல், நிற்குமிடங்தெரியாது தத்தளிப்பார்கள். அத்தருணத்தில் காதலர்கள்தமது உடலுயிர்யாவையும், ஒருவருக்கொருவர். அடைக்கலமாக ஒப்பிப்பார்கள். அதுவேகாதலின் மூலஸ்தானம்.

புருஷன் மனைவியின்கடமைகளைச் சொல்லுகிறேன் கேள்:—புருஷனானவன் தன்னுடைய இகபர சுகங்களுக்குரியவளாகிய தன் மனைவியிடத்தில் அன்பாகவும் நேசமாகவுமிருக்கவேண்டும் பெண்களுக்கு அடிக்கடி, மனம்பேதிப்பது சகஜம்—இதையொக்க மனைவியானவள். சிலசமயங்களில், அமரிக்கையாகவும், உதவியற்றவள்போலவும், சில சமயங்களில், பெலயீனமாயும், அசௌக்கியமாயும், சில சமயங்களில் சந்தோஷமாகவும், ஆனந்தமாகவும், சில சமயங்களில் கோபமாகவும் வெறுப்பாகவு மிருப்பாள், இவ்வித மாற்றங்களுண்டாகுஞ்சமயத்தில், அன்பானவார்த்தை களாலவளைத் தேற்றி, ஒருபிதா தன்னுடைய பிள்ளையை அன்புடன் நேசிப்பதுபோல், தன் மனைவியை நேசித்து அவளுக்கு வேண்டிய சகாயங்களை அன்புடன் செய்பவ னெவனோ அவனே கணவனென்ற வார்த்தைக்குத் தகுதியான புருஷனாகிறான்.

அதுபோலவே கணவன், அளவற்ற துன்பத்தினாலும், மனக்கவலையினாலும் துக்கப்படுஞ் சமயத்தில்

மனைவியானவள், அவனெதிரில்வந்து, அவனுடைய இரு தயத்துக்கு ஒருவிதமான சமாதானத்தையும், தைரியத் யும், உற்சாகத்தையும், ஆதரவையும், கொடுக்கக்கூடிய அன்பானவார்த்தைகளால் அவனைத்தேற்றுதல் வேண் டும். அவளுடைய கருணையான பார்வையால், அவனு டைய மனக்கலக்கத்தை நீக்கவேண்டும். தாயானவள் தன்னுடைய சிசுவை எவ்வளவு அன்புடன் பார்க்கி றாளோ? அதுபோலவே தன் கணவனைப்பாவிக்கும் மனைவியெவளோ—அவளே—மனைவி என்ற பதத்திற் குச்சரியான அர்த்தமென்றறி, இதுகாரணம்பற்றியே, மனைவியானவள். சில சமயங்களில், கணவனுக்குத்தாய் போலவும், சில சமயங்களிலவனுக்குப் பிள்ளைபோல வும், சில சமயங்களி லவனுக்கு நாயகிபோலவும் மாறி மாறி அவன் மனதைத்தேற்றுவதால். உலகத்தில் ஒரு வனுக்கு மற்றெல்லாப்பொருளைவிட மேலானது அவனு டையமனைவியே யாகிறாள்.” என்றிவ்வாறுகத் தேவகி செய்த பிரசங்கத்தால் சாதியானவள் மனமகிழ்ந்து, இருவருமாக் இன்னுமனேக வார்த்தைக ளாடிக் கொண்டு ஆனந்தத்துடன் நித்திரைசெய்தார்கள்.

# பதினைந்தாம் அத்தியாயம்.

---

அர்த்தராத்திரி. அகோரமான இருள், நடுக் காட்டில் ஓர் வாலிபன் நின்று திடுக்கிடுகிறான். இவன் யார்? இவன்தான் ஜெயவீரசிங்கன் வனசுதாவைப் பாழடைந்த வீட்டிலிருந்து மீட்பதற்காகத் தன்னுடைய துணைவரிருவரையுந்தேடி அழைத்துக்கொண்டு வரலாமென்று நினைத்துக் காட்டுமார்க்கமாய் மனம் போனபடிநடந்து இருட்டானதும் போகவழிதெரியாது தவிக்கிறான்.

காட்டின் பெருமையைக் கண்ணால் கண்டறியலாமேயன்றி காதில்கேட்டால், ஏதொன்றுந் தெரியவராது, என்னவென்று சொல்லுவோம்! ஏதெனவிளம்புவோம்; அமாவாசை யிருளைப்பார்க்கிலும் அகோரமான மழைக்காரிருட்டாகவிருக்கிறது, படக்கென்ற இடி நெஞ்சைத்திடுக்கிடச் செய்கிறது, பளிச்சென்ற மின்னல், கண்ணைப்பறித்துச் செல்கிறது. மழையுஞ் சிறு சிறு தூற்றலுந்தூமியுமாய்த் தொடங்குகிறது. குளிர் காற்றானது வெகுபெலமாயடித்து மரங்களையெல்லாஞ் சுழலமாடச்செய்கிறது.

இடியும் மின்னலும் காற்றும் மழையுமாக வாரம்பித்ததைக்கண்ட காட்டுமிருகங்கள் ஒருபுறம் கோஷ்டஞ் செய்யத்தொடங்கின. ஒருபக்கம் செந்நாய்கள். கொரைப்பதும், மற்றப்பக்கம் நரிகள் ஊளையிடுவதும், புலிகளொருபுறம்பெருங்கூச்சலிடுவதும், கரடிகள்கூடிக் கடூரசண்டையிடுவதும், மலைப்பாம்புகள் சீறி மகாபயங்கரத்தை விளைப்பதுமாக, ஆகா! துஷ்டமிருகங்கள் செய்யுங்கோஷ்டங்களைக் கேட்டால் எவருடைய மனமும் ஏங்கித்தவிக்கும்.

கல்லுங் காடும் முள்ளும் முரடும், அவனைக்கணக் கில்லாது உபத்திரவிக்கிறது. பள்ளம் மேடு தெரியாமல் அவன் தள்ளாடிவிழுவதும், பின் எழுந்துநின்று ஏங்கித் தவிப்பதும், எத்திசையை நோக்கிச் செல்வதென்றறி யாது, அஷ்டதிக்கையும் ஆவலுடன் பார்த்துக்கொண் டிருந்தவன். என்னவந்தாலுஞ் சரியென்று நினைத்துத் தைரியங் கொண்டு வைத்தகாலைப் பின்வாங்காமல், மிக விரைவாக நடக்கலானான். காலமும் ஏறவுறக்கஷ்டங் களு மதிகரித்தது. இந்த அத்வான கானகத்தில், அர்த்த ராத்திரிவேளையில், அச்சமென்பதில்லாது, பயமென் பதை நினைக்காது, தைரியத்தைக் கைவிடாமல், மிக விரைவுடன் நடப்பதைக்கண்டால், எவரும் ஆச்சரியப் படுவார்கள்.

இவ்வாறாகச்சிறிது தூரஞ்சென்றதும் காட்டியோர் மூலையில் மரங்களுக்கூடாக, நக்ஷத்திரங்கள்போல சில விளக்குகளை அதிகதூரத்தில் கண்டான். வால்நக்ஷத்திரம் போல் சில வாணங்களும் தோன்றிதோன்றி மறைந்து கொண்டிருந்தன. வெளிச்சத்தைக்கண்ட ஜெயவீரசிங் கன், அதிகசந்தோஷங்கொண்டு அதன்நேராக நடக்க லானான், வரவரக்காடும் நாடுங்கலந்து கொண்டேவந் தன, ஒருபக்கம் வாத்தியச்சந்தடி வகைவகையாய்த் தொனிக்கிறது, மற்றப்பக்கம் அழுகுரல்கேட்டு அவஸ் தைவிளைக்கிறது, நாய்களும் நரிகளும், முறையே கொ ரைப்பதும் ஊளையிடுவதுமாக விருந்தன. இவையொன் றையுங் காதிலேற்காது, தான் கண்டவெளிச்சத்தை நோக்கி விரைவுடன் சென்றான்.

அங்கே ஒருகோயிலில் திருவிழா நடக்கிறதென்று ஜெயவீரசிங்கன் மனதில் திடமாகப்பட்டது, வேடிக்கை பார்க்கலாமென்ற எண்ணத்துடன், விரைவாக நடந்து, அவ்விடத்தில் வந்துசேர்ந்தான்.

கோயிலைச்சுற்றிக் கோடிக்கணக்கான வேடிக்கைகள். கிளர்ச்சியுடன் நடந்தேறுகின்றன. தோரணங்களும் வெற்றிக்கொடிகளும் தொகை தொகையாகத் தூக்கப்பட்டிருக்கிறது, வர்ணவர்ணமான வெளிச்சக்கூடுகள் வகை வகையாய்த் தொங்குகிறது. காஸ்விளக்குகளின் கணக்கையுரைக்கமுடியாது, செடிவிளக்குகளின் சித்திரத்தை சொல்லமுடியாது, வாணவேடிக்கைகளுக்குக் அளவில்லை, அடக், வாணங்கள் படக்கென்று வெடித்து ஆகாயத்தில் சென்று அரியவர்ணங்களால் பெரியபந்தல்போடுவதைக்கண்டு, ஜனங்களெல்லாம் ஆனந்தக் களிப்புடன், ஆவென்று வாயைத்திறந்துகொண்டு அண்ணாந்து பார்த்து ஓவென்று கத்துகிறார்கள். ஆகாசவாணங்கள் வெகுஜோராயிரைந்து சென்று விதம்விதமான மத்தாப்புகளை வேண்டியபடிட்டும் வெளியில் விடுகிறது, சக்கரவாணங்கள் சுழன்று சுழன்று, திக்குமுக்கிட்டு நெருக்கும் ஜனங்களை, மிக்கதூரத்தில் வெருட்டியோட்டுகிறது. இலங்கையைச்சுட்ட ஹனுமானைப்போல், கோட்டைவாணங்களைக் குரங்குப்பொம்மைகள். கொளுத்திவிடுவதும் வெகுவிநோதமாயிருந்தது.

வந்த ஜனங்களெல்லாஞ் சிந்தைமகிழ்ந்து, வேடிக்கைகள் நடக்கு மிடங்களைத் தேடித்தேடிப் பார்க்கலானார்கள். மூலைமுடக்குகளில் கூட்டங் கூட்டமாயுட்

கார்ந்து சீட்டாடுகிறார்கள் சிலர், ஓடி விளையாடி ஒ வென்று கத்துகிறார்கள் பலர். வீண்வம்புக்காரர்களெல்லாம், வம்புச்சண்டையை வலியமாயிழுத்து மண்டையையுடைத்துக்கொண்டு மாயமாய்ப்போய் விடுகிறார்கள், பாட்டுப்பாடிப்பதம் பெறுவோர்களும் கேட்டுக் கேட்டுக் கிளர்ச்சி கொள்வோர்களும், விகடதைசொல்லி வேடிக்கை செய்வோரும், வேதாந்தம்பேசி வீண்தர்க்கம் புரிவோருமாக வீதிகளெல்லாங் கோடிக்கணக்கான ஜனங்கள், கூடியிருந்து கோஷ்டஞ்செய்து குதூகலிக்கிறார்கள். மிட்டாய்க்கடைகளுக்குக் கணக்கில்லை, காப்பிக்கடைகளில் உட்கார இடமில்லாது தவிக்கிறார்கள், மேளவாத்தியமொருபக்கம், தாசி நாட்டியம் மற்றப் பக்கம். வீதிசுத்திவருவதற்குச் சுவாமி புறப்படும் நேரமாய் விட்டது.

ஆயிற்று, உள்வீதிசுற்றிமுடிந்து கோபுரவாசலில் சுவாமியைக்கொண்டுவந்து, தயாராகச் சிங்காரித்திருந்த மஞ்சத்தின்மேல் வைத்தார்கள். ஹா ஹா என்னஅழகு, என்ன அலங்காரம்! என்ன சிங்காரம்! அதையெடுத்துக்கூறுவதற்கு, ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனும் ஐந்நூறுநாவு இரவல்வாங்கவேண்டும். திருவாசியொன்றை வெகுவாசியாய்வைத்து, அதன் நடுவில்சுவாமியை எழுந்தருளச்செய்து, பூமாலைகளாலும் பொன் மாலைகளாலும் அலங்காரமாகச் சிங்காரித்து, சாத்துப்படி செய்துள்ள விசேஷத்தைச் சாற்றவுங்கூடுமா? இப்போதான் சுவாமி தெய்வலோகத்திலிருந்து திருவிழாப் பார்க்கவந்து, இருக்கமாயுட் கார்ந்தாப்போ லிருந்தது.

மேளவாத்தியம் மிகவிமரிசையாய்த் தொனிக்கிறது. ஆனந்தபைரவியைவெகு ஆனந்தத்துடன்தொடங்கிய நாகசுரக்காரன், பூரிகல்யாணியில் புகளாய் முடித்தான். தாசி நாட்டியந்தாரளமாய் நடந்தேறுகிறது வந்த ஜனங்களெல்லாம் சுவாமியைமறந்து தாசிகளைமாத்திரம் தப்பாது பார்த்து மிக்க மகிஷ்சிகொள்ளுகிறார்கள். சர்க்கரையைக்கண்ட எறும்புகளைப்போல், தாசிகளைக்கண்ட ஜனங்களெல்லாம் ஒருவர் மீதொருவர்விழுந்து, நெருக்கித்தள்ளி, இடியுங்குத்தும் இளையில்லாமல் கிடைத்த போதிலும், தாசிகளைமாத்திரந் தவறாதுபார்க்கிறார்கள்: ஜாதிக்கட்டெல்லா மெங்கேயோ போய்விட்டது. குல ஆச்சாரங்கள் கடுகளவுங் காணப்படவில்லை, பக்தி விசுவாசங்களெல்லாம் பறந்துவிட்டது. தாசிகளின் மயக்கத்தால் யாவருந் தத்தளிக்கிறார்கள். ஆகா! இது என்ன வேடிக்கை! பரிசுத்தமான தெய்வஸ்தலத்தில், கடவுளை வணங்கித் தம்முடைய பாவங்களைத்தீர்த்துக் கொள்ள வரும் ஜனங்களுக்கு, தாசிகளின் நாட்டியத்தையும், அவர்கள்பணம் பறிப்பதற்காச்செய்யும் பதினாயிரந் தளுச்குகளையுங்காட்டி, தெய்வத்தைத்தொழவந்தவனுக்குத் தேவடியாள் வீட்டுக்குவழிகாட்டி விடுகிறார்களே இதென்ன மௌடீகம். இதென்ன அறியாமை! தேவடியாள், என்றாள் யாரென்பதையும், ஆதியில் இவர்களெவ்விதம் விபசாரத் தொழிலுக்குட் புகுந்தார்களென்பதையும்பற்றி வேறிடத்தில் சற்றுவிபரமாகக் கூறுவோமாக:—

மஞ்சமும் நகருகிறது. ஜனங்களுங்கூடவே போகிறார்கள். பஜனைகளும் வாத்தியங்களும், நடனங்களும்

நாட்டியங்களுமாய், வீதிசுற்றிவந்த சுவாமி உள்ளே நுழைந்துவிட்டது. ஜனங்களும் வீடுகளுக்குப் போகத்தொடங்கிவிட்டார்கள். சர்மான்களெல்லாம் விலை குறைந்துவிட்டது, கையில் கிடைத்த காசுக்குக் கொடுக்கிறோமென்று கடைக்காறர்கள் கத்துகிறார்கள்." ஒரு ரூபாய் விலையுள்ளதெல்லாம் அரைரூபாய்க்குக் கொடுக்கிறேன், ஓடிவாருங்கள்" என்பாரும். "போனால் கிடையாது, வந்தால் கிடைக்கும், ஓடிவாருங்கள்" என்பாரும் பீடி, சுருட்டு, வெத்திலைபாக், ஓடிவாருங்கள் என்று ஒரு பக்கம் கத்துவதும் பன், கேக், பிஸ்கெட் ரொட்டி சுவீட்மீட் சகாயவிலை சரிபாதி விலைக்கு கொடுக்கப்படும். என்று பின்னொருவன் கத்துவதும். "பொடி, பீடி, சுருட்டு, வெத்திலைக்கட்டு இடியப்பம், வடை, நல்லதோசை, வாழை ஏவவபயம்" என்று பக்கத்துக்கடைக்காரன் காக்கைபோல் கத்துகிறான். "சுண்டல், கடலை, சோளப்பொரி, சுடச்சுடத்தருகிறேன்; ஓடிவாருங்கள்மக்களே," என்று கூனல்கிழவியொருத்தி குந்தியிருந்துகூப்பிடுகிறாள். "ஓம்படி, காரா'பூந்தி, மசால் வடை, முறுக்கு," என்றுகூவிக்கொண்டு குறுக்கேயோடுகிறான், குள்ளனாகிய வோர் சுள்ளல் பொடியன், "மாம் பழம், வாழைப்பழம், ஆப்பிள் பழம் அன்னதானம் பழம், தோட்டம்பழம், மாதுளம் பழம். வகைவகையாய் தினிசு தினிசாய், வந்துபாருங்கள் வாயில்போடுங்கள்" என்றுபழக்கடைக்காரன் பாக்கக்கத்துகிறான். "காப்பீ? டீ சோடா லெம்னெட் ஒரு கிளாஸ்குடித்துக்களையாறிப் போங்கள்" என்று ஓவென்று கத்துகிறான் வேறொரு கடைக்காரன், சவாரிவண்டிகள் மிகவுந் துரிதத்துடன் புறப்பட்டுவிட்டது, காலப்குதிரைகளுக் கெல்லாங் கடி

வாளத்தை மாட்டிவிட்டார்கள். "என் குதிரை வாயு வேகமாய்ப்போகும்" "என் குதிரை மனோவேக மாய்ப்போகும்." என் மாடுகள் நாயோட்டமும், சில்லரைப்பாச்சலும் பாயும்" என்மாடுகள் "கானிலிறங்கிக் கணிப்பொதார்மேல் துள்ளிக்குதித்தோடும்." என்றிவ்வாறாகச் சவாரிப்பந்தயத்தில விருதுகூறிச்செல்பவர்களில்சிலர், வண்டியோடுவண்டி மோதுண்டு சக்கரமுடைந்து திண்டாட்டப்படுவோரும், கானிறக்கங்களிலுள்ளபள்ளத்தாக்குகளில் ஓட்டும்போது வண்டிகுடைக்கவிள, மாடுகள் அறுத்துக்கொண்டு வாலைக்கிளப்பிக்கொண்டு மகாவேகமாயோட, வண்டியுள்ளிருந்தவர்கள் ஒருவர் மேலொருவர்விழுந்து, மூக்குடைந்தவர்களும் பல்லுடைந்த வர்களும், தலையுடைந்த வர்களுமாக, ஐயையோ அப்பாடி! அம்மாடி! கால்போச்சே! தலைபோச்சே! என்பாரும், சோமபேறிமாடுகள் கள்ளத்தனமாய் நடுரோட்டில் விழுந்துகிடக்க, அவைகளின் வாலை முறித்துஆத்தியால் குத்திக்கோரமான வேடிக்கைகளைக் காரத்துடன் செய்வோரும். வழிப்போக்கர்கள் மேல் வண்டியையேத்திபோலீஸ்காரன் கையிலகப்பட்டு அப்படியே லாக்காப்புக்குத்தப்பாது போபவர்களுமாக எத்தனை யோவேடிக்கைகளும், ஆட்டகோஷ்டங்களும் அங்கே அரைமணிநேரத்துக்குள் நடந்தேறின கடைக்காரர்களெல்லாங்கடைகளைசசுருட்டிக்கொண்டுஓட்டம்பிடிக்கிறார்கள். லட்க்ஷக்கணக்காயிருந்த ஜனங்களெல்லாம் போய். ஒருமணிதனைக் கூடக்காண்பதரிதாயவிட்டது.

இவ்வாறாக அங்கே நடந்தேறிய வேடிக்கைகள் யாவையுங் கண்ணுற்றுவந்த ஜெயவீரசிங்கன் அகமகிழ்

ந்து சித்திராங்கனாகிய வனசுதாவைப்பிரிந்த துக்கத்தையும் மறந்து, தன் நில பாரத்தையும் அடியோடே மறந்தவனாய் அங்குமிங்கு முலாவிக்கொண்டிருந்தான்.

மணியும் ஆறாய் விட்டது. சூரியனுந்தோன்றுகிறான். "இனி எங்கேபோகலாம், ஜனங்கள் பின்னால் சென்றால் ஏதாவது ஊரையடைந்து, பின்னால் ஆக வேண்டிய காரியங்களைச் செய்யலாம்" என்று யோசித்துக்கொண்டு வருஞ்சமயத்தில் எதிரேயுள்ள ஓர் மடத்தின் திண்ணைமேல் யாரோ ஒருவர் படுத்திருப்பதைக் கண்டு, "இவரைக்கேட்டால் ஏதாவது ஊருக்குவழி காட்டிவிடுவார். மேல்நாட்டு உடைநடைகளை யனுசரித்தவராகக்காணப்படுகிறார், ஏதோ மேலான உத்தியோகஸ்தர்போலிருக்கிறது. இவர் எழுந்தவுடன் என்னுடைய விருத்தாந்தத்தை சொல்லி இயன்ற உதவி புரியும்படி கேட்கவேண்டும்." என்று நினைத்துக்கொண்டு திண்ணையிலுட்கார்ந்தான்.

இந்தச்சமயத்தில் கோயில் புரோகிதர்களாகிய, வைரக்கண் வயித்தியலிங்கக் குருக்களும், குண்டோதரையரும், கோவாலி ஐயரும். கோயில்கதவைப்பெலமாய்ப்பூட்டி விட்டு, அர்ச்சனையில் கிடைத்த காசுகளையெல்லாம், அப்படியே பெருமுடிச்சாய் முடிந்துகொண்டு, மீதியானபண்டம் பலகாரங்களையெல்லாம் மூட்டையாய்க் கட்டிக்கொண்டு, வீட்டுக்குப் போவதற்கு விரைவாய் வருகிறார்கள். இவர்களில், வைரக்கண் வயித்திலிங்கக் குருக்கள் நடுத்தர அளவுள்ளவர், கோவாலிஐயர், கோடாலிக்காம்பு போலிருப்பார். இவரைச்சரியாக அளவெடுத்தால், எட்டடியுயரம், தப்பாம

யிருக்கும். குண்டோதரையர் நாலடியுயரமிருந்தால், ஆறடி சுற்றளவிருப்பார். கடுங்காற்றடித்தால் கோவாலி ஐயர் வெளியில் வரமாட்டார். பெருமழைபெய்தால் குண்டோதரையர். வெள்ளத்தில் கால்வைக்கமாட்டார் நீண்டு நெடுத்த கோவாலி ஐயரும், குறுகிக்கொழுத்த குண்டோதரையரும் ஏககாலத்தில் வெளியே வருவார்களானால், இவர்களைக்காணு மொவ்வொருவரும், கேலியாகச்சிரித்து வேடிக்கையாகப் பேசுவார்கள். "அதோ! கிறிக்கட் விளையாடுவதற்கு பந்தும் ப்பாற்" றும் (Bat And Boll) தயாராகவருகிறது, அடிப்பதற்கு ஆள்தான்தேவை" என்று ஊர் ஜனங்கள் சேர்ந்து ஓவென்று கத்தி ஓயாது கேலிசெய்வார்கள். இவர்கள் மூவருஞ்சேர்ந்து போனாலோ! தெருவிலுண்டாகும் வேடிக்கைக்குக் கணக்கிருக்காது, "பந்தும் தடியும், அடிப்பதற்குஆளும், ஆகா, ஓகோ! ஹா ஹா" என்றுகத்தி இவர்களை மானங்கெடுத்து விடுவார்கள். இது காரணம் பற்றியே இவர்கள் எப்பொழுதுந்தனித் தனியாகவே வொளியில் போவார்கள். இன்று அவ் விதஞ் சமயம் வாய்க்காததினாலும், தெருவீதிகளில் நிர் ஜனமாயிருந்ததினாலும், இவர்கள் கிடைத்த வைவெயல் லாஞ் சுருட்டிக்கொண்டு ஏககாலத்தில் வெளியேபுறப் பட்டார்கள்.

இவர்கள் மூவரும் வருவதைக்கண்ட, ஜெயவீரசிங் கனுக்கு, அடக்கமுடியாத சிரிப்பு அகத்திலெழும்பிய போதிலும் வெளியே விடாமல் லடக்கிக்கொண்டு, அவர்களைப்பார்க்காதவன்போல் ஒரு பக்கமாய்த்திரு ம்பி யிருந்தான்.

விபூதிப்பைகளை மடியில் செருகிக்கொண்டு, ப்றசாத மூட்டைகளைப் பெலமாய் பிடித்துக்கொண்டு, குண்டோதரையர் குட்டிச்சாத்தானைப்போல் உருண்டுருண்டுமுன்னே போவதையும், கோவாலிஐயர் கொக்கத்தடிபோல் ஆடியாடிக்கொண்டு பின்னாலே வருவதையும், வைரக்கண் வயித்திலிங்கக்குருக்கள் இவர்களுக்குப்பக்கத்தில் இணையில்லாத கல்யாண நடை நடந்து, கடைக்கண்ணால் ப்றசாதமூட்டையைப் பார்த்து, அகமகிழ்ந்து, அடக்கமுடியாத ஆனந்தத்துடன், போவதையுங்கண்டால், எங்குமில்லாத சிரிப்புவந்து எல்லாரையும் பங்கப்படுத்தி விடுமென்பதற்கு அணுவளவுஞ்சந்தேகமில்லை.

இப்போது குண்டோதரையர், பொடிப்பட்டையைக்கையிலெடுத்து, ஒரு சிட்டிகை பொடியை ஒரு மூக்கிலேபோட்டு, சளியைச்சிந்திச் சால்வையால் துடைத்துக்கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்து, "ஓய், கோவாலி! அதோ பாருங்காணும் வெள்ளிக்கிழமை மடத்திலே, வெள்ளைக்கார உடுப்பிலே, யாரோகுந்திக்கிண்ணிருக்கிறு! அவரயாருகாணும்" என்று நெட்டை ஐயரை நோக்கிக் குட்டை ஐயர்கேட்டார்

"அடே! நானுங்கண்டு நாளிபாச்சுது! அவாள் யாராயிருக்கும்?" என்று, கோவாலிஐயர் சிறிது அச்சத்துடனும் யோசனையுடனும் சொன்னார்.

இதைக்கேட்ட வைரக்கண் வயித்திலிங்கக் குருக்கள். "அவாள்யாரானாலும் நமக்கென்ன! ப்றசாதத்தைப்பெலமாய் பிடித்துக்கொள்ளும், அர்ச்சனைச்சல்லி

யெல்லாம் பத்திரமாய் முடிந்திருக்கிறேன்! நமக்கென்ன பயம்! நீர் நடவுங்காணும் நடவும்," என்று இருவரையும் நோக்கிச்சொன்னார்.

ஆம்! ஆம்! இந்தக்கோவாலிக்கு, எப்பொழுதும். பயந்தான். தைரியமெண்ணாக் கொஞ்சமுமில்லே, "ஆர்க்காட்டிலே சண்டையானால் சந்தமாமா. அடுப்பங்கரையில் பதுங்கிக்கொள்வேன் சாப்பாட்டு ராமா" என்றமாதிரி! கோவாலிக்கு முயல்க்குணம்" என்று குள்ளமான குண்டோதரையர், நெட்டையான கோவாலிஐயரைக் கேலிசெய்தாற்போல் கூறியதைக்கேட்ட வைரக்கண் வயித்திலிக்கக்குருக்கள், ஒருமாரிசிரிப்புப் பெருமாரியாய் சிரித்து, வயிற்றைப் பிடித்துக்கொண்டு விழுந்து விழுந்து நகைத்து ஈசுரா! நன்னாச்சொன்னீர். நன்னாச்சொன்னீர் என்றார்.

இதைக்கேட்ட கோவாலி ஐயருக்கு, என்றுமில்லாத கோபமெப்படியோ வந்துவிட்டது, நாகம் போல் சீறிக்கொண்டு, குண்டோதரையரெதிரேவந்து "அடே அசட்டுப்பயலே, புளுக்கைப்பயலே! உனக்கென்னடாதெரியும்! அதோபாருங்காணும்! குருக்கள்; அவாள் என்னமோ, வெள்ளைக்கார உடுப்புகளையுடுத்தியிருக்கிறா அதிருக்கட்டும். திருவிழா முடிஞ்சு, நாழியாச்சுது. இவாளுக்கு இங்கே என்னவேலை? ஒருவன்படுத்துக்கொண்டு திமிர்விடுகிறான். மற்வன் குந்திக்கொண்டு அஸ்டதிக்கும் பார்க்கிறான்." அவாளைப்பார்த்தால் அசாத்தியர்கள் போலிருக்கிறது. இவனென்னவோ வீண்பேச்சுப்பேசுறானே, அசடு! தெஷ்டை! பந்துபோலுருண்டோடிப் பள்ளத்தாக்கில் விழுந்தெழும்

பத்தெரியும். தளிகையும் சர்க்கரைப் பொங்கலுங்கிடைச் சாக்கா, மூக்குப்பிடிக்க விழுங்கத்தெரியும். ஆயிரம் வடையை அரைகொடியில் தீர்க்கவும், உரிச்ச வாழைப் பழத்தை ஒன்றின் பின்னொன்றாகச்செலுத்தவும், யானை விளாம்பழம் தின்பதுபோல், முழுமோதகத்தையெல் லாந் தொண்டைவிக்கிக் கொள்ளாது விழுங்கவுந்தெரி யுமே யல்லாமல், இந்தமாதிரி ஆள்களைக்கண்டு யூகித் தறியும் புத்தி அவனுக்கில்லை, மிலேச்சனிலுங் கேடு கெட்ட மிலேச்சன்.'' என்று வாயில்வந்த யாவையுங் கோணாது சொல்லிமுடித்துக் கோபாவேசத்துடன் நடந்தார்.

கோவாலி ஐயருக்கு வந்த கோபத்தைக்கண்ட குண்டோதரையர் "அடே! ஏதுங்காணும், இழவு என்தலைமேலே! அவாள்யாரோ இருக்கிறா எண்ணுக்கா ஙீர், ஏன்காணும் என்னைவைகிறீர், என் ஆத்தில்வந்து, வைவீராணல், ஆத்துக்காரி எடுத்துக்குவா! தொடப் பக்கட்டையும் பழஞ்செருப்பும்,'' பத்திரம், ஜாக் கிரதை!'' என்று சிறிது கோபங்காட்டிக் கூறினர்.

"என் கெடா! பத்திரம், என் கெடாஜாக்கிரதை" என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் எதிரேவந்தார் கோவாலிஐயர்.

இவர்களிருவருக்குஞ் சண்டை பெலக்கும் போலி ருந்ததைக்கண்ட, வைரக்கண் வயித்யலிங்கக்குருக்கள் நடுவேவந்து, விலக்குத்தீர்த்துச் சமாதானஞ்செய்து இருவரையு மழைத்துச்சென்றார்.

இவர்கள் வரவைக்கண்ட ஜெயவீரசிங்கன் எழுந்து மூவருக்கும்பொதுவாக ஓர் நமஸ்காரமிட்டான். நமஸ்

கார மிட்டதைக்கண்ட குண்டோதரையர், கிட்டவந்து. நீர் யாரோ! எந்தவூரோ! எதுக்காகத்தங்கி நீரோ" என்றார்.

குண்டோதரையரைக்கண்ட ஜெயவீரசிங்கனுக் குச்சிரிப்பு வந்தபோதிலும் அதையடக்கிக்கொண்டு, "சுவாமி! நான் அயலூர். சிறிது உட்கார்ந்து போக லாமென்று நினைத்து இங்கேதங்கினேன்." என்று மிக வுந்தாழ்மையாகக் கூறினன்.

"அடே வீண் சங்கதியெல்லாம் உனக்கேன் காணும், நீர் வாருங்காணும். நாம்போய்ச் சர்க்கரைப் பொங்கல் சரிவரவிழுங்கலாம்." என்றபடியுங்கோவாலி ஐயர் மகாவேகமாய் சொன்னர்.

இவ்வாருக இவர்கள்செய்த சந்தடியானது தூங்கி யிருந்தவரைத் துடுக்குட னெழுப்பிவிட்டது. எழுந்தவ ரெழுந்து கண்ணைத்துடைத்துக்கொண்டு தன் முன்னில் நிற்பவர்களைக்கண்டு அடங்கா ஆச்சரியங்கொண்டு அஸ்டதிக்கையும் ஆவலுடன்பார்த்து, அவஸ்த்தைப் படலானர், "ஹா! இதென்ன ஆச்சரியம், இன்றிரவு நானிங்கே வருகையில் இவ்விடம் ஓர் நகரம்போலிருந் ததே! கோடிக்கணக்கான ஜனங்களும், லட்சஷக்கனக் கான வேடிக்கைகளும், எல்லாம் ஏகோபித்திருந்ததே, இப்போது ஒன்றையுங்காணவில்லையே! இதென்ன மாயம், அமரிக்காவிலிருக்கும் ஜெயவீரசிங்கன் இங்கே எப்படிவந்தான். இது என்ன ஆச்சரியம்" என்று நினைத் துக்கொண்டு ஜெயவீரசிங்கனை நோக்கி மைத்துனு! ஜெயவீரசிங்கம் நீ இங்கே எப்படிவந்தாய் என்ருன்.

"அத்தான்! சுந்தரராஜம். என்னை அழைத்துக் கொண்டு போவதற்குத்தான் இங்கேவந்தீர்களா?" என்றுசொல்லி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான்.

"ஏன் மைத்துனா! அவ்விதஞ் சொல்லுகிறாய் எல்லாங்கடவுளின் சித்தம்போல் நடக்கும் நீ அமெரிக்காவிலிருந்து எப்பொழுது வந்தாய்? இவ்விடத்துக்கு யார் கூடவந்திருக்கிறாய்?" என்று சுந்தரராஜன் ஜெயவீரசிங்கனை நோக்கிக்கேட்டான்.

"எல்லாஞ் சொல்லுகிறேன். முதலில் பசிதாகமுடித்துக்கொண்டு பின்னால் எல்லாம்விபரமாய்க்கூறுகிறேன் என்றான் ஜெயவீரசிங்கன்.

"பணங்கொடுத்தால் ஆகாரங்கொடுப்பார்களா?" என்று பாப்பாரைநோக்கி பக்குவமாய்க் கேட்டான் சுந்தரராஜன்.

"அப்படியேதப்பது போடுகிறோம் வாருங்கள்" என்று குண்டோதரையர் குதூகலத்துடனுரைத்ததைக் கேட்ட இருவரும் பாப்பார்களுடன் சென்றார்கள்.

நீல அரண்மனை

அல்லது

கமலவன தேவகி.

முதல்பாகம்

முற்றிற்று.

இனி இரண்டாம் பாகத்தில் அதியாச்சரியமான அனேக சம்பவங்களை வாசித்தறிவீர்கள்.

ஸன் ஆப் இந்தியா பிரஸ். சூளை, மதராஸ்.

பிருஹஜ்ஜாதகமென்னும்

# மங்களேஸ்வரியம்.

ஆதியில் இந்தப் "பிருஹஜ்ஜாதக" மானது சோதிட பரமாசாரியரவர்களில் ஒருவராய் விளங்கியிருந்த வராகமிகிராசாரிய ரென்பவரால் வடமொழியில் சுலோக ரூபமாகத் திருவாய்மலர்ந்தருளப்பட்டது இதற்கு ஆந்திர பாஷையில் வசன ரூபமாக சோதிட சிரோன்மணியாகிய திருவேங்கிடாசாரியர் என்பவர் ஓர் உரை யியற்றியுள்ளார் இவ்விரண்டையுந் தழுவி திருமலைராயன் பட்டணம் சோதிட வயித்தியலிங்க பத்தரவர்களால் நந்தமிழ் நாட்டுச் சோதிடர்களுக்கு உதவுமாறு பரோபகாரமாகத் தமிழில் பாட்டும் உரையுமாக மொழி பெயர்க்கப்பட்டது.

இது சில அற்ப சோதிடர்கள் பாடும் சோதிட புத்தகங்களைப் போன்றதென்று ஐயமடைய வேண்டாம், இந்து மகா சோதிட சாஸ்திரங்களிலொன்று மேலும் ஓராசாரம், பாராசாரியம் முதலிய சோதிட சாஸ்திரங்களுக்கு இணையானதும் கற்றவரும் மற்றவருமான எல்லாச் சோதிடர்களும் கையாளத் தகுந்தது இச்சாஸ்திரம் முற்காலத்ததாயும், மகா சிரேஷ்டமானதாயுமிருப்பதால் இதனுண்மை பரம்பரையான சோதிடர்களுக்கு நன்றாய்த் தெரிய வருமென்பதுண்மையே.

புத்தகம் 1-க்கு ரூபா 2 0 0

## ஸ்ரீமேசுர உள்ளமுடையான்.

இது ஒவ்வொரு ஜோதிடர்க ளிடத்திலும் முக்கியமாய் இருக்கவேண்டியது அவசியம்.

இதன் விலை ரூபா 1 4 0